# பஞ்ச. பாண்டவர்

## புகழேந்திப்புலவர்.

DIGITIZED

O-, 8GPU,P
No4.
119234

DIGITIZED
1904

உ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவரவர்களியற்றிய

# பஞ்சபாண்டவர்

## வனவாசம்.

228
1-174
OFFICE OF THE REGISTRAR
REGISTERED
4-MAR 1904
MADRAS

இஃது - மதுரை

தம்புசாமிநாயுடவர்கள் குமாரர்

குப்புசாமிநாயுடு அவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை-இட்டா,

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற் றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

(Revised and Enlarged)—Registered Copy Right.

நெ. 84. ஆசாரப்பன்தெரு, சென்னை.

H. செல்லப்பன்

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட

மாதம் வருடம் 1983

செப்பனிட்டு முடித்த

மாதம் 1983 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

1954

NU4

உ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# பஞ்சபாண்டவர் வனவாசம்

## விநாயகர் தோத்திரம்.

ஐந்துகரத்தோனே அரனார் திருமகனே
அறுமுகற்குமுத்தவனே ஆனைமுகப்பிள்ளையாரே
தொந்திவிநாயகரே தொப்பைக்கணபதியே
பானைவயிற்றோனே பழமேத்துங்கையோனே
மூலமுதலே நீர் முன்னடக்கவேணுமையா

## சரஸ்வதி தோத்திரம்.

ஸ்ரீவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
இந்தக்கதைசொல்வதற்கு என்கருத்தில்வாருமம்மா
தப்புகளில்லாமல் தாயே நீவாக்கருள்வாய்
பஞ்சவர்கள்தன்கதைக்கு பாரதியேமுன்னிருந்து
குற்றமதுவாராமல் கொண்டணைத்துக்காருமம்மா

## கதையின்வரலாறு.

### முதலாவது-சூரியன்வனம்.


காரானைக்கன்றே கணபதியேமுன்னடவாய்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதனப்பெருமான்
வனவாசம்போனபின்பு மகாராஜனென்றுசெய்தான்.
அம்மான்சகுனியை அருக்காகத்தானழைத்து
மாமன்சகுனியின் மதிமுகத்தைத்தான்பார்த்து
மாநாகங்கொண்டதொரு மகாராஜனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்கச்சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போயஞ்சாறுமாதமுண்டு

செத்தாரோபிழைத்தாரோ சேதிதெரியவில்லை
வனம்போனபஞ்சவர்கள் மாண்டாரோவறியேன்
அம்மான்சகுனியை அழைத்துவான்கேட்கையிலே
மாமன்சகுனியுந்தான் மருமகனுக்கேதுரைப்பான்
அதரைப்போகவிட்டு தொலைதூரமேதேடில்
வனமாய்வனங்களிலே வனவாசஞ்செய்கிறதும்
செத்ததும்பிழைத்ததும் சேதிதெரியுமென்றான்
என்றதுகேட்டவுடன்எழுந்திருந்தான்துரியோதனனும்
அருகிருக்குந்தூதர்களை அரசுமன்னர்தாவழைத்து
ஐவர்மனம்போய் அனேகநாளாச்சுதே
எந்தவனத்திலிருக்கிறாரென்றறிந்து
ஐவர்கண்காணாதே அதிசீக்கிரம்வாரும்
காற்றாய்ப்பறந்து கடுகியேவாருமென்றான்
தாம்பூலம்வாங்கித் தானடந்தார்தூதுவர்கள்
கோட்டைகடந்தார்கள் கொத்தளமுந்தான்கடந்தார்
பட்டணமுந்தான்கடந்து பாலவனம்போகலுற்றார்
செந்நாய்புலிகரடி சிறுவனங்கடந்தார்
வேங்கையடர்ந்தவனம் வெண்களப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளப்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்தானிருக்கும்
கருநாரைக்கிரைதேடும் கதலிவனங்கடந்து
சூரியவனந்தனிலே போய்சேர்ந்தார்தூதுவர்கள்
பர்ணசாலைக்குள்ளிருக்கும் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்குமிடமறிந்து ஏகிநடந்தார்கள்
வனமாய்வனங்கடந்து வாரார்களம்பலத்தே
துரியோதனனிருக்குஞ் சிங்காதனத்தின்முன்பாய்
சாஷ்டாங்கமாகவேதான்சரணமிட்டார்தூதுவர்கள்
மகாராஜர்மெச்சுகின்ற மன்னவனே நீர்கேளும்
சூரியவனத்திலைவர் சுகமாயிருக்கிறார்கள்
பர்ணசாலைமேலாகப்பஞ்சவரைக்கண்டோமென்றார்
அவ்வார்த்தைகேட்டு அரசமன்னனேதுசொல்வான்



மாமாசகுனி மன்னவரே நீர்கேளும்
எந்தவிதம்பண்ணாலும் இறவாமல்பஞ்சவர்கள்
தப்பிப்பிழைத்திருக்கிறார் தாரணியில்
வனவாசந்தீர்ந்து வந்தார்களானால்
பங்குள்ளபிரகாரம் பாதிராச்சியங்கேட்பாரே
வாராமல்பஞ்சவரை வனத்திலேகொல்லுகைக்கு
ஆலோசனைசொல்லுமையா அம்மானென்றுரைத்தான்
மாமன்சகுனி மருமகனுக்கேதுரைப்பான்
செல்வமருமகனே துரியோதனா அஞ்சாதே
ஐவரைக்கொல்லவென்றால் ஆலோசனைசொல்லுகிறேன்
தேவலோகந்திருக்குஞ் சினமுற்றதுருவாசர்
(அவரை)வருந்திதபசுபண்ணால்வந்திடுவாரிப்பொழுதே
வந்தபொழுதில் வருந்திச்சரணஞ்சொல்லி
அடிசல்சமைத்து அமுதுபடைத்தீரானால்
ஆசனமிட்டு புகழ்வேந்தே பொற்பதத்தில்
சரணமடைந்தால் சந்தோஷப்பட்டிடுவார்
துருவாசர்தன்மகிமை சொல்லிமுடியாது
தேவராலாகாது செயிக்கமுடியாது
ஆராலுமாகாது அந்தரிஷியைசெயிக்க
அப்படிக்கொத்தவரை அழைத்துநீரன்னமிட்டால்
சந்தோஷப்பட்டிடுவீர் தபசில்பெரியவரும்
ஐவரைக்கொல்லுதற்கு அவரைமனுக்கேட்டால்
நல்லதென்றுசொன்னால் இராச்சியமுமுன்னுதடா
யாராலேயாகும் ஐவரைக்கொல்லவென்றால்
என்றுசொல்லக்கேட்டு இராசன்துரியோதனனும்
உள்ளங்குளிர்ந்து உடனேகத்தானெழுந்தார்
அங்கொருவர்தானறியா தாவக்கொடிபோனடந்தான்
முத்துமிதியடியைத் தொட்டுநடந்தசைந்தான்
பூங்காவனம்புகுந்து புதுக்கங்கை நீராடி
ஸ்நானங்கள்செய்து சபதமுந்தான்முடித்து
நினைந்துசிவனை நெற்றியில்வெண்ணீறணிந்து
அரகராவென்று அள்ளியிட்டேன்வெண்ணீறு

சலங்களைக்கொண்டு நிலங்களைச்சுத்திபண்ணி
தெற்பாசனம்போட்டு திரியோதிராஜன்
துருவாசமாரிஷியை அருகுவைத்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக் கருத்தில் நினைந்தானே
அருந்தபசுபண்ணுனே அரவக்கொடியோனும்
அப்போது அந்தரிஷி யறிந்துஞானதிஷ்டியினால்
சர்ப்பக்கொடியோன் தபசுநிலையறிந்து
சந்தோஷமாகி தான்வருவார் அந்தரிஷி
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரானைப்போலே
கையில்கமண்டலமுங் காசாம்பரமணிந்து
தெண்டுகமண்டலமுந் திருநீற்றுக்கோபியுடன்
வருகிறாரந்தரிஷி வானுலகந்தான்கடந்து
வனமாய்வனங்கடந்து வரைமலையுந்தான்கடந்து
திரியோதிரன்தபசு நிலைசேரவந்தரிஷி
கண்டவுடன்மன்னன் கடுகியேதானெழுந்து
முக்காலுமன்னன் முடிவணங்கித்தெண்டனிட்டு
ஆண்டவரே அய்யாவே அடியேன்சரணமென்றான்
சிறந்ததுருவாசரிஷி சித்தமகிழ்ந்தேகுளிர்ந்து
என்னையழைத்ததேனோ நீகருமமென்றார்
மனதில் நினைத்ததெல்லாம் மன்னவுரையுமென்றார்
அஞ்சிப்பயந்தவனும் அரசுமன்னவன்சொல்வான்
அமுதுபடைக்கவென்று அனேகநாளென்மனதில்
எண்ணியிருந்தேன்காண் இதுவேகருமமல்லால்
வாரும்மகாரிஷியே வருவீர் அமுதுசெய்வீர்
வருந்தியழைத்துவந்தான் மாளிகைவாசலிலே
வட்டமணைபோட்டு வந்திருமென்றுசொல்லி
கைக்குச்சலங்கொடுத்தான் கட்டழகன்கோமானும்
தலைவாழையிலைபோட்டுத் தண்ணீருந்தான்தெளித்தான்
முக்கனியுஞ்சர்க்கரையும் முன்படைத்தான்திரியோதிரன்
கட்டிவர்க்கமுடனே காவலனுந்தான்படைத்தான்
உண்ணுமுண்ணுமென்று உபசரணைபண்ணலுற்றான்
அத்தனைபோசனமும் அருந்தினானந்தரிஷி



உண்டுபொசித்தாராம் உள்ளங்குளிர்ந்தாராம்
கையலம்பிக்கொண்டுமவர் கனிவாயுஞ்சுத்திபண்ணி
சிங்காதனத்தினிலே சேர்ந்தாரேயந்தரிஷி
தென்னமுடிவேந்தன் திரியோதிராசன்
பொற்றும்பாளந்தனிலே புட்பமுஞ்சந்தனமும்
தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலந்தான்கொடுத்தான்
மெத்தமகிழ்ந்தாரே மேன்மைதுருவாசரிஷி
சர்ப்பக்கொடிபடைத்த சதிமன்னனைப்பார்த்து
(உனக்)கென்னமனதில் இஷ்டமெல்லாங்கேட்டுவிடும்
மனதில்நினைந்ததொரு வரங்கேளுந்தாரேனென்றார்
என்றுமவருரைக்க யேதுரைப்பான் திரியோதிரன்
ஏதுவரந்தருவீ ரென்றுரைத்தான் திரியோதிரன்
அப்போதுமாமுனியும் அவ்வார்த்தைகேதுசொல்வார்
நீ-கோரும்வரங்களெல்லாங்கொப்பெனவேதாரேமென்
றார், அப்போதுதிரியோதிரன் ஆணையுகனேதுசொல்வா
பங்காளிப்பிள்ளைகளோ பஞ்சவர்களைவருண்டு (ன்
ஐவர்வனவாசம் ஆரணியம்போனார்கள்
சூரியவனத்திலேதான் இருக்கிறார்பஞ்சவர்கள்
ஐவரைக்கொல்லவென்று அநேகமனதாகி
உம்மைவருந்தினேன் உண்மையுள்ளமாமுனியே (ன்றார்
பஞ்சவரைக்கொல்வேனென்று பரவசமாய்ச்சொல்லுமெ
ந்தவகையாலும் இறக்கவகைபண்ணுமென்றான்
பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
துருவாசமகாரிஷியுஞ் சொல்லுகிறார்வாய்திறந்து
ஏதுதானும்மைசெய்தா ரிராசாக்கள்பஞ்சவர்கள்
எப்படிக்கொல்வேனோ ரிராசாக்கள்பஞ்சவரை
திரியனதுகேட்டு செப்புவான்வாய்திறந்து
ஆரணியந்தன்னிலே ஐவருநிற்சென்று
போஜனங்கள்கேட்டாலே புகழ்வேந்தர்பஞ்சவரை
ஐவருக்குபோஜனங்க ளெங்கேகிடையாது
வெந்தசோறுண்டு விதபதியார்பஞ்சவர்கள்
போஜனமில்லையென்றால் பொட்டெனவேசாபமிட்டு

கல்லாகமன்னுகக் காவலரைச்செய்துவிட்டு
கடுகிவந்துசேதிசொல்லும் கந்தரிஷியாரே
போய்வாருமென்று பொருந்தவேதெண்டனிட்டான்
துருவாசமாமிஷியுஞ் சுருக்காகவேயெழுந்து
தெண்டுமண்டலமுஞ் செம்புலித்தோலாசனமும்
கடுகிநடந்தாரே காடுஞ்செடிநோக்கி
அஸ்தினபுரந்தாண்டி ஆறுநதிகளைதாண்டி
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றபூத்த செடியும்வனந்திரும
கடுகிவருகிறார் கந்தரிஷியவரும்
ஏழுலகையாண்ட வெம்பெருமானிதையறிந்தார்
ஆதியனந்தமாயனுர் ஆதிமூலமேதுசெய்தார்
நம்பினவரைக்காக்கும் நாராயணரெழுந்து
காவலர்கள்பஞ்சவர்க்கு கனமோசம்வந்ததென்று
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வருகுதென்று
செல்வத்திரவியங்கள் சிதறிப்போகுதென்று
தோளிற்செபமாலை சோரவிடநாளாச்சே
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி யேற்பட்டான்பஞ்சவர்க்கு
இங்கேயிருந்தோமென்றுன் இறந்திடுவார்பஞ்சவர்கள்
நம்பினேமென்றவரை நாமல்லோகாக்கவேணும்
என்றுயெழுந்தாரே எம்பெருமான்மாயனும்
துவாரகாபுரிதாண்டி அழாய்மேனிதாங்கினார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சிறந்ததுருவாசருடன் சேர்ந்தாரேயெம்பெருமாள்
ஆலிங்கனம்பண்ணினுர் ஆயர்பெருமானும்
இந்தவனத்துக்கு யேதுகவையாய்ப்போறீர்
எங்கே நீர்போறீர்காண் என்றார்பெருமானும்
மாரிஷிதுருவாசர் மெய்மறந்தேதுசொல்வார்
மாயன்பெருமானே வந்தேனிவ்வனத்தே
பார்வேட்டையாகவே பாவனங்கள்வந்தேன்
வனசாரியாகவே வந்தேன்காணிவ்வனத்தே



அவ்வார்த்தைதான்கேட்டு அந்தரிஷியேதுசொல்வார்
பஞ்சவர்கள்நாமிருக்கும் பாவனங்களிலே
ஐவரிருக்குமந்த அடவியிலேபோய்ச்சேர்ந்து
புண்ணியவானவரையும் போசனங்கேட்கவந்தேன்
என்றுசொல்லைக்கேட்டு எம்பெருமானானவரும்
நாமும்வருகிறோம் பரசாக்களைப்பார்க்கக்
கூடநடந்தாரே கோபாலசுவாமியவர்
இருவருமாகவே யிருண்டவனந்தாண்டி
ஓங்கிவளர்ந்தகொரு மூங்கில்வனந்தாண்டி
செந்நாய்புலிகாடு சீறும்வனந்தாண்டி
பாதிரிமுல்லை பருத்தவனந்தாண்டி
ஒருநாரைக்கிருநாரை வொசந்தகொப்பிலேயிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
கடுகிவருகையிலே கரியமாலென்னசெய்தார்
பலாமரத்தைக்கண்டதுவும் பாரளந்தாரேதுசொல்வார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
இந்தப்பலாயிலேதான் எதுக்குதவுமென்றுர்
அவ்வார்த்தைகேட்டுமல்லோ அரியரிஷியேதுசொல்வார்
இந்தப்பலாயிலேயி னியபோசனங்களுண்டால்
பலாயிலேயிற்போசனங்கள் பண்ணவர்க்குஇட்டாலே
அமரருக்குஅற்புதங்காண் ஆர்க்குங்கிடையாது
எல்லோர்க்குங்கிட்டாது ஸ்ரீராமாவென்றுசொன்னுர்
உச்சிதங்கள்தான்கேட்டு உவந்துநடக்கையிலே
அந்தவனங்கடந்து அடுத்தவனம்போகையிலே
காமதேனும்பாலை கருங்கல்லுப்பாறையிலே
கறந்துயிருக்கிறதை கண்டார்பெருமானும்
மாயன்பெருமானும் வார்த்தையவர்க்கேதுரைப்பார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
ஞாயதவத்திற்சிறந்த துருவாசமாமுனியே
காமதேனுவின்பாலுங் காரியத்துக்காகுமோதான்
(இது)எதுக்குதவுங்கா ணென்றார்பெருமானும்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமுனியேதுசொல்வார்

தேவலோகந்தனிலே தேவருக்குங்கிட்டாது
ஆர்க்குங்கிடையாது அமரருக்குங்கிட்டாது
(இது) எடுத்துபொசித்தாலே சகலபாருக்கற்புதங்காணே
என்றுசொன்னவார்த்தைதனையெம்பெருமான்தான்கேட்
சந்தோஷப்பட்டுமவர் சாரிநடந்தாரே (டு
அடுத்தவனந்தனிலே அவரிருவர்போகையிலே
தாமரைத்தடாகத்தைச் சாரிகண்டேதுசொல்வார்
அய்யாபெரியவரே அமரர்க்கரிதானவரே
இந்தஜலந்தானும் வசுக்கு ஆகுமென்றார்
குருவாசமாரிஷியுஞ்சொல்லுகிறார்பொட்டெனவே
தாமரைப்பொய்கையிலே ஸ்நானங்கள்செய்தாலும்
தபங்கள்ஜெபங்கள்பண்ணி தாகத்துக்குண்டாலும்
சிவனேயானாலுஞ் செப்பமுடியாது
என்றுசொன்னவார்த்தை யெம்பெருமான்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமப்போ சாரிநடந்தாராம்
இருவருமாகவே வழிவழிநடந்தார்
சூரியன்வனந்தனிலே சேர்ந்தாரிருவருமாய்
பர்ணசாலைமேலிருந்த பஞ்சவர்கள்கண்டுவிட்டார்
மாயன்பெருமாளும் மாமுனியானவரும்
வருகிறாரென்றுமந்த மகராஜர்தானெழுந்து
இடுக்கிட்டுத்தான்பதைத்து சீக்கிரமாய்த்தானெழுந்து
எதிர்கொண்டோடிவந்து இறங்கியேதெண்டனிட்டார்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டார்
கூடிமுடுகியே காட்டுத்தழையொடித்து
ஐந்தடுக்குமெத்தையதாய் ஆசனம்போட்டார்கள்
இட்டசிங்காதனத்தில் ஏறியிருவருமாய்
பர்ணசாலைமெத்தையிலே பதியக்கொலுவிருந்தார்
தக்கபுகழுடைய தருமரவர்கூறுவார்
துரியோதனன்செய்த சேதிகளைக்கேட்டீரோ
நாட்டோடிருந்தவென்னை ராஜமன்னன்தானழைத்து
விருந்தருந்தவாருமென்று விருந்தோலைதானனுப்பி
வருந்தியெனையழைத்து வஞ்சனைகள்பண்ணினனே



கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
வாரவழிதனிலே வசிகளைத்தான்புதைத்தான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
வசநாவித்தண்ணீர்பந்தல் வழியில்வைத்தான்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேஉன்னருளால்
பொற்குழிவெட்டியே பொற்சிங்காதனங்களிட்டு
கொல்லநினைத்தானே குடிகேடன்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
எண்ணெயிட்டுக்கொள்ளுமென்றிளங்களையுந்தானழைக்
கொல்லநினைத்தானே குடிகேடன்மாபாவி (தான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
நீரிற்கழுநாட்டி நீராடவாருமென்றான்
குளத்தில்வசிநாட்டிக் கொப்பனவேபோங்களென்றான்
அதுக்கும்பிழைத்தோமே அரிராமர்புண்ணியத்தால்
உண்ணுகிறசாதத்திலே ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொலைகாரன்நஞ்சையிட்டான்
கொல்லநினைத்தானே குடிகேடன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேஉன்னருளால்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
சொக்கட்டான்போட்டான்காண் சோழிவிளையாடி
பகடசாலைபோட்டு பந்தயங்கள்பேசினான்
நாடுகளுஞ்சீமைகளுஞ் ராச்சியமும்பேசினான்
தாயசீமையேழு அதைத்தனமுந்தான்பறித்தான்
பெருந்தவிலங்குமிட்டுப் பெருங்கிடங்கிலேயடைத்தான்
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கிலிட்டான்
தள்ளிவிழுத்துவந்து தான்விலங்குபோட்டுவிட்டான்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
அறையிலிருந்தபெண்ணை அம்பலத்திற்கொண்டுவந்து
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பாவையழகியளை
அரசர்சபைநடுவே அம்பலமேற்றிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லியல்லோ துகிலுரித்தான்மாபாவி
வாய்வரிசையில்லாமல் வம்பாகப்பேசினனே.

பாரவனவாசம் பன்னிரண்டுவருடம்வரை
ஆரணியம்போயிருந்து அப்பாலொருவருடம்
அக்கியாதவாசம் யார்க்குந்தெரியாமல்
ஊரில்உருமாறி யொளிந்திருந்துவந்தக்கால்
காடுதிரிந்துவந்தால் காசிநகர்தாரேனென்றான்
பங்குள்ளபிரகாசம் பாதிநாடுதாரேனென்றான்
பாரவனவாசம் பரதேசம்வந்துவிட்டோம்
(எங்கள்)பொழுதுதொலையுமோ பூமியையாளுவமோ
என்றுதெளியுமோ எக்காலஞ்சென்றிடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தையாளுவமோ
உம்முடையதிருவுள்ளம் எப்படியோநாமறியோம்
பாதஞ்சரணமென்று பணிந்தாரேதருமராயர்
மாயன்பெருமானும் வார்த்தையவர்க்கேதுசொல்வார்
தலையில்எழுதினதை தள்ளிவைப்பாரொருவருண்டோ
வரும்வினைவந்தக்கால் படியேந்தவேண்டாமோ
ஈசனெழுதியதில் எள்ளளவுங்குறையாது
(என்று)பிரியவசனத்தை பெருமானுரைத்தாரே
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
இந்திரிஷியாரும் யேதுகனவாகவந்தார்
என்றுமவர்கேட்க யேதுசொல்வார்மாயவரும்
வந்தவருத்தத்தை மாயவருங்கேளுமென்றார்
என்றுசொல்லக்கேட்டு இயலானதர்மலிங்கம்
துருவாசமாமுனிக்குத் தெண்டஞ்சமர்ப்பித்து
சொல்லுவார்வாய்திறந்து சொற்பெரியதர்மலிங்கம்
அடியேனைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
கமலபதம்நோந்திடவோ கால்நடையாய்வந்தீரே
செந்தாமரைப்பாதம் செப்புண்ணாய்ச்சிவந்ததுவோ
தேடிவந்தகாரியத்தைச் செப்புமென்றார்மாமுனியை
துருவாசமாமுனியும் சொல்லுகின்றார்வாய்திறந்து
குருகுலவங்கிஷத்தில் குந்தியார்புத்திரரே
போசனங்கேட்கவந்தேன் புகழ்பெரியதர்மரேநான்
தேவருக்குமற்புதமாய் சீஷர்க்குப்பிரியமாக



இப்போதுபோசனங்களிட்டாலேயல்லாது
கல்லாய்ச்சபிப்பேனென்றான் கனத்தரிஷியவரும்
மெத்தப்பயந்தாரே வில்வேந்தர்தருமராஜர்
ஆயரைப்பார்த்துமல்லோ அனேகவிசாரமிட்டார்
மடிந்துவிடுங்காலம் வந்ததேயென்னசெய்வோம்
என்றுபுலம்புகையில் எம்பெருமானேதுசொல்வார்
வீமாமதக்கிரியே வேல்வேந்தாவாருமென்றார்
பருத்தவனங்களிலே பலாயிலைநீபறித்து
கருங்கல்லுமேலாகக் காமதேன்பாலிருக்கும்
காராம்பசும்பாலைக் கடுகியேபேர்த்தெடுத்து
தாமரைப்பொய்கையிலே சலங்கொண்டுவாருமென்றார்
என்றுசொல்லமாயன் எழுந்துநடந்தான்வீமன்
கடிதுமுடுகியே காற்றாய்ப்பறந்துவந்து
காமதேனின்பாலையவன் கடுகியேபேர்த்தெடுத்து
பருத்தவனங்களிலே பலாயிலைதான்பறித்து
தாமரைப்பொய்கையிலே சலங்கொண்டோடிவந்தான்
துருவாசமாமுனியே சுவாமியெழுந்திரென்றார்
கைக்குச்சலங்கொடுத்து கடுகவேதருமராயர்
வட்டமணைபோட்டு வந்திருஞ்சுவாமியென்று
பலாயிலைபோசனங்கள் பாங்காய்ப்படைத்தார்கள்
உபசரணைபண்ணியே உண்ணுமையாசுவாமியென்று
போசனத்தைமாமுனியும் போசித்தபிறகாக
ஆயாசந்தீர்ந்தாரே அந்தரிஷியாரும்
கையலம்பிக்கொண்டாராம் கடுகிமகிழ்ந்தாராம்
தாம்பூலமும்வாங்கிச் சந்தனமுந்தானணிந்து
ஐவரைக்கொல்லவந்த அந்ததுருவாசரிஷி
தேவர்களருந்துகிற திவ்வியமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் புகழ்வேந்தர்பஞ்சவர்கள்
இப்படிக்கொத்தவரை எப்படிக்கொன்றிடலாம்
என்றுமனமகிழ்ந்து இராசாக்களைவாழ்த்தி
ஐவர்பஞ்சபாண்டவரை அந்தரிஷிவாழ்த்தினார்
ஐவரையும்வாழ்த்தி ஆயனைத்தெண்டனிட்டு

இழிங்களிருங்களென்று எழுந்துநடந்தாரே
கடிகிமுடிகியே கரியமலைதான்தாண்டி
சூரியன்வனந்தாண்டி சுருக்காய்வெருகுறாம்
காடுகள்தாண்டியே கரியமலைதான்தாண்டி
அஸ்தினாபுரத்தை அடுத்தாராமந்தரிறி
திரியோதனனிருக்குந் திருச்சபைதன்னில்வந்தார்
திரியோதனராசன் தெண்டனிட்டான்மாமுனியை
அடிபணிந்துதெண்டனிட்டு ஐயாசரணமென்றான்
சிங்காதனம்போட்டு சீராகவீற்றிரென்றான்
ஆசனத்தின்மேலாக அந்தமுனிவீற்றிருந்தார்
தென்னமுடிவேந்தன் திரியோதனன்கேட்பான்
ஐவரையுங்கொன்று அதம்பண்ணிப்போட்டீரோ
கல்லாய்ச்சபித்திரோ கடிகியேவந்திரோ
என்றுசொல்லிக்கேட்டானே இயலானராசதுரை
துருவாசமாமுனிக்குத் தோசிமொழிகொள்ளாமல்
கோபமிகக்கொண்டு கொப்பனவேயேதுசொல்வார்
ஐவரையுங்கொல்லென்று அனுப்பினாய்பாதகனே
ஐவர்போஜனபசாணை ஆரொருவர்செய்கதில்லை
தேவர்கள்தானருந்துந் திவ்யமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் பொன்னடியைதான்வணங்கி
சரணமடைந்தார்கள் சந்தோஷமாகிவந்தேன்
ஐவரையுங்கொல்லவென்று அனுப்பினாய்பாதகனே
உன்னுடையவம்சத்தில் ஒன்றும்விளங்காது
ஐவருடையாலே அளர்த்தமாய்ப்போகவென்று
சாபங்கொடுத்தாரே சமர்த்துள்ளமாமுனியும்
செப்பிநடந்தாரே தெய்வலோகந்தனிலே
துருவாசமாமுனியும் தெய்வலோகப்போனபின்பு
அப்போதிரியோதனன் அங்கேவிசனமதாய்
என்னதன்னமென்னனி இருந்தான்திரியோதனன்
ஐவருக்காகவே ஆயிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
தென்னமுடிவேந்தன் திரியோதனப்பெருமான்



தூயதேவுலகிருக்குந் துருவாசமாமுனியை
அரவக்கொடியோனும் அனுப்பினனுமைக்கொல்ல
திரியோதனன்சொற்படிக்குச் சீறுந்துருவாசமுனி
(உம்மைக்)கொல்லமனதாகி கோபித்துவந்தாரே
அதுவறிந்துங்களைநான் ஆதரிக்கஇங்குவந்தேன்
அல்லாதேயிமானால் அநீதமாய்மாண்டிடுவீர்
என்றுரைக்கமாயவரும் ஏதுரைப்பார்தருமருமே
உம்மைநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறோம்
நீரேதுணையல்லால் வேறுதுணையுமுண்டோ
நம்பினபேர்களையே ரட்சிக்குந்தேவனல்லோ
அடியாரைக்காக்கின்ற ஆதிபரம்பொருளே
ஏழைகளைக்காக்கின்ற எம்பெருமாளாண்டவரே
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனந்திரியுமட்டும்
ஏதுவினைவருமோ யெம்பெருமாள்நானறிவேன்
இன்னமென்னவஞ்ஞானையோஎம்பெருமாள்நானறியேன்
வரும்வினையாவுக்கும் மாயவரே துணைவாரும்
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்திரே
அபயமென்றதுரோபதைக்குஅட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உலகளந்தமாயவரே
சரணஞ்சரணமென்று தாள்பணிந்தார்பஞ்சவர்கள்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்பஞ்சவர்கள்
மாயன்பெருமாளும் மனதுமிகக்குளிர்ந்து
ஐவர்மேல்பட்சம் அதிகப்பிரியமுமாய்
சந்தோஷப்பட்டுசுவாமி தன்னுடமனங்குளிர்த்தார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனியவனப்போங்களென்றார்
மற்றொருவனத்திலேதான் மன்னவரேபோங்களென்றார்
அடுத்தவனந்தனிலே ஐவரும்போய்வாசம்பண்ணார்
தெற்குமேற்குகிழக்குசேனதூரஞ்சென்றாலும்
வடக்குத்திசையிலேதான் மன்னவரேபோகவேண்டாம்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைத்திடுங்கள்
என்றுமவர்சொல்லி எம்பெருமாள்தானெழுந்தார்

வட்டமாகக்கருடனேறி மாயனும்போய்நடந்தார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
அழகாம்துவார்கைக்கு ஆண்டவரும்போய்நடந்தார்

முதலாவது-சூரியவனம்-முற்றிற்று.

## உ-வது, இராமரிஷிவனம்.

இரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
கோலிவைத்தசிமரடு குடைதலைபோலேவைத்தார்
குடைதலைபோலே குடிவார்ப்பைகானகத்தில்
முன்னைமுகட்டையும் முகிழ்விரித்தநாவலை
பண்ணைகலையையும் பரட்டைபுளிக்காயை
தின்றுதிரிகிறார்கள் தேசாந்திரிபோலே
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அவ்வனத்திலுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
(அந்த)வனத்திலேஅவர் வனவாசம்செய்தார்கள்
அந்தவனத்திலேதான் அழகானராமரிஷி
தபசிற்பெரியவரும் தம்பிரானவரும்
சரணங்கள்பண்ணினாலே சாதங்கறிவிடுவான் (ன்
போஜனங்களிட்டமெல்லோ புஷ்பங்கள்தான்கொடுப்பா
காவிகாசாம்பரமும் கைமணியுந்தான்கொடுப்பான்
புலித்தோலுமானமுழுப்பொருந்தவேதான்கொடுப்பான்
சரணமடைந்துமே சாமிபோய்வாருமென்பான்
தாதர்பெரியவர்கள் தப்பெடுத்துவந்தாலும்
அரிராமவென்றுசொல்லி அனந்தப்பேர்வந்தாலும்
ராமராமவென்றசத்தம் ராமரிஷிகேட்டாலும்
அரிகரியென்றசத்தம் அந்தரிஷிகேட்டாலும்



கோவிந்தாவென்றசத்தம் குருமுனிதான்கேட்டாலும்
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேதானெழுந்து
சீறிவரும்புலிபோல் சிவ்வெனவேதானெழுந்து
கையிற்றடியெடுத்து கடுகியடிப்பானே
வரியென்றுமவர் வல்லுயிரைக்கொள்ளைகொள்வான்
அப்படியாகவே அனேகநாளிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தையதுவறிந்து
தள்ளாடுங்கிழவனைப்போல் தானேவடிவெடுத்தார்
பரந்தமுகம்நிறைந்த பழுத்தமரம்போலே
தாதவடிவாக சாமிவருவாராம்
ராமரிஷிதானிருக்கும் நல்லவனந்தனிலே
அந்தரிஷியிருக்கும் ஆச்சிரமமும்புகுந்து
ஹரிஓம்ஹரிஓமென்று அடித்தாராந்தப்பட்டை
சாரங்கபாணியென்று சங்குதனைத்தானூதினார்
அந்தசத்தந்தான்கேட்டு அரியரிஷிதானெழுந்து
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேதடியெடுத்து
ஆனையின்மேலேதான் ஆண்சிங்கம்புகுந்தாப்போல்
தாதனொருவனையும் தடியாலடிக்கலுற்றான்
மாறியடித்தானே மதம்பெரியராமரிஷி
(அந்த)அடிபட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
மறுகாலொருதரமும் மாறினான்ராமரிஷி
அவ்வடியும்பட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
(அவன்)மாறியடித்தானே மாயனென்றறியாமல்
சுழட்டியடித்தானே சுவாமியென்றறியாமல்
அவ்வடியும்பட்டவுடன் அரிராமர்கோபமாகி
கண்கள்சிவந்துமல்லோ காந்தானமுமெழும்பி
ஆகாயமாகவே வளர்ந்தாரே ஆயரங்கே
விஸ்வரூபமாகவே மேகவண்ணர்தான்வளர்ந்தார்
கண்டானேராமரிஷி கால்கைதடுமாறி
அடித்தொடையுங்காலும் அதிரவிடவிட்டன்ன
மெத்தப்பயந்து விழுந்தானடிபணிந்தான்
சுவாமிசரணமென்று தாள்பணிந்தான்ராமரிஷி

முக்காலுந்தெண்டனிட்டு முடிவணங்கிப்போற்றிசெய்தா
அப்போது மாயவரும் அருளாளரேதுசொல்வார் (ன்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
போசனங்கள்போடுறதும் பேர்தப்பாமியுறதும்
மயேஸ்பராடியார்க்கு வணக்குவதேயல்லாது
எந்தவடியாரை இகழ்ச்சிபொட்பேசுறதும்
மாறியடித்துமே மோசக்கப்பண்ணுறதும்
அகந்தைகள்பண்ணுறதும் ஆருமோராமரிஷி
ஆகாதகாரியங்கள் அநர்த்தங்கள்தேடிக்கொண்டீர்
இவ்வார்த்தைகேட்டுமே இமயவராமரிஷி
மெத்தப்பயமாகி விஷ்ணுவைத்தான்பணிந்து
கைகட்டிவாய்புதைத்து காடுயேயேதுசொல்வான்
ஆதிசிவன்பாதம் அடியோனறிந்திருப்பேன்
உன்னுடையபாதம் ஒருக்காலுந்தானறியேன்
தேடியுங்காணாதால் தேவரீருன்பாதம்
ஆண்டவரேயுமைக்காண அனேகநாள்தவமிருந்தேன்
கோடித்தவமிருந்தும் கோவிந்தனைக்கண்டதில்லை
ஆகையினாலேதான் ஐயாவுமைக்காண
உம்முடவடியாரை உதாசினம்பண்ணுறது
இந்தவிதமாக இருந்தேன்நெடுநாளாய்
என்வினையகன்றுஇன்று எம்பெருமானுமையாலே (டேன்
(உன்)பாதமதைக்கண்டபோதே பாவங்கள்போக்கிவிட்
அந்தப்பயத்தவனும் ஆசாரப்பண்ணினான்
காயாம்புவண்ணருமேக ரியமாலேதுசொல்வார்
அகந்தைகள்செய்ததினால் அனேகபாவமுந்தனுக்கு
சாபம்பிடியுமென்றார் செங்கிபெருமானும்
ஆயிரம்வருஷமட்டும் அரவமாய்ப்போகவென்றார் (ன்
தாராளுக்கன்மலைப்பாம்பாய் சாபமிட்டாரெம்பெருமா
அப்போதுராமரிஷி ஐயனையேதுகேட்டார்
எம்பெருமானிச்சாப மெப்போதுதீருமென்றார்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்வாரார்கள்.





வைவாசம்பொரார்கள் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
தருமர்தம்பிநால்வர்களைந் தானெடுத்துவிழுங்கிவிர்
வெற்றிமதயானை வீமனருச்சுனரை
நகுலர்சகாதேவர் ராசாக்கள்நால்வரையும்
எடுத்துவிழுங்கியே இருக்கின்றவேளையிலே
அருச்சுனன்வில்லாலுன் அங்கம்பிளந்துவிடும்
அந்தச்சமயத்தில் அங்கேநான்வந்திருப்பேன்
நான்வந்திருந்து நற்காட்சிதாரேனென்றுர்
அப்போதுபாமரிஷி ஆயரிட்டசாபமதால்
அரிராமர்சாபத்தால் அப்பாம்புமுண்டாச்சு
அனேகநாளாய்ப்பாம்பு அவ்வனத்திலேயிருக்கும்
அதுவறியார்பஞ்சவர்கள் அவ்வனத்திலேயிருந்தார்
இராமரிஷிவனத்தில் இராஜாக்கள்தானிருந்தார்
பர்னசாலையுண்டுபண்ணி பஞ்சவர்களங்கிருந்தார்
காயும்பழமும் கந்தமூலங்களுண்டு
ஐவருமங்கேதான் ஆலித்திருக்கும்போது
தெற்குமேற்குக்கிழக்கு தேடிக்கனிபறிப்பார்
வடக்குதிசைநோக்கி மன்னவர்கள்போறதில்லை
அவ்வனத்திலேயொருநாள் அடங்காதவீமனவன்
மெத்தவகங்காரமுடன் வீமனுமங்கேநினைவாய்
கடுகியெழுந்திருந்தான் கனிகள்பறிக்கவென்று
வடக்குத்திசைதனிலே மாயன்போகாதேயென்றுர்
காயுங்கனியுமங்கே கிடைக்கிடாதோ
வேண்டியராட்சதர்கள் வேதமுனிகளுண்டோ
அவ்விடத்திலதிசயங்களெல்லாமறிவோமென்று
கடுகியெழுந்திருந்தான் கட்டழகன்வீமனவன்
சல்லடங்கள்போட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
கையில்கெதையெடுத்து கடுகியேதானடந்தான்
வடக்குத்திசைநோக்கி வாரான்மதகரியான்
காயுங்கனியுமங்கே கடுகப்பழுத்திருக்கும்
அவ்விடத்திலேகனியும் அனேகம்பழுத்திருக்கும்

அருநெல்லி சிறுநெல்லி அழகாந்தமர்த்தைகளும்
கொச்சித்தமர்த்தையுடன் குடகுபலாப்பழமும்
மாங்கனியுந்தேங்கனியும் வண்ணைப்பலாப்பழமும்
மட்டில்லாப்பழங்களெல்லாம்வனத்தில்சொரிந்திருக்கும்
அளவில்லாக்கனிகளெல்லாம் அவ்வனத்திலிருக்கு (ம்
கண்டானேவீமனவன் கண்கள்மிகக்குளிர்ந்தான்
பார்த்தானேவீமனவன் பார்வைரண்டுந்தான் குளிர்ந்தா (ன்
அங்கேகனிகள் அனேகம்பழுத்திருக்க
மெத்தக்கனிகளிங்கே வேணதெல்லாந்தானிருக்க
உண்டுபிழைப்பார்க ளென்றல்லோஉலகளந்தார்
இன்றுபிழைப்பார்களென்று திருமாலும்
வடக்குத்திசைபோகாதே யென்றுரேமாயவரும்
சாமிபெருமாளவர் சந்நிதிகளைக்கண்டோமே
என்றுமனதிலெண்ணி வங்கிநடந்தானே
எண்ணாதுமெண்ணினன் இயலானவீமனவன்
அந்தவனத்திலவனுமுள்நுழைந்து
மரத்தின்மேலேறினன் மதவீமராசனவன்
உச்சியிற்கனிபறித்து உண்டுபொசித்தான்தான்
காயுங்கனிபறித்து கடுகவேதான்பொசித்தான்
வெயாரத்தின்றுமேவயிறார்த்தான்பொசித்தான்
அண்ணருக்குந்தம்பியர்க்கும் அனேகங்கனிபறிக்க
அருநெல்லிசிறுநெல்லி அழகாந்தமர்த்தையுடன்
சோலைப்பலாக்கனியும் தூய்யவிளாங்கனியும்
கிளையைவளைப்பாரும் கிள்ளியொருபழம்பறிப்பார்
செடியைவளைப்பாரும் சிவந்தபழம்பறிப்பான்
அங்கேகனிகளனேகம்பறிக்கையிலே
அடுத்தபுதரிலேதா னரவமெழுந்திருந்து
சரிந்தவனத்திலேதான் சர்ப்பமெழுந்திருந்து
மதவீமராசனை மலைப்பாம்புகண்டதுகாண்
தாராமுங்கன்மலைப்பாம்பு சந்தோஷமாகவேதான்
மனதுமிகக்குளிர்ந்து மதகரியானருகில்வந்து
வாயைத்திறந்துமங்கே மதவீமனையடுத்து



எடுத்துவிழுங்கிற்று இயலானவீமனைத்தான்
பாம்பென்றுபார்த்ததில்லை பாரமதவீமன்
சர்ப்பமென்றுபார்த்ததில்லை சமர்த்துள்ளவீமனவன்
கால்கொண்டதாம்மட்டுங் கடுகெனவேதானடந்தான்
விசைகொண்டதாமட்டும்விசிநடந்தானே
வழியுந்தெரியாமல் வந்தவிடங்காணாமல்
பாதைதெரியாமல் பாம்பென்றறியாமல்
பெருங்குடல்சார்ந்துகொண்டான் பெருமானிகர்வீமன்
அடிக்குடல்மேல்சார்ந்துகொண்டான் அந்தமதவீமன்
பாம்பென்றறிந்தானே பாரமுடிவேந்தன்
சர்ப்பமென்றறிந்தானே சமர்த்துள்ளவீமனவன்
என்றுமெண்ணி இருந்துவிசாரமிட்டான்
அண்ணரைத்தம்பியரை அல்லவரை நான்பிரிந்து
கூடப்பிறந்தவரை கொற்றவரை நான்பிரிந்து
ஒக்கப்பிறந்தவரை உடன்பிறப்பைநான்பிரிந்து
மாளும்விதியின்றோ வந்தேனறியாமல்
ஆகையினாலேதான் ஆயர்போகாதேயென்றார்
அறியாமல்வந்திங்கு அகப்பட்டேனென்னசெய்வேன்
மாயன்சொற்கேளாமல் வந்துவிட்டேனிவ்வனத்தில்
அண்ணர்தருமராயர் அழுதுபுலம்புவரே
தம்பிமாரைத்தேடியவர் தானேபுலம்புவரே
அறியாமல்வந்தேனாண்டவரேயென்னசெய்வேன்
ஆயரேகோவிந்தா ஆதிமூலவந்தருளும்
மாயரேகோவிந்தா மகாதேவாகாத்தருளும்
என்றுபுலம்பியிருந்தானே வீமனவன்
தக்கபுகழுடைய தருமரென்னசெய்வார்
அருச்சுனன்கனிபறித்து அண்ணரண்டைவந்தபின்பு
வாய்திறந்துதருமராயர்மதிகலங்கியேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமன்கனிபறிக்க
மதவீமன்போயுமல்லோ மன்னுநெடும்போதாச்சு
போனவிடந்திலே புதுமையொன்றுமறியேன் (ன்
மதவீமன்போனசெய்தி வார்த்தையொன்றுமறியே

அண்ணரைத்தேடியே அழைத்தோடிவாராயோ
ஓடியழைத்துமே ஒருநொடியில்வாராயோ
கண்டுஅழைத்துமே கடுகெனவேவாராயோ
அப்போதுஅருச்சுனரும் ஆணைமகவேதுசொல்வான்
அப்படியேபோய்வாரேன் அடியேன்சரணமென்று
சரணம்சரணமென்று சாய்த்தான்திருமுடியை
முக்காலும்வலம்வந்து முன்னொருக்கால்தெண்டனிட்டான்
போகவிடைதாருமென்ன போர்விஜயன்தெண்டனிட்டான்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்(ன்
விடைபெற்றெழுந்தான் விஜயபெருமானும்
சல்லடங்கள்தான்போட்டு கட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
பில்லைசமுதாடு பிருவெடுத்தொட்டியாணம்
பட்டுகட்டிகட்டியல்லோ பாலாவுந்தான்சொருகி
அம்புவில்லுந்தானெடுத்து அருச்சுனன்வாரானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளந்தாண்டி பதிகளைத்தான்தாண்டி
சில்லென்றகாடும் செடியும்மலைதான்தாண்டி
தூவடியைத்தேடியல்லோ கடுகியேதான்வருவான்
பாரவனங்களிலே பார்த்திபனும்வாரானே
அவ்வனத்திலேகனிகள் அனேகம்பழுத்திருக்கும்
கண்டானேஅர்ச்சுனனுங்காலிலுமேதுசொல்வான்
காலடியைக்கண்டோமே காவலனைக்காணோமே
எங்கிலுங்காணோமே இயலானவீமனைத்தான்
கூவியழைப்போமா வென்றல்லோகொற்றவனும்
அண்ணரேவீமாவென்று அழைத்தானேபார்விஜயன்
கூவியழைக்கவுமே குரல்கேட்டுவீமனுக்கு
அருச்சுனன்தேடி அழைக்கிறானென்றுசொல்லி
மாலைமுடியான் மகவீமனேதுசொல்வான்
காளையருச்சுனரே கடுங்காடுதாரதிலும்
அருகேநீவாராதே அருச்சுனாதூரத்திலும்
கிட்டநீவாராதே எட்டத்திலும்அர்ச்சுனரே



இங்கேநீவாராதே இறந்திடுவாய்தம்பியரே
தூரத்திலும்அருச்சுனரே சேரவந்தால்மோசமடா
ஏதோபெரும்பாம்பு என்னைவிழுங்கிற்றுகாண்
அரவத்தின்வாயிலேதானகப்பட்டுக்கொண்டேனப்பா
இனிப்பிழைப்பேனென்று நீ எண்ணாதேதம்பியரே
தப்பிப்பிழைப்பேனென்று எண்ணாதேதம்பியரே
மற்றும்பிழைப்பேனென்று மன்னவரேயெண்ணாதே
ஆயாசமாகாதே அண்ணருடன்சொல்லுமப்பா
மனவருத்தங்கொள்ளாதேமன்னருக்குச்சொல்லுமப்பா
தக்கபுகழுடைய தருமர்நமதண்ணரவர்
கவடுதெரியாதார் கள்ளமொன்றுந்தானறியார்
வெறுத்ததைப்பாலென்பார் வெள்ளமதைநீரென்பார்
பொய்சொல்லான்புண்ணியவான்புகழ்வேந்தரண்ணருக்
சிந்தைகலங்காமல் தேறுதலைசொல்லுமப்பா (கு
மனதுகலங்காதே வார்த்தைகளைச்சொல்லுமப்பா
வனவாசந்தீர்ந்தலவோ வையகத்தேபோனபின்பு
சேனைபரிவாரம் திரியோதிரன்பாளயத்தை
செண்டாட்டமாட்டிவைத்து சேனைகளைக்கொன்றழித்து
கர்னன்சகுனியையுங் கண்டதுண்டமாகவெட்டி
திரியோதிரன்முதலாய்ச் சேர்ந்ததம்பிநூற்றுவரை
மற்றும்படைகளெல்லாம் மண்ணோடேசாய்த்துவெட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அரசாண்டிருங்களப்பா
தருமருக்குப்பட்டங்கட்டி தாரணியையாண்டிடுங்கள்
எப்போதும்போலே இராச்சியத்தையாண்டிடுங்கள்
பெற்றாள்வயிறதனில் இட்டேன்பெருநெருப்பை
குந்தியம்மாள்தன்வயிற்றில் கொடியதனல்வைத்தேனே
எழுத்துப்படியல்லால் எவரால்விலக்கவசம்
தலையிலெழுத்துத்தான் தவறாதுதம்பியரே
அன்றெழுதுங்கர்த்தனவன் அழித்தெழுதப்போறதில்லை
விதிவசத்தையாராலும் வெல்லவேகூடாது
இனிப்பிழைப்பேனென்று நீ எண்ணாதேதம்பியரே
கிட்டநீவாராதே எட்டநில்லும்தம்பியரே.

போய்வாருமென்றுனே போர்க்கடங்கா வீமனவன்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனன் துயரமுற்று
கண்ணீரைச்சொரவிட்டுக் காளையருச்சுனன்
மெத்தச்சலித்துமே விசாரம்பெரிதாகி
அண்ணாவேயென்வீமா அடியேனொருவார்த்தை
பாம்பின்வயிற்றிலே நீர் பார்வேந்தராமாண்டதும்
அரவத்தின்வயிற்றிலே நீர் ஆளுகையாண்டதும்
அண்ணன்தருமருடன் அடியேனொருவார்த்தை
உரைத்தேனேயானாக்கால் உள்ளபடிக்குதறி
துள்ளிப்பதைத்துயிரை துடிதுடித்துவிட்டிடுவார்
எப்படிக்குநானுரைப்பேன் என்னுடையஅண்ணாவே
போகமனம்வருமோ போர்வேந்தே அண்ணாவே
உன்னைவிட்டுநான்பிரிந்துஉயிருந்தரிப்பேனோ
இப்பெரியபாம்புதன்னை இட்டணைத்துக்கொன்றிடுவேன்
வயிற்றைக்கிழித்திடுவேன் வந்துவிடுமண்ணாவே
என்றுமெழுந்தானே எழில்சேரருச்சுனனும்
வில்லைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனிசெய்து
அம்புறாத்தூணியிலே அஸ்திரமெடுக்கையிலே
பாரமலைப்பாம்பு பார்த்தது அருச்சுனனை
காளமலைப்பாம்பு கண்டது அருச்சுனனை
அப்போமலைப்பாம்பு ஆவலுடன்ஓடிவந்து
அருச்சுனனைத்தான்பார்த்து அருகில்வந்துவாய்திறந்து
வாள்விஜயனைப்பார்த்து வாயைத்திறந்துவந்து
எடுத்துவிழுங்கிற்று இயலாமருச்சுனனை
பார்த்தனெனுமர்ச்சுனனைப் பாம்புவிழுங்கியது
எடுத்துவிழுங்கியது ஏப்பம்விட்டுத்தானிருக்கும்
அப்போதுவில்லைத்த அருச்சுனனுமேதுசெய்தான்
அரவத்தின்தன்வயிற்றில் அருச்சுனனுள்விழுந்தான்
அண்ணாவேஅண்ணாவே அடியேனும்வந்துவிட்டேன்
உத்தனுடனாக வந்துவிட்டேனண்ணாவே
நானுமிங்கேவந்துவிட்டேன் நல்லபெரியஅண்ணாவே
அண்ணன்தம்மாருக்கு ஆர்போயுரைப்பார்கள்



எழுத்துப்படியல்லோ இருவருக்குமொன்றாச்சு
என்செய்வேனென்செய்வேனென்றுபுலம்புகையில்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
வில்விஜயாவேதன் விதித்தவிதிப்படியோ
என்றுஇருவருமாயிருந்துபுலம்புகிறார்
அனேகநெடும்பொழுது ஆனபிறகாக
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தம்பிநகுலா நீ தாமமுடியானே
வெற்றிமதயானை வீமனைத்தான்தேடி
போனதோரருச்சுனரை பின்னேவரக்காணேனே
இன்னம்வரக்காணேன் ஏதொன்றுமறியேன்
ஆரோடேசண்டைகள் அமராதுசெய்கிறாரோ
இக்காட்டில்ராட்சதர்கள் எத்தனையோகோடியுண்டு
எவரோடேசண்டையிடுகிறாரென்றறியேன்
காணவும்போரேனோ கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போரேனோ பார்மன்னரிருவர்களை
தேடியழைத்துசீர் நகுலாவருவீரோ
பார்த்துஅழைத்துப் பரிநகுலாவருவீரோ
என்றேஉரைத்துமவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தான்நகுலனுமே
[illegible]டுதட்டிஒட்டியாணம் பசும்பொன்னூற்சமுதாடு
[illegible]ண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்போட்டல்லவோ தட்டிவரிந்து கட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
தன்னாயுதங்களைத் தானெடுத்துச்சீர்நகுலன்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
செந்தாய்புலிகாடு சிறும்வனந்தாண்டி
காலடியைப்பார்த்துமல்லோ கடுகியேதேடிவாரான்
அக்கானகந்தனிலே ஆராய்ந்துதேடியபின்
அண்ணாவேயென்வீமா அருச்சுனாவென்றழைத்தான்

கூவியழைத்தானே கோடை நகுலனுமே
அழைத்தகுரல்கேட்டதங்கு அருச்சுனற்கும்வீமனுக்கும்
வெற்றிமதயானை வீமனுமேதுசொல்வான்
ஆறுலமுகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
தம்பிநகுலா நீ தர்மமுடியானே
அண்ணனையும்மன்னனையும் அரவம்விழுங்கினது
மலைப்பாம்புக்கிரையானோம் மன்னவனே தம்பியரே
கிட்டிநீவாராதே எட்டிநில்லுமென்பிறப்பே
சேரநீவாராதே தூரநில்லுமென்பிறப்பே
அண்ணருக்குச்சொல்லும் அரவம்விழுங்கினதாய்
அஸ்தினாபுரத்துக்கு அண்ணாவைக்கூட்டிப்போய்
திரியோதனனுடனே செய்திகள்சொன்னாலே
அருச்சுனனைவீமனை அரவுமுழுங்கிற்றென்றால்
மெத்தமகிழ்ந்திடுவான் வித்தாரங்கொண்டவனும்
தருமாபுரமுள்ளதெல்லாம் தருமனையாளுமென்பான்
எப்போதும்போல்நீங்க ளிராச்சியத்தையாண்டிருங்கள்
(நாங்கள்)இனிப்பிழைப்போமென்று எண்ணாதேதம்பிய
போங்காணும்நகுலா நீ புத்தியுள்ளகண்மணியே [ரே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான் நகுலனுமே
அண்ணரே நீர்கேளும் அரவத்தைக்கொல்லுகிறேன்
வெட்டியெறிகிறேன் வெளிப்படுங்களண்ணர்களே
உங்களைவிட்டெனக்குப் போகவுளம்வருமோ
விட்டுப்பிரியவே வேறுமனம்வருமோ
அண்ணருட வயிற்றில் அனலைச்சொரிவேனோ
சிறுவன்போய்ச்சொன்னாலே சிவனைவிட்டிடுவார்
மாளநினைப்பரே மதிகேடுவந்துவிடும்
போகமனம்வருமோ புண்ணியரேயுந்தனுக்கு
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
(நீர்)தலையிலெழுதினதை தள்ளிவைக்கப்போறீரோ
(நீர்)பட்டிலெழுதினதை பொடுக்கெறியப்போறீரோ
வரும்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமோ
அயனெழுத்தின்வண்ணம் ஆனையால்மாண்டுவிட்டோம்



இனிநாம்பிழைப்போமென் றெண்ணாதேதம்பியரே
மற்றும்பிழைப்போமென்று மன்னவரேயெண்ணாதே
போடாநகுலாவென்று புகன்றானருச்சுனனும்
செப்புமொழிகேட்டு சீராய்நகுலனுமே
இப்பாம்பைவெட்டி யெறிகிறேனிப்போது
பாம்புதனைக்கொல்வேனென்று பட்டாவுருவிநின்றான்
பார்த்து அப்பாம்பு பாரமுடிமன்னவனை
கண்திறந்துபார்த்தது கடுகமலைப்பாம்பு
வாயைத்திறந்தவனை வாரிவிழுங்கினது
பாம்பின்வயிற்றிலேதான் பரிநகுலன்போய்விழுந்தான்
அண்ணாவேயென்னையும் அரவம்விழுங்கிற்றென்றான்
என்னையுங்கூட எடுத்துவிழுங்கிற்றென்றான்
உங்களுடனே ஒருவனுஞ்சேர்ந்தேனென்றான்
மூவருக்குமொருமித்தாய் முடிந்ததேஎன்னசெய்வோம்
அண்ணரைத்தம்பியரை ஆரணங்கைகையைவிட்டோம்
என்றுபுலம்பியே இருக்கின்றவேளையிலே
வில்லாளிபார்த்தனுமே வீமனுமங்கேதுசொல்வான்
அப்போதேசொன்னேனே தப்புவருமென்றுசொல்லி
என்வார்த்தைகேளாமல் இங்கேவந்தீர் தம்பியரே
வந்தயிடந்தனிலே வல்வினையைக்கண்டீரோ
என்றுமவர்கள்சொல்லி இருந்துவிசாரமிட்டார்
இப்படிக்காகவேதா னிருக்கின்றவேளையிலே
அநேகநாழிசென்றபின்பு அழகானதர்மலிங்கம்
மெத்தவிசாரப்பட்டு வெகுவாய்மனங்கலங்கி
சகாதேவனைப்பார்த்து தருமருரைக்கலுற்றார்
வீமன்கனிபறிக்கப்போய் வெகுநேரமாச்சுதப்பா(டேன்
அழைத்தோடிவாருமென்று அருச்சுனனைப் போகவிட்
அருச்சுனன்தேடிப்போய் அநேகநெடும்போதாச்சு
போனதோனருச்சுனனும் பின்புவரக்காணேனே
நகுலனைப்போகவிட்டு ராஜர்களைப்பாருமென்றேன்
காணா நகுலனுமே கடுகவரக்காணேனே
செத்தார்பிழைத்தாரோ செய்திதெரியவில்லை

மாண்டாரோயானறியேன் மன்னவனேஎன்னசெய்வே
ஆரோடேசண்டை அமாநுசெய்கிருரோ (ன்
எவரோடேசண்டை ஏடாகூடங்களுண்டோ
அவர்களைப்பார்த்து நீ யழைத்தோடிவாராயோ
ஓடியழைத்து நீ ஒருநொடியில்வாராயோ
கண்டுஅழைத்து நீ கடுகெனவேவாராயோ
அண்ணருரைகேட்டு அழைத்துமேவாராயோ
அப்போசகாதேவன் ஆணழகன்தானெழுந்து
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டு
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதொங்கவிட்டு
ஆயுதந்தானெடுத்து அடவாய்நடக்கலுற்முன்
காலடியைத்தேடியேதான் கடுகிநடக்கலுற்முன்
காடுஞ்செடியுங் களத்தமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையு மதிகவனந்தான்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தான்தாண்டி
தேடியேவாரானே திசைதோறுங்கானகத்தில்
எங்கெங்குந்தேடினானே இனியவிடமாராய்ந்தான்
கண்ணாலேகண்டதில்லை காளைகளானவரை
பாராவிடங்களில்லை பாரமுடிராஜர்களை
தேடியேவந்துமவன் திகைத்தாற்போல்நின்றுவிட்டான்
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வந்தருளும்
அண்ணுமதவீமா அருச்சுனரேசீர்நகுலா
(என்று)கூவியழைத்தானே கொற்றமன்னவ்வீரியனும்
கூவியழைத்தகுரல் கேட்டதுமூவருக்கும்
என்காண்சகாதேவர் எங்குவந்தீர்தம்பியரே
அரவம்விழுங்கினது ஆணழகாமூவரையும்
தூரநில்லுந்தம்பியரே சேர நீவாராதே
எட்டநில்லுந்தம்பியரே கிட்ட நீவாராதே
அரவம்விழுங்கினதாய் அண்ணருக்குச்செய்திசொல்லும்
(நீ)அழுதுபுலம்பாதே அண்ணரைக்கூட்டிப்போய்
அஸ்தினாபுரிக்கு அட்வுடனேபோய்ச்சேரும்



வீமாருச்சுனரை மிக்கநகுலனையும்
அண்ணமார்மூவரையும் அரவம்விழுங்கினதாய்
கிரியோதிரனுடனே செய்தி நீசொன்னாலே
சந்தோஷமாவானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்திடுவார் விடநாகங்கொண்டவனும் (ன்
தருமாபுரத்தையல்லோ சர்ப்பக்கொடியோன்கொடுப்பா
சீமைதருவானே சிறந்ததுரைத்தனமும்
பூமிதருவானே பொல்லாச்சுயோதனனும்
அண்ணரும்நீருமே அவ்வரசையாண்டிருங்கள்
போய்காணுந்தம்பியரே புகழ்பெரியராஜாவே
என்றுமவருரைத்து இருக்கினறவேளையிலே
இவ்வார்த்தைதான்கேட்டு இளையசகாதேவன்
அண்ணருரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
மன்னருரைகேட்டு மறுவார்த்தையேதுசொல்வான்
போயுரையுமென்றுசொல்லி புண்ணியரேசொன்னீர்கள்
புகழ்வேந்தரண்ணருக்குப் போய்நானுரைத்தாக்காற்
சொன்னேனேயாமாகிற் சொர்க்கபதிசேர்ந்திடுவார்
இவ்வார்த்தைதான்கேட்டு இன்னமிருப்பாரோ
மூவரைப்பறிகொடுத்து முடிசூட்டியாளுவரோ
(அவர்)செத்துமடிந்திடுவார் சிவலோகஞ்சேர்ந்திடுவார்
மாண்டுமடிந்திடுவார் வைகுந்தஞ்சேர்ந்திடுவார்
சென்றுயான்சொன்னாலே சீவன்விடுவாரே
துடித்தபுழுப்போலே துள்ளிவிழுவாரே
அடித்தமயில்போலே அலறிவிழுவாரே
சாகத்துணிவாரே தர்மலிங்கரண்ணாவும்
போகத்துணிவாரே பொறுமையுள்ளதர்மலிங்கம்
எப்படிக்குப்போயுரைப்பேன் என்னுடைய அண்ணர்க
என்றுசகாதேவன் ஏங்கிப்புலம்பலுற்றான் (ளே
அடியற்றமரம்போலே அலறிப்புரண்டழுவான்
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலைபருவதமே செத்துமடிந்தீரோ
உங்களைப்பறிகொடுத்து ஒருத்தனாய்ப்போவேனோ

அண்ணர்களேயென்றுசொல்லி அலறிப்புலம்பினன்
அழுதகுரல்கேட்டு அம்முவரேதுசொல்வார்
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போறீரோ
ஏட்டிலெழுதினதை எடுத்தெறியப்போறீரோ
ஈசனெழுதியதில் எள்ளளவுங்குறையாது
சொல்லாதேதம்பி நீ சுருக்காயெழுந்திரென்றார்
பேசாதேதம்பி நீ போய்ப்பிழையும்வையகத்தில்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
(உங்களைப்)பார்த்துநடக்கவேதான் பாவிமனம்வருமோ
கண்டுநடக்கவேதான் காலைமனம்வருமோ
பொறுத்துநடக்கவேதான் போகமனம்வருமோ
இப்பாம்பைக்கொன்றிடுவேன் இயல்ராஜர்களே (ன்
பாம்புதனைக்கொல்லுகிறேன் பாருமென்றுவாளெடுத்தா
என்றுஉருவினன் இளையசகாதேவன்
கத்திஉருவையிலே கண்டதுஅப்பாம்பு
கண்டதுமலைப்பாம்பு கணிதநூற்கோமானை
வாயைத்திறந்தது வாரிவிழுங்கினது
எடுத்துவிழுங்கினது இளையசகாதேவனையும்
அப்போசகாதேவன் ஆணழகுமன்னன்
என்னையும்விழுங்கினது என்னுடைய அண்ணாவே
உங்களுடனே ஒருவனும்வந்துவிட்டேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகரேதுசொல்வார்
என்வார்த்தைதள்ளி இருந்தீரேதம்பியரே
நால்வருக்குமொரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
அண்ணர்தர்மராசாவை அல்லலுறுங்கையைவிட்டோம்
ஆட்டிதுரோபதையை அரிவையரக்கையைவிட்டோ
என்றுபுலம்பியேதா னிருந்தார்கள்நால்வருமே (ம்
அநேகநெடுநேர மானபிறகாக
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
அன்னமேசொர்ணமே அமிர்தப்பசுங்கிளியே
தேனேமடமயிலே தித்திக்குந்தெள்ளமுதே
தன்னல்மொழியாளே கற்கண்டேசர்க்கரையே



சாந்துகழுத்தியரே சந்தனப்பூமேனியரே
கோர்வைக்கழுத்தியரே குங்குமப்பூமேனியரே
குங்குமமொத்ததொரு கொம்பேரிடையாளே
நெருப்பிற்பிறந்தபெண்ணே நீலவண்ணன்தங்கையரே
கைமோசம்வந்ததுவே கண்மணிகளைக்காணேன்
போகவழியறியேன் புதுமைகளொன்றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதியொன்றும்நானறியேன்
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைநானறியேன்
கடுகியெழுந்திருங்காண் கானகத்தில்தேடிடுவோம்
என்றுபுலம்பி எழுந்தாரிருவருமாய்
காலடியைப்பார்த்துமே கடிகியேவாரார்கள்
தேடியேவாரார்கள் சீரானகானகத்தில்
அப்பாமதவீமா அழகானமருச்சுனரே
தாமமுடிநகுலா தம்பிசகாதேவனெனக்
கூவிப்புலம்புகையில் குரல்கேட்டுதம்பியர்க்கு
அண்ணன்குரல்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
என்காணும்அண்ணாவே இடையநில்லுமென்பிறப்பே
சேரவேவாராதே தூரநில்லுமென்பிறப்பே
அருகேவாராதே அண்ணாவே தூரநில்லும்
பாம்புவிழுங்கினது பாரவனந்தனிலே
இங்கேமலைப்பாம்பு எடுத்துவிழுங்கினது
நால்வருக்குமோரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
(உன்)அங்கஞ்சலியாதீர் அழுதுபுலம்பாதீர்
இனிப்பிழைக்கப்போமோமென்றெண்ணாதேயண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானதர்மலிங்கம்
துள்ளிப்புலம்புகிறார் சொரணைதெரியாமல்
வெற்றிமதயானை வீமாமதகரியே
ஏழுபிராயத்திலே இடும்பனைக்கொன்றாயே
பத்துப்பிராயத்திற் பகாசுரனைக்கொன்றாய்
அரக்குமாமாளிகையி லெவரையுமேயெடுத்தாய்
ஐவரையுமேயெடுத்தாய் அந்தபலன்ட[illegible]
பாம்புக்கிரையாக இருந்தீரோபார்வேந்தர்

எழுபதுலக்ஷம்யானை இழுக்கவொண்ணாக் கெதையெடுத்
அமர்துசெய்கின்றஆண்மையுள்ளவீமா நீ (அ
மலைப்பாம்பைக்கொல்லுதற்கு மறந்தாயோவீமா நீ
சந்தனமிருபுயத்தை சாற்ருயோபூமியிலே
குங்குமமிருபுயத்தை கொள்ளையென்றுசாருயோ
கல்லானதாணை கரையான்அரிக்குமோதான்
இரும்பான்தாணும் யித்துவிழுமோதான்
நீமடியுங்காரியத்தை நின்னயத்தையானறியேன்
ஆச்சாபருவ்தயோ அழிவில்லையென்றிருந்தேன்
ஆச்சாபருவதமும் அழியும்நாளாச்சுதோ
கற்பகத்தாணுக்குக் கலக்கமில்லையென்றிருந்தேன்
கற்பகத்தாணுங் கரையுநாளாச்சுதோ
என்னையலையவிட்டு இப்பாம்புக்கிரையானாய்
நூலார்கடுந்திளார் நூறுபேர்மன்னர்களை
கொல்லுவேனென்றுசொன்னகொடியசபதமெல்லாம்
மறந்தாயேதம்பீ மலைப்பாம்புக்கிரையாக
என்னைமறந்து நீ யிறந்துவிட்டாயமுண்டோ
என்றுபுலம்புகிருர் இயலானதன்மருமே
மாரடித்துத்தோளடித்து மண்மேல்விழுந்தலறி
களைத்துவிழுந்தாரே கட்டழகர்மூர்ச்சையானார்
அப்போதுரோபதையும் ஆரணங்குயேதுசெய்தாள்
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்துரோபதையும்
காட்டுத்தழையொடித்துக் கடுகெனவேவீசலுற்றாள்
வீசினாள் தருமருக்கு விடாய்கள்மிகத்தெளிய
வீசக்களைதெளிந்து வேந்தர்புலப்புகிருர்
அப்பாடா இப்பாடா ஆணழகர்தம்பியரே
காளை அருச்சுனா கடுங்கானைசேவகனே
எடுக்காதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டாய்
நீர்பார்த்துமீனெய்தாய் நிற்றிலக்குபூமுடியாய்
அழகில்மிகுந்தவனே அருச்சுனாதம்பியரே
நீமடியுங்காரியமும் நின்னமும்நானறியேன்
இடதுபுயமான இயலான அருச்சுனரே



என்னைமறந்தீரோ இப்பாம்புக்கிரையாக
உங்களைமடியவிட்டு ஒருநாழிதங்குவேனோ
கூடமடிந்திடுவேன் கொற்றவரேஉங்களுடன்
நானுமடிந்திடுவேன் ராஜர்களேஉங்களுடன்
அங்கமுருகுதையோ ஆவிதணலாகுதையோ
நெஞ்சந்தனிலேயே நெருப்பாயெரியுதிப்போ
ஈரலுக்குள்ளே இருந்துதணல்பத்துதடா
கும்பியினுள்ளேயல்லோ குடவிளக்காயெரியுதடா
மனதுதரிக்கவில்லை வயிற்றெரிச்சல்தீரவில்லை
உங்களைப்பறிகொடுத்து உலகத்திலிருப்பேனோ
நானுமடிந்திடுவேன் ராஜர்களேஉங்களுடன்
உங்களைப்பொசித்தபாம்பு எங்களைப்பொசியாதோ
உன்னைப்பொசித்தபாம்பு என்னைப்பொசியாதோ
என்றுமனந்தளர்ந்து எழுந்தாரேதருமலிங்கம்
மலைப்பாம்புதன்னருகே வந்துதலைகொடுத்தார்
இரங்கினார்தருமலிங்கம் என்னையும்விழுங்குமென்றார்
தாராமுக்கன்மலைப்பாம்பு தள்ளிவிடுகுது
எதிரிலேவந்தாலும் இடைந்துவிடுகுது
பக்கத்தில்வந்தாலும் பார்த்துமேபோய்விடுது
தக்கபுகழுடைய தருமராவருரைப்பார்
சமர்த்துள்ளமலைப்பாம்பே தம்பியரைவிழுங்கிவிட்டாய்
என்னைவிழுங்குமென்று எதிரேநான்வந்தாலும்
என்னபாவஞ்செய்தேனோ என்னைவிலக்கிவிட்டாய்
ஏதாலும்பாவிநான் இருந்தாலுமாகாது
ஐயோவெனத்தருமர் அழுதுபுலம்புகிருர்
குய்யோமுறையோவென்று கூவிப்புலம்புகிருர்
தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
ஆண்டவரேஐயாவே அழகுள்ளதருமரே நீர்
மாயவரை நீருமிப்போ மனதில்நினையுமென்றாள்
எம்பெருமாள்வந்தாலே எல்லாந்தெரியுமென்றாள்
அப்போதுதருமருக்கு அந்தநினைவுவந்து
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதருமலிங்கம்

மாயனைத்தானினைந்து வருந்திப்புலம்புகிறாள்
மாயன்பெருமாளே வந்தருளவேண்டுமைய்யா,
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆதிமூலம்வாருமைய்யா
பாற்கடலிற்பள்ளிகொண்ட பாளந்தார்பெருமாள்
மச்சவடிவுகொண்ட மாயவரே நின்சரணம்
கூர்மவடிவுகொண்ட கோபாலா நின்சரணம்.
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தீர்
எல்லையளந்தீரே எதிரில்லையென்றீரே
மூலமென்றகுஞ்சரத்தை முதலைவாய்காத்தீரே
இராமராய்நீபிறந்து இராவணனைச்சங்கரித்தீர்
இலங்கையழித்தீரே இராட்சதரைவென்றீரே.
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அம்பலவாசலிலே ஐவரையுங்காத்தீரே
அப்பயமென்றதுரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறிவார்
தந்திரமென்றபஞ்சவரைத் தற்காக்கதெய்வமல்லோ
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோச்சுதைய்யா
கையில்செபமாலை கனங்குலைந்துபோச்சுதைய்யா
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோச்சுதைய்யா
இத்தனைநாள்காத்தீரே இன்றல்லோமாண்டுவிட்டோம்
ஏழையழுதகண்ணீர் கூரியவாள்தட்டாது
நானழுதகண்ணீரும் ரம்பங்கொண்டறுக்காது
வாரீரோகிருஷ்ணாவென் மனத்துயரந்தீராயோ
(என்று) அபயம்அபயமென்று அழுதுபுலம்புகிறாள்
கோரவடிவாகி துரோபதையாளேதுசொல்வாள்
அண்ணாமலையண்ணா அடியேனுக்குதவிசெய்வாய்
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன்பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்தேன் தலைவிரிக்கநாளாச்சே
ஐவரிட்டமங்கிலியம் அழிவில்லையென்றிருந்தேன்
மங்கிலியந்தானிழந்து மண்ணில்விழநாளாச்சே
ஆரைக்கழுத்தில் அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தில் குறைக்கழுத்தியானேனே



செல்வங்குலைந்துநான் சீருமழிந்தேனே
ஐவருங்கைவிட்டாரே அலைந்துவிடநாளாச்சே
மங்கிலியப்பிச்சை நீ தாராயோமன்னவரே
என்குறையைத்தீராயோ இங்கே நீவாராயோ
அபயக்குரலிட்டுமங்கே அழுதாள்துரோபதையும்
மார்கொண்டகண்ணீரை வழித்தெறிந்தாள்மண்மேலே
அப்போதுமாயவரும் ஆதிமூலந்தானறிந்தார்
அழுதகுரல்கேட்டு ஆயன்பெருமாளும்
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலையுதே
தோளிற்செபமாலை தோடவிழ்ந்துபோகுதே
கையிற்செபமாலைகனங்குலைந்துபோகுதே
வருந்திப்புலம்புகிற மனத்துயரந்தீர்க்கவென்று
அழுதுபுலம்புகிற அத்துயரந்தீர்க்கவென்று
ஏழைகள்தன் துயரம் தீர்க்கவென்றுஎம்பெருமாள்
வாரார்பெருமாளும் வட்டமாங்கருடனேறி
துவாரகாபுரியைவிட்டுசுவாமியவர்வாராரே
காடுஞ்செடியுங் கரியமலைதான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம்கொன்றைகளாப்பூத்தவனம்
மாதிரிமுல்லை பருத்தவனந்தான்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தான்தாண்டி
மூங்கிலடர்ந்திருக்கும் முல்லைவனந்தான்தாண்டி
சூரியன்தன்வனத்தைச் சுருக்காகத்தான்தாண்டி
இராமரிஷிவனத்தில் இராமரும்வந்துவிட்டார்
மாயன்வருகிறதை வழியிலேதான்பார்த்து
தருமருந்துரோபதையும் தாமெதிரேஓடிவந்தார்
தருமருந்துரோபதையுஞ் சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
அறுகால்வலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டு ஸ்ரீராமர்தானிருக்க

ஆசனமும்போட்டார்கள் அரிராமர்தானிருக்க
இட்டசிங்காதனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
மாயன்பெருமாளும்வாய்திறந்தேதுசொல்வார்
அடியளந்தமாயவரும் ஆதிமூலமேதுசொல்வார்
அழுதகுரலேது அழைக்கவந்தகாரணமேன்
வேண்டியழைத்த விபரமென்னசொல்லுமென்றார்
வருந்தியெனையழைத்த வகையதனைச்சொல்லுமென்றார்
வீமரருச்சுனர்கள் வேந்தர்களெங்கேயென்றார்
தம்பிமார்நால்வர்களுந் தார்வேந்தேயெங்கேயென்றார்
அழுதுபுலம்புவதேன் ஆரணங்குதுரோபதையும்
ஏதுக்கழுதீர்க ளெனக்கரியச்சொல்லுமென்றார்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தம்பிமார்நால்வரையும் சர்ப்பம்விழுங்கிற்றென்றார்
என்னையழைத்தவகை யெனக்கறியக்கூறுமென்றார்
காராமுக்கன்மலைப்பாம்பு தானும்விழுங்கிற்றென்றார்
தம்பியரைப்பறிகொடுத்து தரிப்பேனோபூமியிலே
மலையைப்பறிகொடுத்து மண்மேலிருப்பேனோ
அங்கம்பொறுக்குமோ அரிராமாவென்னசெய்வேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பே னினியாரைத்தஞ்சமென்பேன்
ஆகையினாலேநான் ஆண்டவரேயுமையழைத்தேன்
என்றுரைக்கத்தான்கேட்டு எம்பெருமானேதுசொல்வார்
எழுத்துவிதிதன்னை எவரால்விலக்கவசம்
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போருமோ
எட்டிலெழுதினதை எடுத்தெறியப்போருமோ
அன்றெழுதுங்கர்த்தரல்லோ அழித்தெழுதப்போருமோ
இட்டபடியொழிய என்னாலுங்குறையாது
வரும்வினைவந்தாலே மடியேற்கவேண்டாமோ
ஆராலேயாகுமிது ஆயுசுக்குக்குறையுண்டோ
எவராலேயாகுமிது இவர்களைத்தானெழுப்ப
என்னாலேதாகுமோ இயமானதர்மலிங்கம்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏது சொல்வார்தர்மலிங்கம்



என்னாலேயாகாதென் றேனோகழித்துவிட்டீர்
உம்மாலேயாகாத தொன்றுண்டோவையகத்தில்
எல்லாமுமதுசெயல் என்றிருந்தேன்மாயவரே
தம்பிமார்தான்பிழைக்கச் சாமிநீகண்பாரும்
உடப்பிறப்புத்தான்பிழைக்க உத்தமரேகண்பாரும்
என்பிறப்புத்தான்பிழைக்கஎம்பெருமாள்காத்தருளும்
கண்பாரிவ்வேளையெனக்கண்ணனையுந்தெண்டனிட்டார்
புண்ணியமாய்போகுதெனபெருமாளைத்தெண்டனிட்டா (ர்
அப்போதுரோபதையா மாரணங்குவதுசெய்தாள்
முந்தாணியேந்திநின்றாள் முருகுழலாள்துரோபதையும்
மங்கிலியம்பிட்சையல்லோ மாயாவெனக்கருளும்
வாடாதமங்கிலியம் வல்லாவெனக்கருளும்
என்றுமவள்சொல்லி இளங்கொடியாள்துரோபதையும்
மாயனுடபாதத்தை வணங்கித்தொழுதுநின்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டுஎம்பெருமாள்மனமிரங்கி
அங்குமொருகிருஷ்ணன் ஆயிருக்கையிலே
சின்னஎலிபோலே சுவாமிவடிவுகொண்டார்
மலைப்பாம்புதன்செவியில் மாயவரும்போய்நுழைந்தார்
அருச்சுனன்வில்நாணிதனை அறுத்தாரேமாயவரும்
வில்நாணிதானறவே வில்நிமிர்ந்துவாய்கிழிந்து
நகுலன்சகாதேவன் நல்விஜயன்வீமனுமே
ராமரிஷியுடனே நன்றாய்வெளிப்பட்டார்கள்
ஐவருமாகவேதா னப்பாம்பில்வெளியானார்
மாயன்பெருமாளை வந்துநமஸ்கரித்தார்
தக்கபுகழுடைய தருமருக்குத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்திமனமகிழ்ந்து மன்னன்தர்மராயருமே
மனதுகுளிர்ந்தாரே மகராஜர்தர்மலிங்கம்
துரோபதைநாயகியுஞ் சிந்தைமிகக்குளிர்ந்தாள்
மலர்ந்தசெந்தாமரைபோல் மனதுமிகக்குளிர்ந்தாள்
அலர்ந்தசெந்தாமரைப்போல் அகமுமிகக்குளிர்ந்தார்
ராமரிஷியாற்கு நற்காசிதந்தாராம்

மாயன்பெருமாளும் வார்த்தைகளைதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனியவனம்போங்களென்றார்
அப்போதுதர்மலிங்கம் ஆயனைப்பார்த்துரைப்பார்
இந்தரிஷியாரு மிங்குவந்தகன்மமென்ன
வந்தகன்மந்தனையும் வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
இந்தரிஷிகாரியத்தை இயம்புவேன் நீர்கேளும்
மாயாண்டிதன்னடியார் வந்தால்வணங்குவர்காண்
எந்தனடியார்கள்வந்தால் இகழ்ச்சிகள்பண்ணுறது
ஏடாகூடங்கள்பண்ணி எட்டியடிக்கிறதும்
இப்படியாகவே இருந்தார்வெகுகாலம்
அப்போதுநாளொருநா ளங்கேவடிவெடுத்தேன்
தாசவடிவெடுத்து தப்புகொட்டிபிட்சையென்றேன்
அரிகரிநாராவென்று ஐயாவேபிட்சையென்றேன்
அப்போதுராமரிஷி அவசரமாயோடிவந்து
என்னையடித்தாரே இயலானராமரிஷி
அடிபட்டுக்கொண்டதொரு ஆக்ருஷமானதினால்
(நான்) பட்டஅடியாலே இட்டேன்பெருஞ்சாபம்
அப்போதுராமரிஷி ஆயனேஎன்றழுது
வல்லாளன்ராமரிஷி வாய்திறந்துஏதுசொல்வான்
என்சாபமெப்போது தொலையுமையாசுவாமியென்றான்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளாரணியம்வந்தாக்கால்
நாலுபேரையெடுத்து நன்றாய்விழுங்கிடுவாய்
அப்போதுஉன்சாபம் அடவேதீர்த்திடுவேன்
என்றுமவர்க்குரைத்து என்பதிக்குப்போய்நடந்தேன்
அப்போதிட்டசாபமது இப்போதொலைந்ததுகாண் (அ
(நீங்க)ளிந்தவனத்தைவிட்டு இனியவனம்போங்களென்
அப்போதுஎம்பெருமாள் அரிராமர்தானெழுந்தார்
ராமரிஷிஐவர்களும் நங்கைதுரோபதையும்
எம்பெருமான்மாயவற்கு எல்லோருந்தெண்டனிட்டார்
பஞ்சவர்களைவருக்கும் பாஞ்சாலிதுரோபதைக்கும்
மாயன்பெருமாளும்மனங்குளிரவாழ்த்தியபின்



எந்தவனங்களிலே இடர்துவந்தாலும்
இடர்துவந்தாலே என்னை நினையுங்கள்
என்றுமவருரைத்து எப்பெருமாள்போகலுற்றார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுங்கனையு மதிகவனந்தான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டார்மாயவரும்
துளபமணிமார்பன் துவாரகைபோய்ச்சேர்ந்தார்
சிங்காதனத்தின்மேல் ஸ்ரீகிருஷ்ணன்தானிருந்தார்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
மாயவனார்போனபின்பு மகராஜர்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரும்ஆரணங்குதுரோபதையும் (ம
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையு
அந்தவனத்தி லனேகநாள்சென்றபின்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றும்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
இரண்டாவது இராமரிஷிவனம் முற்றிற்று.

## ௩-வது, முருக்கமகாரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோகலுற்றார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தே
கோலிவைத்தசீயாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனமாய்க்குடித்தனமாய்
முருக்கமகாரிஷிவனத்தில் முடுகிவந்தார்பஞ்சவர்கள்
அந்தவனத்திலேதான் அல்லோரும்வந்தார்கள்
ஓரடுக்குப்பர்ணசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குப்பர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஆறடுக்குப்பர்ணசாலை ஆணழகருண்டுபண்ணார்


ஏழுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
சபைகள் நிறைந்திருக்குஞ் சர்ப்பக்கொடியோனும்
ஆர்காணும்ராசர்களே அழகானமன்னர்களே
முத்துக்கிரீடம் முடிசூடும்மன்னர்களே
வச்சிரக்கிரீடந் தரித்ததொருமன்னர்களே
மாணிக்கக்கிரீடந் தரித்ததொருமந்த்ரிகளே
அத்தண்டபேரையுமே அனைவரையுந்தான்பார்த்து
மாநாகங்கொண்டதொரு மகாராஜனேதுரைப்பான்
ஐவர்வனம்போய் அனேகநெடுநாளாச்சே
மூன்றும்வருஷமது மொழியலாப்பஞ்சவர்க்கு
(அவர்)அந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
செத்தார்பிழைந்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைதெரியவில்லை
ஆரடாதூதவரே அருகிருக்கும்மல்லர்களே
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருமே
வீரப்புலிபோலே வேந்தர்களைவருமே
எந்தவனத்திலிருக்கிறாரென்றறிந்து
ஐவரும்மைப்பாராதே அறிந்தோடிவாருமென்றான்
காவலர்காணும்மையவர்காணாதேவாருமென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்திருந்தார் தூதுவர்கள்
ஒற்றுளொருவனவனோடினான்கானகத்தே
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டி
ஆறுஞ்சுனையுமல்லோ அதிகவனந்தான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வாரார்கள் தூதுவர்கள்
சூரியன்தன்வனத்தே சுருக்காய்நடந்துவரரார்
ராமரிஷிவனத்தே நடந்தார்நலமாக
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்போய் நுழைந்தார்



அந்தவனத்திலே ஐவரையுங்கண்டார்கள்
பர்னசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
அவருமறியாமல் ஆணழகர் திரும்பிவந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டிவந்தார்
அஸ்தினாபுரம்நாடி ஆணழகர் திரும்பிவந்தார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்முன்னேவந்தார்
ஆண்டவரே அய்யாவே அடியேன்சரணமென்றார்
தென்னமுடிவேந்தன், திரியோதிரனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றார்
காளிபோரண்டனவன் கடிகியேயேதுசொல்வான் [ம்
முருக்கமகாரிஷிவனத்தில்முடிமன்னரைக்கண்டுவந்தோ
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவரைக்கண்டோமையா
அவ்வார்த்தைகேட்டானே அரவக்கொடியோனும்
சிந்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
மனமுந்திடுக்கிட்டு வாய்திறந்தேதுசொல்வான்
இப்பெரியசபைதனிலே யிருக்கின்றராஜர்களே
அம்பலத்தில்கொலுவிருக்கும் அரசாமுடிமன்னர்களே
இத்தண்டராசர்களே இயலானமந்த்ரிகளே
கத்திகட்டுந்துரைகளே கனத்தமுடிமன்னர்களே
ஆண்மையுள்ளதுரைகளே அல்லவருங்கேட்டிருங்கள்
என்வார்த்தைதள்ளாமல் ராசர்களேகேட்டிருங்கள்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பைங்கிளியாள்துரோபதையே
தோளுவடிவழகி துரோபதைமேலெந்தனுக்கு (ல்
ஆசையலையுதுகாண் ஆரணங்குதுரோபதைமேல்
நினைக்கநினைக்கவேதான் நெஞ்சமுருகிடுது
ஆசையவள்மேலே ஆதரவுபாய்மேலே
சிந்தையவள்மேலே சீவன்பதைக்குதுகாண் (ண்
கன்னியர்மேலாசையல்லோ காமவிடாய்கொள்ளுதுகா
மயிலாண்மேலாசையல்லோ மறக்கவில்லையெந்தனுக்கு
அவளாசைதன்னாலே யவளைவரவழைத்தேன்
வணங்குவாளென்றுசொல்லி வார்த்தைபலபேசினேன்
இணங்குவாளென்றுஎத்தனையோசொன்னேன்காண்

வணங்காமற்போனாளே மாதுகருங்குழலாள்
இணங்காமற்போனாளே ஏலம்பசுங்கிளியாள்
வந்திருந்து அம்பலத்தில் வார்த்தைகள்பேசினேன்காண்
வாருமிருமென்றேன் மடிமேலேஏறுமென்றேன், மார்
போடேமார்பணைத்துமருவிமுத்தந்தாருமென்றேன்தோ
ளோடேதோளணைத்து சேர்ந்துமுத்தந்தாருமென்றேன்
வாரும்நீதுரோபதையே வலதுதுடையேறுமென்றேன்
அவள்மெத்தபேச்சுகளும்அகந்தைகளும்பண்ணினாளே
அகந்தைகள்பண்ணுகிறாள் ஆகடியஞ்சொல்லுகிறாள்(ன்
ஆகையால்துரோபதையை அடித்துநாடோட்டிவிட்டே
ஆரணங்கைக்கூடுகைக்கு ஆசைமெத்தத்தோணுகுது
மயிலணையைக்கூடுகைக்கு மனதுமெத்தத்தோணுகுது
அவள்மீதிலாசைகொண்டல்லவர்க்குஞ்சொல்லுகிறேன்
துரோபதையைகொண்டுவர துரைகளுண்டோசொல்லு
பாஞ்சாலன்பெண்ணைபாவை துரோபதையை[மென்றான்
சிறைபிடித்துக்கொண்டுவர துரைகளுண்டோசொல்லு
கொண்டுவருவோர்க்கு கோடிதனந்தருவேன்[மென்றான்
அழைத்துவருவோர்க்கு ஆனைசேனைநான்தருவேன்
சீமையும்பூமியும் துரைத்தனங்கள்நான்கொடுப்பேன்
ஐவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவந்தால் (த்தால்
துரோபதையைக்கொண்டுவந்து தாங்குமஞ்சமேத்திவை
பாவையரைகொண்டுவந்துபடுக்கைமஞ்சமேத்திவைத்
என்னுடையநாடுகளும் எழில்கருணன்ஆதீனம் [தால்
சீமைகளும்பூமிகளும் செல்வமும்நான்தருவேன்
வல்லாண்மைக்காரருண்டோ மந்திரியெழுந்திருங்கள்
போறதுரைகளுண்டோ புண்ணியசேனைகளே
பிடியுங்கள்தாம்பூலம் பேர்பெரியராஜர்களே
என்றுசொல்லத்தான்கேட்டு இயலானராஜாக்கள்
அனைவோரும்பேசாம லஞ்சிப்பயந்திருந்தார்
சிந்துதேசாதிபதி தீரன்மகன்சயிந்தவனும்
சொல்லுவான்வாய்திறந்து துரைகளறிந்திருக்க
மைத்துனரே நீர்கேளும் மகராஜபூபதியே

No. 3.



சயிந்தவன் திரௌபதையைத் தேரிலேற்றிக்கொண்டுபோகிறது.

தோருவடிவழகி துரோபதைநாயகியை
பத்துநாட்குள்ளாகப் பைங்கிளியைக்கொண்டுவாரே ன்
எட்டுநாட்குள்ளாக இளங்கொடியைக்கொண்டுவாரேன்
ஐவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவாரேன்
மன்னரறியாமல் மயிலணையைக்கொண்டுவாரேன்
தாம்பூலந்தான்பிடித்தேன் தாமமுடியானும்
அந்தமொழிதான்கேட்டு அரவக்கொடியோனும்
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே வேந்தன் துரியோதனனும்
உள்ளங்குளிர்ந்துசிலர்த் துடம்பெங்கும்பூரித்தான்
அள்ளியேதாம்பூலம்ஆண்ழகன்கைக்கொடுத்தான்[தான்
போட்டிருந்தஆபரணம்பொட்டெனவேதான்கொடுத்
இட்டிருந்தபூஷணங்கள் இஷ்டமுடன்தான்கொடுத்தா
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக [ன்
போய்வாருமென்றுசொல்லிபுகழ்வேந்தன்தானுரைத்தா
வெகுமானம்பெற்றுமல்லே விடைபெற்றுமன்னவனும்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றான் [ன்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான் [ர்
ஆனையின்மேல்சென்டாவும்அழகுநிசான்பிடியுமென்று
ஆனையின்மேல்பேரிகையை அடியுமென்றார்ஓசையுடன்
குதிரையின்மேல்டங்காவும் கொடிமுரசுசிலைகளும்
பாஞ்சசன்யம்தேவதத்தம் பலவாத்தியமுழங்க
சச்சரீகைவீராணம் தாக்கிமுரசறைய
அக்ரோணிசேனை அடங்கலும்பயணமென்றான்
அமரதரும்சமரதரும் அர்த்தரத்தானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் காஸ்மீரக்கன்னடரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
சட்டைகழட்டாத சால்வரானவரும்
போட்டசட்டைவாங்காத பொந்திலியரானவரும்
இட்டசட்டைவாங்காத எழிலானமன்னவரும்
குப்பாசம்வாங்காத குச்சிலியர்மன்னவரும்
ஆனையரசுருமை அளவற்றவன்னியரும்

வெள்ளித்தடிக்காரர் வேனலட்சங்கோடியுண்டு
மகுடமுடிதரித்த மன்னவர்களானவரும்
பட்டணத்துராசர்களும் பார்மகுடவர்த்தனரும்
அத்தனைபெயருடனே ஆணழகன்பயணமானான்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிநிசிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் துத்திப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூசல்லடமாம்
சல்லடங்கள்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டித்தாமரைப்பூச்சுங்குவிட்டு
பட்டுதட்டிகட்டியல்லோபாக்கெடுத்துத்தான்சொருகி
முத்தினுருமாலை முகத்தழகாய்கட்டினனே
இட்டான்திருநாமம் எரிகின்றசூரியன்போல்
பொன்னிழைத்ததுப்பட்டாவை போர்த்தானே
அம்புவில்லுங்கைபிடித்து ஆணழகன்வெளியானான்
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வென்றுஏறினான்
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடையை
பக்கத்தில்வெண்சாமரை பட்டுக்குடைகவிய
இருபக்கம்வெண்சாமரை ரத்னக்குடைகவிய
முத்துக்குடைகவிய முடிமன்னர்தான்சூழ
மேளதாளமுழங்க வேந்தர்களும்பயணமிட்டார்
வாரான்சயிந்தவனும் மச்சுரதங்குலுங்க
தெற்குத்தெருத்தாண்டி தேரோடும்வீதிவிட்டு
ஆயிரந்தெருத்தாண்டி அங்கடிதான்தாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
பட்டணத்தெருத்தாண்டி பார்மன்னன்வாரானே
செந்தூளெழும்புகுது தெருவெல்லாங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வாரான்சயிந்தவனும் மச்சுரதங்குலுங்க
அப்போசயிந்தவனும் ஆலோசனைகள்பண்ணி
துரோபதையைக்கொண்டுவரத் துரிதமுடன்போறுடே



போறவிடந்தனிலே புதுமைகளை நாமறியோம்
வழியிற்சகுனங்கள் மனதிற்குறிப்போமென்று
தருமதேவதையே நீ சாட்சிசொல்லவேண்டுமென்றார்
அப்போசகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசப்பிடமாச்சு வலியனும்வலமாச்சு
காடைவலமாச்சு கள்ளரெதிர்ப்பட்டார்கள்
சாரைகுருக்காச்சு சயிந்தவன்மேற்பல்லிசொல்லும்
குத்திப்படியுமென்று கோட்டானும்ஓலமிடும்
வெட்டுவெட்டுமென்றுசொல்லி வேட்டைதிரானார்கள்
ஓரியலறிடவே ஓர்பார்ப்பானெதிரானான்
பச்சைமரத்திலே பதிங்கிருந்தபல்லியது
பட்டமரமேறி பலபலென்றுசொல்லிடுமாம்
எட்டுசொல்லாந்தையது திட்டெனவேமரணமென்று
நெருப்பெடுத்தோர்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்
இந்தச்சகுனமெல்லாம் இராசனும்கண்டானே
நினையாத்துயரமெல்லாம் நினைத்துமனமுருகி
எண்ணுதுமெண்ணி இருந்துவிசாரமிட்டான்
இச்சகுனந்தன்னாலே இறந்துவிடப்போறேமோ
வந்தபயணமினி வழிதிரும்பப்போறேமோ
திரும்பேனுமானால் சிரிப்பார்கள்ராசாக்கள்
என்னைமதியார்கள் எளிதஞ்செய்வார்கள்
வந்துதிரும்பிவிட்டால் மதியான்திரியோதிரன்
அன்றெழுதுங்கத்தன் அழித்தெழுதப்போறானோ
எமனெழுத்தல்லவோ என்னவெங்குறையாது
வரும்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமோ
உள்ளபடிக்கு ஒருநாளுங்குறையாது
என்றுமனதிலெண்ணி இராசனும்போய்நடந்தான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்

புலிகள்கரடிகளும் பெருத்தவனம்தான்தாண்டி
சூரியன்தன்வனத்தில் சேர்ந்தானேசயிந்தவனும்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
காலையில்பயணமாகி கடுகவழிநடந்தான்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்சேனையெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொரும்ற்றுநாள்
அந்தவனந்தனிலே அத்தண்டசன்ம்நிறுத்தி
உத்தண்டமன்னவனும் ஒருத்தனுந்தேரேறி
முருக்கமகாரிஷிவனத்தில் முடுகிநடந்தானே
சயிந்தவனும்பர்ணக சாலைதேடிவாரானே
ஆரதம்நிறுத்தி துரோபதையாள்முன்னேவந்தான்
பர்னகசாலையிலே பத்தினியாள்வீற்றிருந்தாள்
ஒருத்தியுமாகவேதா னுத்தமியாள்வீற்றிருந்தாள்
பாவிசயிந்தவனும் பர்னசாலைமுன்னேவந்தான்
அப்போதுபாஞ்சாலி ஆரணங்குதுரோபதையும்
கண்டாள்சயிந்தவனைக் கட்டழகிதுரோபதையும்
அண்ணனைக்கண்டு அலறியேஓடிவந்தாள்
தமயனைக்கண்டாளே தானெழுந்துசரணமிட்டாள்
வட்டமணைபோட்டு மணித்தடுக்குத்தான்போட்டாள்
இருமிருமென்றுசொல்லிஇளங்கொடியாள்வருந்திட்டே
அப்போசயிந்தவனும் ஆணழகன்தானெழுந்து
வட்டமணைமேலே வந்திருந்தான்சயிந்தவனும்
தோழுவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
இந்தவனத்திலே ஏதுக்காய்வந்தீர்கள்
வனசாரிவந்தீரோ மகாதவசாய்வந்தீரோ
அண்ணாவே நீவந்த அதிசயத்தைச்சொல்லுமென்றாள்
மாலைமுடியானும் வாய்த்திறந்தேதுசொல்வான்
ஐவரும்நீயுமாக ஆரணியம்வந்தீர்கள்
வனவாசம்வந்தீரென்று மண்டலத்திற்போராச்சு
பார்க்கும்படியாகப் பைங்கிளியேவந்தேனே
உங்களுடசீமையையும் உலகத்தைவிட்டுவிட்டு
வனவாசம்வந்ததொரு வகையென்னதங்கையரே



இங்கேபரதேசம்என் வந்தீர்தங்கையரே
ஒன்றுமொளியாமல் உரையுங்காண் தங்கையரே
அப்போதுரோபதையா ளாரணங்குதான்கேட்டு
தோழுவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அண்ணாவே நாங்கள்வந்த அதிசயத்தை நீர்கேளும்
பரதேசம்வந்தோமெங்கள் பரிதாபங்கேளுமென்றாள்
தருமாபுரத்தையல்லோ தாரணியையாண்டிருந்தோம்
ஐவரையுங்கொல்லவென்று அரசன்திரியோதிரனும்
பஞ்சவரைக்கொல்லவென்று பாவிதிரியோதிரனும்
விருந்தருந்துமென்றுசொல்லிவேந்தரைக்கொல்லவென
பேரன்குமாரனுக்குப் பூநூற்கலியாணமென்று
பூநூற்கலியாணம் பொருத்தந்தப்பிப்போகுதென்று
உடனேவரத்தருமருக்கு ஓலையெழுதிவிட்டான்
மெய்யானும்ஓலையென்று வேந்தர்மனதிலெண்ணி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அஸ்திநபுரம்நாடி
வாரவழிதனிலே மன்னவரைக்கொல்லவென்று
வசதாவிதண்ணீர்பந்தல் மன்னவர்க்குப்போடுமென்றான்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
நடக்கும்வழிதனிலே நச்சுமுள்ளை நாட்டினான்
ஊசிஎழுகூசி ஒருகோடிநாட்டினான்
கூரம்புகத்திகளும் குறுக்கேபுதைத்துவைத்தான்
கொடிமுள்ளுகத்திகளும் குறுக்கேபுதைத்துவைத்தான்
தண்ணீர்குடித்துமே சாவார்களென்றுசொல்லி
பாரவசிதனையே பருவதம்போல்நாட்டிவைத்தான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்பாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
மாளிகைவாசலிலே வந்தபிறகாக
பொய்க்குழியைவெட்டியல்லோபோதமனிதர்வைத்தான்
பொய்ச்சிங்காதனங்களிட்டுப் புகழ்வேந்தர்பஞ்சவரைக்
கொல்லநினைத்தானே குருடன் மகன்சத்ராதி
அங்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்

எண்ணெயிட்டுகொள்ளுமென வண்ணமிட்டழைத்தா
மல்லர்களைவிட்டு வதைத்தெறிந்துபோடுமென்றான்[லே
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சாமியுடபுண்ணியத்தால்
பவளத்திருக்குளத்திற் பாறவசிநாட்டினனே
நீரிற்கழுநாட்டி நீர்மூடன்குளியுமென்றான்
கொல்ல நினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைததார்கள் சாமியுடபுண்ணியத்தால்
உண்கின்றசோற்றிலேதான் ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொலைகாரன்நஞ்சையிட்டேன்
சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
ஆடாதசூதாடி அரவக்கொடிவேந்தன்
சீமைத்துரத்தனங்கள் தேசமுழுதும்பறித்தான்
நாடுபறித்தான் நகரெல்லாந்தான்பறித்தான்
ஆணிப்பொன்தேரும் அணியணிசிங்காதனமும் [ன்
அத்தனையுந்தான்கெலித்து ஆஸ்தானந்தான்கெலித்தா
ஐவரையுந்தான்கெலித்தான் ஆஸ்தானந்தான்கெலித்தா
ஐவரையுங்காவலாக அரையிலடைத்துவிட்டான் [ன்
பாரவிலங்குகொண்டு பருவிலங்குபூட்டினனே
ஏழுலட்சம்பெருவிலங்கு எடுத்துவந்துபூட்டினனே
காற்று நுழையாத கல்லரைத்தன்கிடங்கில்
தள்ளியேகொண்டுவந்து தடிவீரர்காவல்வைத்தான்
சுத்திநவரங்கம் தூதுவரைக்காவல்வைத்தான்
அரையிலிருந்தஎன்னை அம்பலத்தில்தள்ளிவைத்தான்
மூலையிருந்தயென்னை முத்தத்தில்தள்ளிவைத்தான்
ஒருவர்மயிர்பிடிக்க ஒன்பதுபேர்துகிலுரிய
இருவர்மயிர்பிடிக்க இருபதுபேர்பின்னிழுக்க
பாவிமயிர்பிடிக்கப் பத்துபேர்துகிலுரிய
ஆடம்பலத்தே அவையார்சபைநடுவே
பேரம்பலத்தே பெரியோர்சபைநடுவே
அரசர்சபையிலே அலையத்துகிலுரிந்தான்
வாய்வரிசையில்லாமல் வம்பாட்டம்புண்ணினனே



வாடிபோடியென்றேசி வலிதுதுடையேறுமென்றான்
தூஷ்டத்தனங்கள்பண்ணும் துரியோதிரன்பாவி
ஆகடியம்பேசினனே அம்பலவர்தன்சபையில்
பாரவனவாசம் பரதேசம்ஓட்டிவிட்டான்
பனிரண்டுதன்வருஷம் பாரவனந்திரியுமென்றான்
மறைவாயொருவருஷம் வந்திருமென்றுசொன்னான்
பதின்மூன்றுஞ்சென்றபின்பு பட்டணத்தேவந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
வந்துவிட்டோமண்ணாவே வனமேகுடித்தனமாய்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
மன்னிவைத்தசீமாடு வனமேகுடியிருப்பாய்
வேடரைப்போலவேதான் வில்லியரைப்போலாக
கள்ளக்குறவரைப்போல் காட்டிலிருக்கின்றோம்
எங்கள்குறைதீர எக்காலஞ்சென்றிடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தை ஆள்வோமோ
பஞ்சவர்கள்சுகமாகப் பாருலகம்ஆள்வாரோ
(நீர்)அறியாதுபோலாக அண்ணாவேகேட்கவந்தீர்
தெரியாதுபோலாக கேட்கவந்திரண்ணாவே
ஒன்றும்அறியீரோ உத்தமரே அண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்மன்னவனும்
பகுதிப்பணம்வாங்கப் போயிருந்தேன்பைங்கிளியே
சேனைத்திரளுடனே சென்றிருந்தேன்வெகுதூரம்
போனபிறக்காக புதுமைபிறந்ததுகாண்
காற்றுவிசேஷமாகக் கேட்டுவந்தேன்தங்கையரே
(நான்)அறிந்தேனேயாமாகில் அவகேடுவாராது
அன்றிருந்தேனானாலே அம்பலமுமேற்றுவரோ
துகிலுரியப்பார்ப்பேனோ துரோபதைநாயகியே
எந்தன்மனம்பொறுத்து இருப்பேனோதங்கையரே
(நான்)வந்தபிறகிந்த வயணமறிந்தேன்காண்
மனதுதறியாமல் வந்தேனுனைக்காணச்
சிந்தைமனங்கலங்கித் தேடிவந்தேன்தங்கையரே
உன்வார்த்தைகேட்டபின்பு உள்ளமுருகுதம்மா

(நீ)சொன்னபடியாலேஎன் சிந்தைகலங்குதம்மா
(நீ)பத்தினியாளென்றுசொல்லி சற்றுமறிவானோ
உத்தமியாளென்றுசொல்லி ஊதாரியறிவானோ
காமாட்சியென்கிறதை கமுசிறையனறிவானோ
ஏதுமறியாமல் இகழ்ச்சிகள்பண்ணிவிட்டான்
ஒன்றுமறியாமல் உதாசினங்கள்பண்ணினனே
(அவன்)வாழ்வுங்குலைந்துவிடும் மகிழ்ச்சியடங்கிவிடும்
செல்வமடங்கிவிடும் செருக்குங்குலைந்துவிடும்
பொறுத்ததினாலேயம்மா பொல்லாங்குவாரதில்லை
அவனுக்கேநாசகாலம் ஆகுபொறுத்திரம்மா
அஞ்சாதேதங்கையரே; ஆயாசங்கொள்ளாதே
(நீ)ஆயாசப்படுவதெல்லா மவனுக்கேகேடுவரும்
பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்
ஏதுக்குமஞ்சாதே என்பிறப்பேதங்கையரே
பாரப்புலிபோலே பஞ்சவர்களெங்கேயம்மா
வீரப்புலியதுபோல் வீரர்களெங்கேயம்மா
மைத்துனமாரைவர்களும் மகராஜரெங்கேயம்மா
ஐவரையும்காணவென்று ஆவலாய்வந்தேனம்மா
(அவர்)போனவிடமறியேன் போயிருக்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
பார்க்கமனதாகிப் பைங்கிளியேவந்தேனம்மா
காணமனதாகிக் கானகத்தேவந்தேனம்மா
இன்னேரமாச்சுதே இராசர்களைக்காணேனம்மா
தனியாகஉன்னைவிட்டு தருமரெங்கேபோனாரோ
ஒண்டியாய்உன்னைவிட்டு உத்தமர்களெங்கேபோனார்
இன்றுநான்காணுதற்கு இல்லாமற்போச்சுதம்மா
இன்னமொருவேளை யிவர்களை நான்காணுகிறேன்
(அவ)ராணாய்ப்பிறந்தவர்க ளலைந்தாலுங்குற்றமில்லை
(நீ)பெண்ணாய்ப்பிறந்தவள்தான் பின்தொடர்நீதியுண்டோ
ஐவருடனே நீ அழுதுதிரிவானேன்
அழுதுதிரிவானேன் அல்லற்படுவானேன்
(என்)மாளிகைவாசலுக்கு வாரீரோதங்கையரே



கசிகுவனை பாண்டவர் அவமானஞ் செய்தது.



பாராவனந்திரிந்து பஞ்சவர்கள்வாரமட்டும்
எந்தனதுமாளிகைக்கு வாரீரோதங்கையரே
அரமனைக்குந்தனை நரனழைத்துமேபோகவந்தேன்
வெதும்பிவிடாய்த்து நீ வெயிலில்திரிவானேன்
வாரீரோதங்கையரே மாளிகைக்குக்கொண்டுபோறேன்
(என்று)வருந்தியழைத்தானே மாபாவிசயிந்தவனும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குமேதுசொல்வாள்
ஐவரையும்விட்டுவிட்டு வருவேனோஅண்ணாவே
விட்டுப்பிரியவேதான் வேந்தேமனம்வருமோ
வண்ணாவே நீர்கேளும் ஆனலொருவார்த்தை
(நான்)வரவேணுமென்று மனதுமுமக்கிருந்தால்
வனம்போனபஞ்சவர்கள் வருகிறபோதாச்சு
ஐவர்வரும்வேளை ஆச்சுது அண்ணாவே
ஐவரைக்கேட்டு நீ அழைத்துப்போமண்ணாவென்றாள்
பஞ்சவரைக்கேளுமண்ணா பாரவனந்துலைத்துவாரேன்
ஐவர்வரும்வேளை ஆச்சுது அண்ணாவென்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டு இடும்பன்சயிந்தவனும்
எண்ணாதுமெண்ணியல்லோ இருந்துவிசாரமிட்டான்
ஐவர்வந்தால்மோசமல்லோ ஆகாதுகாரியங்கள்
என்றுசயிந்தவனும் எண்ணினான் தன்மனதில்
காவலர்கள்வந்தாலே காரியங்களாகாது
கையிலிருந்ததொரு கத்தியைத்தாழவைத்தான்
கடுகவெழுந்தானே கட்டழகன்சயிந்தவனும்
ஐவர்வந்தால்சேதிசொல்லு மஸ்தினபுரம்போறேன்
இட்டுன்னைபோகவென்றே இன்னேரம்காத்திருந்தேன்
ஐவரையும்காணேனம்மா ஆரணங்குதுரோபதையே[மா
இன்னமொருவேளைவந்து இட்டுக்கொண்டுபோறேனம்
ஐவருக்குச்சொல்லி அழைத்துக்கொண்டுபோறேனம்மா
போகவிடைதாரும் போய்வாரேன்தங்கையரே
என்றுமவன்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
அப்படியேபோய்வாரும் அண்ணாவேயென்றுசொன்னாள்
விடைபெற்றுசயிந்தவனும் வேந்தனெழுந்திருந்து

பர்னசாலைவிட்டிறங்கிப் பார்வேந்தன்போகலுற்ருன்
கடுகநடந்நானே கட்டழகன்சயிந்தவனும்
அழகுரதமேறி அக்கானகந்தாண்டி
(அவன்)மச்சுரதமேறி வாரானேமன்னவனும்
போரான்சயிந்தவனும் பொன்னின்ரதமேறி
அனேகதூரம்போனபின்பு ஆரணங்குதுரோபதையாள்
கத்திதனைக்கண்டாளே கட்டழகிபாஞ்சாலி
வைத்துமறந்தானே மன்னவனும்ஆயுதத்தை
இங்கேவைத்துதான்மறந்தா னென்றுமவளெழுந்து
கத்திதனையெடுத்து கடுகிநடந்தாளே
அண்ணசயிந்தவனே அனேகதூரம்போகாதே
நில்லுங்காணண்ணவே நெடுந்தூரம்போகாதே
(என்று)கூடநடந்தாளேகொம்பனையாள் துரோபதையும்
அப்போசயிந்தவனும் அழும்பு நினைவுகொண்டு
கேளாதுபோல நடந்தான்கெடு நினைவாய்
அறியாதுபோலே நடந்தானே ஆணழகன்
கூடநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
சேரநடந்தாளே தேன்மொழியாள்துரோபதையும் [ள்
அண்ணவே அண்ணவென்று அக்கணமேகூச்சலிட்டா
அழும்பன்சயிந்தவனுக் கப்போதான்கேட்டதுபோல்
திரும்பியவன்பார்த்து தேரை நிறுத்தினனே
(அவள்நெடுதூரம்வந்தபின்பு நிறுத்தினன் தன்ரதத்தை
அப்போதுரோபதையும்அருங்கிளியாளேதுசொல்வாள்
அண்ணவேஎன்காணும் அனேகதூரமவந்துவிட்டாய்
ஆயுதத்தை நீமறந்து அனேகதூரம்வந்தீரே
இந்தாருமென்ருளே ஏலங்கருங்குழலாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டியேதாருமென்ருன் இருந்தபடிசயிந்தவனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குஏதுசெய்தாள்
ஒருபடியேறியல்லோ உத்தமியாளிந்தாவென்ருள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டவில்லைகத்தியென்ருன் இன்னங்கொடுப்பதற்கு



மற்றுமொருபடியே மயிலனையாளேறினளே
அப்போதும்எட்டவில்லை யென்றனே ஆணழகன்
மூன்ரும்படியேறி மொய்குழலாள் நின்றுகொண்டு
ஆயுதங்களிந்தாவென்ருள் ஆரணங்குதுரோபதையும்
சயிந்தவனுந்தான்பார்த்து சந்தோஷமாகியல்லோ
(நாம்)வந்தகாரியங்கள்வசப்பட்டதென்றுசொல்லி
மெத்தமனமகிழ்ந்து மெல்லியரைக்கொண்டுபோக
அவளேறினபோதேயல்லோ ஏகிவிட்டான்தன்ரதத்
காற்ருய்ப்பறந்ததுகாண் கட்டழகன்தன்ரதமும் [தை
போகுதேயந்தரமாய்ப் போல்லாதகானகத்தில்
[illegible]வடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அண்ணசயிந்தவனே அழிநினைவுதேடிவிட்டாய்
ஐவர்களுந்தானறிந்தால் அனர்த்தம்வருமுந்தனுக்கு
பஞ்சவர்களறிந்தாலே பழுதல்லோஉன்குடிக்கு
நிறுத்தும்ரதத்தையென்ருள் நிறுத்தானேபாதகனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
சிந்தைகலங்கியவள் திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மயிலனையாளேதுசெய்தாள்
அப்போதுரோபதையாள் அபயக்குரலிடுவாள்
ஐவர்பஞ்சபாண்டவரே அபயமபயமென்ருள்
ஆகாயவாணியம்மா அல்லவரும்பார்த்திருங்கள்
ஐயன்பிடாரியரே அந்தரதேவதையே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
காளிகளேகூளிகளே கானகத்துப்பட்சிகளே
இந்தவனத்தி லிருக்குமிருகங்களே
பாருங்கள்பாருங்கள் பாவியிவன்செய்கிறதை
எல்லோரும்பாருங்கள் இவனுடைய துற்குணத்தை
என்னைச்சிறைபிடிக்க விழுத்துக்கொண்டுபோருனே
பஞ்சவர்க்குத்தானையும் பார்த்திருந்தபட்சிகளே
ஐவருக்குத்தாரையும் ஆகாயவாணியம்மா
நாய்க்குக்கிடைக்குமோ நலமுழுத்தேங்காயும்
செரிப்பேனுஉந்தனுக்கு சேறுபத்துநான்தருவேன்

(உனக்)காவனென்றுபாராதே அடிப்பேன்முறத்தாலே
என்றதுரோபதையு மிளங்கொடியாளேதுசெய்தாள்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிருள்
மாயவரேசுவாமியென்று மாதுபுலம்புகிருள்
அப்போதுபஞ்சவர்கள் அரன்பூசைதான்முடித்து
அரிபூசைசிவபூசை எல்லாமவர்முடித்து
நடந்தார்கள்பஞ்சவர்கள் ஞாயிறுதித்தாப்போல்
வாரார்கள்பஞ்சவர்கள் வடக்கெழுந்தசூரியன்போல்
பர்னசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்
அங்கேதான்துரோபதையை ஆரணங்கைக்காணுமல்
காணுமல்பஞ்சவர்கள் கலங்கிஞரந்நேரம்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே வில்வேந்தாயென்பிறப்பே
நெருப்பிற்பிறந்தவளை நீலவர்னன்தங்கையளை
அக்கினியில்வந்துதித்த அபிஷேகபத்தினியை
பாஞ்சாலன்பெண்ணை பைங்கிளியைக்காணேனே
அழகில்மிகுந்தபெண்ணை ஆரணங்கைக்காணேனே
ஆரெடுத்துப்போஞரோ அறியேனேதம்பியரே
எவரெடுத்துப்போஞரோ ஏதுமறியேனே
பார்த்துவாதம்பியென்ருர் பாரமதகரியை
என்றதுகேட்டு எழுந்தார்கள்தம்பியர்கள்
தட்டிவருந்துகட்டித் தாமரைப்பூசுங்குவிட்டு
ஆயுதங்கள்தானெடுத்து அடவுடனேபோய்நடந்தார்
தெற்குதிசையிலே தேர்விஜயன்தேடிவாரான்
வடக்குதிசைநோக்கி வாரான்சகாதேவன்
மேற்குத்திசையிலேதான் நகுலனுந்தேடிவாரான்
கிழக்குதிசைநோக்கி வீமனுந்தெடிவாரான்
அந்தவனங்களிலே ஆராய்ந்துவாரபோது
தேரடியைக்கண்டுமல்லோ திருப்பிஞன்வீமனவன்
காற்றுவேகமாகவேதான் கடிகிவந்தான்வீமனவன்
ஏட்டிப்போய்த்தான்பிடித்தான் இயலானரதத்தையவன்



வீமனைக்கண்டாளே மெல்லிநல்லாள்துரோபதையும்
அழுதகண்ணைத்தான்துடைத்தாள்ஆயாசமுந்திர்ந்தாள்
கைகொடுத்தான்துரோபதைக்கு கடுகஇறக்கிவிட்டான்
கண்டுஇடிவிழுந்தான் காளைசயிந்தனும்
பார்த்துஇடிவிழுந்தான் பாவிசயிந்தவனும்
சிந்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
மூர்ச்சையாய்விழுந்தானே முடிமன்னன்சயிந்தவனும்
ஒருகையால்ரதந்தூக்கி உதிரடித்தான்மண்மேலே
அவனுடையதேர்சட்டமும் அழகுகுதிரைகளும்
சட்டஞ்சட்டமாகவேதான் தவுடுபொடியாச்சுதங்கே
தேருமுறிந்ததுகாண் சேர்ப்பித்தான்மண்மேலே
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
ஏதடிபெண்ணே நீ யிளங்கொடியேதுரோபதையே
வந்தவபணமென்ன வகையாகச்சொல்லுமென்ருன்
அப்யோதுரோபதையா ளாரணங்குதான்பார்த்து
அஞ்சிப்பயந்துமவள்அருங்கிளியாளேதுசொல்வாள்
வந்தாளேசயிந்தவனும் வாருமிருமென்றுசொன்னேன்
(நாம்)வனவர்சம்வந்ததொரு வயணங்கள்கேட்கையிலே
சொன்னேன்வயணமெல்லாம் சூதாகத்தான்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயுதத்தைகீழேவைத்தான்
மறந்துவிட்டானென்று மன்னவரேநானெண்ணி
ஆயுதத்தைதானெடுத்து அண்ணுவென்ருேடிவந்தேன்
எட்டிக்கொடுமென்ருன் ஏறினேன்தேர்மேலே
ஏறினபோதே எகிறவிட்டான்தன்ரதத்தை [ம்
இவ்வளவுசேதியென்ருு ளிளங்கொடியாள்துரோபதையு
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தாய்
காட்டுக்கொடிபிடிங்கி கடிகியேஓடிவந்தான்
மூர்ச்சைதெளிந்தானே முடிமன்னன்சயிந்தவனும்
காட்டுக்கொடியாலே கட்டிஞன்சயிந்தவனை
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
தன்காலில்கட்டிக்கொண்டு தானடந்தான்வீமனுமே

பர்ணசாலைதன்னருகே பாவிதனைக்கொண்டுவந்தான்
தருமருக்குமுன்னாலே தள்ளிக்கொண்டுவந்தானே
கண்டாரே தர்மராயர் காளைசயிந்தவனை
வாருங்காண் மைத்துனரே வந்தீரெனைத்தேடி
தேடியேவந்ததென்ன சிரானைகானகத்தில்
வந்தவயணமெல்லாம் வாய்திறந்துசொல்லுமென்றார்
தர்மரவர்கேட்கையிலே தார்வேந்தன்வாய்திறந்து
மாபாவிசயிந்தவனும் வார்த்தைகளேதுசொல்வான்
(உங்களைப்)பார்க்கப்பிரியமுடன் வந்தேனேபஞ்சவரே
காணமனதாகி வந்தேனேகாவலரே
வந்தயிடந்தனிலே உந்தனை நான்காணவில்லை
தங்கையரேக்கண்டேனே தங்கள்வயணமெல்லாம் [ன்
விபரமாய்ச்சொல்லுமென மெல்லியரைத்தான்கேட்டே
அப்போதுரோபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
வனவாசம்வந்ததொரு வயணமெல்லாந்தானுரைத்தாள்
திரியோதிரனுரைத்த சேதிகளைத்தானுரைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தேன்
இருமிருமென்றுசொல்லி யேகிவழிநடந்தேன்
வச்சிராயுதத்தை வைத்துமறந்துவிட்டேன்
கையிலெடுத்துக்கொண்டு கடுகவந்தாள்தங்கையரும்
எட்டிக்கொடுமென்றேன் இயலானதங்கையரை
அவ்வளவில்வீமன்வந்து அடித்தானேதையாலே
இடுப்பிலேகயறுகட்டி இழுத்துவந்தான்தங்கள்முன்னே
இவ்வார்த்தைசொல்லி இனைத்தாற்போலேயழுதான்
சாயாப்புமன்னவரும் தருமராதுகேட்டு
மெத்தமனமுருகி வேந்தரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
கனிகள்பறித்துக்கொண்டு கடுகியேவாருமென்றார்
அந்தச்சொல்தான்கேட்டு அனைவோருங்கோபமுற்றார்
நகுலசகாதேவ ராஜாக்கள்கோபமுற்று
கண்கள்சிவந்துமவர் காந்தாளக்கோபமுற்று
நெற்றிவிழிசிவக்கக்கவிழிபொறிபறக்க



உச்சிமயிர் துடிக்க உத்தமர்களேதுசொல்வார்
அண்ணாவே நீர்கேளும் அடியேனொருவார்த்தை
துரோபதையைக்கொண்டுபோக வந்ததொருதோசியற்கு
பாவையரைக்கொண்டுபோக வந்ததொருபாதகற்கு
போசனமும்போடுவரோ புகழ்பெரிய அண்ணாவே
ஆக்கினைகள்பண்ணி அனுப்புவோமிவனையென்றார்
பொல்லாதபாதகனை போகவிடலாகாது
என்றுமவர்கள்சொல்லி எல்லவருமோர்முகமாய்
ஆனந்தமார்பரெல்லாம் அண்ணருடன்கோபமிட்டார்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
கோபித்தகோபமெல்லாங் குளிர்ந்தமழையாச்சு [ன்பார்
வெறுத்தவைப்பாலென்பார் வெள்ளத்தைத்தண்ணீரெ
கடறியார்சூதறியார் கள்ளமொன்றுந்தாமறியார்
பொய்சொல்லார்தருமரவர் புண்ணியரேதுசொல்வார்
கோபித்துக்கொண்டாலாகாதுகொற்றவரே
ஆங்காரக்கெர்வமது ஆருக்குமாகாது
ஆணவமுண்டானாலழிந்துவிடுங்காலமப்பா
பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடுறைவார்
மனக்குறையையாதே வந்தவர்க்குப்பசியாறும்
கனிகள்பறித்துமே கடுகியேவாருமென்றார்
எனக்கெதிர்பேசவேண்டாம் எழுந்துநடவுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அண்ணரடிவணங்கி
அஞ்சிப்பயந்தெழுந்தார் அழகானதம்பியர்கள்
காட்டிற்பயந்தோடிக் கனிகள்பறித்துவந்து [ண்டு
கொண்டுவந்துவைத்தார்கள் கொப்பெனஅண்ணரன்
வாங்கியேதருமரவர் மைத்துனரேபுசியுமென்றார்
மனதிற்பயமுடனே வாங்கிப்பொசித்தானும்
கனிகள்பொசித்துமவன் கைபூசிக்கொண்டானும்
போய்வாரேனென்னப் பொட்டெனச்சரணமிட்டான்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
மைத்துனர்தன்னுடனே மன்னர்களே நீங்களும்போய்

வழிகட்டனுப்பிவைத்து வாருங்கள்தம்பியென்றார்
அப்படியேநல்லதென்று அழகான தம்பியர்கள்
வெற்றிமதயானை வீமனவன்தானெழுந்து
அண்ணருரைப்படிக்கு அழைத்துவந்தான்சயிந்தவனை
சென்றிருவருமாய்ச் சிலதூரம்போனபின்பு
போர்வீமனேதுசெய்தான் போகவழிதனிலே
ஐந்துகுடுமிவைத்து அம்பாலேதலைசிரைத்தான்
மீசைசிரைத்தானே மின்போடிபண்ணினனே
தாடிசிரைத்தானே தலைபோடிபண்ணினனே
தலைபோடிபண்ணினனே தாமமுடியானுக்கு
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்துமுகாய்ப்பொட்டுமிட்டான்
செம்புள்ளிகரும்புள்ளிசேர்த்துமுகாய்ப்பொட்டுமிட்டான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழ்பெரிய தருமரவர்பார்த்து
அருச்சுனதம்பியரே அண்ணனைக்காணோமே
மைத்துனனைக்கூட்டிப்போய் வழிவிட்டுவாருமென்றே
போய்நெடும்போதாச்சு புகழ்வீரன்வீமனைத்தான் [ன்
வீமனைத்தேடி நீ விரைவில்வந்தேருமென்றார்
கடுங்காளைவீமனைத்தான் கண்டழைத்துவாருமென்றார்
அப்படியேநல்லதென்று அருச்சுனனுந்தானெழுந்தான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
வில்லெடுத்துக்கைபிடித்து விஜயனும்போய்நடந்தான்
அண்ணனைத்தேடிவந்தான் அருச்சுனராஜதுரை
வீமனைப்பார்த்தாரே விஜயனருச்சுனனும்
கண்டானேசயிந்தவனைக் காளைமனமகிழ்ந்து
பார்த்தானேசயிந்தவனைப் பலகாலும்புரித்து
வீமனைத்தான்பார்த்து விஜயனுமேதுசொல்வான்
என்னமரியாதை செய்தீரென்னண்ணாவே [மொ
மட்டையடிமொட்டையிட்டாலவமானங்கள் வேண்டா
இருவிருமன்னனென்று விட்டிடத்தகவே
கானகத்திலேநுழைந்து கழுதையொன்றுதான்பிடித்து
மலைக்கழுதைகொண்டுவந்து மன்னவனையேற்றினானே



இப்படியாகவேதா னிவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
நகுலனைத்தானழைத்து ராசர்களைத்தேடுமென்றார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
கண்டழைத்துவாருமையா காளையிருவர்களை
தாமமுடியான் நகுலனதுகேட்டு
அருளருளுமென்னையா அழைத்தோடிவாரேனென்று
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஆயுதங்கைப்பிடித்து அடவிதனிற்போய்ப்புகுந்து
பார்த்தண்ணனைத்தேடிப் பரிநகுலனோடிவந்தான்
கானகமெல்லாந்தேடிக் கண்டானே அண்ணர்களை
கண்டான்சயிந்தனுட கண்காட்சியானதெல்லாம்
பார்த்தான்சயிந்தவனை பாவிக்குவற்குமென்று
சந்தோஷப்பட்டானே சயிந்தவனைக்கண்டவுடன்
வீமாமதகரியே வில்லேந்துமன்னர்களே
மூவிரண்டுகுடுமிவிட்டு மொட்டையடித்தீரோ
என்னுபகாரம் ஏதுசெய்வேன்மைத்துனற்கு
சாணியெடுத்துவந்து சரியானஉண்டைபண்ணி
தலைமேலேஉண்டைவைத்து தனிவிளக்குவற்றிவைத்தா
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே [ன்
அனேகநெடும்பொழுது ஆனபிறகாக
தருமரவரெழுந்து தம்பியைத்தானழைத்து
மூவர்களும்போனாரே முடிமன்னராஜாக்கள்
இன்னம்வரக்காணேன் என்னமோ நானறியேன்
தேடியழைத்து நீ சீக்கிரத்தில்வாருமென்றார்
தாமமுடியானும் சகாதேவன்தான்கேட்டு
அப்படியேதான்போ யழைத்துமேவாரேனென்று
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆனழகன்போகலுற்றான்
அப்போதுரோபதையும் ஆரணங்குதானெழுந்து
தர்மருக்கெதிரில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
நானுங்கூடப்போய்வாரேன்ராஜர்களைத்தேடவென்றாள்

தருமராகேட்டு தளராமலேதுசொல்வார்
அப்படியேபோய்வாரும் ஆரணங்குதுரோபதையே
சீக்கிரந்தில்வாருமென்றுசெலவுதந்தார்தர்மலிங்கம்
கூடத்தொடர்ந்தாளே கொம்பனையாள் துரோபதையும்
இருவருமாகவல்லோ யிசைந்துவழிநடந்து
அண்ணர்களைத்தேடியே ஆரணியகன்வந்துவிட்டான்
கானகத்தினுள்நுழைந்து கண்டானேஅண்ணர்களை
மைத்துனரைக்கண்டு வரிசையெல்லாந்தான்பார்த்து
உள்ளங்குளிர்ந்துசிலிர்த் துடம்பெல்லாம்பூரித்து
சந்தோஷப்பட்டு சர்வாங்கம்பூரித்து
மரியாதைநானென்ன மைத்துனற்குச்செய்வேன்காண்
கழுதையின்மேலிருந்தவனைக் கடுகயிறக்கிவிட்டான்
முன்னும்பின்னாக முகந்தெரியவேற்றினான்
எருக்கமாலைகொண்டுவந்துஇவன்கழுத்திலேபேட்டான்
இந்தவரிசையெல்லாம் விந்தைதன்காட்சியென
மன்னர்கள்தன்னருகே வந்துநின்றாள்பாஞ்சாலி
அண்ணரைக்கண்டாளே ஆனந்தமானாளே
தமயனைக்கண்டாளே சந்தோஷமானாளே
தர்மமுடிவீமரே நீர் தலைபோட்டபன்னீரே
வாள்விஜய அர்ச்சுனரே வாகனங்கள்தந்தீரே
காளைநகுலரேநீர் கரும்புள்ளிபோட்டீரே
முன்னூற்சகாதேவா முன்பின்னாய்வைத்தீரே
எருக்கமாலைகொண்டுவந்து இவர்கழுத்திற்போட்டீரே
என்னமரியாதை அண்ணருக்குநான்செய்வேன்
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளியுமேதுசொல்வாள்
வானத்தநந்துதியாள் மாகபடாப்பத்தினியாள்
ஐவருக்குத்தேவியாகி அழியாதபத்தினியாய்
கற்புடையபத்தினியாய்க் காப்பதுமெய்யானால்
(இக்) கழுதையைத்தொட்டவர்கள் கடுகநடவாமல்
ஏறினசயிந்தவனை இறங்கவேவொட்டாமல்
அரவக்கொடியோன்பார்க்க அம்பலம்போமளவும்
ஏறினகழுதை யிறங்காமலிருக்கவென்று



கட்டவிழ்க்கவந்ததொரு காவலர்களெல்லோரும்
ஓட்டிக்கொண்டுபோகவென்று உத்தமியுஞ்சாபமிட்டாள்
(என்)வங்கிஷத்தார்தொட்டால்வனக்கழுதைவிட்டிறங்கி
காட்டுக்கழுதையிது கடுகெனவேதானிறங்க [று
மற்றவர்களதொட்டாலே வலித்துக்கொண்டோடவென்
இப்படிக்குச்சொல்லியல்லோ யிட்டாள்பெருஞ்சாபம்
சாபங்கொடுத்தாளே தருமர்பெருந்தேவியவள்
இப்படியாய்ச்சொல்லி இருந்தாளேதுரோபதையும்
அடித்துத்துரத்தினார் அங்கேசயிந்தவனை
தூரியனுக்குச் சொல்லுமென்று துரத்தினார்சயிந்தவனை
வருகுதே அக்கழுதை வனமாய்வனந்தாண்டி
தான்விட்டுவந்ததொரு தன்னுடையசேனையண்டை
வந்துகலந்தானே வனக்கழுதைதன்னுடனே
கண்டாரேசேனையர்கள் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரேசயிந்தவனும்பார்வைரெண்டுங்கொள்ளாமல்
இதுவென்ன அதிசயங்க ளெவர்செய்தகோலமென்று
கட்டையவிழ்க்கவென்று காவலர்களோடிவந்து
தொட்டுயவிழ்க்கவேதான் ஓட்டிக்கொண்டுபோனார்கள்
ஓட்டிக்கொண்டசேனையுடன் உத்தமனும்போய்நடந்தா
அக்ரோணிசேனையுடன் ஆனைமுகன்போகலுற்றான் [ன்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி பதிகளைந்தான்தாண்டி
அஸ்தினபுரத்தே அடுத்ததுஅக்கழுதை
கடையுங்கடைத்தெருவிற் கழுதைவருகையிலே
கழுதையைத்தொட்டவர்கள் கடுகியேகூடவாரார்
பட்டணத்திலெல்லவரும் பரிவாகப்பார்த்தார்கள்
என்ன அதிசயங்க ளென்பார்களெல்லவரும்
மாடத்தில்மண்டபத்தில் வந்தேறிப்பார்ப்பார்கள்
கோபுரத்திலேறிநின்று குலுங்கநகைப்போரும்
சொல்லிச்சிரிப்போரும் சீச்சீச்சீயென்போரும்
இவனுக்குஇக்கழுதை ஏதென்றுசொல்வோரும்
சாமத்துரோகியிவன் சதிசெய்தானென்போரும்

இப்படியாக இவர்களுஞ்சொல்லையிலே
மற்றுமொருவன்வந்து வாய்திறந்தங்கேதுசொல்வான்
தூரியனுடசொற்கேட்டு துரோபதையைக்கொண்டுவரப்
போனனேகானகத்திற் போர்மன்னராஜரண்டை
ஐவரில்லாவெளையிலே ஆரணங்கைக்கொண்டுசென்றான்
அப்போதுரோபதையும் அபயமபயமென்றாள்
அபயக்குரல்கேட்டு ஐவர்களுமோடிவந்தார்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
மயிலனையைக்கொண்டுபோக வந்ததொருபாவிதன்னை
விடலாகாதென்றுசொல்லி வீமன்மனதிலெண்ணி
அடையாளம்பண்ணி யனுப்பினான் திரியனண்டை
என்றுமவர்கள்சொல்லி யிருக்கின்றவேளையிலே
அந்தத்தெருத்தாண்டி அப்பாலேபோனானே
மாடத்தெருதாண்டி மன்னவர்வீதிவிட்டு
திரியோதிரனிருக்கும் சிம்மாசனத்தருகே
வந்தது அக்கழுதை மகாராஜன்முன்னாலே
அம்பலத்தார்கண்டார்கள் ஆச்சரியப்பட்டார்கள்
திரியோதிரன்கண்டு சிந்தைமனங்கலங்கி
உள்ளங்கலங்கியல்லோ ஓடிவந்தான்சயிந்தனண்டை [ து
இரங்கென்றுகைகொடுத்தா னிழுத்துக்கொண் டோடுகு
ஐயோதெய்வமேயிந்த அனியாயம்நானறியேன்
என்னையிழுத்துக்கொண்டு ஓடுகுதுஇக்கழுதை
கூவியலறுகிறான் கொப்பெனவே திரியோதிரன்
அபயமிட்டுச்சுற்றுகிறா னம்பலத்தார்தங்கள்முன்னே
அங்கேயிருந்தவர்கள் அனைவோருந்தான்பார்த்து
கலுக்கெனறுதான்சிரித்தார் கட்டழகரெல்லோரும்
சிரித்ததைத்தான்பார்த்து திரியனுடதம்பியர்கள்
சிரிக்கஉடலெடுத்தோம் சீயென்னப்பேரெடுத்தோம்
என்றுமவர்கள்சொல்லி யிவனருகிலோடிவந்து
தம்பிமாரெல்லோரும் தமயனுக்குக்கைகொடுத்தார்
அத்தனைபேர்களையும் அக்கழுதைவலித்தோடும்
அப்போதுஎல்லோரும் அலறுகிறார்கூச்சலிட்டு



ஐயையோதெய்வமென்று அல்லவரும்புலம்புகையில்
அங்கிருந்தராஜாக்க ளானதொருமந்திரிகள்
பார்த்துமவர் நடுங்கிப் பதுங்குவார் துரைகளெல்லாம்
இப்படியாகவே இவர்கள்படும்பாடதனை
துயகுலத்துதித்த துரோணரவர்ஓடிவந்து
காசிவளநாடாளுங் கர்னனைக்கண்காட்டி
சர்ப்பக்கொடியோனுடனே தம்பிமாரானவரும்
சாயாம்புமேனி சயிந்தவரானவரும்
மற்றுஞ்சிலமன்னவரும் மகுடமுடிராஜர்களும்
இன்னஞ்சிலசேனைகளும் எல்லோருமொன்றாகக்
காட்டுக்கழுதையுடன் கலந்துமவரோடுகிறார்
(நாம்)கண்டுசும்மாயிருக்கக் காரியங்களல்லவென்றார்
பார்த்திருப்போமென்றால் பரிதாபந்தோணுதையா
இதுக்கொருயோசனைகள் இயம்புங்காண்மன்னவரே
அப்போதுகர்னருமே ஆணழகரெதுசொல்வார்
துரோபதையைச்சொன்னதொரு தோஷமிதுகாணும்
பத்தினியைப்பேசினதோர் பாவமிதுகாணும்
என்றுசொல்லிக்கர்னருமே இவர்களருகில்வந்து
அப்போதுகர்னருமே அனைவரையுந்தான்பார்த்து
குலுங்கநகைத்துக்கொப்பெனவேஓடிவந்து
பாரளந்தமாயன் திருப் பாதமதைமனதிலெண்ணி
பெருமாள்துணையென்று பிடித்தானேதன்கையால்
கடுகயிழுத்தானே கர்னமகராசன்
கழுதையைத்தட்டி கடுகயிறங்குமென்றான்
அத்தனைபேர்களுமே அல்லவருங்கையைவிட்டார்
அப்போசயிந்தவனும் அங்கேயிறங்கிவிட்டான்
திரியோதிரன்முதலாய்ச் சேனையெல்லாம்வந்தார்கள்
அவரவர்களாசனத்தி லனைவோருமவீற்றிருந்தார்
அம்பலவாசலிலே அழைத்துவந்தார்சயிந்தவனை
தென்னமுடிவேந்தன் திரியோதிராசன்
மைத்துனரைத்தான்பார்த்து மகராசனேதுசொல்வான்
கோதைதுரோபதையைக் கொண்டுவரப்போனீரே

மட்டையடிமொட்டையிட்டு வாகனத்தின்மேலேற்றி
அனுப்பினார்காணும் ஆணழகாசொல்லுமென்றான்
(அவன்)பேசப்பலனழிந்துபின்வேந்தனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புதுமைநடந்ததுவும்
அங்கேநடந்ததொரு ஆச்சரியந்தானுரைத்தான்
தேசத்தையாளும் திரியோதிரன்பார்த்து
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தான்
வரிசித்துராசனுமே மைத்துனற்கேதுசொல்வான்
வெற்றிமதயானை வீமனைக்கொல்லவென்று
பரமனைநோக்கியே பாரத்தபசுபண்ணி
வீமனைக்கொல்லவென்று வேணவரம்பெற்றுவாரேன்
என்றுநடந்தானே இயலானசயிந்தனும்
தெற்குத்தெருத்தாண்டி தேரோடும்வீதிவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையுமங்கே அதிகவனந்தான்தாண்டி
மகாமுனிகள்தபசுபண்ணும் மாயமலைமேலே
தானுந்தபசுபண்ணுறான் தாமமுடியானும்
ஆதிசிவனையல்லோ அடிபணிந்துதானினைந்து
அருந்தபசுபண்ணினனே அங்கேசயிந்தவனும்
அப்போபரமசிவன் அவனுக்கெதிரில்வந்து
என்னவரம்வேணும் எந்தனைக்கேளுமென்றார்
அப்போசயிந்தவனும் அனேகவரம்கேட்டான்
கேட்டவரங்களெல்லாம் கிருபையாய்த்தான்கொடுத்தார்
ஆதிசிவன்கையிலே அதிகவரம்பேறுபெற்றான்
வீமனைக்கொல்லவென்று வேணவரங்கள்பெற்றான்
கெதைகொன்றைமாலையுங்கேட்டுமிகப்பேறுபெற்றான்
வரங்களதுபேறுபெற்று வாரானேசயிந்தவனும்
அஸ்தினபுரத்தே ஆணழகன்போகவென்று
மகாதபசுபண்ணதொரு மாமலையைவிட்டிறங்கி
நடந்தானேசயிந்தவனும் நாலுதிக்குந்தானதிர
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைகளுமே அதிகவனந்தான்தாண்டி



வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
மூங்கிலடர்ந்தவனம் முல்லைமல்லிபூத்தவனம்
எங்கும்புலிகரடி இருக்கும்வனந்தாண்டி
மலைப்பாம்புகுடியிருக்கும் மல்லர்வனந்தாண்டி
இருளர்குடியிருக்கும் இருண்டவனந்தாண்டி
கள்ளர்குடியிருக்கும் களத்தவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி யிளந்தோப்புந்தான்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டானத்திபுரம்
அத்தினபுரத்தே ஆணழகன்போய்ச்சேர்ந்தான்
தென்னமுடிவேந்தன் திரியோதிரனிருக்கும்
சபையிற்சிம்மாசனத்திற் சயிந்தவனும்வந்தானே
மாநாகங்கொண்டவனும் மைத்துனரைத் தான்பார்த்து
அரவக்கொடியோனும் அத்தானைத்தான்பார்த்து
கடுகவேதானிறங்கிக் கைகொடுத்துத்தான்தழுவி
ஆரடாமல்லர்களே அருகிருக்குஞ்சேவகரே
சயிந்தவனார்வீற்றிருக்கத் தங்காசனம்போடுமென
ஏவல்பணிசெய்கிறவர் எல்லவருந்தான்கேட்டு
சொல்லப்பெற்றோமென்றுமவர் சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து
சேவகரெடுத்துவந்தார் சிம்மாதனமுமிட்டார்
அப்போதிரியோதிரன் அத்தானைத்தான்பார்த்து
வந்துநெடுநேரம் நின்றீரேமைத்துனரே
இட்டசிம்மாதனத்தில் ஏறியவன்வீற்றிரென்றான்
அப்போசயிந்தவனும் ஆணழகுமன்னன்
இட்டதொருசிம்மாதனம் ஏறியவன்வீற்றிருந்தான்
அப்போதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
கானகங்கள்போனீரோ கத்தாவைக்காணவென்று
கத்தாவைக்கண்டீரோ கனத்தவரம்பெற்றீரோ
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்பெற்றீரோ
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்பெற்றீரோ
எந்தன்மனங்குளிர எனக்கரியச்சொல்லுமென்றான்

அப்போசயித்தவனும் ஆணழகனே துசொல்வான்
போன்றுவும்வந்ததுவும் புனிதரைக்கண்டதுவும்
ஐவரையுங்கொல்லவென்று ஆனவரம்பெற்றதுவும்
நாலிரண்டுவார்த்தைகளாய் நட்த்திறன்சயிந்தவனும்
கேட்டுமனமகிழ்ந்தான் கீர்த்திபெற்றோமென்றுசொல்லி
வெற்றிபெற்றோமென்று வேந்தன்மகிழ்ந்திருந்தான்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றும்வருஷம் முடிந்ததுமன்னவர்க்கு

மூன்றுவது முருக்கமகாரிஷிவனம் முற்றிற்று.

---

## ௪-வது, காளமகாரிஷிவனம்:

---

நான்காம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
முருக்கமகாரிஷிவனத்தை முடிமன்னர் தான்தாண்டி
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடை தலைமேலே
மன்னிவைத்தசீமாடு வனவாசங்குடித்தனமாம்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடிகிவந்தார்பஞ்சவர்கள்
அவ்வனத்திற்போய்சேர்ந்தார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பச்சைத்தழையொடித்துப் பர்னசாலையுண்டுபண்ணார்
ஓரடுக்குப்பர்னசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குப்பர்னசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஐந்தடுக்குப்பர்னசாலை ஆணழகருண்டுபண்ணார்
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவர்குடித்தனமாம்
மாதுதுரோபதையும் மன்னர்பஞ்சபாண்டவரும்
காயுங்கனியுந்தின்று காலங்கழிக்கிறார்கள்
அவ்வனத்திற்பஞ்சவர்கள் அவரிருக்கும்வேளையிலே



மாநாகங்கொண்டதொரு மகாராஜனேதுசெய்வான்
அரவக்கொடியோனும் அங்கனவேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்கச்சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை
எந்தவனத்தி லிருக்கிறாரென்றறியேன்
காளிபேரண்டாநீ கடுகவேதானேகி
ஐவரையும்நீதேடி அவரிருக்குந்தாவறிந்து
தேடியேநீபார்த்துத் திரும்பிவந்துசேருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருகிருந்ததூதுவர்கள்
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்தார்கள்
கூறப்பெற்றோமென்று கும்பிட்டவரெழுந்து
அஸ்தினபுரந்தாண்டி ஆரணியந்தேடிவந்தார்
காடுமலைகளிலுங் கடுகவேதேடிவாரார்
தினகரன்வனந்தனிலே தேடினார்பஞ்சவரை
அங்கிலுங்காணாமல் அப்பாலேதேடிவாரார்
ராமரிஷிவனத்தில் நலமாகத்தேடிவாரார்
அங்கிலுந்தேடினார்கள் ஐவரையுங்காணாமல்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்தேடிவாரார்
அங்கெங்குங்காணவில்லை ஐவர்பஞ்சபாண்டவரை
காளமகாரிஷிவனத்தே கடுகியேவந்தார்கள்
காளமகாரிஷிவனத்திற் காவலர்கள்பஞ்சவரை
பர்னசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்கிறாரென்றறிந்து ஏகிவழிநடந்தார்
காடுஞ்செடிதாண்டி கடுகியேவாரார்கள்
ஆறுஞ்சுனைதாண்டி அவசரமாயோடிவந்தார்
மகாசன்வீற்றிருக்கும் மண்டபத்தருகில்வந்தார்
திரியோதரனிருக்கும் சிம்மாதனமுன்னேவந்து
அரசனெதிரில்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டார்
கண்டுதிரியோதரன் கட்டழகனேதுசொல்வான்
பார்த்துதிரியோதரன்பார்மன்னனேதுசொல்வான்

போனீரே நாதவரே புதுமையென்ன சொல்லுமென்றா
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே [ன்
காளமகாரிஷிவனத்திற் கண்டோமேபஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமே
என்றுசொல்லத்தான்கேட்டு எரிநாகங்கொண்டவனும்
கண்கள்சிவந்தானே காந்தாளப்பட்டவனும்
மாமாவைத்தானழைத்து மாநாகனேதுசொல்வான்
இன்னமும்பஞ்சவர்க ளிருக்கிறார்கானகத்தில
மாளாமற்பஞ்சவர்கள் வனமேதிரிகிறார்கள்
தப்பிப்பிழைத்தாலேதாரணியையாள்வாரே
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுஆள்வாரே
எந்தவிதமானாலும் இறக்கவகைபார்க்கவேணும் [ண்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆலோசனை சொல்லுமென்றா
மாமாவேயெந்தனுக்கு வார்த்தையுரையுமென்றான்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மருகனுக்கு
சாமத்துரோகியவன் சகுனியெடுத்துரைப்பான்
கொல்லைக்குப்புல்லி குடிக்குச்சகுனியல்லோ
துரியனைத்தான்கெடுக்கச்சொல்லுகிறான்யோசனைகளை
அப்பாமருமகனே ஐவரையுங்கொல்லவென்றால்
நொடிக்குட்காளமாரிஷியைநோக்கித்தவம்பண்ணினாலே
அருந்தபசுபண்ணினாலே அந்தமுனிவந்திடுவார்
ஐவரைக்கொல்லவென்று அவரைமனுக்கேட்டால்
நல்லதென்றுசொன்னாலே நாடெல்லாமுன்னுதப்பா
தபசிற்பெரியவர்காண் சாமிக்கொப்பானவர்காண்
வரத்திற்பெரியவர்காண் மகாதேவர்க்கொப்பாவார்
அவராலேயாகுமப்பா ஐவரையுங்கொல்லுதற்கு
உன்னாலேயானமட்டும் உத்தமனேபாருமென்றான்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தான்றிரியோதிரன்
உக்கிரமுடனெழுந்து ஒருவனுமாய்ப்போனானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுங்குளையுமல்லோ அரியவனந்தான்தாண்டி
ஆரணியந்தன்னிலே அரவக்கொடியோனும்



வந்துமிருந்துமவன் மகாதபசுபண்ணுகிறான்
காளமகாமுனியைக் கருத்திமன்திலெண்ணி
அருந்தபசுபண்ணினானே அரவக்கொடியோனும்
வேணதபசுபண்ணுறான் வேந்தரைக்கொல்லவென்று
பாவிதபசுபண்ணுறான் பஞ்சவரைக்கொல்லவென்று
இப்படியாய்த்தவமிருந்தான் எரிநாகங்கொண்டவனும்
அப்போமகாமுனியும் அறிந்தார்தவநிலையை
சடையுஞ்சடைமுடியும் தம்பிரான்போலாக
இவருடையசடையழகும் ஈஸ்பரரைப்போலாகக்
காலில்மிதியடியும் கையிற்கமண்டலமும்
திரியோதிரனருகே சேரவருகையிலே
கண்டுதிரியோதிரனும் கடுகவெழுந்திருந்து
பார்த்துதிரியோதிரனும் பற்றற்றோர்க்கெதிரில்வந்து
முத்துமுடிவேந்தன் முனிக்கெதிரிலோடிவந்து
சுத்திவலம்வந்து தொழுதிரங்கித்தெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்துமுடிவணங்கித்தெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன்கோமானும்
வாய்மூடிநின்றானே மன்னன்றிரியோதிரனும்
காளமகாமுனியுங் கண்டுமனங்குளிர்ந்தார்
சிந்தைமனங்குளிர்ந்து தேகங்கள்பூரித்து
சந்தோஷமானாரே சாமிபெரியவரும்
மெத்தமகிழ்ந்தவரும் வேந்தனைப்பார்த்துரைப்பார்
ஆர்காணும்ராசாவே அரசர்பெருங்கோமானே
ஏதுக்காய்வந்தாய் நீ இங்குதவம்பண்ணுகிறாய்
என்னைநினைத்தது நீ ஏதுகருமமென்றார்
மனதில்நினைத்ததெலாம்மன்னவனேசொல்லுமென்றார்
வேண்டும்வரங்கொடுப்பேன் வேந்தனேசொல்லுமென்றார்
அப்போதிரியோதிரன் ஆணழகன்தான்பார்த்து
சர்ப்பக்கொடியோனும் சந்தோஷமானானே
அரவக்கொடியோனும் அங்கேமனமகிழ்ந்து
ஆண்டவரேநீர்கேளும்அடியேனோர்விண்ணப்பம்

என்சாமிகேளுமையா யெந்தனுடவின்னப்பம்
அஸ்திநபுரமாண்ட அரவக்கொடியோனன்
திக்கரசையாண்டதொரு திரியோதிரனென்பார்
எந்தன்மனக்குறையால் வந்தேனுமைக்காண
கண்டேன்களிகூர்ந்தேன் கவலையைச்சொல்லுகிறேன்
பண்டும்பகையாளி பாதிநாள்தாயாதி
என்னும்பகையாளி யிருக்கிறார்சத்ராதி
எந்தன்பகையாளர் இயலானபஞ்சவர்கள்
பாண்டுமகாராஜன் பெற்றெடுத்தபஞ்சவர்கள்
இப்போதுதங்கள்வனத் திருக்கிறார்பஞ்சவர்கள்
ஐவரையுங்கொல்ல அதிகமனதெந்தனுக்கு
ஐவரையுங்கொன்றாலே ஆளுவேன்ராச்சியத்தை
அவர்களைக்கொல்லுதற்கு அடியேனலாகாது
உம்மாலேயாகுமென்று உம்மைநினைத்தழைத்தேன்
ஆகையாலெந்தனுக்கு அதிகவரந்தாருமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்கு பலத்தவரந்தாருமையா
அனேகநாளுமைக்கோரி யரியதவம்பண்ணிநின்றேன்
(நீர்) வந்தபொழுதெந்தன்மனங்குளிர்ந்தேனுண்டவரே
இந்தவரமெனக்கு யீந்திடுவீர்கர்த்தாவே
கொல்லவரமெனக்குக் கொடுத்தருளவேணுமையா
(என்று) பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
அந்தமகாமுனியும் அவர்மனதுதான்குளிர்ந்து
காளமகாமுனியுங் கடிதிமனகிழ்ந்து
சந்தோஷப்பட்டாரே சரீரங்கள்பூரித்தார்
மெத்தமகிழ்ந்தாரே வேந்தரந்தமாமுனியும்
மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்கிறேனான்
சித்தத்துக்கேற்றபடி செய்வேன்நீஅஞ்சாதே
ஐவரையுங்கொன்றுநான் அதம்பண்ணிப்போடுகிறேன்
பஞ்சசவரைக்கொன்று பாருலகையாளவைப்பேன்
ஐவர்தனக்காக ஆதிசிவன்வந்தாலும்
பஞ்சவரைக்காக்கப் பாரளந்தார்வந்தாலும்
நான்குமுகம்படைத்த நற்பிரமன்வந்தாலும்



வெற்றிமயிலேறும் வேலவர்தான்வந்தாலும்
தேவர்க்கதிபதியாம் தேவேந்திரன்வந்தாலும்
இவர்களைக்காப்போமென்று எமனவன்வந்தாலும்
எந்தவிதத்தாலும் இறக்கவகைபண்ணுகிறேன்
என்றுவரங்கொடுத்தார் எரிநாகங்கொண்டவற்கு
அப்போதிரியோதிரன் ஆனந்தமானானே
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே விஷநாகங்கொண்டவனும்
மனங்கள்மிகப்பூரித்து மாநாகன்போய்நடந்தான்
காளமகாமுனியுங் கடிகிவனத்தில்வந்தார்

காளமகாரிஷி ஐவரைக் கொல்லநினைத்தது.

அப்போதுமாமுனியும் ஆலோசனைகள்பண்ணி
வேதாளம்தான்பிறக்க வேள்விதனைவளர்க்க
அக்கினிக்குண்டம்வெட்டி அனலைவளர்த்தினனே
பாதாளக்குழியைவிட்டு பாவகனைமூட்டினனே
மந்திரத்தாலேயல்லோ வரவென்றார்வேதாளத்தை
ஆயன்பெருமாளும் அவ்வயணந்தானறிந்தார்
ஏழுலகமாளுகின்ற எம்பெருமாளென்னசொல்வார்
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
பங்கும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எந்தவிதத்திலேயும் இறக்கவகைபண்ணுகிறான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வரலாச்சு
செல்வத்திரவியங்கள் சிரழிந்துபோகுதே
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே
நம்பினபஞ்சவர்கள் ராசர்க்கள்மாளுகிறார்
நம்பினபேர்களைத்தான் நாமல்லோகாக்கவேணும்
கைமோசம்வந்ததென்று கரியமால்தானினைந்து

## எம்பெருமான் பஞ்சவரைக் காப்பதற்கு எமபுரம் போனது.

அப்போதுஎம்பெருமா னாயெழுந்திருந்து
வட்டமாங்கெருடனேறி வருகிறார்மாயனார்
காடுஞ்செடி தாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுஞ்சுனை தாண்டி அதிகனைந்தான் தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
வேங்கைபடர்ந்தவனம் வெண்கனைப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம்கொன்றைபூத்தவனம்
இளமானைப்போலே யிளைந்துவருங்காவேரி
வடமலைரங்கர் வனங்களெல்லாந்தான் தாண்டி
எமபுரந்தேடியே எம்பெருமானோடிவந்தார்
எமனுக்கெதிராக எம்பெருமான்வந்துநின்றார்
எமதர்மராஜனவன் எம்பெருமானைக்கண்டு
கரியமலைப்பார்த்து கடுகவெழுந்திருந்து
மாயன்பெருமானை வந்துநமஸ்கரித்தான்
எமபடாளோடி யெடுத்துவைத்தார்சிம்மாதனம்
இட்டதோராசனத்தில் எம்பெருமான்வீற்றிருந்தார்
அப்போதுஎம்பெருமான் அரிராமர்தானெழுந்து
சிம்மாதனமேறி ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
வேர்க்கவிருவிருக்க வேந்தரவர்வீற்றிருந்தார்
அப்போதுஎமனவன் ஆயனைப்பார்த்துரைப்பான்
எங்குவந்தீர்மாயவரே எனக்கரியச்சொல்லுமென்றார்
எதுவகையாக எம்பெருமானிங்குவந்தீர்
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றான்
மாயன்பெருமானும் வார்த்தைகளேதுசொல்வார்
உன்னுடையமைத்துனனல்லோ உருவையுள்ளதன்மருமே
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அந்தயமாகுகிறார்
இறந்துவிடநாளாச்சு இயலானபஞ்சவர்கள்
மாண்டுவிடநாளாச்சு மகராசனவர்கள்



செத்துவிடநாளாச்சு சீரானபஞ்சவர்கள்
பாவிகெடுத்தானே படுபாவிதிரியோதிரன்
நொடிக்குள்காளமாமுனியை நோக்கித்தபசுபண்ண
அந்தமகாமுனியும் வந்துஎதிரில்நின்றார்
கண்டுதிரியோதிரன் கடுகசரணம்பண்ணி
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன் நின்றானே
அப்போதுமாமுனியும் அறவேமனமகிழ்ந்து
காளமகாமுனியுங் கண்டுமனமகிழ்ந்து
என்னவரம்வேண்டும் எந்தனைக்கேளுமென்றான்
அப்போதியுயோதிரன் ஆணழகனேதுசொல்வான்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்வேணுமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்குபலத்தவரம்வேணுமென்றான்
உம்முடையகையாலே உத்தமரைக்கொல்லுமென்றான்
அந்தமுனிகேட்டு அப்படியேநல்லதென்று
வாக்குவரங்கொடுத்து வந்தானேயந்தமுனி
ஆழக்குழிபறித்து அக்கினியைமூட்டிவைத்தான்
வேதாளமுண்டுபண்ண மிக்கவனல்மூட்டிவைத்தான்
அக்கினிக்குழியிலே ஆங்காரவேதாளம்
பிறக்கும்படியாகப் பெருத்தவேள்விபண்ணுகிறான்
அதுபிறந்ததாமானால் ஐவர்பிழையார்கள்
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோகுதே
நம்பினபஞ்சவர்கள் ராசாக்கள்மாளுகிறார்
ஆகையாலும்மை அழைக்கவேவந்தேன்காண்
வேதாளம்பிறந்தாலேவேந்தரைக்கொன்றுவிடுமே
மாண்டுமடிவார்கள் மகராஜர்பஞ்சவர்கள்
செத்துமடிவாரே சீரானபஞ்சவர்கள்
என்றுரைத்தார்மாயன் எமனுடனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயருக்கேதுரைப்பான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்காலம்உள்ளமட்டும்
உண்மையேநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறார்

காக்கக்கடனுமக்குக் கரியமாலென்றுசொன்னர்
அப்போதுமாயவனர் ஆரவேமனமகிழ்ந்து
மாயவனர்தான்கேட்டு மனதுபெரிதுகந்து
கூடவருவீரோ கொப்பெனவேபோகவென்றார்
ஆயருரைகேட்டு அப்படியேவாரேனென்றார்

எம்பெருமாளும் எமதர்மராஜனும்
பஞ்சவரைக்காக்கவருதல்.

---

மாயவரும்எமனுமே வருகிறார்வனந்தனிலே
எமபுரத்தைவிட்டுமல்லோ இருவருமாய்வாரார்கள்
காடுசெடிதாண்டிக்கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவருமாய்வந்தார்கள்
காளமகாமுனிவருட கானகத்தில்வந்தார்கள்
எமன்கிடாமேலே எம்பெருமான்கெருடன்மேலே
அந்தவனத்திலே வந்தாரிருவர்களும்
வந்துஇறங்கினர் மகாமுனிவர்தன்வனத்தில்

எம்பெருமாள் தடாகம்உண்டுபண்ணல்.

---

ஆயர்பெருமாளும் அங்கெனவேயேதுசெய்தார்
அந்தரப்பொய்கையொன்று ஆயரும்உண்டுபண்ணு
மாயமாய்ப்பொய்கை யொன்று மாயவருமுண்டுபண்
அகலம்நிகளமாய் ஆறுயோசனைகாதம்
பத்துயோசனைதூரம் பாரளந்தாருண்டுபண்ணர்
தாமரைப்பொய்கைதனை சாமியவருண்டுபண்ணர்
அலர்தாமரைப்பொய்கை அங்கெனவேயுண்டுபண்
அல்லியுடன்தாமரையும் ஆம்பலுமுண்டாச்சு
அழகானபொய்கையிலே அதிசயமென்னவென்று
அல்லியுங்கொட்டியுமே அதில்நெருங்கவுண்டாச்சு
அந்தரத்தாமரை அக்குளத்திலுண்டாச்சு
நாணலுங்கோரையுமே நடுவேயதிலுண்டாச்சு



அக்குளத்துக்கரைமேலே அழகானபூமரங்கள்
மல்லிகைமுல்லையுமே மாதளையுமுண்டாச்சு
நல்லதொருபூமலரும் நற்றும்பையுண்டாச்சு
கொன்றைகுருக்கத்தி கோங்குமுல்லையுண்டாச்சு
ஆற்றலரிமந்தாரை அழகானசண்பகங்கள்
ஆலஞ்செடிமுளைத்து அரசுமேஉண்டாச்சு
வேம்புமரசுமங்கே வேணதுமுண்டாச்சு
பாளைமணம்வீசும் பன்னீரும்பூக்கும்
வண்ணவண்ணப்பூமரங்கள் மாவிருட்சமுண்டாச்சு
கமுகுகுலைசாரியும்கஸ்தூரிமணம்வீசும்
வேரிற்பலாப்பழங்கள் வெடித்துவிழுந்திருக்கும்
மாம்பழமெங்கெங்கும்வனத்திற்பழுத்திருக்கும்
பார்த்தயிடங்களெல்லாம் பழங்கள்பரிமளிக்கும்
கண்டஇடங்களெல்லாங் கனிகள்மணம்வீசும்
இப்படியாயுண்டுபண்ணார் எம்பெருமாள்மாயவரும்
காலாகாலங்களிலே கட்டினகுளம்போலே
ஆயன்பெருமாளதிசயமாயுண்டுபண்ணார்

## எமனும பெருமாளும் வேறுவடிவு கொண்டது.

எமதர்மராஜாவரென்னவடிவெடுத்தார்
எமபுரத்தையாளுகிற எமன்குயிலானார்
எம்பெருமாள்மாயவனாரென்னவடிவானார்
புள்ளிமான்குட்டியைப்போல்பொன்மான்வடிவெடுத்தார்
அந்தநல்லபொன்மானி னதிசயத்தைச்சொல்லுகிறேன்
தங்கமுருக்கியே தரையிற்கவிழ்ந்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டாற்போல்
மேகத்திலேயெழும்பும் மின்னலதுபோலே
தூரத்திலேயெழும்பும் சோதியதுபோலே
எட்டுநாள்சென்றகுட்டியேந்துங்குழந்தையைப்போல்
மான்குட்டிபோலாக மாயவனார்வடிவெடுத்தார்
பஞ்சவர்கள்தானிருக்கும் பர்னசாலைதேடிவாரார்

மூன்றடிக்குப்பர்னசாலே முன்னுலேயோடிவந்து
ஏழடிக்குப்பர்னசாலை எதிராகவந்து நின்ருர்
நடந்துவிளையாடி சாலுத்திமுன்னேவந்து
துள்ளிக்குதித்துதங்கே துரோபதையாள்முன்னுலே

தருமரைத் துரோபதை மான்பிடித்துத்
தரச்சொன்னது

கண்டாளேவடிபாஞ்சாலி கானகத்துமானதுவை
மானழகைப்பார்த்தாளே மயிலனையாள் துரோபதையும்
கண்டுமனமகிழ்ந்தாள் கட்டமுகி துரோபதையும்
பார்த்துமனமுங்குளிர்ந்தாள் பஞ்சவர்கள்தேவியவள்
மான்பிடிக்கவேணுமென்று மனதில் நினைத்தோமே
ஆர்பிடித்துத்தருவார்க ளழகான இம்மானை [ன்
தருமரைக்கேட்போமென்று தானெழுந்துவோடிவந்தா
தருமரருகேவந்துசாஷ்டாங்கதெண்டனிட்டாள்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டாள்
வணங்கிநமஸ்கரித்தாள் மாது துரோபதையும்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வணங்குமுடியானே மங்கை துரோபதையே
எதுக்குப்பெண்ணே நீ என்னைவந்துதெண்டனிட்டாய்
பின்னையுந்தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
தெண்டனிட்டகாரியத்தைத் தெரியவுரையுமென்ருர்
வந்துபணிந்ததொரு வயணத்தைச்சொல்லுமென்ருர்
என்றுமவர்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
ஏதோவொருமான்வந்தெதிரிலே நிற்கிறதே
தங்கமுருக்கியேதிரைமிற்கவிழ்த்ததுபோல்
மேகத்துமின்னலைப்போல் தேகமதுதோணுகுது
தாரத்துச்சேரிலைப்போல் தோணுதுளந்தனுக்கு
உச்சிதமாகவே உருக்குதுளந்தனுக்கு
அதிசயமாய்த்தோணுகுது அந்தமானெந்தனுக்கு



மானெனக்குவேணுமையா வனத்தில்விளையாட
விளையாடவெந்தனுக்கு வேணும்பிடித்துத்தாரும் [ன்
மான்பிடித்துத்தருவீரென்றுமன்னரேதெண்டனிட்டே
எந்தவிதத்தாலும் எனக்காகப்பிடியுமென்ருள்
பிடியும்பிடியுமென்றுபின்னொருக்கால்தெண்டனிட்டாள்
மான்பிடித்துதாருமெனமற்றொருகால்தெண்டனிட்டாள்
அப்போதுதருமலிங்கம் ஆனமுகர்தான்கேட்டு
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
ஆர்வளர்த்தமானுயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானுயிது யேதுமறியேனே
இந்தவனத்திலிருக்கும்பெரியவர்கள்
தவத்திற்பெரியவர்கள் சன்னியாசியானவர்கள்
வரத்திற்பெரியவர்கள் மகாரிஷியானவர்கள்
யோகத்திற்ருனிருக்கும் யோக்கியமுள்ளவர்கள்
ஆர்வளர்த்தமானுயிது அறியேனேயாரணங்கே
எவர்வளர்த்தமானுயிது வதுமறியேனே
மனிதர்வளர்த்திருல் வந்ததுநம்மருகே
அல்லாதேயாமாகில் அருகில்வந்துநிற்காது
வளர்த்தமானுகையிருல் வந்துவிளையாடுகுது
மானைப்பிடித்தாலே வகைமோசம்வந்துவிடும்
பெண்புத்திகேட்டுமோசம் போனவர்கள்மெத்தவுண்டு
பெண்ணுலேகெட்டவர்கள் பூமியிலேமெத்தவுண்டு
ஆணுலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
ஸ்ரீராமர்பட்டதொரு சேதிபோலாகுமிது
அரிராமர்பட்டதொரு அலைச்சல்போலாகுமிது
ஆகையாற்பெண்மயிலே அம்மானைபிடியென்ருய்
அதுகேட்டுதுரோபதையாள் ஆரணங்கேதுசொல்வாள்
அந்தக்கதையெனக்கு ஆண்டவரேசொல்லுமென்ருள்
மாயனுர்பட்டதொரு வரலாற்றைச்சொல்லுமென்ருள்
எம்பெருமான்பட்டதொரு இடுக்கங்கள்சொல்லுமையா

## தருமர் துரோபதைக்கு மான்பிடிக்கலாகாதென்று ஸ்ரீராமர் கதையைச்சொன்னது.

அப்போது தர்மலிங்கம் ஆணழகரே துசொல்வார்
ஆனாற்கேள்பெண்ணே அவர்கதையைச்சொல்லுகிறேன்
ராமரும்லக்ஷ்மணரும் நற்சீதைதன்னுடனே
கைகேசிசொற்படிக்கு கானகத்தேபோயிருந்தார்
தென்னிலங்கைராவணனும் சீதையழகுகண்டான்
சூர்ப்பநகைசொல்லாலே துள்ளிப்பதைபதைத்து
இலங்கையைவிட்டுமவன் வகிநடந்தானே
சீதையரைச்சிறையெடுக்கதென்னிலங்கைவிட்டுவந்தான்
கண்டானேமூவர்களைக் கானகத்தில்ராவணனும்
ஜானகியைக்கொண்டுபோகச்சமையமில்லையென்றவனும்
உற்றுநினைத்தானே ஒருகோடிபுத்திகளை
இருந்துநினைத்தானே பெண்ணைமுற்றசிந்தையிலே
ஆலோசனைபிரிந்து அந்தப்படுபாவி
மாரீசனையழைத்து மானுகச்செய்துவிட்டு
போய்நில்லும்சீதையிடம் பொன்மானேஎன்றுரைக்க[ம்
பொன்மானதுகேட்டுப்போகமாட்டேனென்றுசொல்லு
மாட்டேனென்றுசொன்னசொல்லைமாபாவிதான்கேட்டு
அவ்வளவிலம்மானை அடித்தான்பிரம்பாலே
அடிபட்டுஓடிவந்து அந்தவனந்தனிலே
மானவனுப்பிவைத்தான் மாரீசப்பொன்மானை
சீதையிருக்குமிடந் தேடியேஓடிவந்து
மயிலனையாள்முன்னேவந்து மானும்விளையாடும்
கண்டாளேசீதையரும் கானகத்துமானதுவை
ஸ்ரீராமர்முன்னேவந்துதேவியருமேதுசொல்வாள்
மானழகைக்கண்டேனதைத்தான்பிடித்துதாருமென்றாள்
மான்பிடித்துதாருமென மலரடியைத்தெண்டனிட
ஸ்ரீராமர்தான்கேட்டுச் சிந்தைமனங்கலங்கி
மான்வந்தமாயமெல்லாம் மாயவனார்தாமறிந்து



மானல்லபெண்ணேயிது மாயமானென்றுசொன்னார்
அல்லவென்றுகேளாமல் அனேகந்துயாமுற்றாள்
துயாமுற்றாளென்றுசொல்லி சுவாமிமனதிலெண்ணி
ராமரும்லக்ஷ்மணரை நலமாகத்தானழைத்து
மான்பிடித்துநான்வருவேன் வாரமட்டுந்தம்பியரே
சீதையருகாகத் திரமாயிருப்பாயென
இளையபெருமாளும் இவ்வார்த்தைதான்கேட்டு
அப்படியேகாத்திடுவேன் அண்ணாவேபோமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமர்போகவுற்றார்
அம்புவில்லுங்கைபிடித்து அவ்வனத்தினூடாக
மானைத்துரத்தியே மாயவனார்போனபின்பு
தென்னிலங்கைராவணனும்உன்னலுடன்வேகமதாய்
பத்துத்தலையொளித்து பத்திரண்டுகைமறந்து
நல்லவொளிமறைத்து ராவணன்பேர்மறைத்து
சங்கமனைபோலே சண்டாளன்வாரானே
பண்டாரம்போலேயல்லோ படுபாவிவாரானே
வனமாய்வனந்தாண்டி வந்தானேபர்ணசாலை
இருவரிருந்தஜாடை யிவனறிந்தானப்பொழுது
மானை நினைத்தானே மாபாவிசண்டாளன்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொரு மாயவனாரேதுசெய்தார்
அந்தமான்தன்கையிலே அகப்படாத்தன்மையினால்
கையினால்வில்வளைத்துக் கணைகளைத்தான்தொடுத்தார்
அம்புதனைத்தொடுத்து அம்மானைசெய்தாரே
ராட்சதமான்விழுந்து லட்சுமணாவென்றலற
அந்தமொழிகேட்டு அழகானசீதையரும்
மான்கையிலுங்களண்ண மடிந்தாரெனவுரைத்தாள்
இளையபெருமாளும் எழுந்துநடந்தாரே
ராமரைத்தேடியே லட்சுமணர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் சீதையருகில்வந்து [ள்
பிச்சையென்றுகேட்கையிலே அச்சமில்லாதள்ளிவந்தா
கூசாமல்ராவணனுங்கொண்டுசென்றான்தென்னிலங்கை

சீதைசிறைபோனபின்பு இருமாலவர்பார்த்து
நல்லதென்றுசொல்லியல்லோ நடந்தாரிருவருமாய்
சவரியைக்கண்டுமல்லோ சந்தோஷம்பன்னாரே
அனுமாரைக்கண்டுமே அவர்களுறவாகி
அனுமாருறவாலே அங்குதனுஞ்சுக்ரீபனும்
மெத்தஉறவானார் வேந்தரிருவர்களும்
வாலியைக்கொன்றபின்பு வானரவீரருக்குள்
சுக்ரீபனுக்குப்பட்டஞ் சூட்டிக்கடலதனில்
வாராவதிகட்டியல்லோ வந்தார்கள்தென்னிலங்கை
ராவணன்கும்பகர்னன் ராட்சதஇந்த்ரசித்தன்
மூலபலச்சேனை முடிந்ததாராபர்கையால்
சேனைகளைக்கொன்றல்லவோ சீதைசிறைமீட்டி
புட்பரதமேறி புண்ணியர்கள்வந்தாரே
அயோத்திபுரியதனில் அரிராமர்வந்துவிட்டார்
சீதாசமேதராக சிம்மாதனமேறி
தம்பியார்மூவர்களுந் தானுங்கொலுவிருந்தார்
நீதிதவறாமல் நெறிப்படியேஆண்டிருந்தார்
ஐம்பத்தாறுதேசமதை ஆண்டாரேஒருகுடைகீழ்
அந்தக்கதையாரும் ஆரணங்கே நீர்கேளும்
சீதையம்மாள்பட்டதொரு சேதியிதுவாகும்
மானைப்பிடிக்கவே மாட்டேனெனவுரைத்தார்

மானைப்பிடித்துத் தாவில்லையென்று துரோபதை
யம்மன் பிணங்கினது.

தக்கபுகழுடைய தருமரிவையுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடைதுரோபதையும்
ஏதேதுசொன்னாலும் இரங்காமனதுடையாள்
வரும்விதியறியாளே மாதுகருங்குழலும்
எந்தவிதத்தாலும் இந்தமான்வேணுமென்றாள்
மானெனக்குவேணுமென்று மாதுபிணங்கிநின்றாள்
அறவேமனஞ்சலித்து அங்கேதுயரமிட்டாள்



தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சாயாம்பிமன்னரவர் தானுமங்கேயுரைப்பார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே வில்வேந்தேஇப்போது
மான்குட்டிவேணுமென்று மாதுபிணங்கினதால்
குட்டிமானைப்பிடித்துக் கொப்பெனவேவாருமையா
காட்டுமானைப்பிடித்துக் கடுகெனவேவாருமையா
ஓடிப்பிடித்துநீ ஒருநொடியில்வாருமென்றார்

வீமன்மான்பிடிக்கப்போகிறது.

அண்ணருரைகேட்டு ஆங்காரவீமனவன்
இதுபோதுமென்றுசொல்லி எழுந்தானேவீமனவன்
சல்லடந்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தர்மரைப்பூச்சுங்குவிட்டு
ஆயுதங்கைப்பிடித்து ஆணழகன்போகலுற்றான்
மானைத்தொடர்ந்தானே மதவீமராசாவும்
துள்ளிப்பதைபதைத்துச் சுருக்காய்வருவாராம்
வீமனைக்கண்டுமல்லோ மெள்ளநடப்பாராம்
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
மானைப்பிடிக்கமாயனார்பின்தொடர்ந்தான்
எட்டிப்பிடிக்க எதிரில்வருவாளாம்
பதுங்கிவருவாளாம் பாரமதவீமன்
ஐம்பதிங்காதவழி அநேகதூரந்தானடந்தார்
கண்ணுக்குத்தெரியாமல் கடுகவேயேகிவிட்டார்
தேடித்திரிந்தானே சீரானகானகத்தில்
எண்ணுதியென்னுகிறான் இயல்பான்வீமனுமே
அண்ணல்தருமருக்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
என்னவென்றுசொல்வேனோ விந்தவிதிவசத்தை
எத்தனைதூரம்வந்தேன் இம்மானைக்காணேனே
போனவிடமறியேன் பேரிருக்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்

மாயமான்போனதொரு வகையொன்றும்நானறியேன்
என்றுமனங்கலங்கி யென்னுகிருன்கோடிசிந்தை
நின்றுவிசாரமிட்டு நெடுமூச்செறிந்தானே
விடுவிடுநேரமங்கே வெயிலானவேளையிலே
நல்லஉருமமது நாவுவறளுகுது
தண்ணீருந்தாகவிடாய் தனிமையாக்கொள்ளுகுது
நாவுவறட்டுகுது நல்லசலங்காணுமல்
குடலைப்பிறட்டுகுது குடிக்கசலங்கிட்டாமல்
என்னசெய்யப்போரேனென்று வங்கிநடந்தானே

எம்பெருமாள் வீமராசனை விஷத் தண்ணீர்
குடிப்பித்துக் கொல்லுகிறது.

இதுதான்சமயமென எண்ணித்திருமாலும்
மாலுயிருந்தவரும் மயிலாய்வடிவெடுத்தார்
மயிலாய்வடிவெடுத்து மரத்தின்மேலேறினுரே
எமன்குயிலாகி யிருந்தானேமாயரண்டை
எமன்குயிலானுர் எம்பெருமாள்மயிலானுர்
மயிலுங்குயிலுமே வனந்தனிலேகூவுகையில்
அந்தக்குறல்கேட்டான் அழகானவீமனுமே
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தயிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி எகிநடந்தானே
தேடியேவந்தானே சீரானபொய்கையண்டை
தாமரைப்பொய்கை தடாகத்தைக்கண்டானே
தாகவிடாய்தீர்ந்து தமையரண்டைபோவோமென்று
தண்ணீர்தடாகத்திலே இறங்கினுன்தார்வேந்தன்
அந்தரமாய்மாயவரும் அங்கொருவரேதுசொல்வார்
ஆரடாதம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
இந்தக்குளத்திலே இறங்கிசலமுண்ணுதே



இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அந்தரமாய்ப்பேசுறது ஆரென்றுந்தெரியவில்லை
அந்தரதேவதையோ ஆகாசதுர்க்கைகளோ
மந்திரதேவதையோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்பூச்சிகளோ
ஆரென்றுநானறியேன் அறியவுரையுங்கள்
வெற்றிமதயானை வீமனவன்கேட்கவுமே
அந்தச்சமயத்தில் ஆயாவரேதுசொல்வார்
ஆரானாலுந்தனுக்கென் அப்புறத்தேபோவென்றுர்
அப்போதுவீமனவன் அவ்வார்த்தைக்கேதுசொல்வான்
தாகவிடாய்கொண்டு தண்ணீர்குடிக்கவந்தால்
தண்ணீர்குடியாதேயென்றுமேசாற்றுவரோ
தடாகமிருக்கையிலே தண்ணீர்களைநீராமல்
குடியாமற்போவேனே கொற்றவரேசொல்லுமென
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியிற்பயிர்களுக்குள்
வாடாதபயிருமெது வருத்தமானபாரமெது
அதிசயமானவார்த்தை அறிந்தாலுரையுமென்றுர்
அப்போதுவீமனவன் அவ்வயணமறியாமல்
தெரியாமல்வீமனவன் தீர்த்தம்பொசித்துவிட்டான்
தாகக்களையாலே தண்ணீர்குடித்துவிட்டான்
காளையந்தவீமனுக்கு கண்ணைச்சொருகுதே
தலையைச்சுழற்றுதே தாமமுடியானுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீமனுக்கு
மரத்தடியிற்பள்ளிகொண்டான் மாலைமுடியானும்
மறந்துபடுத்தானே மதகரிவீமனவன்
தன்னைமறந்துமல்லோ தார்வேந்தன்பள்ளிகொண்டான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றுர்
எமனைத்தானழைத்து யிவனுயிரைவாங்குமென்றுர்
அப்போதுஎமனவன் அவசரமாயோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினனே

சூலத்தால்குத்தியே துடிக்கவுயிர்வாங்கினனே
பாசத்தால்கட்டியே பதைக்கவுயிர்வாங்கினனே
குளத்தங்கரையோரம் குளிர்ந்த நிழல்தனிலே
பொய்கைக்கரையோரம் போர்வீமன்மாண்டுவிட்டான்
மாண்டுபடுத்தானே மதவீமன் குளக்கரையில்
செத்துபடுத்தானே சீரான்வீமனுமே
இப்படியாகஇவனிருக்கும்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொருவீமனைக்காணோமென்று

## தருமராஜர்புலம்புகிறது.

தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சாயாம்புமன்னர் தருமரவரேதுசொல்வார்
மான்பிடிக்கப்போனதொரு மன்னவனைக்காணேனே
என்னேரமாச்சுதே இன்னம்வரக்காணேனே
மானைப்பிடிக்கையிலே வளர்ந்தவர்கள்கண்டாரோ
ஆர்கண்டெதிர்த்தாரோ அமர்துசெய்கிறாரோ
எவர்கொன்றுபோட்டாரோ ஏதுமறியேனே
மண்ணாக்கிக்கல்லாக்கி மரமாக்கிவிட்டாரோ
கல்லாக்கிமுள்ளாக்கிக் கானகத்திற்போட்டாரோ
செத்துமடிந்தானோ சிவன்பாதம்சேர்ந்தானோ
மாண்டுமடிந்தானோ வைகுந்தம்சேர்ந்தானோ
காணவும்போரேனோ கட்டழகன்தம்பியரை
பார்க்கவும்போரேனோ பராமதகரியை
காணாமல்தம்பியரைக் கலங்குதேதேகமெல்லாம்
பாராமல்தம்பியரைப் பதைக்குதேயென்மனது
காளையருச்சுனரே கடிகியேபோய்வாரும்
பார்த்துவா அருச்சுனரே பாரதவீமனை நீ
தேடியழைத்து நீ சீக்கிரத்தில்வாருமென்றார்
காளையந்தவீமனை நீ கண்டழைத்துவாருமென்றார்
என்றுமவர்சொல்லி யிருந்தாரொருவிதமாய்



## அருச்சுனமகாராஜன் தருமர்சொல்லைக்கேட்டு வீமனைத்தேடிப்போனது.

ஆணழகுமன்னன் அருச்சுனராசதுரை
தருமருரைக்கேட்டுத் தானெழுந்துதார்விஜயன்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவருந்திகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திபூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்குநெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
பில்லைமுகதாடு பிருவெடுத்தவொட்டியாணம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
பாங்குசொருகினனேபார்த்தனிடப்புறத்தே
கத்திசொருகினனே காளைவலப்புறத்தே
சிங்காணிவில்லெடுத்து சிறுநாணிதாண்பூட்டி
அண்ணருடபாதம் அடிவணங்கித்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்றான் போர்விஜயக்கோமானும்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
காளையருச்சுனரே கட்டழகா நீகேளும்
வனத்தினிலுட்புகுந்து மன்னவனை நீதேடி
கண்டழைத்துவீமனை நீ கடுகவேவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லிபொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தாரே விஜயபெருமானும்
வாராமே அருச்சுனனும் வனமாய்வனத்தாண்டி
கானகத்திலுட்புகுந்து காளையரைத்தேடுகிறான்
எங்கெங்குந்தேடினான் இனியவிடமாராய்ந்தார்
அந்தவனந்தனிலே அண்ணரைக்காணாமல்
மற்றுமொருவனத்தில் மன்னவனைத்தேடிவாரான்
இன்னமொருவனத்தில் இளவிஜயன்தேடுகிறான்

அண்ணலைத்தேடி யனேகதூரம்வாரானே
காட்டிலேதேடியல்லோ கடுகியேவாரானே
ஆணழகுமன்னன் அருச்சுனராசனுக்கு
தண்ணீர்க்கவனங்கள் தாகவிடாய்கொள்ளுகுது
நாவுவறட்டுகுது நல்விஜயன் அர்ச்சுனற்கு
மெத்தக்களைத்தானே வேர்வைகள்சிந்திடவே
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
இந்தவனந்தனிலே எங்குஞ்ஜலங்கிட்டவில்லை
தண்ணீர்க்களையாலே தாகவிடாயானதினால்
தண்ணீர்தண்ணீரென்றுதவித்துப்புலம்புகிறான்
இப்படியாகஇவனிருக்கும் வேளையிலே

---

மாயவனார் அருச்சுனராசனைவிஷநீர்க்குடிப்பித்துக் கொல்லுகிறது.

---

எம்பெருமாள்மாயவரும் ஏதுசெய்தாரந்நேரம்
மயிலுங்குயிலுமாக வனத்திலேகூவுகிறார்
அருச்சுனன்காதிற்கேட்க அவ்வனத்திற்கூவுகிறார்
அந்தக்குரலோசை அருச்சுனனுந்தான்கேட்டு
கூவுங்குரல்கேட்டான் கோபாலர்மைத்துனனும்
அவ்வோசைதானகேட்டு அருச்சுனனுமேசொல்வான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி ஏகிநடக்கலுற்றான்
அந்தவிடம்போகவென்று ஆராய்ந்துதேடிவந்தான்
குயிலிருக்குமிடந்தனிலே கொற்றவனும்வந்தானே
மயிலிருக்குமிடந்தனிலே மன்னவனும்வந்துநின்று
உற்றுற்றுப்பார்த்தானே ஒளிபிறந்தகண்ணாலே
பார்த்தவிடங்களெல்லாம் பச்சென்றுதானிருக்கும்
கண்டவிடங்களெல்லாம் கமகமென்றுமணக்கும்
தாமரைப்பொய்கையுஞ் சாலையுஞ்சோலைகளும்
ஆலவிருக்ஷத்தின்கீழ் அண்ணர்பள்ளிகொண்டதுவும்



வெற்றிமதயானை வீமனைக்கண்டானே
கண்டுமனமகிழ்ந்தான் காளையருச்சுனனும்
பார்த்துமனமகிழ்ந்தான் பார்த்திபனருச்சுனனும்
உற்றுற்றுப்பார்த்தானே உள்ளங்குளிர்ந்தானே
நின்றானரைநாழி நினைத்தானேகோடிபுத்தி
அண்ணர்தருமருமே அங்கேமனஞ்சலித்து
வீமனைக்காணாதே மெத்தமனஞ்சலித்து
தம்பியைக்காணாமல் தவித்துப்புலம்புகையில்
அங்கேதருமராவர் ஆயாசப்பட்டிருக்க
இங்கேமதவீமன் இப்படித்தூங்குறானே
மானும்பிடியாமல் மரத்தடியில்தூங்குறானே
தண்ணீர்குடித்துமல்லோ தாகமுந்தீர்ந்தபின்பு
அண்ணரைத்தானெழுப்பி அழைத்துநாம்போவோமென
தாமரைப்பொய்கையிலே இறங்கினான்தார்வேந்தன்
அப்போதுமாயவரும் அருச்சுனரைத்தான்பார்த்து
ஆயர்பெருமாளும் அந்தரத்திலேதுசொல்வார்
ஆரடாவென்குளத்தில் அள்ளிஜலமுண்கிறவன்
எவனடாஎன்குளத்திலெடுத்துஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்காதேஎன்குளத்தில்
அள்ளிசலமுண்ண அதிசயஞ்சொல்லுமென்றார்
தாகந்தணியவென்றால் சந்தோஷஞ்சொல்லுமெனறார்
அப்போதருச்சுனனும் அவ்வார்த்தைக்கேதுரைப்பான்
என்ன அதிசயமோ எந்தனுக்குச்சொல்லுமென்றான்
எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரர்ச்சுனற்கு
வட்டப்பயிருமேது வையகத்திற்பாரமேது
இவ்வார்த்தைசொன்னா லிறங்கிசலமுண்ணுமென்றார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசதுரை
அவ்வார்த்தைதான்கேட்டருச்சுனனுமேதுசொல்வான்
ஆர்காணும்பேசுறது அந்தரத்திலேயிருந்து
எவர்காணும்பேசுறது எங்கேயோதெரியவில்லை

வேண்டிவிடாய்த்துநான் வேர்வைமிகவொழுக
தண்ணீர்விடாயாகித் தாகத்துக்குண்ணவந்தால்
வேண்டாமெனமறித்துந் தீண்டாதெனவுரைத்தீர்
எதிரிட்டுவந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
கண்டித்துப்போட்டிடுவேன் கண்ணில்தெரியடா நீ
எதிரிலேநிற்கவேணும் என்சண்டைபார்க்கவேணும்
சரியாகநின்றலவோ சண்டைபண்ணிப்பார்க்கவேணும்
என்றதுபேசியே இறங்கிசலங்குடித்தான்
தாகவிடாய்தீரத் தண்ணீர்குடித்தானே
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுருது
அப்போதுமயக்கமல்லோ அதிகமயக்கமாகும்
கஞ்சாமயக்கம் கனமயக்கமாகுது
அபினிமயக்கமல்லோ அவனைச்சுழற்றுகுது
தள்ளாடிவாரானே தாமமுடியானும்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
எண்ணுதுமெண்ணுகிறுன் இந்திரன்குமாரனுமே
நினையாதுநினைக்கிறுன் நீலவர்ணன்மைத்துனரும்
ஆரோதெரியாது அந்தரத்திற்பேசினார்கள்
எவரோதெரியாது எந்தனுடன்சொன்னாரே
தண்ணீர்குடியாதேயென்று சமர்த்துகள்பேசினாரே
தீர்த்தங்குடியாதேயென்று வார்த்தைபலசொன்னாரே
அவ்வார்த்தைதள்ளினனள்ளியேதீர்த்தமுண்டேன்[என்
சொன்னசொல்தனைமறந்துச்சுருக்காகத்தீர்த்தமுண்டே
உண்டபொழுதே உடம்பைப்பிரட்டுதையோ
தலையைச்சுழற்றுதையோ தருமருக்காருரைப்பார்
அண்ணற்குத்தம்பியர்க்கும் ஆரறிங்குதுரோயதைக்கும்
இந்தவிசேஷமல்லோ எவர்கள்போய்ச்சொல்வார்கள்
செத்தவிசேஷமல்லோ சேதிபோய்ச்சொல்வாரார்
மாண்டவிசேஷமது மறுவார்த்தைசொல்வாரார்
என்றுமவன்சொல்லி ஏகிவழிநடந்தான்
தள்ளாடித்தத்தளித்து தானேநடந்துவந்து
அண்ணாருகாக அருச்சுனன்வந்துநின்றான்



வீமாருகாக விஜயனும்வந்துநின்றான்
கண்ணுறக்கம்போலவே கடுகிவந்துபடுத்தானே
எம்பெருமான்மாயவரும் இதுதான்சமயமென்று
காலனையெச்சரித்தார் கரியமல்பொட்டெனவே [ர்
அருச்சுனன்தன்னுயிரை அதிவிரைவாய்போகுமென்று
அப்போதுஎமனவர் அதிவேகமாகவந்து
சூலங்கொண்டுகுத்தியேபாசங்கொண்டுகட்டினனே
பதைக்கஉயிர்மாய்த்தான் பார்த்திபனருச்சுனனை
இப்படியாக இவன்மாண்டிருக்கையிலே
தக்கபுகழுடைய தருமருடசேதிசொல்வோம்

---

வீமனைத்தேடப்போனஅருச்சுனனும்வீமனும் இன்னம் வந்துசேரவில்லையென்று தருமர்புலம்புகிறது.

---

அருச்சுனன்போனபின்பு அழகானதருமரவர்
மனதுகலங்கியே மன்னவருமேதுசொல்வார்
கானகத்திற்குபோனவர்கள் கடுகவந்துசேரவில்லை
என்னேரமாச்சுதே மின்னம்பரக்காணேன்
நாமத்தழகா நகுலா நீவாருமென்றார்
தக்கபுகழுடைய தருமரழைக்கவேதான்
நாமமுடியான் நகுலனுமோடிவந்து
அண்ணனெதிரேவந்து அடிவணங்கித்தெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கட்டழகனேதுசொல்வான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அழைத்தகாரியத்தை நீ பண்ணவேசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகர்தருமலிங்கம்
கண்ணீர்ததும்பிடவே கட்டழகரேதுசொல்வார்
வீமனைத்தேடியே வில்விஜயன்போனானே
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணேன்
தேடியேபோனதொரு தேர்விஜயனைக்காணேன்
போனவிடமறியேன் போய்ப்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்

ஆரோடேசண்டை அமர்துசெய்கிருரோ
எவரோடேசண்டை எதிர்த்துப்போர்செய்கிருரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைசெய்தாரோ
கண்டுவதைத்தாரோ கண்டதுண்டமாக்கிஞரோ
செத்ததுவும்இருப்பதுவும் சேதிதெரியவில்லை
மாண்டதுவும்பிழைத்ததுவும்வார்த்தைதெரியவில்லை
சந்தனமிருபுயத்தை சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமமிருபுயத்தை குலையவெட்டிப்போட்டாரோ
மலையேபருவதமே வான்மலையேகுன்றமே
காணவும்போரேனே கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போரேனே பாவியென்கண்ணுலே
இன்னமொருவேளை யினிக்காணப்போரேனே
இருவரையுந்தேடியே இட்டுவருவாயோ
போரீரோதம்பியரே புத்தியுள்ளகண்மணியே
அண்ணருரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
அஞ்சிப்புலம்பாதே ஆயாசமாகாதே.
ஆரோடேசண்டை அமரதுசெய்தாரோ
எவரோடேசண்டை எதிர்த்துப்போராடிஞலும்
சண்டையதுகெலித்துச் சடுதியிற்கொண்டுவாரேன்
அமரதுநான்கெலித்து அவர்களைக்கொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இப்போதேஆராய்ந்து
ஓடியழைத்து ஒருநொடியில்வாரேனென்ருன்
தேடியழைத்து சீக்கிரத்தில்வாரேனென்ருன்

---

நகுலன் தருமராசர்சொற்படிக்கு வீமனையும்
அருச்சுனனையும் தேடிப்போனது.

---

கடுகவெழுந்தானே கட்டழகன்சீர்நகுலன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தாக்கிவைக்குங்கால்களுக்குத் தக்கிப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமேல்லே தட்டிவரிந்துகட்டி



தட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டு
வாங்கெடுத்துச்சொருகிஞனே மன்னனிடப்புறத்தே
கத்திசொருகிஞனே கானைவலப்புறத்தே
ஆயுதத்தைத்தானெடுத்து அண்ணருக்குத்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்ப் பேர்மன்னன்கைதொழுதான்
தக்கபுகழுடைய தருமர்மனமகிழ்ந்து
வாழ்த்திபெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
நாமமுடியோனே நகுலாவென்கண்மணியே
போனவனந்தேடி பொருமையுடன் நீபார்த்து
சென்றவனந்தேடி சீக்கிரமாயாராய்ந்து
காளையிருவரையுங் கண்டழைத்துவாருமென்ருர்
வீமனருச்சுனனை விரைவிலழைத்துவாரும்
போய்வாருமென்னப் பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்நகுலனுமே
வாரானேசீர்நகுலன் வட்க்கெழுந்தசூரியன்போல்
ஆயுதத்தைக்கைபிடித்து அண்ணர்களைத்தேடிவாரான்
தேடியேவாரானே சீரானகானகத்தில்
ஆரணியமெங்குந்தேடி அண்ணர்களைக்கூவிஞன்
அங்கேயுங்காணுமல் அப்பாலேபோகலுற்ருன்
மற்ருேர்வனந்தனிலே மன்னர்களைத்தேடிஞன்
அங்கேயுங்காணவில்லை அழகானமன்னர்களை
நாமமுடியான் நகுலன்மனங்கலங்கி
சித்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
அழுதுபுலம்பிஞனே அண்ணர்களைக்காணுமல்
அப்போநகுலனுக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயாகுது
நாவுவறட்டுது நகுலமகாராசனுக்கு
அண்ணரைத்தேடியே அநேகதூரம்வந்தானே
அண்ணரைக்காணுமே அதிகதாகமுண்டாச்சே
என்னசெய்யப்போறேனென் றுஏங்கிமனந்தளர்ந்து
என்றுவிசாரமிட்டே இருக்கின்றவேளையிலே

## எம்பெருமாள் நகுலராசனைவிஷநீர்குடிப்பித்துக் கொல்லுகிறது.

அப்போதுமாயவரும் அங்கனவேயேதுசொல்வார்
நாமமுடியான் நகுலனைக்கொல்லவென்று
எம்பெருமாள்மாயவரும் எமனையுச்சரித்தார்
எமனும்ராமனுடன் இருவருமொன்றாகி
மயிலுங்குயிலுமங்கே வனத்திலேகூவுகுது
நாமமுடியான் நகுலனைவன்பார்த்து
அந்தக்குரல்கேட்டு ஆலோசனைபண்ணுகிறான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமனங்குளிர்ந்து ஏகிநடந்தானே
அண்ணரிருவர்களுமங்கேபடுத்திருந்தார்
கண்டுமகிழ்ந்தானே கட்டழகன்சீர்நகுலன்
ஆனந்தமானானே அண்ணர்களைக்கண்டவுடன
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
அண்ணர் தருமராயர் ஆயாசப்பட்டிருக்க
ஆரணங்குதுரோபதையு மங்கேபுலம்பிநிற்க
என்னமனதுகொண்டு இங்கேபடுத்தார்கள்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
குளத்திலிறங்கினனே கொப்பெனவேநகுலனவன்
மாயர்பெருமாளும் மலைராமர்தான்பார்த்து
அந்தரமாய்நின்று ஆயரவரேதுசொல்வார்
ஆடாதம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிசலமுண்ணாதே
தண்ணீர்குடியாதேதாமரைப்பொய்கையிலே
குளத்தைவிட்டிப்புறம்வா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்



ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபந்தெரியவில்லை
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாயதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
எங்கள்குளத்திலே நீ இறங்கிசலமுண்ணவென்றால்
வையகத்திலதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாப்பயிரின் வரன்முறைத்தாயானால்
இறங்கிசலமுண்ணும் இல்லையென்றாற்போய்நடவும்
சொன்னாலேநீர்குடியும் சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தாமமுடியானே
குளத்திலடிவையாதே கொற்றம்போர்மன்னவனே
என்றதோர்சொற்கேட்டு ஏதுசொல்வான்சீர்நகுலன்
நீர்கேட்கும்வார்த்தைக்கு நான்கேட்குந்தன்மையென்ன
நீதியல்ல நீர்தூர நின்றுதான்பேசுறது [ன்
என்னெதிரில்வந்தாலே இருதுண்டாய்ப் போட்டிடுவே
என்றுசிலவார்த்தை நின்றுமவன்பேசினனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
மறுவார்த்தைசொல்லாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பெனவேநகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்பொசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும்
தண்ணீர்பொசித்தவுடன் தானுமாறாய்விழுந்து
தலையைச்சுழட்டுது தார்வேந்தராஜனுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீரனுக்கு
ஏன்னாதுமென்னுகிறான் இயல்மன்னகுலனுமே
ஆரோதெரியாது அந்தரமாய்சொன்னார்கள்
அவ்வார்த்தைகேளாமல் அள்ளியேதிருந்துண்டேன்

## எம்பெருமாள் நகுலராசனைவிஷநீர்குடிப்பித்துக் கொல்லுகிறது.

---

அப்போதுமாயவரும் அங்கனவேயேதுசொல்வார்
தாமமுடியான் நகுலனைக்கொல்லவென்று
எம்பெருமாள்மாயவரும் எமனையுச்சரித்தார்
எமனும்ராமனுடன் இருவருமொன்றாகி
மயிலுங்குயிலுமங்கே வனத்திலேகூவுகுது
தாமமுடியான் நகுலனவன்பார்த்து
அந்தக்குரல்கேட்டு ஆலோசனைபண்ணுகிறான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமனங்குளிர்ந்து ஏகிநடந்தானே
அண்ணரிருவர்களுமங்கேபடுத்திருந்தார்
கண்டுமகிழ்ந்தானே கட்டழகன்சீர்நகுலன்
ஆனந்தமானானே அண்ணர்களைக்கண்டவுடன்
தாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
அண்ணர் தருமராயர் ஆயாசப்பட்டிருக்க
ஆரணங்குதுரோபதையு மங்கேபுலம்பிநிற்க
என்னமனதுகொண்டு இங்கேபடுத்தார்கள்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
குளத்திலிறங்கினானே கொப்பெனவே நகுலனவன்
மாயர்பெருமாளும் மலைராமர் தான்பார்த்து
அந்தரமாய்நின்று ஆயரவரேதுசொல்வார்
ஆரடா தம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுடா இறங்கிசலமுண்ணாதே
தண்ணீர்குடியாதேதாமரைப்பொய்கையிலே
குளத்தைவிட்டிப்புறம்வா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்



ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபந்தெரியவில்லை
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாயத்துர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
எங்கள்குளத்திலே நீ இறங்கிசலமுண்ணவென்றால்
வையகத்திலதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாப்பயிரின் வர்ணமுறைத்தாயானால்
இறங்கிசலமுண்ணலாம் இல்லையென்றாற்போய்நடவும்
சொன்னாலே நீர்குடியும் சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தாமமுடியானே
குளத்திலடிவையாதே கொற்றம்போர்மன்னவனே
என்றதோர்சொற்கேட்டு ஏதுசொல்வான்சீர்நகுலன்
நீர்கேட்கும்வார்த்தைக்கு நான்கேட்குந்தன்மையென்ன
நீதியல்ல நீர்தூர நின்றுதான்பேசுறது [ன்
என்னெதிரில்வந்தாலே இருதுண்டாய்ப் போட்டிடுவே
என்றுசிலவார்த்தை நின்றுமவன்பேசினானே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
மறுவார்த்தைசொல்லாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பெனவே நகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்பொசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும்
தண்ணீர்பொசித்தவுடன் தானுமாறாய்விழுந்து
தலையைச்சுழட்டுது தார்வேந்தராஜனுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீரனுக்கு
எண்ணாதுமெண்ணுகிறான் இயலான நகுலனுமே
ஆரோதெரியாது அந்தரமாய்ச்சொன்னார்கள்
அவ்வார்த்தைகேளாமல் அள்ளியேநீர்தானுண்டேன்

சொன்னசொற்கேளாமல் சுருக்காகதீர்த்தமுண்டேன்
கண்ணுந்தெரியவில்லை காரணமுந்தோணவில்லை
திசைமுந்தெரியவில்லை நினைவைமறக்குதே
அறியாதேநான்பொசித்தே னென்றலல்லோ ஆணழகன்
அண்ணற்குந்தம்பியற்கு மாரணங்குதூரோபதைக்கும்
அந்தவனந்தேடி ஆர்தான்போய்ச்சொல்வார்கள்
இந்தவிசேஷமதை எவர்போயுரைப்பார்கள்
தருமரிதையறிந்தால் சற்றும்பொறுக்காரே
அண்ணுவுந்தம்பியரும் அழுதுபுலம்புவார்கள்
இங்கேஉயிர்வாங்கி யிவர்களிருக்கையிலே
அங்கேநகுலனுமே அண்ணரண்டைமாண்டானே
மாண்டானேசீர்நகுலன் வசநாபிநீரையுண்டு
செத்தான்நகுலனுமே சிரானகானகத்தில்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே
வீமனையும்அர்ச்சுனனையும்அழைக்கப்போனநகுலனையுங்
காணுமென்று தருமர் புலம்புகிறது

அப்போதுமன்னவரும் ஆணழகனேதுசொல்வார்
சகாதேவனையழைத்து தருமரேதுசொல்வார்
அப்பாசகாதேவா அதிசயத்தைநீர்கேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமராஜனையும்
வீமனைக்காணவென்று வில்விஜயராசாவும்
தேடியேபோனானே தேர்விஜயனர்ச்சுனனும்
நல்விஜயரைத்தேட நகுலனும்போய்நடந்தான்
மூவர்களும்போனாரே முடிவேந்தராஜாக்கள்
ஒருவரையுங்காணேனே உத்தாவுதானறிய
மான்பிடிக்கப்போனவர்கள் வந்தின்னஞ்சேரவில்லை
தேடியேபோனவர்கள் திரும்பிவந்துசேரவில்லை
தம்பிசகாதேவா தாமமுடியானே
தேடியேபோராயோ சேதிவந்துசொல்லாயோ
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை



மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைநானறியேன்
மானைப்பிடிக்கையிலே மான்வளர்த்தார்கண்டாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைபண்ணுரோ
சத்தரிஷிகளோ சந்நியாசியானவரோ
சத்தரிஷியவர்கள் சபித்துமேபோட்டாரோ
கொன்றுபழிவாங்கிக் கொலைசெய்துபோட்டாரோ
காணவும்போரேனே கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போரேனே பாவியென்கண்ணாலே
இன்னமொருக்கால் இங்கேவந்துசேர்வாரோ
இளையசகாதேவா இட்டுக்கொண்டுவாராயோ
காளைசகாதேவா கண்டழைத்துவாராயோ
பாரமுடிமன்னர்களைப் பார்த்துமேநீயழைத்து
வருவாயோதம்பியரேவார்த்தைகள்சொல்லுமென்றார்
அப்போசகாதேவன் அண்ணரைத்தெண்டனிட்டு
தாமமுடியான் சகாதேவனேதுசொல்வான்
அஞ்சாதீரண்ணுவே அழைத்தோடிவாரேன்நான்
காளையுந்தமூவரையும் கண்டழைத்துவாரேனென்றான்
பார்த்தழைத்துவாரேனென்றான் பாரமுடிமன்னர்களை
என்றுயெழுந்தானே இளையசகாதேவன்

சகாதேவன் தருமர்சொல்லைக்கேட்டுதமையன்மார்
மூவரையுந் தேடிக்கொண்டுபோனது.

சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிததுகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் துத்திப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
சந்த்ராந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
சட்டிசமூதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே

அண்ணரைத்தெண்டனிட்டு ஆனைமுகனே துசொல்வா
போகவிடைதாருமென்முன் போர்விஜயன் றம்பியவன்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
அப்பாசகாதேவா அறிவுள்ளகண்மணியே
அண்ணன்மார்போனதொரு அடவிதனிற்சென்று
காணயந்தமூவர்களைக் கண்டழைத்து நீர்வாரும்
அண்ணர்களைநீர்கண்டு அழைத்தோடிவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்சகாதேவன்
அண்ணரைத்தேடியே அதிவிரைவாய்ப்போய்நடந்தான்
தமையர்களைத்தேடியே தார்வேந்தன்போகலுற்றான்
எட்டிநடந்தானே எழிலானசூரியன்போல்
தேடிவருகுறனே சீரானகானகத்தில்
எங்கெங்குந்தேடியே இனியவிடமாராய்ந்து
கடுகவருகையிலே காதுமடைத்திடுது
நாவுவறட்டுகுது நல்லசலங்கிட்டாமல்
மெத்தக்களையாச்சு வேந்தன் சகாதேவனுக்கு
அப்போசகாதேவன் ஆனைமுகனே துசொல்வான்
அண்ணர்களைத்தேடி அனேகதூரம்வந்தோமே
தண்ணீர்களையாகித் தாகமெடுக்குதையோ
எங்கெங்கேபார்த்தாலும் இனியசலங்கிட்டவில்லை
அண்ணரையுங்காணேமே ஆரணியந்தன்னிலேதான்
என்றுமவன்சொல்லி யிருக்கின்ற வேளையிலே

எம்பெருமான்சகாதேவமகாராசனைவிதைத்தண்ணீர்
குடிப்பித்துக் கொல்லுகிறது.

---

அப்போதுஎம்பெருமாள் ஆயரவரேதுசெய்தார்
வந்தசகாதேவனையும் வல்லுயிரைவாங்கவென்று
எமனும்பெருமாளும் ஏறினார்மரமேலே
மயிலுங்குயிலும் வனத்திலேகூவுகுது



இந்தக்குரல்கேட்டு இளையசகாதேவன்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தானே இளையசகாதேவன்
தாமரைப்பொய்கைகளும் தண்ணீர்தடாகமுடன்
பூவளமுஞ்சோலைகளும் புதுமைகளைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
நாம்செய்தபுண்ணியத்தால் நல்லசலங்கிடைத்ததென
அங்கேநடந்து அவசரமாய்வரும்போது
மன்னரந்தமூவர்களும் மரத்தடியிற்படுத்திருந்தார்
அண்ணர்கள் மூவருமாயங்கேபடுத்திருந்தார்
அண்ணர்தனைக்கண்டு அதிகமனமகிழ்ந்தான்
தமையர்தனைக்கண்டு சந்தோஷமானனே
அப்போவொருவார்த்தை ஆனைமுகனே துசொல்வான்
அண்ணர்தருமரங்கே அழுதுபுலம்பியேதான்
தம்பியரைக்காணமல் தயங்கியவரிருக்க
ஆரணங்குதுரோபதையா ளங்கேபுலம்பிநிற்க
என்னநினைவுகொண்டு இங்கேபடுத்தார்கள்
பச்சைமரத்தின்கீழ் படுத்தவிதங்களென்ன
இந்தமரத்தடியில் இவர்படுத்தகாரியமேன்
குளிர்ந்தநிழலென்று கோமான்படுத்தாரோ
மலர்ந்தமரமென்று மன்னர்படுத்தாரோ
தாகத்துக்குண்டபின்பு தமயர்தனையெழுப்பி
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
தாமரைப்பொய்கையண்டை [illegible] தன்வந்துநின்று
அந்தக்குளத்திலே அள்ளிசலமுண்ணப்போனான்
அந்தச்சமயத்திலே ஆயரவர்பார்த்து
அந்தரமாய்நின்றலவோ ஆயரவரேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனோடாதம்பி நீஎன்குளத்தில்வந்தவனும்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தநீரென்னுதடா இந்தக்குளமென்னுதடா

சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிசலமுண்ணாதே
இறங்கினாலுந்தனுக்கு மிடறுகள்வந்துவிடும்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
அந்தரத்தில்நின்றுகொண்டு ஆர்காணும்பேசுறவன்
அரத்திலிருந்துகொண்டு சொல்கிறவனார்காணும்
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதூர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்பாட்சியோ
ஆரோதெரியாது அதட்டியேகேட்கிறவர்
எவரோதெரியாது எந்தனைக்கேட்கிறவர்
மற்றுமொருக்கால்தான் வாய்திறந்துபேசுங்கள்
இன்னமொருக்கால்தான் எதிரில்வந்துசொல்லுங்கள்
என்றசொற்கேட்டு எம்பெருமானேதுசொல்வார்
தண்ணீர்குடிக்கவென்றால் தரணியின்புதுமைசொல்லு
வாடாப்பயிருமெது வருத்தமானபாரமெது
அந்தவதிசயங்களறிந்தாலுரையுமென்றார்
அறிந்துசொன்னாலே அள்ளியேதீர்த்தமுண்ணும்
சொல்லுவாயானால் சுருக்காகதீர்த்தமுண்ணும்
இல்லாமற்போனாலே யிப்படிலேவந்துவிடும்
தாமமுடியான் சகாதேவராசனவன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
ஆரோதெரியாது அந்தரத்தில்மிரட்டுகிறீர்
எவரோதெரியாது என்னைமிரட்டுகிறீர்
அருகாகவந்தால் அடித்தெறிந்துபோட்டிடுவேன்
எதிரிலேவந்தாலே யிருதுண்டாய்ப்போட்டிடுவேன் [ம்
சரியாயிருக்கவேணும் சண்டைபண்ணிப்பார்க்கவேணு
மறைவாயிருந்துகொண்டு வாதாடநீதியுண்டோ
என்றுமவனுரைக்க எம்பெருமான்தான்கேட்டு
ஒன்றுமேசொல்லாமல் உல்லாசந்தானிருந்தார்
மறுவார்த்தைபேசாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போசகாதேவன் ஆனந்தமாகவேதான்



குளத்திலிறங்கினானே சொப்பெனவேதீர்த்தமுண்டான்
அள்ளியேதீர்த்தமுண்டான் ஆவல்தெளிந்திடவே
தண்ணீர்குடித்தானே தாமமுடியானும்
அள்ளிசலமுண்டபின்பு ஆனந்தமார்பனுக்கு
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுகுது
உடம்புமறக்குது உள்ளங்குலையுது
நாவுகுளருகுது நாமமுடியானுக்கு
தன்னைமறக்குது தார்வேந்தராஜனுக்கு
ஆரோதெரியாது அந்தரத்திற்சொன்னார்கள்
எவரோதெரியாது எந்தனுக்குச்சொன்னார்கள்
தண்ணீர்குடியாதேயென்று சத்தம்பிறந்ததங்கே
அவர்சொல்லைக்கேளாமல் அள்ளிநான்தீர்த்தமுண்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
தெரியாமல்நீர்குடித்தேன் சிந்தைகலங்குகுது
அறியாமல்நீர்குடித்தேன் அங்கம்பிறட்டுகுது
என்றுநடந்தானே இளையசகாதேவன்
அண்ணன்மார்தன்னருகே ஆணழகன்வந்துநின்று
அப்போசகாதேவன் ஆலோசனைகள்பண்ணி
தம்பிகளைக்காணுமென்று தருமரிங்கேவந்தாக்கால்
வசநாபித்தண்ணீருண்டு மாண்டிடுவார்தப்பாது
என்றுமனதிலெண்ணி யெழுதுகிறான்மரத்தடியில்
அண்ணாவேமரத்தடியில் அதிசயமான்வார்த்தை
இந்தக்குளத்திலே எவர்தாகமுண்டாலும்
வசநாபித்தண்ணீரிது குடித்தால்மடிந்திடுவார்
அண்ணாவேஇக்குளத்திலள்ளி நீர்குடியாதே
நாங்களிதைக்குடித்து நாலுபேரும்மடிந்தோம் [ம்
செத்துமடிந்துவிட்டோம்சிவலோகஞ்சேர்ந்துவிட்டோ
மாண்டுமடிந்துவிட்டோம் வைகுந்தஞ்சேர்ந்துவிட்டோ
என்றுமவன்சொல்லி யெழுதினான்மண்மேலே [ம்
தலையைச்சுழற்றுகையில தானும்படுத்துக்கொண்டான்
அந்தச்சமயமறிந்தாரேயெம்பெருமாள்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்

காலனையெச்சரித்துக் கடுகவுயிர்வாங்குமென்றான்
எமனையெச்சரித்து யிவனுயிரைவாங்குமென்றான்
எம்பெருமாள்சொற்கேட்டு எமனவனோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினனே
பாசத்தால்கட்டியே பதைக்கவுயிர்பிடித்தான்
சூலத்தால்குத்தியே துடிக்கவுயிர்பிடித்தான்
மாண்டுமடிந்தானே மன்னன்சகாதேவன்
செத்துமடிந்தானே சீரானகானகத்தில்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

ஆரணியத்தில் எம்பெருமாள் சூதினாலே வீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் இன்னான்குபேரும் மாண்டபின்பு காளமகாரிஷி யாகத்திலுண்டாகிய வேதாளம் ஐந்துபேரையுங் கொல்லவருகிறது.

---

அந்தச்சமயத்தில் ஆங்காரமாகவேதான்
காளமகாரிஷியுங் கருதிதபசுபண்ணி
அக்கினிக்குழியிலே ஆங்காரவேதாளம்
உண்டாகிவந்துதங்கே உலகந்திடுக்கிடவே
கறுத்தநிறமுடனே கைதனிலேவாளுடனே
பெருத்தமுகமுடனே பெருந்தொப்பைதன்னுடனே
செவந்தமயிரழகும் சீழ்வடிந்தவாயழகும்
கண்களைப்பார்த்தாலே கருங்குன்றுபோலிருக்கும்
கைகளேர்காதவழி கால்கள்வெகுதூரம்
அகண்டபுஜங்கள் ஐந்நூற்றுக்காதவழி
பல்லழகைப்பார்த்தாலே பனைமரம்போலிருக்கும்
மூக்கழகைப்பார்த்தாலே முதலைகளைப்போலிருக்கும்
இப்படியாகவே யிருக்குமந்தவேதாளம்
பொல்லாதவேதாளம் பிறந்தது அக்கினியில்
காளமகாரிஷியருகே கடுகவந்துதெண்டனிட்டு
என்னையழைத்ததுதானே துகவையாக



ஆரைநான்கொல்கிறது அடுத்துப்போர்செய்கிறது
எவரைப்போய்கொல்கிறது எந்தனுக்குச்சொல்லுமையா
கைகள்பதைக்குது காளமகாமுனியே
வயிறுபசிக்கிறது மாமுனியேசொல்லுமையா
அப்போதுமாமுனியும் அதுசொல்லத்தான்கேட்டு
காளமகாமுனியும் கடுகவெடுத்துரைப்பார்
அக்கினியில்வந்துதித்த ஆங்காரவேதாளமே
நான்சொல்ல நீகேளும் ராஜாக்களைவருண்டு
இந்தவனந்தனிலே இருக்கிறார்பஞ்சவர்கள்
வீரப்புலிபோலே வேந்தர்களைவருண்டு
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருண்டு [ர்
ஐவரையுங்கொன்றுதின்று அரைநாடியில்வாருமென்றா
வேதாளந்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
அவ்வளவுபோதுமென்று ஆக்ரமித்துப்பற்கடித்து
ஆக்ரமித்துப்பற்கடித்து அதட்டிவருகுதங்கே
எங்கெங்கேயென்றுசொல்லி எழும்பியேகொக்கரித்து
கொக்கரித்துவேதாளம் கும்மாளமாய்வருது
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துவருகையிலே
செந்தாமரைப்பொய்கையண்டை செத்திருக்கக்கண்டது
மாமரச்சோலையின்கீழ் மாண்டிருக்கக்கண்டது
இறந்தவரல்லாம லின்னமொருவரில்லை
செத்தவரல்லாமல் மற்றுமொருவரில்லை
எங்கேமடிந்தாரோ எவ்விடத்திற்செத்தாரோ
செத்தபிணத்திடத்திற் தேடிப்போவென்றாரே
மாண்டபிணந்தின்ன மாமுனியோகச்சொன்னார்
எத்தனைநாளைக்குமுன்னே செத்தபிணமிதுவோ
செத்தபிணத்தையோநான் சென்றுபொசிக்கிறது
நாறும்பிணமெடுத்து நானோபொசிக்கிறது
மாண்டபிணத்தையோநான் வயிறாரவுண்பேனோ
என்றுமேசொல்லி யெழுந்ததுவேதாளம்
அங்கேதிரும்பி அகோரகோபத்துடனே
மகாவேகந்தன்னுடனே வருகுதுவேதாளம்

காளமகாரிஷியருகே கடுகவந்துடக்கிரமுடன்
எடுத்துமகாமுனியை இரண்டாய்க்கிழித்தது
வாரியெடுத்துமல்லோ வயிற்றைக்கிழித்தது
நெஞ்சைப்பிளந்தது நெருப்புத்தணலெழும்ப
மாமுனியைக்கொன்றபின்பு மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷமாகியல்லோ வேதாளந்தானடக்க
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோச்சுது
மனதுமிகக்குளிர்ந்து மற்றோர்வனந்தனிலே
போனதுபிழைத்திருக்கும் பொல்லாதவேதாளம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

தருமராசர் தம்பிமார் நாலுபேரையுங்காணோமென்று
துரோபதையுடன் சொல்லிப்புலம்புகிறது.

---

வேதாளம்போனபின்பு வேல்வேந்தர் தருமரவர்
சாயாம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
பாஞ்சாலன்பெண்ணே பைங்கிளியேதுரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நிலவர்மன் தங்கையரே
அனலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
ஐவரையும்மாலையிட்ட ஆதிபராசக்தியே
தோராவடிவழகி துரோபதையே நீகேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணோம்
வீமனைத்தேடிப்போன விஜயனரைக்காணோம்
இவர்களைத்தேடிப்போன நகுலனரைக்காணோம்
மூவரையுந்தேடிப்போன சகாதேவனைக்காணோம்
நால்வரையுங்காணோமேநாயகமேயென்னசெய்வோம்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை
ஆரோடேசண்டைகள் அமர்துசெய்கிறாரோ
எவரோடேசண்டைகள் எப்படிப்போர்செய்கிறாரோ
மானைவளர்த்தவர்கள் மந்திரவதைபண்ணாரோ
எந்தத்தபோவர்கள் எவர்கள்கொன்றுபோட்டாரோ



தபசிற்பெரியவர்கள் சபித்தாரோநானறியேன்
வரத்திலிற்பெரியவர்கள் வதைசெய்துபோட்டாரோ
போனவிடமறியேன் போர்செய்ததாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
தேடியேபோவோம்வா தேவியேயென்றழைத்தார்
ஆரணங்குதுரோபதையா ளப்படியேநல்லதென்றாள்

தருமரும் துரோபதையும் வீமன் அருச்சுனன்
நகுலன் சகாதேவன் இவர்கள் நாலுபே
ரையும்தேடிக்கொண்டு போனது.

---

துரோபதையும்தருமருந் துள்ளியெழுந்திருந்து
தேடப்புறப்பட்டார்கள் சீரானகானகத்தில்
கூவிப்புலம்பியே கொப்பெனவேவாரார்கள்
அழுதுபுலம்பியே அந்தவனந்தேடிவாரார்
இருண்டவனங்களெல்லாம் எங்கெங்குந்தேடினாரே
தம்பியரைக்காணாமல் தயங்கினார்தருமரங்கே
பாராமல்தம்பிமாரைப் பதைத்துப்புலம்பினார்கள்
தக்கபுகழுடைய தருமரங்கேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேபாஞ்சாலி
இந்தவனத்திலே எங்கெங்குந்தேடினோமே
காணேம்நாம்நால்வரையும் காட்டிலேகாணவில்லை
இந்தவனந்தாண்டி இனியவனம்போவோமென்று
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோய்நடந்தார்
தேடியேவாரார்கள் சீரானவனந்தனிலே
தருமருக்குந்துரோபதைக்குந் தாகமெடுக்குது
நாவுவறட்டுகுது நாமமுடியார்க்கு
ஆரணங்குதுரோபதைக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனமுந் தாகவிடாயாச்சுது
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
என்னசெய்வோம்பெண்ணே நாமெங்குஞ்சலித்திட்டோம்
முன்னவரைக்காணேனேமாதரசேயென்னசெய்வேன்

தம்பிகளைக்காணோமே தாகவிடாய்கொள்கிறதே [யில்
என்னசெய்வேனென்றுசொல்லி இளைத்துப் புலம்புகை
அந்தச்சமயத்திலே அரிராமரேதுசெய்தார்
மயிலுங்குயிலுமிங்கே மரத்தின்மேலேறியே
வனத்திற்குயிலும் மயில்களுங்கூவுகுது
அந்தக்குரல்கேட்டார் ஆணழகர் தருமலிங்கம்
கூவுங்குரல்கேட்டுக் கொப்பெனவேயதுசொல்வார்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தாரே இளந்தேர்ப்புத்தன்னருகே
தாமரைப்பொய்கையண்டை தம்பிமார் நாலிருந்தார்
பள்ளிகொண்டிருக்கிறதைப் பார்த்தாரேதர்மலிங்கம்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேகண்டாயோ
தம்பிமார்பள்ளிகொண்ட நயிரியத்தைப்பார்த்தாயோ
மானுப்பிடியாமல் வந்துசேதிசொல்லாமல்
குளிர்ந்தநிழலருகே கூசாமற்பள்ளிகொண்டார்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்த்தீர்த்தபின்பு
தம்பிமாரைத்தாமெழுப்பித் தையல்ரேபோவோமென்று [ர்
என்றுமவருரைத்து இளந்தேபப்பிற்போய்ப்புகுந்து
தாமரைப்பொய்கையிலே இறங்கினார் தருமரவர்
அப்போதுமாயவரும் அரிராமர்தான்பார்த்து
அந்தரமாய்நின்றுகொண்டு ஆயரங்கேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ இறங்கிசலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்காலேமுண்ணாதே
என்றசத்தங்கேட்டுமே ஏதுசொல்வார்தருமரவர்
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுறது
எவரோதெரியாது எவ்விடமோபேசுறது
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ



ஆகாசதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
வானுலகதேவர்களோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பின்நின்னும்ராட்சதரோ
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரென்றுநானறியேன் எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
உத்தரவுகேட்குது உருவந்தெரியவில்லை
பேச்சுகள்கேட்குது பேருந்தெரியவில்லை
தாகவிடாயாக தண்ணீர்குடிக்கவந்தேன்
நாவுவரட்டுகுது நடுங்குதுதேகமெங்கும்
உளநாக்குவரட்டுகுது உத்தரவுதாருமையா
உத்தரவுதந்தாலே உண்ணுகிறேன் தீர்த்தமிங்கே
வார்த்தையுரைத்தாலே வாரிசலமுண்ணுகிறேன்

எம்பெருமாள் தருமர் தம்பிமார் நாலுபேரையும்
அதிசயங்கேட்டதற்கு யாருஞ்சொல்ல
வில்லை தருமர்சொல்லுகிறது.

---

என்றுரைக்கத்தருமலிங்கம் ஏதுசொல்வார்மாயவனார்
இப்பூமிதன்னிலே என்ன அதிசயங்கள் [ம்
அதிசயத்தைச்சொன்னீரானால் அள்ளியேதீர்த்தமுண்ணு
இல்லாமற்போனாலே இப்பாலேவந்துவிடும்
சொல்லாமற்போனீரானால் சுருக்காய்நடவுமென்றான்
என்றசொல்தான்கேட்டு ஏதுசொல்வார்தருமலிங்கம்
மனிதர்பிறக்கிறதும் மனிதரிறக்கிறதும்
இதுவேஅதிசயங்கள் இனியொன்றுமில்லையென்றார்
அவ்வயணங்கேட்டு அரிராமரென்னசொல்வார்
இதுவோஅதிசயங்காண் இனியொன்றுமில்லையோதான்
இன்னமொருவார்த்தை உண்மையுரையுமென்றார்
வையகத்துமாந்தருக்கு வருத்தங்களானதுகாண்
ஏதுவருத்தமென்றார் இனிபிறந்தபேர்களுக்கு
அப்போதருமரவர் ஆயருரைகேட்டு

சாயாம்புமன்னவனுர் தருமரங்கேதுசொல்வார்
பத்துமாதஞ்சுமந்து பாலகனையுண்டாக்கி
மூன்னூறுநாள்சுமந்து முருகுழலாள்தன்னருகே
பெற்றெடுத்ததாயார்க்குப் பெரியசுமையொழிய
மற்றுஞ்சுமையுமில்லை வையகத்துமாந்தருக்கு
இவ்வயணங்கேட்டு ஏதுசொல்வார்மாயவனுர்
இன்னமொருவார்த்தை இயம்புவேன்சொல்லுமென்ருர்
வையகந்தனிலே வாடாப்பயிருசொல்லும்
என்றைக்கும்வாடாத இனியபயிர்சொல்லுமென்ருர்
ஆயரிவையுரைக்க அவ்வார்த்தைதான்கேட்டு
சாயாம்புமன்னவனுர் தருமரங்கேதுசொல்வார்
வாடாதிருக்குங்காண் வளருமருகம்புல்
அந்தச்சொல்தானுரைத்தார் அங்கெனவேமாயவர்க்கு
இவ்வயணங்கேட்டுமே எம்பெருமாளென்னசொல்வார்
சந்தோஷமாச்சுது தாகந்தெளியுமென்ருர்
உத்தரவுதந்தாரே உலகளந்தாரெம்பெருமாள்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
உண்ணுமென்றுசொன்ன உத்தரவுதான்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தாகந்தெளிவதற்குத் தண்ணீர்குடித்தார்கள்
அள்ளிப்பொசித்தார்கள் ஆவல்தெளிந்திடவே
தருமருந்துரோபதையுந் தாகத்துக்குண்டார்கள்
தாகந்தெளிந்தபின்பு தம்பிமாரண்டைவந்தார்

தருமர்வந்து தம்பிமார்களை எழுப்ப நாலுபேரும்
இறந்துவிட்டாரென்றறிந்துபுலம்புகிறது.

---

நாலுபேரண்டைவந்து நடுவேயிருந்துகொண்டு
சகாதேவன்படுத்திருந்த தலைமாட்டிலெழுதியதோர்
வாசகத்தைப்படித்தாரே மன்னர்தருமலிங்கம்
என்னவென்றெழுதி யிருந்ததென்றால்வாசகத்தில்
நால்வருமாகவே நச்சுப்பொய்கைதீர்த்தமுண்டு



விஷநீரையுண்டல்லவோவேந்தர்மடிந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் நீங்கள்வந்தாலண்ணவே
தாகத்துக்குண்ணாதே தப்பிப்பிழையுமென்று
இவ்வயணமாகவே எழுதியிருக்குது
பார்த்துப்படித்துப் பயந்தாரே தருமராயர்
செத்துமடிந்தார்கள் சீரானதம்பியர்கள்
மாண்டுமடிந்தார்களென்று மன்னர்புலம்புகிருர்
என்னசொல்லிப்புலம்புகிருர் இருண்டவனந்தனிலே
மலையோபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலையோபருவதமே செத்துமடிந்தீரோ
நீலமலையே நிலத்தோடேசாய்ந்தீரோ
கல்லானதூணுக்கு கலக்கமில்லையென்றிருந்தேன்
கல்லானதூணைக் கரையானரித்ததோ
இரும்பானதூணுக்கு என்னகுறையென்றிருந்தேன்
இரும்பானதூணுமே இற்றுவிழுந்ததோ
வச்சிரத்தூணுக்கு மயக்கமில்லையென்றிருந்தேன்
வச்சிரத்தூணல்லவோ மண்ணோடுஒடிந்ததே
செம்பருந்துவந்தென்னைச் சிறகாலடித்ததே
குஞ்சைப்பறிகொடுத்த கோழிபோலானேனே
ரெக்கைபறிகொடுத்த பேடைபோலானேனே
கையறுந்தஆனையைப்போல் கலங்கினேன்தம்பியரே
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்
உள்ளங்குலைந்து உருகிறேன்தம்பியரே
என்னைத்தவிக்கவிட்டு எங்கேமறைந்தீர்கள்
ஐயையோதெய்வமே அலையவிட்டுப்பார்த்தீர்களோ

தருமராசர் வீமனைப்பார்த்துப்புலம்புகிறது.

---

தக்கபுகழுடைய தருமரெழுந்திருந்து
வீமனருகில்வந்து வேந்தர்புலம்புகிருர்
வெற்றிமதயானை வீமாமதகரியே
கட்டிக்கரும்பேயென் கண்மணியேபொன்கொளித்தாய்

நாலார்கடுக்கினார் நாற்றெருமன்னரையும்
கொல்லுகிறேனென்று நீ கொடியசபதமிட்டாய்
அவ்வார்த்தைகாவாமற்றுந்து அப்பா நீயெங்கொளித்தாய்
வச்சிரமுடியே நீ மண்ணோடேமாய்ந்தாயோ
தங்கமுடியே நீ தரையிற்கவிழ்ந்தாயோ
தாயைமறந்தாயோ தம்பியை நீமறந்து
எங்கேயொளித்தாயோ எந்நாடுபோனாயோ
என்றுபுலம்பி இளைத்துமண்ணில்மூர்ச்சையானார்
என்னையலையவிட்டு எங்கே நீபோயொளித்தாய்
களைத்துவிழுந்தாரே கட்டழகர் தருமலிங்கம்

தருமராசர்களைதெளிந்து எழுந்திருந்து அர்ச்சுனனைப் பார்த்துப்புலம்புகிறது.

---

அன்றுவொருநாழி சென்றபிறகாக
தோராவடிவுமிகு துரோபதையாளோடிவந்து
களைத்ததருமருக்கு கடுகுமூர்ச்சைதெளியவென்று
காட்டில்தழையொடித்து கடுகெனவேவோடிவந்து
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தவெழுந்திருந்து
என்னவென்றுசொல்லி எடுத்துப்புலம்புகிறார்
ஆனவழகுமன்னா அருச்சுனன்பிறப்பே
என்னைத்தனியேவிட்டு எங்கே நீபோயொளித்தாய்
மீசைமுறுக்கழகா விழியிற்கறுப்பழகா
நாவிலேநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்தாளிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லிலேபாசவீணை பாதத்தில்தாமரைப்பூ
முதுகிலேமச்சரேகை முழங்கால்முத்துமாணிக்கம்
இடதுகால்விருதுபொம்மைவலதுகால்வீரதண்டை
தலைவிருதுகுலவிருது சக்கரதிபேர்விருது
எதிர்த்தவன்தன்விருதும் எதிராளிமுகவிருதும்
இத்தனைவிருதுகளை எடுத்து நீபூட்டிக்கொண்டு



கட்டியெதிர்த்தாலே கலங்குமோசேனையெல்லாம்
சத்துருகளைசெயிக்கும் தனஞ்சயரே அர்ச்சுனரே
எதிரிகளைசெயிக்கும் என்பிறப்பே அர்ச்சுனரே
என்னைப்பிரிந்துநீ இறந்துமடிந்தாயோ
அழகையெழுதினவர் ஆயுளையெழுதாரோ
வடிவமெழுதினவர் வயதையெழுதாரோ
பெற்றாள்குந்தியம்மாள் பிரபலங்கள்காணவென்று
பெற்றாள்வயிற்றிலே நீ பெருநெருப்புயிட்டாயோ
என்னைத்தவிக்கவிட்டு இறந்துவிடுநாயமுண்டோ
என்றுசொல்லிதருமரவரேங்கியேமனந்தளர்ந்து
அழுதுபுலம்பியே அங்கனேமூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர் தருமலிங்கம்

தருமராஜர் மூர்ச்சை தெளிந்திருந்து நகுலனைப்பார்த்துப் புலம்புகிறது.

களைத்ததருமரையே கண்டந்துரோபதையாள்
துள்ளியெழுந்திருந்து துரிதமுடனோடிவந்து
காட்டில்தழையொடித்துக் கடுகெனவேயோடிவந்தாள்
தருமருக்காகத் தையலரும்வந்துநின்று
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசுகிறாள்
காட்டுத்தழையொடித்து கடுகெனவேவீசிறாளே
மற்றுமொருநாழி யுற்றபிறகாக
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்து
மூர்ச்சையதுதெளிந்து முன்னலின்றுபுலம்புகிறார்
அப்பாநகுலாயென்னறிவுள்ளகண்மணியே
மலையேபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
நீமடியுங்காரியங்கள் நின்னையுற்றைதானறிவேன்
மாண்டிடுவீரென்றுநான் மனதில்நினைத்ததில்லை
செத்துவிடுவீரென்று சற்றுமறியேனே
என்னைக்கைவிட்டு இறந்துவிடுநாயமுண்டோ
(நீங்கள்)போவதறியாமல் பூரித்துநானிருந்தேன்

சாவதெரியாமல் சந்தோஷமாயிருந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்களானதையா
கண்டமுகங்களெல்லாம கடுத்தமுகமாகுதப்பா
கூடப்பிறந்தீர்களே கூட்டுப்பாலுண்டீர்களே
ஒக்கப்பிறந்தீர்களே ஒருஸ்தனப்பாலுண்டீர்களே
காட்டுக்குள்கையைவிட்டு கைலாசம்போனீர்களோ
தங்கத்தரிக்கவில்லை தரையிற்கால்பாவவில்லை
நிற்கத்தரிக்கவில்லை நிலத்திற்கால்பாவவில்லை
உங்களைநான்பிரிந்து ஒருநாழிதங்குவேனோ
கூடமடிவேன்காண் கொற்றவரே உங்களுடன்
ஒக்கமடிவேனே உங்களுடனாக [லே
அலண்டுபிரண்டழுதார் அடித்துக்கொண்டார்தலைமே
முட்டிக்கொண்டார்பூமியிலே மோதிக்கொண்டாரப்போ
மார்கொண்டகண்ணீரைவழித்தெறிந்தார்மண்மேலே[அ
அடித்துப்பதைத்தலறித் துள்ளிப்புரண்டழுதார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர் தருமலிங்கம்
மூர்ச்சையாய்விழுந்தாரே முடிமன்னராசாவும்

தருமராஜர் மூர்ச்சைதெளிந்து சகாதேவனைப்
பார்த்துப்புலம்புகிறது.

தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
களைத்ததருமருக்குக் களைகள்தெளியுமென்று
காட்டில்தழையொடித்துக் கட்டழகிவீசலுற்றாள்
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்தார்
மூர்ச்சைதெளிந்தெழுந்து மோதிப்புலம்புகிறார்
சாஸ்த்ரக்கொடிவேந்தர் சகாதேவராசாவே
முன்னேவருங்காரியத்தை முதலறிந்துசொல்வாயே
இனிநடக்குங்காரியத்தை எந்தனுக்குநீயுரைப்பாய்



அப்படிக்கொத்ததொரு அறிவுள்ளகண்மணியே
உன்னைப்பறிகொடுத்து உலகத்தில்வாழ்வேனோ
பனிரண்டுதன்வருஷம் பாரவனந்தீர்ந்தபின்பு
அக்கியாதவருஷ மதுவுங்கழிந்தபின்பு
பாரவனந்தீர்ந்து பட்டணமேபோய்ச்சேர்ந்தால்
குந்தியம்மாளோடிவந்து குழந்தைகளெங்கேயென்றால்
மைந்தர்களெங்கேயென்று மாதாவுங்கேட்டாலே
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்தாயார்க்கு
கட்டிக்கரும்பேயென் கண்மணியேயெங்கொளித்தாய்
முடிக்குமுடியானாலும் முத்துமுடியாகுமோதான்
தங்கமுடியானாலும் உங்கள்முடியாகுமோதான்

தருமர்நாலுபேர் தம்பிமாரையும் நினைந்துபுலம்ப
அப்போது துரோபதை தன்புருஷர்களைப்
பார்த்துப்புலம்புகிறது.

தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
மாலையிட்டமன்னவர்கள்மாண்டுவிட நீதியுண்டோ
தாலிகட்டும்ராசாக்கள் தரையில்விழலாச்சோ
மங்கிலியமுண்டு மணமுண்டென்றிருந்தேன்
உலகத்துப்பெண்டுகள்ஒருவனுக்குக்கைகொடுப்பார் [ன்
(நான்)ஐவருக்குங்கைகொடுத்துஅம்பலத்துக்காளானே
செல்வத்தலையிலே செப்பேடெழுதினதும்
அல்லற்படுந்துயரம் அமைத்தாரேபிரமதேவன்
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குரைக்கழுத்தியானேனே
தங்கக்கழுத்தி தலைவிரிக்கநாளாச்சே
மல்லிகைச்சாலையிலே மயிர்விரிக்கநாளாச்சோ
குங்குமச்சோலையிலே குழல்விரிக்கநாளாச்சோ
ஐயையோதெய்வமே அநியாயஞ்செய்தீர்களோ
பார்த்துமிருந்துமென்னைப் பாதவிக்கவிட்டீர்களோ
கண்டுமிருந்துமென்னை கணங்குலையவைத்தீர்களோ

தோள்சார்ந்தராசாக்கள் சோர்ந்துவிடக்காரியமென்
மார்சார்ந்தராசாக்கள் மடிந்துவிடக்காரியமேன்
காட்டில்மடிந்தலவோ கையைவிட்டுநின்றீர்களோ
அடவியிலேதான்மடிந்து அலையவிட்டுப்பார்த்தீர்களோ
சூரியனைச்சாட்சிவைத்துத் தெருவில்கைவிட்டீர்களோ
சந்திரனைச்சாட்சிவைத்து சாகத்துணிந்தீர்களோ
சந்தியிலேகையைவிட்டு சமர்த்தாய்ப்படுத்தீர்களோ
மஞ்சளிழந்தும் மணமிழந்தும்பூவிழுந்தும்
தாலிச்சரடிழந்து தாரணியில்நிற்பேனோ
மஞ்சல்சரடிழந்து மண்மேலிருப்பேனோ
கூடமடிவேன்காண் கொற்றவரேஉங்களுடன்
ஒக்கமடிவேன்காண் உத்தமரேஉங்களுடன்
நானுமடிவேன்காண் ராசர்களேஉங்களுடன்
அலண்டுபிரண்டழுது அப்பிக்கொண்டாள்மார்மேலே
எங்கேயோவானம் இடிக்குதென்றிருந்தேன்
தப்பாமல்வானமல்லோ தலையிலிடித்ததே
என்றுபுலம்பியே இளங்கொடியாள்தானழுதாள்
கோவென்றசத்தம் குமுறிப்புலம்புகிறாள்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
சாயாம்புமன்னவரும் தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேநீர்கேளும்
வசநாபித்தண்ணீருண்டு மாண்டாரேதம்பியர்கள்
நாமும்புசித்தோமோ நல்லவிஷசலத்தை
இறவாமல்நாமு மிருப்பதென்னகாரணங்கள்
மாண்டதொருதம்பியர்கள் மன்னவர்கள்தன்னுடனே
நாமும்மடிந்தாலே நல்லதென்றெண்ணுகிறேன்
கூடமடிந்தாலே குணமென்றுஎண்ணுகிறேன்
ஒக்கமடிந்தாலே ஒருமிக்கத்தீர்ந்துவிடும்
கதியைத்துலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்துலைக்கவல்லோ வெகுவகையறியோம்
என்னசெய்வோமென்றுசொல்லி ஏங்கிப்புலம்புகிறார்



தருமர்மனதறிய எம்பெருமாள் ஒட்டகனாகவும் எமன்
ஒட்டச்சியாகவும்வந்து பிணத்தையிழுக்கிறது.

—•—

எமனும்பெருமாளும் இருவருமாகவேதான்
தருமர் நினைவறிய சாமிவடிவெடுத்தார்
எம்பெருமாள்மேகவண்ண னென்னவடிவானார்
இருவருமாகவே இவர்களண்டையோடிவந்து
தருமரைத்தான்பார்த்து சாமியவருரைப்பார்
ஆரையாயிங்கே அழுதுபுலம்புகிறது
இத்தக்குளத்திலே யெவர்தாகமுண்டாலும்
வசநாபித்தண்ணீரில் மாண்டுமடிந்தாலும்
எங்களையல்லாமல் எவரெடுக்கலாகாது
எடுத்துப்புதைக்கிறது எங்களுக்குத்தாரமையா
நாங்களெடுக்கும்படி ராசாவின்கட்டளைகாண்
என்றுமேயெம்பெருமாள் இழுத்துப்போனார்வீமனையும்
இளவிஜயன்பார்த்தனை இழுத்துப்போனாள்ஒட்டச்சியும்

எம்பெருமாள் எமனும் சவத்தை யெடுத்துக்கொண்டு
போக தருமராசர் பரிதாபப்பட்டு
தன்சவத்தைவாங்குகிறது.

—

சவத்தையவரிழுக்க தருமரவர்பார்த்து
கண்டாரேதருமரவர் கடுகிவயிறெரிந்து
பார்த்துமனங்கலங்கிப் பதைத்துப்புலம்பியவர்
ஒட்டர்களருகில்வந்து உத்தமருமேதுசொல்வார்
ஆரையாஒட்டர்களே ஐயாவே நீர்கேளும்
அண்ணன்தம்பிநாங்களிங்கே அருகாகவந்திருக்க
தமையனென்னநானும் தனதாகவந்திருக்க
பூமிதனைவெட்டிப் புதைக்கும்வயணமென்ன
எங்கள்பிணத்தை நீங்கள் இழுக்காதீர்விட்டுவிடும்
தரையிலிழுக்காதே தர்ம்மமாய்ப்போகுதையா.

பூமியிலிருக்காதே புண்ணியமாய்ப்போகுதையா
கோடிசரணமையா கும்பிடுவேன்விட்டுவிடும்
ஆயிரஞ்சரணங்காண் அடிபணிந்தேன்விட்டுவிடும்
மூவாயிரஞ்சரணம் முடிசாய்த்தேன்விட்டுவிடும்
என்றுவருந்திறுளே இயலான தருமலிங்கம்
எமனும்ராமனும் இருவருந்தான்பார்த்து
பெருமாள்மனமிரங்கிப் பிரியமுடனுகை
வீமனைதாழவிட்டார் வேந்தர்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமரவரோடிவந்து
வீமனையெடுத்துவந்து மெத்தெனவேதான்வளர்த்தி
வீமராகாக வேந்தரும்வீற்றிருந்தார்
தோராவடிவழகி துரோபதையாளோடிவந்து
ஒட்டச்சிபாதத்திலே உத்தமியாள்தான்விழுந்து
தாயேநீஒட்டச்சியுன் தருமமாய்ப்போகுதம்மா
(என்னை)மாலையிட்டமன்மதன்டி வலியாதேபூமியிலே
(இந்த)வையகத்தையாண்டவரை வலியாதேதாயாரே
பூமியையாண்டவர்கள் புரட்டாதேமாதாவே
அங்கம்பொறுக்கவில்லை ஆச்சி நீவலியாதே
ஆயிரந்தெண்டனம்மா அடிபணிந்தேனுந்னுதக்கு
மூவாயிரஞ்சரணம் முடிவணங்கித் தெண்டனிட்டேன்
கோடிசரணமம்மாகும்பிட்டேன்விட்டுவிடும்
என்றுவருந்திறுளே இளங்கொடியாள் துரோபதையும்
எமனும்பெருமாளும் இருவருந்தான்கேட்டு
பரிதாபந்தாளாமல் பார்த்தனைவிட்டார்கள்
தோருவடிவழகி துரோபதையுமோடிவந்து
இளங்கொடியாளர்ச்சுனரை எடுத்துவளர்த்திடவே
ஒட்டனும்ஒட்டச்சியும் உத்தாரமென்னசொல்வார்
எடுத்துப்புதையுமென்று ஏகிநடந்தார்கள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இன்றெல்லாமிங்கிருந்து எங்கியழுதாலும்
நம்மாலேயாவது ராசாவேயொன்றுமில்லை
மாயன்பெருமானை மனதில் நினைத்தழுதால்



வருந்தியழுதாலே வருவார்காணெம்பெருமாள்
மாயன்வந்தாற்பாடு வயணந்தெரியுமென்றுள்

தருமராஜர் தன்தம்பிமார்பிழைப்பதற்காக எம்
பெருமானை நினைத்துப் புலம்புகிறது.

சாயம்புமன்னவரும் தருமரவரென்னசொல்வார்
அடியளந்தமாயவரே ஆதிமூலமொருமென்றுர்
எல்லையளந்தசாமி எம்பெருமாள்மேகவண்ணு
கல்லான அகலிகையை நல்லபெண்ணுக்கிவைத்தார்
மூலமென்றுங்குஞ்சரத்தை காத்தமுகில்வண்ணு
ஆலிலைமேற்பள்ளிகொண்ட அரிராமவாருமையா
மச்சவடிவுகொண்ட அச்சுதரேயிச்சகத்தில்
கூர்மவடிவுகொண்டு பாதளம்போய்வந்தீர்
சிங்கமாயிரணியனைப் பங்கஞ்செய்துமார்பிளந்தீர்
ராமர்வடிவுகொண்டு ராவணனைச்சங்கரித்தீர்
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அம்பலத்தில்துரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
மண்டலங்கள்தானறிய மாளாத்துகில்கொடுத்தீர்
பகையாளிவாசலிலே பட்சம்வைத்துக்காத்தீரே
எதிராளிமுன்னாலே எங்களைக்காத்தீரே
உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறியார்
நீரே துணையுமல்லோ வேறுதுணையுமில்லை
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்காணுகுது
கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகமாகுது
ஏழையழுதகண்ணீர் கூரியவாள்தைக்கிலையோ
நானுமழுதகண்ணீர் ரம்பங்கொண்டறுக்கிலையோ
என்றுபுலம்புகிறுர் இயலான தருமராயர்
தருமருடனுகை தவிக்கிறுள் துரோபதையும்
கூடப்புலம்புகிறுள் கொம்பனையாள் துரோபதையும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

*தருமருந் துரோபதையும் வருந்துகிறதை யமனும் பெருமாளுங்கேட்டு சந்தோஷப்பட்டு இவர்க ளிடத்துக்கு இருவரும்வருகிறது.*

---

எமனும்மாயவரும் இருவருந்தான்கேட்டு
சந்தோஷப்பட்டாரோ சாமிபெருமாளும்
எமன்கடாமேலே எம்பெருமான்கருடன்மேலே
இருவருமாகவே எழுந்தருளிவந்தார்கள்
தருமரிடத்திலே இருவரும்வந்துநின்றார்
தருமருந்துரோபதையும் சாமியைக்கண்டவுடன்
சரணமடைந்தாரே சாமிபெருமானை
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
இருவரையுந்தெண்டனிட்டு இட்டார்சிம்மாதனங்கள்
சிம்மாதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார் [ர்
இருமிருமென்றுசொல்லி இருவரையுந்தெண்டனிட்டா
எமனும்மாயவரும் இருந்தார்சிங்காதனத்தில்
வண்ணச்சிங்காதனத்தில் வந்திருந்தாரிருவருமாய்
அடியனந்தமாயவரும் ஆண்டவருமென்னசொல்வார்
மாயன்பெருமானும் வார்த்தைகளேதுசொல்வார்
என்னவகையா லேழையுந்தீர் தருமலிங்கம்
அழுதுபுலம்புவதேதன் ஆயாசமாகவேதான்
என்னபுதுமை யெனக்கறியசொல்லுமென்றார்
அப்போது தருமலிங்கம் ஆயருக்கேதுசொல்வார்
சாயம்புமன்னவனார் தருமரெடுத்துரைப்பார்
மான்பிடிக்கவந்தவர்கள் மாயவரேதம்பியர்கள்
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்குடித்தார்கள்
விஷநீரைத்தான்குடித்து வேந்தர்படுத்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
தம்பியரைத்தேடியே தையலரும்நானும்வந்தோம்



அழுதுபுலம்பிவந்து அன்னவரைக்கண்டோமே
கிட்டியெழுப்பினேன் செத்துமடிந்திருந்தார்
பார்த்துவயிறெரிந்து பதைத்துப்புலம்பினோம்
கண்டுவயிறெரிந்து கார்வண்ணாபுலம்புகையில்
எவனோதெரியாது இராட்சதன்போலொட்டனவன்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளஒட்டன்
ஒட்டன்மனைவியாள் ஒட்டச்சிகூடவந்தாள்
இந்தவனத்திலே எவரெவர்மாண்டாலும்
எடுத்துப்புதைக்கிறது இங்கேயவர்க்குத்தரவாம்
வீமனருச்சுனரை வெகுதூரங்கொண்டுபோனார்
தம்பிமாரிருவரையுந் தானிழுத்துப்போனார்கள்
கண்டுமனம்பதைத்துக் கதறிப்புலம்பினோம்
பார்த்துமனந்தாளாமல் பற்றிவயிறெரிந்தோம் [ம்
பாதத்தின்மேல்விழுந்து பத்துலட்சந்தெண்டனிட்டோ
விட்டுவிடச்சொல்லியே வெகுகோடிதெண்டனிட்டோம்
எங்கள்பரிதாபம் பார்த்துமனமிரங்கி
எடுத்துப்புதையென்றுசொல்லி இந்தவழிதான்நடந்தார்
அவர்கள்போனபிற்பாடு ஆண்டவனேயுனைநினைந்தேன்
தம்பியரைவிட்டு தரிக்கமனங்கூடவில்லை
என்செய்வேனென்றுதா னேங்கிப்புலம்புகிறார்
தருமர்புலம்புவதை சாமியவர்பார்த்து
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
தருமர்முகம்பார்த்து சாமியுமேதுசொல்வார்
என்செய்வோம்தருமரே எழுத்துப்படியிவ்வளவு
அன்றெழுதுங்கத்தன் அழித்தெழுதப்போறதில்லை
கதியைத்தொலைக்கலாங் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வெல்லவகையறியோம்
பிரமனெழுத்திற்குப் பிசகுகள்வாராதே
மாண்டார்பிழைத்தாலே வையகங்கள்கொள்ளுமோ
செத்தார்பிழைத்தாலே செகமெல்லாங்கொள்ளுமோ
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டாலும்
ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்

மாண்டார்வருவாரென்று மனதில் நினையாதே
செத்தார்வருவாரென்று சித்தத்திலெண்ணாதே
தம்பிமாரை நீரெடுத்து தகனங்கள்செய்யுமென்றார்
இவ்வாயணமாகவே எம்பெருமாள்சொல்லவுமே
தருமர்மனமறிய சாமியுரைக்கவுமே

எம்பெருமாள் செத்தவரை தகனஞ்செய்யுமென்று
தருமர் மனமறியச் சொன்னார் அதுகேட்டு
தருமருந் துரோபதையும்புலம்பி சுவா
மியை மடிப்பிச்சை கேட்டது.

(*)

எம்பெருமாள்மாயவரும் இப்படித்தானுரைக்க
சாமியுரைகேட்டு தருமர்மிகத்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
மெத்தமனநொந்து வேந்தர்புலம்புகிறார்
அடித்தமயில்போலே அழுதுபுலம்புகிறார்
பச்சைப்புழுவெடுத்துப் பருநெருப்பிற்போட்டாற்போல்
துடித்தபுழுப்போலே துள்ளிப்புலம்புகிறார்
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
நம்பியிருந்தவென்னை நட்டாற்றில்விட்டுவிட்டாய்
இப்படித்தீர்க்கையைவிட்டாலெப்படிக்குநான்பிழைப்பேன்
ஆற்றங்கரையோரத்தில் ஆலமரம்போலானேனும்
குளத்தங்கரையோரத்தில் கோடாலிக்காம்பானேனும்
நட்டாற்றிலேமுளைத்த நாணலுங்கோரையானேனும்
உள்ளங்கைநெல்லிக்கனி உருக்குலைந்துபோனேனே
தோளில்செபமாலை தொண்டருந்துபோனேனே
கையில்செபமாலை கனங்குலைந்துபோனேனே
இனியந்தப்பூமியிலே இருக்கவுநானொகாது
என்னையுங்கொன்றுவிட்டு எம்பெருமாள்தகனஞ்செய்யும்
நால்வருடனொக நம்மைத்தகனஞ்செய்யும்
என்றுபுலம்பினார் இயமொனதருமலிங்கம் [ள்
றுகில்வளர்ந்தபத்தினியாள் துரோபதையேதுசொல்வா



தமயனருகில்வந்துதையல்ருமேதுசெல்வாள்
அண்ணாருகேவந்து அழுதுபுலம்புகிறாள்
மங்கிலியப்பிச்சையது மாயவரேதாராயோ
முந்தாணிப்பிச்சையது முகுந்தரேதாராயோ
என்றுமடியேந்தினாள் இளங்கொடியாள்துரோபதையும்

தருமருந்துரோபதையும் புலம்புவதை எம்பெருமாள்
பார்த்து மனமிரங்கி இங்கேயுமிருந்து வேறே
யொரு ஜோகியாக வந்து நாலுபேரையு
மெழுப்புகிறது.

தருமருந்துரோபதையுந் தானழுததைப்பார்த்து
தரியாமல்மனமகிழ்ந்து கடுகநினைவுகொண்டு
இவர்களுக்குமுன்னாலே இருந்தாரேமாயவரும்
எம்பெருமாள்மாயவரும் என்னவடிவெடுத்தார்
வேறேயுருவமாக விஷ்ணுவடிவெடுத்தார்
மலையாளசோகியைப்போல் வாராரேமாயவரும்
கைதனிலேமருந்துப்பையுங் காவியுடுப்புகளும்
தோளிலேசோளியுடன் தொங்குகிறதாடிகளும்
கையில்செபமாலை கமண்டலந்தன்னுடனே [ல்
தொண்ணூறும்பத்துஞ்சென்றதுவண்டகிழவனைப்போ
நாணூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனைப்போல்
தோலுநரம்புகளுந் தொங்கும்கிழவனுக்கு
முள்ளுதடுத்தாலே முப்பதிடம்விழுவார்
நாணல்தடுத்தாலே நாற்பதிடம்விழுவார்
அறுகம்புல்தடுத்தாலே ஐம்பதிடம்விழுவார்
தள்ளாடித்தத்தளித்துத் தடிக்கோலையூன்றிக்கொண்டு
பஞ்சாட்சரமோதி பாதைவழியாக
சிவசிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வாராரே
அரகராவென்றலவோ அந்தவழியாகவந்தார்
தருமாருகில்வந்து அருமைசோகியேதுசொல்வார்
அத்திபுரத்துக்கு சுத்திப்போறேனிதுவழியாய்

ஆரோஇருவர்கள் அழுதுபுலம்பினார்கள்
ஏதுக்கழுதார்கள் என்றறியஓடிவந்தேன்
அழுதவயணமென்ன ஐயாவேசொல்லுமென்றார்
புலம்பியழுவதென்ன புதுமைகளைச்சொல்லுமென்றார்
அப்போதுதருமலிங்கம் ஆணழகரேதுசொல்வார் [யார்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அப்போ தெடுத்துரைப்
மான்பிடிக்கவந்தவர்கள் வனத்திலேதம்பியர்கள்
வசநாபித்தண்ணீருண்டு மாண்டாரேதம்பியர்கள்
விஷநீரைத்தான்புசித்து வெந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஒப்பிட்டவாளை உரையுருவிவிட்டாற்போல்
தப்பிப்பிழையாமல் சதிசெய்துமாண்டுவிட்டார்
என்றுசொல்லிதருமலிங்கம் ஏங்கிப்புலம்பினார்
மாயவடிவெடுத்த மலைசோகியேதுசொல்வார்
இறந்ததொருநாலுபேரும் என்னவேணுமுந்தனுக்கு[ம்
மாண்டதொருமன்னவர்கள் மன்னவருக்கென்னவேணு
உண்மையாய்ச் சொல்லுமென்றே உத்தமரைக்கேட்கலு
தக்கபுகழுடைய தருமரெடுத்துரைப்பார் [மே
இறந்தவர்நாலுபேரும் எந்தனுக்குத்தம்பியர்கள்
மயிலிணையாள்துரோபதைக்கு மாலையிட்டமன்னவர்கள்
எங்களைத்தனியாய்விட்டு இறந்துமடிந்தார்கள்
என்றுமவருரைத்து ஏங்கிப்புலம்புகிறார்
மாயவடிவெடுத்த மலைஜோகியென்னசொல்வார்
இறந்தவர்நாலுபேரில் எவர்வேணுமுந்தனுக்கு
செத்தவரிலொருவரைநான் சீக்கிரமெழுப்பித்தாரேன்
எவர்வேணுமுந்தனுக்கு இப்போதே சொல்லுமென்றார்
ஆமானால்சொல்லிவிடும் அல்லவென்றால்நான்போறேன்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
மலைசோகிசொன்னதற்கு மன்னரெடுத்துரைப்பார்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்தாயார்குந்தியம்மாள் ஈன்றெடுத்தமூவர்களில்



இருவரிறந்தார்கள் இருக்கிறேனானொருவன்
மறுதாயார்மைந்தர்களில் தகுலனையெழுப்புமென்றார்
தக்கபுகழுடைய தருமருரைக்கலுமே
மாயமாய்வந்ததொரு மலைசோகிதான்கேட்டு
தருமர்நினைவறிந்து சந்தோஷப்பட்டாரே
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தேகங்குளிர்ந்து திருதோளும்பூட்டுவிட்டு
உண்ணுமல்பூரித்து உடம்பெல்லாம்பூட்டுவிட்டு
கரியமால்உள்மகிழ்ந்து காலனையெச்சரித்து
நால்வருயிரையுமே நமனாரேவிட்டிடென்றார்

விஷநீர்குடித்து இறந்துபோனநாலுபேரும்
பெருமாளால் எழுந்திருந்தது.

---

எம்பெருமான்தானுரைக்க யெமனவர்கேட்டு
அப்படியேநல்லதென்று அந்தஎமனாரும்
பிடித்தவுயிரைவிட்டுப் போகவெழுந்திரென்றார்
தூங்கிவிழித்தாற்போற் பாங்காயெழுந்தார்கள்
துள்ளியெழுந்தாரே துரைகளந்தநாலுபேரும்
மாயன்பெருமானை வணங்கியேதெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டா
வந்துபணிந்தவரை கண்டுமனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மாரோடேகொண்டணைத்து
சந்தோஷமாகத் தானிருந்தார்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமாடிபணிந்து
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரெடுத்தணைத்து
வாழ்வீர்வளர்த்திடுவீர் வாழ்த்திருப்பீரென்னுடனே
நிற்பீர்நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
கல்பதித்ததூணதுபோல் கலங்காமல்வாழ்ந்திடுவீர்
என்னைப்பெருவீ பெதித்தார்முடியரிவீர்
மைந்தர்களைப்பெற்றெடுத்து மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவீர்

போருக்குப்போயிடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
ஆல்போல்வேதழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போலென்னாளும் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்களென்றுசொல்லி மனங்குளிரவாழ்த்தினார்
இருமிருமென்றுசொன்னார் இனிநாகத்தம்பிமாரை
அண்ணருரையாலே அனைவோரும்வீற்றிருந்தார்
மாயருரையாலே மகிழ்ச்சியாய்வீற்றிருந்தார்
தம்பிமாரைக்கண்டல்லவோ சந்தோஷப்பட்டாரே
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
புருஷர்களைப்பார்த்து பூரித்தாளுத்தமியும்
கணவரைக்கண்டல்லவோ கட்டழகிமனங்குளிர்ந்து
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

எம்பெருமான் துரியோதனன் கூறும் காளமகாரிஷி
செய்தயாகமும் வேதாளம்வரவும் தான் இவர்
களைக் காப்பாற்றினதும் பஞ்சவர்களு
க்குச் சொல்லுகிறது.

---

மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
திரியோதிரன்செய்த சேதியெல்லாஞ்சொல்லலுற்றார்
காளமகாரிஷியையுங் கூடிகிவருந்தியவன்
கொல்லஅனுப்பினான் கொப்பனவேசங்களைத்தான்
காளமகாரிஷியுங் கடுகிவனந்தனிலே
அக்கினிக்குழியருகே ஆனந்ததபசுபண்ணி
வேதாளமுண்டுபண்ணி வேந்தருங்களைக்கொல்ல
நாமிருந்தபடியினாலே நமனையழைத்துவந்தோம் [ன்
தாமரைப்பொய்கையொன்று தண்ணீருமுண்டுபண்ணே
மானாகவந்தல்லவோ வரவழைத்தேனுங்களைத்தான்
அந்தரமாய்நான்போயி அனைவரையுங்கொன்றுவிட்டு
ஓட்டனைப்போலேவந்து உங்களைவலித்திருந்தேன்
அந்திதமாய்போதீரென அனைவரையுங்காக்கவந்தேன்



என்னபலன்கண்டேன் இராசாவேசங்களாலே
யனுமாரைகேட்டு ளம்பெரியதருமராயர்
பாதத்திலேவிழுந்து பணிந்துமுறையமிட்டார்
உம்மையன்றிவேறுதெய்வம் ஒருவரெனக்கில்லையையா
உம்மைச்சதமென்று உயிர்கொண்டுலாவினேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
நீரேதுணையல்லாமல் வேறேதுணையுமில்லை
அடியாரைக்காக்கிறது ஆண்டவனேயுன்பெருமை
காக்கிறேனென்றுசொல்லி கங்கணங்கட்டினீரே
இரட்சிக்கவேண்டுமென்று யெம்பெருமாளாய்ப்பிறந்தீர்
இன்னமென்னவினைவருமோ யானறியேனாண்டவனே
ஏதேதுசெய்வானோ இராசன்திரியோதிரன்
அத்தனைக்கும்வந்திருந்து அடியாரைக்காருமென்றார்
என்றல்லோஐவருமாய் இறங்கியடிபணிந்தார்
மெத்தமனமகிழ்ந்தார் மேகவண்ணரெம்பெருமாள்
சித்தமகிழ்ந்தார் தேகமெல்லாந்தான்குளிர்ந்தார்
நல்லதுபஞ்சவரே ராசர்களே நீர்கேளும்
இந்தவனத்தைவிட்டு இன்னமொருவனத்தில்
மற்றுமொருவனத்தில் வாசங்கள்பண்ணுமென்றார்
என்னவினைவந்தாலும் என்னை நினையுமென்றார்
போய்வாரோமென்று பெருமாள்பயணமிட்டார்
ஏமன்கடாவின்மேல்எம்பெருமாள்கருடன்மேல்
வாகனத்தின்மேலேறி வழிபிடித்துப்போனார்கள்
எமபுரந்தான்தேடி யோமனும்போய்விட்டான்
நாலாம்வருஷம்முடிந்ததுபஞ்சவர்க்கு.

நான்காவது காளமகாரிஷிவனம்
முற்றிற்று.

---

## ச-து, சயித்தவமகாரிஷிவனம்.

ஐந்தாம்வருஷம்பிறந்தது ஐவருக்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கையானகத்தில்
துத்திபுளிகாணை தும்பையுந்தா துவளை
தின்றுதிரிகிருர் தேசாந்திரிபோலே
சயித்தவரிஷிவனத்தில் தானடந்தார்பஞ்சவர்கள்
ஓரடிக்குப்பர்னசாலை உண்டுபண்ணுரவர்களும்
மூன்றடிக்குப்பர்னசாலை முடிமன்னருண்டுபண்ணுர்
ஐந்தடிக்குப்பர்னசாலை ஆணழகருண்டுபண்ணுர்
ஆறடிக்குப்பர்னசாலை ஐவர்களுமுண்டுபண்ணுர்
ஏழடிக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணுர்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்குடியிருந்தார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவ்வனத்திற்குளிருந்து
அந்தவனத்திலே அனேகநாள்வாசம்பண்ணுர்
அனேகநாள்சென்றபின்பு ஆரங்குதுரோபதையும்
அந்தவனஞ்சாரிவர ஆரணங்குதுரோபதையும்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கையிலே
உச்சிதங்கள்பார்த்தே உலாவிவருகையிலே
ஆகாயந்தன்னளவாய் அங்கேயொருமரந்தான்
வளர்ந்துதழைத்து மரத்தில்பழுத்திருக்கும்
ஒண்டிப்பழந்தான் உயர்ந்தகிளைமேலிருக்கும்
சூரியகாந்தியைப்போல் தோணுது துரோபதைக்கு
மெத்தாசைப்பட்டாளே மெல்லியிளங்கொடியாள்
கண்டாசைப்பட்டாளாங் காண்டீபன்தேவியரும்
இந்தக்கனியை எவர்பறித்துத்தான்கொடுப்பார்
தருமருடன்சொன்னால் தலைவரிதைக்கேளாரே
மதவீமருக்குரைத்தால் வயிறாவுண்டிடுவார்
நகுலசகாதேவர் நம்மால்முடியாதென்பார்
அருச்சுனற்குத்தானுரைத்தால் அவராலேயாகுமது
மற்றொருவர்தன்னாலே மாளாதுகனிபறிக்க
அருச்சுனனைமெள்ள அழைத்துவருவோமென்று



மெல்லநடந்தாளே வேல்பொருதுங்கண்ணாளும்
கொஞ்சிநடந்தாளே கொய்பேரிடையாளும்
அருச்சுனராசரண்டை ஆணழகிவந்துநின்று
அருச்சுனரைக்கண்காட்டி அழைத்தாளேஇப்புறத்தில்
ஜாடையறிந்தலவோ தார்வேந்தனோடிவந்தான்
தருமரறியாமல் தையலருமேதுசொல்வாள்
ஒருமனவுளந்தனுக்கு உத்தாரந்தாருமென்ருள்
அந்தவுரைகேட்டு அருச்சுனருமேதுசொல்வார்
மனதில்நினைத்ததெல்லாம் மயிலணையே கேளுமென்ருர்
சிந்தையிலெண்ணமெல்லாம் சீராகச்சொல்லுமென்ருர்
கேட்டமனுவுக்கு கிளிமொழியேதாரேனென்ருன்
உரைத்தபடியுனக்கு தருவேன்காணுத்தமியே
அந்தமொழிகேட்டு ஆரணங்குதுரோபயையும்
கொஞ்சினவார்த்தையுடன் கோபாலன்தங்கையரும்
முத்துநகையாளும் முருகுழலாளேதுசொல்வாள்
காணுதுகண்டேனையா கண்டாசைப்பட்டேனையா
பாராதுபார்த்தேனையா பார்த்தாசைப்பட்டேனையா
சங்கத்தைக்காய்ச்சியே தரையில்கவிழ்த்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டதுபோல்
சூரியனைப்போலழகாய்த் தோணுதுமாங்கனிகாண்
சந்திரனைப்போலழகாய்த் தானிருக்கும்மாங்கனிதான்
அந்தக்கனியுண்பதற்கு ஆசையாய்த்தோணுகுது
மாங்கனியையுண்பதற்கு மனதுமெத்தத்தோணுகுது
அந்தக்கனிபறித்து அருச்சுனரேதாருமென்ருள்
மாங்கனிதனைப்பறித்து மன்னவரேநீர்தாரும்
என்றுவணங்கினுளே இளங்கொடியாள்பாஞ்சாலி
வணங்கியெழுந்திருந்து மன்னனுக்கேதுசொல்வாள்
தனஞ்சயரேகனிபறித்துத் தாராமற்போனுக்கால்
தண்ணீர்குடியேன்காண் தாகவிடாய்தீரேன்காண்
ஆறுமாதமானாலும் அன்னம்புசியேனென்று
சொல்லிப்பிணங்கினுளே துரோபதைபாஞ்சாலி
ஆணு உழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்

கனிக்காக நீபிணங்க லாகுமோகட்டழகி
இதற்காய்பிணங்குவரோ இட்சணமேதாரேனென்றான்
அந்தரமாயிருந்தாலும் அறுத்துநான்தாரேனென்றான்
எந்தமரத்திலே யிருக்குதுபெண்ணரசே
பழங்களிருக்கின்ற பாரவனமெங்கேயென்றான்
என்றவர்கேட்க இளங்கொடியாளப்பொழுது

### அருச்சுனன் துரோபதைக்கு மாங்கனிபறித்துக் கொடுக்கவருகிறது.

வாருமையாவென்றுசொல்லி வணங்கியெழுந்திருந்து
அழைத்துவருகிறாள் அர்ச்சுனராசாவை
கூட்டிவருகிறாள் கொப்பெனவேஅர்ச்சுனரை
கடந்தார்சிலதூரம் கனியிருக்குமவ்வனத்தே
வந்தாரிருவருமாய் மங்கைதுரோபதையும்
இதுதான்மரமென்று இளங்கொடியாள் காட்டவுற்றாள்
ஆணலழகுமன்னன் அருச்சுனராசதுரை
மரத்திலிருக்குமந்த மாங்கனியைத்தான்பார்த்து
ஆயிரம்யோசனைதூரம் அந்தரமாயிருக்கிறது
இந்தக்கனிபறிக்க எவரால்முடியுமென்று
இத்தனைதூரத்தி லிருக்கின்றமாங்கனியை
எப்படிக்குநாம்பறித்து ஈந்திடலாம்துரோபதைக்கு
என்றுநினைந்து எழில்விஜயனப்பொழுது
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அம்பூறாத்தூணியிலே அகலம்புதானெடுத்து
அர்த்தசந்த்ரபாணமதை அருச்சுனருமுச்சரித்தார்
மந்தரதாபமிட்டு வாங்கிவிட்டானக்கனிமேல்
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளவிட்டானே
வருகுதுஅஸ்திரந்தான் மாங்கனியைத்தள்ளுகிது
மரத்தில்பழைத்தையல்லோ பாணமறுக்கையிலே
அந்தக்கனிவிழுமாம் அண்டரண்டந்தானதிர
அண்டங்களதிர்ந்துவிழ அவனிபாதாளம்விழ





பூமியதிர்ந்துவிழ பூலோகந்தத்தளிக்க
எல்லையதிர்ந்துவிழ யமலோகந்தத்தளிக்க
கெற்பங்கலங்குது தெந்தருவலோகமெல்லாம்
ஓங்கும்பெருங்கால்தான் ஒருபக்கம்நீர்வாங்கும்
நட்சத்திரங்களெல்லாம் நாலுதிக்கும்தானதிர
பூமியதிரசேடன் புஜத்தோடேபுஜமதிர
ஆதிசேட்ன்தானும் அதிர்ந்துமேநஞ்சுகக்க
ஆகாசம்நின்றதிர அங்கப்போவிழுந்தது
மரத்திலிருந்தகனி மண்மேல்விழுந்தது [ள்
அருச்சுனருந்துரோபதையும் அக்கனியைப்பார்த்தார்க
பாரமலைபோலே பருவதம்போற்றேணுது
இருவராலாகாது இந்தக்கனியெடுக்க
இந்தக்கனியைநா மெடுத்துமுடியாது
ஆணலழகனவன் அருச்சுனனுமேதுசொல்வான்
தோராவடிவழகி துரோபதைநாயகியே
வெற்றிமதயானை வீமரை அழையுமென்றான்
அப்படியேநல்லதென்றாள் ஆனந்தவாழ்மாரி

துரோபதைவீமனை அழைக்கவீமன்வருகிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அன்னமதுபோலே ஆரணங்குவந்துமல்லோ
வெற்றிமதயானை வீமருகில்வந்து
அருச்சுனராசரும்மை அழைத்தோடிவாருமென்றார்
சீக்கிரம்வருகவென்றுதேன்மொழியுந்தெண்டனிட்டாள்
வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று ஆனந்தவாழ்மார்பன்
இருந்தஇடத்தைவிட்டு உழுந்துநடந்தானே
இருவருமாகவே ஏகிநடந்துவந்து
கனியிருக்குமவ்வனத்தே கடிகியேகண்டார்கள்
தருமரறியாமல் அழைத்துவந்தாள்தையலரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்

அசைக்கியேபார்த்தாளே அசையவில்லை அக்கனிதான்
வெற்றிமதயானை வீமனையேதுசொல்வேன்
நகுலசகாதேவர் ராசாவை அழையுமென்றான்
ஆரணங்குதுரோபதையும் அப்படியேநல்லதென்று

துரோபதை நகுலசகாதேவர்களை அழைக்க
அவர்கள் வருகிறது.

---

கொஞ்சியேவந்தாளே கொம்பேரிடையாளும்
நகுலசகாதேவ ராசாக்கள்முன்னேவந்து
அருச்சுனரும்வீமரும் அழைக்கிறாருங்களைத்தான்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
நகுலசகாதேவ ராசாக்கள்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று ஆனந்தமாயெழுந்தார்
மூவர்களுமொன்றாகி முடுகிவந்தார்கானகத்தே
மாங்கனிதானிருக்கும் வனத்தில்வந்துசேர்ந்தார்கள்
நகுலசகாதேவ ராசர்களும்வந்தாரென்று
எல்லவருமொன்றாகி எடுப்போங்கனியையென்று
ஐந்துபேருங்கூடி அக்கனியைத்தானெடுத்தார்
என்னபலங்கொண்டு இழுத்துவலித்தாலும்
எந்தவிதத்திலேயும் எடுபடலை அக்கனிதான்
சிந்தைகலங்கினார்கள் திடுக்கிட்டுமெய்மறந்தார்
மெத்தப்பயமாச்சே வேந்தர்கள்நால்வருக்கும்
தோராவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
அழகானதருமருக்கு அறிக்கையிடும்பெண்ணேயென்றார்
தோராவடிவழகிதுரோபதையுந்தான்கேட்டு
ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்று

மாங்கனியினால் ஐந்துபேருந் திகில்பட்டுத் துரோபதை
தருமரை அழைக்க தர்மர்வருகிறது.

---

துள்ளியெழுந்தாளே துரோபதைநாயகியும்
ஓடிநடந்தல்லவோ ஒருநொடியில்வந்தாளே



தருமரெதிரில்வந்துசாஷ்டாங்க தெண்டனிட்டு
வாள்விஜயருச்சுனரும் மாங்கனியைத்தானறுத்தார்
எடுத்தாலெடுபடலை யென்றுவாச்சொன்னார்காண் [ள்
வாருமையாவென்றுசொல்லிவருந்தியேதெண்டனிட்டா
தக்கபுகழுடைய தருமருங்கேட்டு
இதுஎன்னஅதிசயங்களென்றேயெழுந்திருந்தார்
தருமருந்துரோபதையும் இருவரும்வந்தார்கள்
மாமரத்தருகேவந்தார் மகராசர்தருமலிங்கம்
உற்றுற்றுப்பார்த்துமே யோசனைபண்ணுகிறார்
தம்பிமார்நால்வரையும் தருமரவரழைத்து
சாயாம்புமன்னவனார் தருமரங்கேதுசொல்வார்
ஆருண்ணுமாங்கனியோ அறியேனேதம்பியரே
எவருண்ணுமாங்கனியோ யேதுமறியேனே
எந்தெந்ததேவர்கள் எடுத்துப்பொசிக்கிறதோ
சத்திரியவர்கள் சந்யாசியுண்கிறதோ
மேலுலகமெந்தருவா சாலவந்துண்கிறதோ
கைமோசம்வந்துதென்று கூடியேதருமாயர்

மாங்கனியினால் மோசம்வந்துதென்று தருமர்
எம்பெருமானை நினைத்து தோத்திரம்
பண்ணுகிறது.

---

தக்கபுகழுடைய தருமரவர்பயந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
உள்ளங்குலைந்துமல்லோ உடம்புவிடவிடத்து
மன்னர்மனஞ்சலித்து மனதிலேஎண்ணுகிறார்
ஆரை நினைக்கிறார் அளவற்றசிந்தையிலே
எவரை நினைக்கிறார் எண்ணமற்றசிந்தையிலே
மாயன்பெருமாளை மனதில்நினைத்தாரே
அண்டமுலகளந்த ஆதிமூலமிங்கேவர
எழுகலமாண்டசுவாமி எம்பெருமாளிங்கேவர
மண்ணளந்துகணக்குச்சொன்ன மாயவரேயிங்கேவர
தாடகைமூக்கறுத்த தயாளகுணமிங்கேவர

முன்னாகமன்னுக முன்வேசரிப்பாரே
இன்னுள்பிழைத்திருந்தே இறந்துவிடநாளாச்சே
சேனநாள்பிழைத்திருந்து செத்துவிடநாளாச்சே
திரியன்செய்தவஞ்சனைக்கு ஒளிந்துதப்பிப்பிழைத்தீரே
மாபாவிசெய்ததற்கு மானமாயிருந்தீர்கள்
இந்தவனத்திலே இறந்துவிடக்காலமோதான்
சயிந்தவரிறியாலே சாவரைநாளாச்சே
இதற்கோபெனையழைத்தீர் என்றுரோமாயவனர்
எம்பெருமான் கனியின்வரலாறுசொல்லி தன்னுலே
என்றும் ஆகாதென்றுசொல்ல தருமர்
புலம்புகிறது.

---

இப்படியாகவேதான் செப்பத்திருமாலும்
இவ்வார்த்தைகேட்டாரே எழிலானதருமலிங்கம்
முகில்வண்ணர்முன்னுலே முறையிடத்தொடங்கினர்
ஆகாததம்பிமார் அசடருடன்பிறந்தேன்
பொல்லாததுஷ்டருடன் பிறந்ததொருதன்மையினுல்
(என்) அங்கங்குலையுதே ஆண்டவரேஎன்னசெய்வேன்
என்னையறியாமலிக்கனியைத்தானறுத்தார்
அறிந்தேனேயாமானுல் அறுக்கவொட்டேனிக்கனியை
பார்த்தேனேயாமானுல் பறிக்கவொட்டேன்மாங்கனியை
அடியார்கள்செய்தபிழை ஆண்டவரேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தகுற்றந் தேவர்மனம்பொறுத்து
(உன்) உள்ளங்கைநெல்லிப்பழம்உருக்குலைந்துபோகாமல்
(உன்) பெட்டியின்பூஷணங்கள் பெருமைகுலையாமல்
(உன்) தோளில்செபமாலை தொண்டறிந்துபோகாமல்
(உன்) கையில்செபமாலை கலைந்துபோகாமல்
காக்கக்கடனுனக்குக் கரியமாலெம்பெருமான்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
என்றுதருமாங்கே நின்றுபுலம்பக்கேட்டு



மாயன்பெருமானும் மறுவார்த்தையேதுசொல்வார்
என்னைவெறுக்காதே என்மேல்சலியாதே
உத்தமரேஉங்களாலே இந்தப்பொழுதாச்சு
ஏகச்செலவருளும் என்னுயிர்பெருமானும்
தக்கபுகழுடைய தருமராசரேதுசொல்வார்
பரிதாபம்தாங்கள்படப் பார்த்துமேபோவதற்கு
மனமும்வருகிறதோ மாயவரேஉந்தனுக்கு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்மாயவரும
புகழ்வேந்தர்வார்த்தைக்குப்பொருந்த வேணுமிக்கனிதா [ன்
ஐவருடவார்த்தையினுல் அம்மரத்திலொட்டவேணும்
அல்லாதேயாமானுல் ஆராலுமுடியாது
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
அடியேனுலாவதேது ஆண்டவரேசொல்லுமையா
எம்பெருமான்ஐவருடைய எண்ணமும்துரோபதை
எண்ணமும் அறிந்து மாங்கனிமரத்தில்
பொருந்தினது.

---

தருமருரைகேட்டு சாமிமனமகிழ்ந்து
மாயன்பெருமானும் வார்த்தையேதுசொல்வார்
ஐவர்மனதறிய ஆண்டவரேதுசொல்வார்
தக்கபுகழ்பெரிய தருமரே நீர்கேளும் [ல்
(உன்) மனதிலேதானிருக்கும்மர்மத்தைச்சொன்னீயானு
வஞ்சனைகளொன்றுமே மனக்கவடுவையாதே
உண்டானபடியாக உரைத்தீரேயாமாகில்
அற்றுவிழுந்தகனி அம்மரத்திலொட்டுமென்றார்
மண்மேல்விழுந்தகனி மரத்தின்மேலேறுமென்றார்
அல்லாதேயாமானுல் அக்கனிபொருந்தாது
இல்லாதேயாமானுல் இறந்துமடிவீர்கள்
சொல்லாதபோனுலே சுருக்காய்மடிந்திடுவீர்
பெருமாளவர்சொல்லப் பேர்பெரியதருமலிங்கம்
மாயருரைகேட்டு மகாராசரேதுசொல்வார்

மனதிலிருக்கின்ற மர்மமதைச்சொல்லுமென்றுசொல்வார்
நன்மனதிலுள்ளபடி தார்வேந்தரே யென்றுசொல்வார்
பெரியதந்தைபெற்றெடுத்த பிள்ளை திரியோதிரன்
தம்பிமார்தன்னுடனே தானுமுண்டானாதால்
ராச்சியம்நலமாகி நாமும்சுகப்பட்டால் [று
நாடெங்கும்வாழ்ந்திருந்தால்கேடொன்று மில்லையென்
பெரியோருரைப்படிக்குப் பூமிசுமங்காதோ
என்று நினைவொழிய இனியொன்றுதானறியேன்
இப்படிக்குத்தானுரைத்து இருந்தாரேதர்மலிங்கம்
அப்போதுமாங்கனியும் ஆகாசமேயெழும்பி
அறுந்துவிழுந்தகனி அந்திரத்திலெழும்புகுது
இருநாழியோசனைகள் எழும்பியேநின்றுதங்கே

மாயனுக்குதருமர்மனோபாவஞ்சொல்மாங்கனி
இருநாழியோசனை தூரமெழும்ப பெருமாள்
வீமனைக் கேட்கிறது.

---

எம்பெருமான்மாயவரும் எதுசொல்வாரப்போது
மகவீமனையழைத்து மாயவனுரைசொல்வார்
உன்மனதிலுள்ளபடி யுரையுமென்றார்மாயவரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
திரியோதிரராசன் சேனைபரிகலங்கள்
குருநடன்மகனாரங் குடிகெடுத்தராசர்களை
ஆலாகடுந்திரளாய் அற்றெருவராசர்களை
கௌரவர்சேனைகளைக் கண்டதுண்டமாக்கியல்லோ
ஆனைகுதிரைகளை அழகுள்ளசேனைகளை
சாமத்துரோகி சகுனியவனையுமே
கொன்றுஅதமாக்கி கொம்பனையாள்துரோபதையை
கொற்றார்குழலியரைக் கூந்தல்முடிக்கவைப்பேன்
துகிலையுரிந்தகொரு ஆர்ச்சாதனனுதிரமெல்லாம்
வாரிக்குடித்தாலே வயிறெரிவுதீருமையா
அள்ளிக்குடித்தாலே அங்கந்தரிக்குமையா



பார்பெரிய அண்ணருக்குப் பட்டந்தரித்தாலே
அப்போதுஎன்மனது ஆயாசந்தீருமையா
வெற்றிமதயானை வீமனுரைக்கையிலே
என்றபொழுதே எழும்புதுமாங்கனிதான்
சாற்றும்நாலுநாழியோசனை தூரம்நின்றிடுமாம்

மாயனுக்கு வீமன்மனோபாவஞ்சொல்ல மாங்கனி
நாலுநாழியோசனை தூரம் எழும்பப்பெருமாள்
அருச்சுனனைக்கேட்கிறது.

():(*):()

அப்போதுஎம்பெருமான் அங்கனவேயேதுசெய்தார்
அருச்சுனனைப்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
வாள்விஜயாஉந்தனுட மனதில்நினைத்ததெல்லாம்
ஒன்றுமொளியாமல் உரையுமென்றார்மாயவனார்
என்றுமவருரைக்க எழில்விஜயனர்ச்சுனனும்
மாயனுரைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
கர்னன்சகுனியும் காங்கேயரானவரை
கொல்லுகிறேனென்றுசொல்லிக் கொடியசபதமிட்டேன்
சங்கமரைக்கொல்லுகையில் சமர்பூமிக்ஷேத்திரத்தில்
அமரதர்சமரதர் அளவற்றராஜாவங்கள்
அனைவரையுங்கொன்றுமே அண்ணருக்குப்பட்டங்கட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அடிபணிந்து நிற்கவென்று
எண்ணியிருக்கிறேன் இனியொன்றுமில்லையென்றான்
அறுநாழியோசனையில் நின்றது அக்கனிதான்

மாயனுக்கு அருச்சுனன் மனோபாவஞ்சொல்ல
மாங்கனி அறுநாழியோசனை தூரம் எழும்
ப்ப பெருமாள் நகுலனைக்கேட்கிறது.

---

அப்போது எம்பெருமான் அங்கனவேயேதுசெய்தார்
நகுலனைத்தானழைத்து நாரணருமேதுசொல்வார்

நாமமுடியானே நகுலனேயென்றுரைத்து
மனதில்நினைத்ததொரு மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயருரைகேட்டு மன்னவனுமப்பொழுது
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
துரியோதனன்படைகள் சேனைகளைக்கொன்றழித்து
ஆனைசேனைபரிவாரம் அட்டங்களுங்கொன்றழித்து
மாராளுரதங்கள் வழியவிட்டுடலம்மேலே
அதமாக்கிசேனைகளை அண்ணருக்குப்பட்டங்கட்டி
(என்)கண்ணாலேபார்ப்பதற்கு கருத்தில்நினைத்தேனையா
என்றுமவனுரைத்து இருந்தான்நகுலனுமே
அந்தவுரைகேட்டு அழகானமாங்கனியும்
எண்ணூறுயோசனையில் நின்றதுஅக்கனிதான்

பெருமானுக்கு நகுலன்மனோபாவஞ்சொல்ல மாங்
கனி எண்ணூறுயோசனை தூர மெழும்பப்
பெருமான் சகாதேவனைக்கேட்டது.

எம்பெருமான்மாயவரு மேதுசெய்தாரப்பொழுது
சகாதேவராசாவை சாமியார்கேட்கலுற்றார்
இளையசகாதேவா என்னமெல்லாஞ்சொல்லுமென்றார்
நாமமுடியழகன் சகாதேவனேதுசொல்வான்
துரியோதனன்படையை சேனைபரிதளத்தை
உன்பாதம்சிரசில்வைத்து உக்கிரமாய்ச்சண்டைசெய்து
அண்ணனுக்குப்பட்டங்கட்டி அவனிதனையாளவென்று
எண்ணியிருக்கிறேனே இதுவேநினைவொழிய
மற்றொன்றுமில்லையென்று மாயர்பாதம்பணிந்தான்
இவ்வாறுதானுரைத்து இருந்தான்சகாதேவன்
அப்போதுமாங்கனியும் அனேகதூரமெழும்பி
தொளாயிரம்யோசனை தூரம்நின்றதக்கனிதான்



எம்பெருமானுக்குசகாதேவன் மனோபாவஞ்சொல்ல
மாங்கனி தொளாயிரம்யோசனை தூரத்தில்நிற்க
எம்பெருமான் துரோபதையைக்கேட்கிறது.

ஆதிநாராயணரும் அங்ஙனவேயேதுசெய்தார்
மாயன்பெருமானும்வார்த்தைகளேதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பத்தினியே துரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நீலப்பசுங்கிளியே
ஐவருக்குந்தேவியரே அழியாதபத்தினியே
மனதில்நினைந்ததெல்லாம் மங்கையரேசொல்லுமென்றார்
நெஞ்சில்நினைந்ததெல்லாம் நேராகச்சொல்லுமென்றார்
அப்போதுதுரோபதையும் ஆரணங்குமேதுசொல்வாள்
ஆரத்திலம்புலியாள் தூசிபடாப்பத்தினியாள்
வானத்திலம்புலியாள் மாசுபடாப்பத்தினியாள்
என்னவென்றுசொல்லலுற்றாள் நீலப்பசுங்கிளியாள்
துரியோதனன்பாளயத்தை செருக்களங்கள்கொன்றழித்து
ஐவர்களிட்டதொரு அருஞ்சபதஞ்சென்றபின்பு
வெற்றிமதயானை வீமருடகையாலே
பாம்புக்கொடிவேந்தன் பட்டபிறகாக
தென்னமுடிவேந்தன் துரியோதனன்பட்டபின்பு
நாகக்கொடியோனும் நாசமடைந்தாலே
(அவன்) மல்லாக்கவிழுந்தவுடன் மார்பிலேநானிருந்து
மார்பைப்பல்லையாக்கி மார்பெலும்பைச்சிப்பாக்கி
மார்பில்வருமுதிரமெல்லாம் வாரித்தலைதடவி
நல்லெண்ணெயைப்போலே நலங்கிட்டுக்கூந்தலுக்கு
சீப்புசிக்கங்கோதியெடுத்து சிவிமயிராற்றி
(அவன்)குடலைப்பிடுங்கியல்லோகொண்டைக்கயிறுகட்டி
சாவின்பின்னெடுத்து பிடுக்கித்தலைமயிர்முடிப்பேன்
(என்) விரித்ததலைமுடிக்க மெத்தநாள்சென்றிடுமோ
அவிழ்ந்ததலைமுடிக்க அனேகநாள்சென்றிடுமோ
கூந்தல்முடிப்பேனே குறைகளெல்லாந்தீர்வேனே

சாபித்தயனாலே தலையைமுடிப்பேனோ
என்று நினைத்திருந்தேன் இனியொன்றுநானறியேன்
இந்தவிதஞ்சொல்லி இருந்தாளேபாஞ்சாலி

துரோபதை மனதுபோலச் சொன்னது சரியல்லாமல்
தொளாயிரம்யோசனை தூரம்போன மாங்கனி
பூமியில்விழ பெருமான் துரோபதையைக்
கேட்கத் துரோபதைசொல்லல்.

---

துரோபதைசொல்லுமே தாமிருந்தகனி
அந்தரத்தில் நின்றகனி அவனிடத்தில்விழுந்தது
ஆகாசம்போனகனி அற்றுவிழுந்தது
கண்டார்கரியமாலுங் கடுகெனவேயதுசொல்வார்
மனதில்கபடுவைத்து வஞ்சனைகள்சொன்னதினால்
அந்தரத்தில் நின்றகனி அவனியிலேவிழுந்ததென்றார்
ஏதோதொளித்தாயோ எந்தனுக்குச்சொல்லுமென்றார்
ஒன்றுமொளியாமல் உத்தரியேசொல்லுமெனறார்

துரோபதைமறுபடியும்பெருமானுக்குஉண்மையைச்
சொல்ல மாங்கனி மரத்தில்
பொருந்தினது.

---

அப்போதுரோபதையும் ஆரணங்குசதுசொல்வாள்
அண்ணாவே நீர்கேளும் அடியேனொருவார்த்தை
இன்னமொருபாவம் இனியொன்றும்நானறியேன்
மற்றுமொருபாவம் வஞ்சனைகளொன்றறியேன்
யாதொருவஞ்சனைகள் இட்டதுகள்யானறியேன்
அண்ணாகரியமாலே அடியேனொருவார்த்தை
பார்த்தனைமாலையிடப் பாஞ்சாலனென்னைப்பெற்றான்
வயிற்றினிற்பிறந்ததில்லை வயிற்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேறுமுண்டு



அடிக்கிறகாற்றதனில் அலைத்துரும்புதானுமுண்டு
காலவிஷமுண்டவற்கு கண்டங்கறுப்புமுண்டு
நீரிற்சுழலுமுண்டு நிலமதனிற்பூச்சியுண்டு
தண்ணீர்க்கலையுமுண்டு சந்திரற்குமாசுமுண்டு
சந்திரற்குமாசுமுண்டு சற்றேமறுப்புமுண்டு
குண்டுமணிக்காணலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
(எனக்கு)மையேகறுப்பொழிய மற்றகருப்புமில்லை
பொட்டேகறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
அக்கினியிற்பெண்பிறந்தேன் ஐவரையுமாலையிட
நெருப்பிலேபெண்பிறந்தேன் அருச்சுனரைமாலையிட
(என்) கூடப்பிறந்தது கோதண்டமானவில்லு
பத்தரையில்நான்வளர்ந்தேன்பார்த்தரேவேணுமென்று
அடுக்கரையில்நான்வளர்ந்தேனர்ச்சுனரேவேணுமென்று
வளர்ந்துசமைந்தேனே மாலையிடும்நாளானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெறும்நாளாச்சு
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
எழிலான அர்ச்சுனற்கு என்னைக்கொடுக்கவென்று
என்தகப்பன்பாஞ்சாலன் எண்ணியிருக்கையிலே
அரக்குமாமாளிகையில் ஐவர்மடிந்தாரென்று
மாண்டார்களென்றுசொல்லி மண்டலத்திற்பேராச்சு
செத்தார்களென்றுசொல்லி ஜெகமெல்லாம்பேராச்சு
அப்போதுஎன்தகப்பன் ஆயாசப்பட்டுருகி
அருச்சுனற்கென்றபெண்ணை ஆர்க்குக்கொடுப்பேனென்
வில்லைவளைப்பார்கள் மேதினியிலிலையென்று
ஏலம்பசுங்கிளியை எப்படிக்காப்போமென்று
எண்ணாதுமெண்ணியே இருந்துவிசாரமிட்டார்
இப்படியாக யிருக்கின்றகாத்திலே
வந்தாரே அந்தவேளை மகாவியாசபகவானும்
என்தகப்பன்பாஞ்சாலன் எழுந்திருந்துஓடிவந்து
கண்டவுடனேயல்லோ கடுகஎழுந்திருந்து
வந்தவியாசரை வணங்கியேதெண்டனிட்டு

இருமிருமென்றுசொல்லி யிட்டார்சிம்மாதனங்கள்
இட்டசிம்மாதனத்தில் ஏறியவர்வீற்றிருந்து
என் தகப்பனைப்பார்த்து என்னவென்றார்உன்க்ஷேமம்
அப்போதுஎன் தகப்பன் ஆயாசமாயுரைப்பார்
எந்தன்விசேஷமெல்லாம் எடுத்துஅவர்க்குரைத்து
அருச்சுனற்கென்றுதான் அவனிற்பிறந்ததும்
அரக்குமாமாளிகையி லெரிந்ததும்
இக்கனையுஞ்சொல்லி இருந்தாரேஎன் தகப்பன்
அப்போவியாசரும் அரசனுடையவர்க்கதையெல்லாம் [வார்
செவிகொடுத்துக்கேட்டுமல்லோ சீக்கிரமாயேதுசொல்
உந்தமியாள்தன்னுடனே ஒன்றாய்ப்பிறந்தவில்லு
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லு
எடுத்துநிறுத்துமென்றார் எல்லவருந்தானறிய
பெருவில்லைவளைத்தவர்க்குப்பெண்ணைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசர்கள்தானறிய
அரசர்கள்தானறிய அறையும்பறையோசை
அப்போதறிந்திடலாம் ஐவருடசேதி
என்றுமவருரைத்து விடைநடந்தாரே
அந்தவுரைகேட்டு ஆனந்தமாயெழுந்து
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லை
வந்துவளைத்தவர்க்கு மாலையிட்டுத்தாரேனென்று
வில்லைவளைத்தவர்க்கு மெல்லியைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்து அரசருக்குமோலைதந்தார்
பெண்ணைத்தருவேனென்றுபிடித்தார்கள்சின்னத்தொனி
சின்னத்தொனியையல்லோதேசமெல்லாமுண நிவைத்தா
பாஞ்சாலன்சீமையெல்லாம பந்தலலங்கரித்தார் [ர்
எங்குமலங்கரித்தார் இராசாக்கள்வந்திருக்க
பாஞ்சாலன்சொன்னதொரு பரிவான்வார்த்தையினால்
ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசர்கள்வந்திருக்க
நாலுபுறத்திலுள்ள ராஜரெல்லாம்வந்தார்கள்
முத்துமுடிதரித்த முடிமன்னரானவரும்
பச்சைமுடிதரித்த பட்டத்தரசர்களும்



வச்சிரமுடிதரித்த மண்டலத்தரசர்களும்
காசிநாடாண்டதொரு கர்னமகாவீரியரும்
நாலுதிக்கிலுண்டான ராஜரெல்லாம்வந்தார்கள்
அப்பெரியபந்தலிலே அருச்சுனரும் நீருமாய்
அன்றொருபார்ப்பானாய் அங்குநீங்கள்வந்தீர்களே
பாஞ்சாலன்தானறியான் பாளந்தாரானதுரை
ஆருமறியாமல் அவரெடுத்தமார்க்கமெல்லாம்
உங்கள்வடிவுதன்னை ஒருவரறியார்கள்
அந்தச்சமயத்தில் அடைவுடனேஎன்தகப்பன்
வந்திருந்தரசர்களை வளையுமென்றார்வில்லதுவை
எப்பெரியராஜர்களும் இவ்வில்வளைக்கறியார்
காண்டீபந்தனையெடுப்பார் கலங்கியேவைத்திடுவார்
ஆராலுமுடியாது அப்பெரியவில்வளைக்க
காசிநாடாண்ட கருணனெழுந்திருந்து
வில்வளைத்துமல்லோ வில்நாரிபூட்டுகையில்
எண்ணுதுமெண்ணினே இவனேபுருஷனென்று
வடிவுசிலையுடையான் மாலையிடவேணுமென்று
எண்ணினேனென்மனதில்இனியொன்றும்நானறியேன்
வில்லைவளைக்காமல் (கர்னன்வில்தெரித்துபோய்விழுந்தா
அன்றுமொருபார்ப்பானாய் அருச்சுனர்வில்வளைத்தார் [ன்
நீர்பார்த்துமீனெய்தார் நித்திலங்குப்பூமுடியார்
பார்ப்பான்கழுத்திலே பனிமாலைபோடுமென்றார்
குஷ்டரோகியானவற்குக் குடித்தனஞ்செய்வேனோ
என்றல்லோமாலைதன்னை எடுத்தேசுழற்றிவிட்டேன்
கர்னன்கழுத்திலே கைமாலைவிழுகாமல்
பார்ப்பான்கழுத்திலே பனிமாலைவிழுந்தது
அப்பாவஞ்செய்ததல்லால் ஆயரேவேறொன்றில்லை
அருச்சுனற்குமாலையிட்டு ஐவருக்குந்தேவியானேன்
பார்த்தருக்குமாலையிட்டு பஞ்சவர்க்குத்தேவியானேன்
மற்றொருபாவங்கள் மாயவரேசெய்தறியேன்

எம்பெருமானுக்குத் துரோபதை தன்கலியாணச்
சங்கதி சரியாய்ச்சொல்ல மாங்கனி மரத்திற்
பொருந்தியது.

தோராவடிவழகி துரோபதையாள்சொல்லுகையில்
என்றபொழுதிலே எழும்புதுமாங்கனிதான் [ப்
பொட்டெனவேதானெழும்பிப்பொருந்துதேமாங்கனியு
தருமர்மனங்குளிர்ந்து சந்தோஷமானாரே
பஞ்சவர்கள்ஐந்துபேரும் பார்த்துமகிழ்ந்தார்கள்

எம்பெருமாள் பஞ்சவர்க்குப் புத்திசொல்லிதான்
அவர்கையில் செலவுபெற்று துவாரகைக்
குப்போகிறது.

ஐவர்மகிழ்ந்தபின்பு அரிராமரேதுசொல்வார்
பஞ்சவரைத்தானழைத்துப் பாரளந்தாரேதுசொல்வார்
இந்தவனந்தனிலே இருந்தாசிலகாலம்
மற்றொருவனந்தனிலே வனவாசஞ்செய்திடுங்கள்
என்னவினைவந்தாலும் என்னை நினையுமென்றார்
பத்திரமாக விருங்களென்றார்பஞ்சவரை
போகச்செலவுதாரு மென்றெழுந்தார்புண்ணியரும்
பஞ்சவர்களைவரும் பாஞ்சாலிதுரோபதையும்
ஐவருந்துரோபதையும் ஆண்டவனைத்தெண்டனிட்டு
போய்வாருமென்று சொன்னார் புகழ்வேந்தரைவர்களும்
விடைபெற்றெழுந்தாரே வேந்தர்பெருமாளும்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போயுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரியைநாடி துரிதமுடன்வந்துவிட்டார்
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போனபின்பு



ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும்மயிலணையாள்துரோபதையும்
அந்தவனத்திலே அனேகநாள்வாசம்பண்ணார்
இப்படியாக யிருக்கிறார்பஞ்சவர்கள்

ஐந்தாவது சயிந்தவமகாரிஷிவனம்.
முற்றிற்று.

## ௯-வது, காமதேனுபர்வதம்.

ஆறும்வருஷம் பிறந்ததுஐவருக்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தான்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போனார்கள்
அந்தவனத்தைவிட்டு அபபாலேபோனார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடுகியேதானடந்தார்
காமதேனுவனந்தனிலே கடுகவந்துசேர்ந்தார்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகஉண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகஉண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
அனேகநெடுநாளாய் அவ்வனத்திலேயிருந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே

துரியோதிரன் ஆலோசனை.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்தானும்
வணங்காமுடிவேந்தன் மாபாவியென்னசெய்தான்
சபைகள் நிறைந்திருக்கச்சர்ப்பக்கொடியோனுரைப்பான்
காளமகாரிஷியரைக் கருதித்தவசுபண்ணி
ஐவரையுக்கொல்லுமென்று அனுப்பவனந்தனிலே
கொல்லுகிறேனென்றுசொல்லிகொப்பெனவேபோனா

(ஐவர்) செத்தநுவும்பிழைத்தநுந் தேதிதெரியவில்லை
ஆடாதா தூவரே ஆயிரம்பேர்வாருமென்றார்
அப்படியே தூதுவர்கள் அனைவோரும்வந்தார்கள்
துரியோதிரனைவந்துதெண்டனிட்டெநுசொல்வார்
எங்களையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றார்
அப்போ துரியோதிரன் அவர்களுக்குஎதுசொல்வான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
ஐவருமைக்காணாமல் ஆராய்ந்துபார்த்துவாருங்கள்
என்றுமேசொன்னானே எரிநாகங்கொண்டவனும்

துரியோதிரன் தூதர்கள் பஞ்சவரைக்காணவருகிறது

---

மாநாகன்சொன்னதெல்லாம் மல்லர்கள்தான்கேட்டு
வாறார்கள்தூதுவர்கள் மகராசன்சொற்படிக்கு
அத்திபுரந்தாண்டி அவசரமாய்வாறார்கள்
குருக்ஷேத்திரபூமி குருபூமிதேசம்விட்டு
காடுஞ்செடிகடந்து கடுகவேவாறார்கள்
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனம்தாண்டி
சூரியன்வனந்தனிலே தூதர்தேடிப்பார்த்தார்கள்
அங்கேயுங்காணாமல் அப்பாலேதேடிவாறார்
ராமரிஷிவனத்தில் நடந்தெங்குந்தேடிவாறார்
அங்கேயுங்காணாதே அப்புறந்தேடிவாறார்
முருக்கமகாரிஷிவனத்தில் முடுகியேதேடினார்கள்
அங்கேயும்தேடியே அப்பாலேபோகலுற்றார்
கானமகாரிஷிவனத்தில் கடுகியேதேடிவந்தார்
அங்கேயுங்காணாமல் அப்பாலேபோகலுற்றார்
சயிந்தவரிஷிவனத்தில் தாமெங்குந்தேடினார்கள்
அங்கேயுங்காணாமல் அப்புறம்தேடிவாறார்
காமதேனுபர்வதத்திற் கண்டார்கள்பஞ்சவரை
ஐவரையுங்கண்டவுடன் அங்கேபயந்தெளிந்தார்
பஞ்சவர்களைவரையும் பார்த்துத்திரும்பினார்கள்
காவலர்களைவரையுங் கண்டுதிரும்பினாகள



துரியோதிரனனுப்பிய தூதுவர்கள் காமதேனு
வனத்தில் பஞ்சவரைக் கண்டு துரியோ
தனனுக்குச் சொல்லல்.

கண்டல்லோ தூதுவர்கள் கடுகிவழிநடந்தார்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
காடுவனங்களுமே கரியமலைதான்தாண்டி
ஆனந்தமாகவே அத்திபுரத்தில்வந்தார்
துரியோதிரனிருக்கும் சிங்காதனத்தருகே
மகராசன்முன்னாக வந்துபணிந்தார்கள்
வந்துபணிந்துமல்லோ மன்னருக்கேதுரைப்பார்
துரியோதிராசனுக்கு சேதிகளைச்சொல்லலுற்றார்
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே
மாண்டார்களென்றீரே வனத்திலேகண்டோமே
காமதேனுபர்வதத்திற் கண்டுவந்தோம்பஞ்சவரை
அந்தவனத்திலே ஐவரிருக்கின்றார்கள்
பார்த்துபயந்துவந்தோம் பஞ்சவர்களைவரையும்
கண்டுபயந்துவந்தோம் காவலர்களைவரையும்
என்றுமொழிந்தார்கள் ஏகிவந்ததூதுவர்கள்
தூதுவர்கள்சொன்னதெல்லாம் துரியோதிரன் கேட்டு
துள்ளிமனங்கொதித்து சொல்வானொருவார்த்தை

துரியோதிரன்பஞ்சவர்கள்மேல் சண்டைக்குப்போகச்
சகுனியுடன் ஆலோசனைபண்ணுகிறது.

---

என்றவுரைகேட்டு எரிநாகங்கொண்டவனும்
சனைகள் நிறைந்திருக்கச்சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போய் ஐந்தாறுவருஷமுண்டு
வில்வித்தைஆண்மைகளை மெத்தமறந்திருப்பார் [லே
ஆனைகளுஞ்சேனையும் அண்டவொண்ணப் படையுமி
அக்ரோணிசேனைகூட்டி ஐவர்மேல்படையெடுத்தால்
ஐவரைக்கொன்றிடலாம்அதம்பண்ணிப்போட்டிடலாம்

இதுவேசமயங்காண் இராசன.ரக்கொல்லுகைக்கு
அம்மான்சகுனியே நீ ஆலோசனைசொல்லுமென்றான்
சகுனி துரியோதிரனைப் பஞ்சவர்களுடன் சண்டைக்குப்

போகச்சொல்லுகிறது.

அப்போசகுனியும் அங்கேயெடுத்துரைப்பேன்
கொல்லைக்குப்பல்லியவன் குடிக்குச்சகுனியம்மான்
இதுசமயமிதுசமயம் இவன்கொடியைகொடுக்கவென்று
மருமகனுக்காக வார்த்தைகளேதுசொல்வான்
மெய்வார்த்தைசொன்னீர்காண்விஷநாகங்கொண்டவரே
ஐவர்பிழைத்துஇனி ஆரணியம்விட்டுவந்தால்
தப்பிப்பிழைத்துவந்தால் தர்மபஞ்சபாண்டவர்கள்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுகேட்பாரே
இப்போபடையெடுத்து இராசரைக்கொன்றிடலாம்
நல்லசமயங்காண் நமக்குக்கிடைத்ததென்ன
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமாள்
மாமனுரைகேட்டு மகராசரே துரைப்பார்

திரியோதிரன்சண்டைக்குப்போகச் சேனைகளைத்


திட்டப்படுத்துகிறது.

ஆர்காணும்ராசர்களே அருகிருக்குந்திரிகளே
ஐந்துகுருக்கள்களும் ஆயிரஞ்சேவகரும்
பலபலராணுவமும் பத்துலட்சம்சேவகரும்
நாலானசேனைகளும் நடப்பார்கள்தாதியர்கள்
அத்தண்டசேனைகளும் அடங்கலும்பயணமென்றார்

திரியோதிரன் பஞ்சவர்களுடன் சண்டை

பண்ணவருகிறது

அப்போதுதிரியோதிரன் அவனுடையசேனைகளும்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றான்



இன்றுவெளிக்கூடாரம் இயலுடனேபோடுமென்றார்
நாட்டுசென்றார்சண்டாளை நகராயடியுமென்றார் [யை
அங்கேநட்டான்சண்டாளை அடியுமென்றார்பேரிகை
அடிபடுதாரயபேரி அண்டங்கிடுகிடென்ன
சண்டைசண்டையென்றுசொல்லி. சண்டைநகரடிபடுது
ரெணங்கள்ரெணங்களென்று ரெணபேரியடிபடுது
ஆனையின்மேல்பேரிகையும்அசுவத்தின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல் நகபத்துஒருகோடிமுரசுகளும்
தாள்மொடுமத்தளமும் தவுல்முரசுவீராணம்
பதினெட்டுவாத்தியமும் பலதிசையுந்தான்முழங்க
அண்டபிண்டந்தானதிற அடிபடுதே மேளவகை
முக்காததூரமட்டும் முரசுமுழங்கிவர
நாற்காததூரமட்டும் நாகசின்னமூதிவர
ஐங்காததூரமட்டும் அடிபடுதுபேரிகையும்
ஆனையின்மேல்நகபத்து குதிரையின்மேல்டங்காவும்
கானலுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
மழைகளுக்கொடுத்தார்கள் வர்ன.வெள்ளைக்கூடாரம்
பனிகளுக்கெடுத்தார்கள் பட்டுநல்லகூடாரம்
காற்றுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
குதிரையொருகோடி கொக்கரித்துவருகுதங்கே
யானையுஞ்சேனைகளும் அண்டவொண்ணாராணுவமும்
அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
வேதியருமாதியரும் வில்லேந்தரசர்களும்
தொழுவர்மலையாளர் சோனகரும்வொட்டியரும்
பட்டாவுஞ்சூரியும் பாரியவில்சமுதாடு
நேரிசமும்பெரியகத்தி நிகரானபாங்குகளும்
அதிருமிருப்புலக்கை ஆயுதவரிசையுடன்
ஈட்டிகத்திவேலாயுதம் எடுத்தார்கள்சூலாயுதம்
அத்தண்டராணுவமும் அல்லவெரும்பயணமென்றார்

துரோணரும் அசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாசாரி கீர்த்திபெற்றகர்ன னுமே
சாமித்துரோகி சகுனியவன்கூட
மாமாசகுனியும் மைத்துனன்தேத்தாசன்
தங்கைமணவாளன் தறுதலைப்பொட்டிமகன்
அக்காள்மணவாளன் அறுதலியாள்பெற்றபிள்ளை
காந்தாரிபிள்ளைகளும் கவுரவர்சேனைகளும்
குருடன்பெற்றபிள்ளைகளும் கோடியரசர்களும்
ஐவரைக்கொல்லவென்று அனேகம்பேர்பயணமானார்
செந்தூளெழும்புகுது தெய்வலோகங்கப்புகுது
கொடிகள்பறக்குது குவலயமெட்டுருது
முடிகளதிருகுது மூன்றுலோகந்தத்தளிக்க
அச்சுகிறுகிறென்ன ஆனைநெடுந்தேரரைய
வண்டில்கிறிச்சிகளும் மதயானைகோஷ்டமுடன்
குதிரைகளைத்துவிழக் கோடிமன்னர்சத்தமிட
சந்தையிரைச்சலது சமுத்திரக்கோஷ்டமுடன்
செல்லும்ஜனங்கள்தொகை சொல்லிமுடியாது
வீரஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பஞ்சவரைக்கொல்லவென்று பாதகனும்வாரானே
ஐவரைக்கொல்லவென்று அரும்பாவிவாரானே
அஸ்தினபுரந்தாண்டி அப்புறம்வருகையிலே
துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குவருகிற

போது துரோணரைச் சாஸ்திரம் பார்க்கச்
சொன்னது.

---

தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பாவி
துரோணரைத்தானழைத்துச் சொல்வான் திரியோதிரன்
பஞ்சவரைக்கொல்லவென்று பாரவனம்போறோமே
வாருந்துரோணரே வழிநிமித்தம்பாருமென்றான்
ஐவரைக்கொல்லவென்று ஆரணியம்போறோமே



என்னசகுனங்கள் இனிநிமித்தங்காணுது
சகுனத்தைபாருமென்றான் தாமமுடியானும்

துரியன்சொற்படி துரோணர் சகுனம் பார்க்கிறது.

—— (*) ——

தென்னமுடிவேந்தன் துரியோதிரன்சொற்படியே
அரசனுரைப்படிக்கு ஆசாரியானவரும்
தாமமுடியானுக்குச் சகுனங்கள்பார்க்கையிலே
என்னசகுனங்கள் எதிராகக்காணுது
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசமிடமாச்சு வலியன்வலமாச்சு
நரையானிடமாச்சு நரிகள்குறுக்காச்சு
பாம்புகுறுக்காச்சு பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சந்திரர்மேல்பல்லிசொல்லும்
வேடரெதிர்வருவார் வில்லியரெதிரானார்
வெட்டிப்பிடியுமென்று வேடரெதிர்வாரார்கள்
குத்திப்பிடியுமென்று கோட்டானுமோலமிடும்
பட்டப்பகலிலே பகலாந்தைசீறுகுது
நெருப்பெடுத்துக்கூன்கிழவி நின்றெழவுதான்கொடுத்தாள்

துரோணாச்சாரியர் திரியோதிரனுக்குச் சகுனங்கள்
நல்லதல்லவென்று சொல்ல துரியன் அவர்
சொல்லை தடுத்துவருகிறது.

---

துரியோதிரனுக்குத் துரோணரவருரைப்பார்
அப்பாதிரியோதிரா அரசர்சிகாமணியே
எந்தனுடவார்த்தைதனை யிராஜாவே நீர்கேளும்
ஆகாதசகுனங்கள் ஆகுதேயிப்பொழுது [ம
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதேயென்னசெய்வோ
இன்றொருநாள்போக்கி இனியொருநாள் நாம்வரலாம்
சண்டைக்குபோகவேண்டாம்வாருமென்றழைக்கையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரராஜன்

அவ்வார்த்தைதான்கேட்டு அரசுமன்னனேதுசொல்வா
சகுனத்தால்பழுதுமுண்டோ சதிரானராசர்களே [ன்
பொல்லாச்சகுனமென்று போகாமல்நிற்பார்களோ
ஐவருமல்லாமல் அடப்பக்காரப்பையனில்லை
பஞ்சவருமல்லாமல் பலவகையோரொருவரில்லை
இந்தச்சகுனத்தில் ஏதொருகுற்றமில்லை
நடவும்நடவுமென்று நடைபேரியடியுமென்றார்
வருகுதுபாளயங்கள் மண்ணும்விண்ணுங்கொள்ளாமல்
செந்தூளெழும்புகுது சூரியனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பிலேயிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தான்தாண்டி
செந்நாய்புலிகரடி சீருவனந்தான்தாண்டி
எல்லையதுதூரம் முல்லைவனந்தான்தாண்டி
சூரியன்வனந்தனிலே துரைகளெல்லாஞ்சேர்ந்தார்கள்
அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றார்பேரிகை
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள் [யை
மற்றுநாட்காலையிலே வாரார்கள்துரைகளெல்லாம்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்துரைகளெல்லாம்
சண்டாவைநாட்டுமென்றார் சல்லரியடியுமென்றான்
அடித்தார்கள்பேரிகையை அடிவானத்திடிபோல
அன்றுமுகாமங்கிருந்து அடித்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வருகுதுபாளையங்கள்
காளமகாரிஷிவனத்தில் கடுகவந்துசேர்ந்தார்கள் [ன்
ரணபேரிஅறையுமென்றான் நல்லசின்னம்ஊதுமென்று
அரசன்தன்சொற்படியே அறைந்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னத்தொனி உலகேழுந்தானதிர
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே மன்னர்பயணமிட்டார்
காமதேனுபர்வதத்திற் கடுகிவருகையிலே



ஐவரைக்கொல்லவென்று அரும்பாவிவருகையிலே
பஞ்சவரைக்கொல்லவென்று படுபாவிவருகையிலே

திரியோதிரன் ஐவரையுங் கொல்லவருகிறதை
எப்பெருமா ளறிந்துவந்தவர்க்கெல்லாந்
தாகமுண்டாக்கினது.

ஐவருக்கும்வந்தவிதி ஆயருந்தாமறிந்து
கைமோசம்வந்துதே காவலர்கள்பஞ்சவர்க்கு
மோசங்கள்வந்து முடிந்ததுபஞ்சவர்க்கு
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
தோஷிகெடுத்தானே தொண்டர்களைக்கொல்லவென்று
எந்நாளும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எந்தவிதத்திலுமே இறக்கவகைபண்ணுகிறான்
அசதியாய்நாமிருந்தால் ஐவரிறந்திடுவார்
மறதியுடனிருந்தால் மாண்டிடுவார்பஞ்சவர்கள்
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே
தோளில்செபமாலை தொண்டழிந்துபோகுதே
கையில்செபமாலை கனங்குலைந்துபோகுதே
என்னஉபாயமது செய்கிறாரெம்பெருமாள்
வருகிறராசருக்கும் மாநாகக்கொண்டாற்கும்
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயுண்டுபண்ணார்
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயானார்கள்
அத்தண்டராசருக்கும் அடிநாக்குலருகுது
நாவுவரட்டுகுது நடுநாக்குலருகுது
அவ்வனத்தில்தீர்த்தங்கள் அள்ளியுண்ணக்கிடையாது
மாயர்பெருமாளும் மலைராமரேதுசெய்தார்
தேவேந்திரனுடைய சுரபியெனுங்காமதேனு
அப்பசுக்கள்தீர்த்தமுண்ணும் அக்குளமொன்றொழிய
தீர்த்தங்களில்லாமற் செய்துவிட்டாரப்போது
அத்தண்டஜெனங்களுக்கும் அனேகம்விடாயாச்சுது

தண்ணீர்களையாமி தவிக்குதுடாலேயங்கள்
காதையடைத்துக் களைத்தார் துரைகளெல்லாம்
தூதுவரைத்தானழைத்து துரியோதி ரனுரைப்பான்
இந்தவனத்திலே எங்கும்நதியிலையோ
எங்குங்குளமிலையோ யிறங்கியேநீர்த்தமுன்னை
தேடியேபாருமென்று செப்பியனுப்பினான்
அப்படியேநல்லதென்று அந்தவனங்களெல்லாம்
தேடிப்புறப்பட்டார்கள் துரியோதிரன் தூதுவர்கள்
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துபார்த்தார்கள்
காமதேனுதன்குளத்தைக் கண்டார்கள்நீர்த்தமுண்ண
ஓட்டம்நடையுமாய் ஓடிவந்தார் தூதுவர்கள்
துரியோதிரனுக்குச் சேதியுரைத்தார்கள் [ம்
அகலமுள்ளதாயிருக்கும் அலங்காரப்பொய்கைகண்டோ
வாருங்களென்றுசொல்லி வருந்தியே தெண்டனிட்டார்

துரியோதிரன் காமதேனுகுளத்தில் தண்ணீர்

குடிக்க சேனையுந்தானும் வருகிறது.

தென்னமுடிவேந்தன் துரியோதிரன்கேட்டு
நல்லதுவாமேருமென்று நடந்தார்கள்சேனையெல்லாம்
வருகிறவேளையிலே வானுலகஇடையரெல்லாம்

தெய்வலோகத்து இடையர்காமதேனுபசுக்களுக்கு

அந்தக்குளத்தில் தண்ணீர்காட்டவருகிறது.

---

அந்தச்சமயத்திலே அந்தரத்துஇடையரெல்லாம்
வானுலகுஇடையரெல்லாம் மாடுகளைத்தான்திருப்பி
காட்டிலேமேய்க்கின்ற காமதேனு அத்தனையும்
மேய்த்துத்தாக்கியே மிரட்டிக்குளத்தில்விட்டார்
குளத்திலேநீர்குடித்துக் குளமெல்லாஞ்சேருக்கி
தண்ணீர்கலக்கியே கரையில்மண்மேல்மண்கிளம்பும்
குளங்கள்கலக்கியல்லோ குளத்தின்மேல்மண்கிளம்பும்
வாருங்களென்றுசொல்லி வருந்தியே தெண்டனிட்டார்



பசுக்கள் குளங்கலக்கியதை தூதர்சொல்லத் துரி
யோதிரன்கேட்டுக் கோபித்து இடையர்
களைக்கொன்று பசுக்களை மடக்கச்
சொல்லுகிறது.

---

அந்தச்சமயத்திலே அரவக்கொடியோன் தூதர்
தூதர்கள்தான்பார்த்துச் சொல்லுவாராசருக்கு
ஐயையோராசாவே ஆரோதெரியாது
ஆயிரம்இடையர்கள் ஆவுகளைக்கொண்டுவந்து
விட்டுமேஅக்குளத்தை மிதக்கச்சேருக்கிவிட்டார்
தண்ணீர்குடிக்கவேதான் உதவாதுயென்றார்கள்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்ராசனுமே
ஆயிரம்இடையரையும் அங்கேபெலிவெட்டிவிட்டு
அத்தண்டபசுவையெல்லாம் அத்திபுரமோட்டுமென்று
இராஜனுரைகேட்டு நடந்தாரே தூதுவர்கள் [ன்
மாடுகளத்தனையும் மடக்கித்திருப்பினார்கள்
எதிர்த்தஇடையர்தனை யாவரையுங்கொன்றுவிட்டார்[ன்
சண்டைபண்ணவந்தவரைச் சதைத்தங்கேபோட்டார்க

காமதேனு பசுக்களைமேய்க்கவந்த இடையர்களைத்

துரியோதிரன் தூதர்கள் கொன்றவர்கள்

போக மற்ற இடையர்கள்போய் தே

வேந்திரனுடன் சொல்லுகிறது.

---

தப்பிப்பிழைத்தவர்கள் தான்விழுந்தோடலுற்றார்
அமராபதிதேடி அவ்விடையரோடலுற்றார்
தேவேந்திரன்முன்னே தெண்டனிட்டார்இடையரவர்
வந்துபணிந்தவர்கள் வார்த்தைகளேதுசொல்வார்
காமதேனுபர்வதத்தில் காலகளைமேய்த்திருந்தோம்
காட்டிலேமேய்த்தோட்டிக் கடுகிக்குளத்தில்விட்டோம்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளமன்னன்
சேனைபரிவாரத் திரளுடன்கூடிவந்தான்

மாடுகளைமடக்கிக்கொண்டான்வல்லூரிவாங்கிவிட்ட [ட
அல்லவரைக்கொன்று வாடியார்கள்தப்பிவந்தோம்
என்றவுரைகேட்டு எதுசொல்வாரிந்திரரும்
உருட்டினான்கண்ணை உறுமினான்பெரும்புலிபோல்
கண்கள்சிவக்குதே காந்தளமாகுதே
மீசைதுடிக்குதே மின்கோபமாகுதே
அவ்வலரிநயங்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுதே
நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புத்தலாய்விடுது
என்றுமில்லாக்கோபம் பிறந்தது இந்திரற்கு

தேவேந்திரன் தன்மகனைச்சண்டைக்குபோகச்
சொல்ல சித்திராங்கதன் மாதலியைத் தேர்
கொண்டுவரச்சொன்னது.

என்மகனேசித்திராங்கா இயலானரத்தினமே
மாட்டைமடக்கின மன்னவராரானவை
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டிவாராய்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
பிடித்தபிடியோடே கொண்டுவாராய்பொட்டெனவே
கைபிடியாய்க்கொண்டு கண்ணெதிரேவந்துநில்லு
இல்லாதேயாமானால் எதிர்வந்துநில்லாதே
உத்தாரம்பண்ணரேஉம்பர்பிரானிந்திரரும்
தேவேந்திரன்மகனார் சித்திராங்கதராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிகமாய்சிந்தித்து
மாதலியைத்தானழைத்து மச்சுரதமெங்கேயென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரம் நீகொண்டுவா
என்றவுரைகேட்டு எழுந்தானேமாதலியும்
ஆறுவண்டிநூறுசட்டம் அதுக்கேற்றகுந்துக்காலும்
குந்துக்கால்செப்பனிட்டுக் கொடுங்கைத்திரைவளைத்து
கொடுங்கைக்கிளைவளைத்துக் கும்பகலசம்வைத்து
கும்பகலசத்தின்மேற் குடைகளைக்கட்டினான்
அங்கனவேதேர்சீலை அலங்காரம்பண்ணினானே



தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்செப்பனிட்டான்
வாசியைக்குளிப்பாட்டி வயிற்கடிவாளமிட்டான்
நாலுகால்வண்டபமும் நடுக்கழுத்திற்கொலுசுகளும்
முன்னாலேகட்டிகளும் பின்னாலேகுச்சுகளும்
பக்கத்தில்அங்குவடி பதியவைத்தான்சேனங்களை
முதுகிலேசிவிகளும் முன்னேகடிவாளம்
சந்திரபிறைசூரியபிறை தரித்தான்குதிரைக்கு
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்தெண்டனிட்டான்

திரியன்மேல் சித்திரசேனன் சண்டைக்குப்போகிறது.

கடுகியெழுந்தானே கட்டழகன்சித்ரசேனன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் துத்திப்பூச் சல்லடமாம்
பில்லைசமுதாடு பிருவெடுத்தவொட்டியாணம்
கட்டிபரைதனிலே பங்குகச்சைசங்குவிட்டு
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
முத்தினாருமாலை முகத்தழகாய்கட்டினான்
சிங்காரவில்லெடுத்து சிறுநாரிபூட்டினான் [கில்
அம்புராத்தோணியை அணிந்துகொண்டான்தன்முது
தேரைச்சுத்திதெண்டனிட்டுசெல்வெனவேஏறினான்
ஏறினபோதே மியலானசாரதிதான்
துரகதம்வார்கைப்பிடித்துத் துரிதமுடன்சாரிசெய்ய
வருகுதுமச்சரதம் வானுலகத்தாலதிர
தேர்தனிலேசங்குநாதம் சித்ரசேனன்பண்ணினானே
சங்குநாதம்பண்ணினானே தான்திரும்பச்சுரபியெல்லாம்

துரியோதிரன் சேனைகளைக் காமதேனு
அதம்பண்ணினது.

அந்தச்சமயத்தில் அறிந்ததுகாமதேனு
சங்குத்தொனிகேட்டுத் தான்வருகுதுகாமதேனு

குதித்துக்குமாளமிட்டு வருகுதுகாமதேனு
வந்துவிழுந்தது வளர்பெரியபாளையத்தில்
குத்துதுகொம்பாலே குளம்பால்மிதிக்கிறது

துரியோதனனும் அவனுடையசேனைகளும் சித்ர
சேனனும் சண்டைபண்ணுகிறது.

---

அத்தண்டசேனைகளை அதப்பண்ணுங்காமதேனு
மாண்டஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜனங்களென்றால் சொல்லமுடியாது
அந்தச்சமயத்தில் வந்துவிட்டான்சித்ரசேனன்
வில்லனைத்துநாரிபூட்டி விட்டான்சரபாணம்
கைகண்டபாணமெல்லாம் கடுகெனவேவிட்டு விட்டான்
கூச்சலெழும்புகுது கொப்பெனவேபாளையத்தில்
கண்டான்துரியோதனன் கட்டியகனேதுசொல்வான்
வேறொன்றுந்தெரியாது இங்குவந்தான்சண்டைபண்ண
இத்தண்டதுரைகளெல்லாம் எல்லாருமுஸ்திப்பாய்
ஆயுதங்கள்தானெடுத்து அம்பரதுசெய்யுமென்றான்
என்றென்கு ஆயுதத்தை எடுத்து அரையிற்கட்டி
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைதகபடித்த
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதாமடித்தார்
எட்டினர்சண்டை எழும்புதுசப்பட்டபோ
வில்லனைத்துநாரிபூட்டி விட்டாரிவர்களனைவ
ஒருவற்கொருவர் ஒழிவில்லாப்பாணம்விட்டார்
அம்புவரும்வேகமதை ஆர்க்கமுடியாது
பாணம்வரும்விதங்கள் பார்க்குமுடியாது
ஒருகோடிபாணங்கள் ஒருமித்துவிட்டுவிட்டார்
துரியன்விடும்பாணம் சொல்லிமுடியாது
கருணன்விடும்பாணம் கணக்குமிதங்களில்லை
துரோணர்விடும்பாணம் சொல்லிமுடியாது
கோபமாய்க்கிருபாச்சாரி கோடானபாணம்விட்டார்
வீஷ்டுமாச்சாரியரும் வெகுபாணங்கள்விட்டார்



அசுவத்தாமாவும் அனேகநெடும்பாணம்விட்டார்
சகுனிசயிந்தவரும் சரமேற்சரம்பொழிந்தார்
அவரவர்கள்விடும்பாணம் அபரிமிதமில்லை
ஒருவற்கொருவர் ஒருகோடிபாணம்விட்டார்
வாயுமாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும
சந்திரஅஸ்திரமும் இந்திரஅஸ்திரமும்
சங்கஞ்சரங்கப்போலே சரங்கள்பொழிந்தார்கள்
கண்டானேசித்ரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்லனைத்துநாரிபூட்டி விட்டான்நெடும்பாணம்
தன்மேல்விடும்பாணமெல்லாம் தக்காமலேவிலக்க
பின்னையுங்கோடாசரம் பிரளமாய்விட்டுவிட்டே [ன்
அத்தனைபேர்விட்டசரமத்தனையுங்கொள்ளைகொண்டா
அங்கரசர்தேருடைத்து அவரவர்கள்வில்பறித்து
ஆனையின்மேலிருந்ததுரை அலறியேமண்ணைக்கவ்வ
குதிரையின்மேலிருந்ததுரை கொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டையின்மேலிருந்ததுரை ஓலமிட்டுக்கீழேவிழ [வ
வெள்ளாங்குலைபோலே திரிகிறான்வேணதலை
கருப்பங்கருணையைப்போல் கண்டித்தான்வேணதலை
ஆலைக்கரும்புபோலே அறுத்திட்டான்வேணதலை [கை
பேய்க்காலெறும்புபோல் பிரைந்தெடுத்தான்பாளையத்
பனைநொங்குபோலாகப் பருத்தவிழிபிதுங்க
கண்டச்சதையறுந்து கழுகுக்கிரைபோடுகிறான்
ஈரல்சரியுது இறச்சிவெளியாகுது
குடல்கள்சரியுது குறிப்பாகஅப்பொழுது
செப்பவிலாவெலும்பு நெறுநெறென்றுகால்முறியும்
பட்டஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜனங்களென்றால் செப்பமுடியாது
சித்ரசேனன்சண்டையிலே ஜெனங்களுமாளுகுது
அபயமபயமென்று அலையுதுபாளையங்கள்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லிதவிக்குதுபாளையங்கள்

ரத்தாறுவோடுகுரு பவையுன்டங்கொக்கரிக்க
இந்தவிதமயானேயங்க ளோடகூடமார்சுது
திரியோதிராசன் தெரிழந்துகிடமாவிட்டான்

சித்திரசேனன் திரியோதினைக்கட்டி இழுத்துக்
கொண்டு போகிறபோது திரியோதிரன்
முறையிடுவது.

அங்கத்துளையாக்கி அதிரடித்தான்சித்ரசேனன்
அந்தரவீதியிலே அவனைப்பிடித்துக்கட்டி
பிடித்தபிடியோடே பின்கட்டாய்க்கட்டினான்
தேர்குத்துங்காலோடே திரியனைப்பிடித்துக்கட்டி
கைதிருவர்கங்குதாதம் உடம்பாரிலான்றன்மைனும்
திரியன்பிடிபடவே திகிலெடுத்துராசரெல்லாம்
ஒருவருடனொருவர் சொல்லாமலோடலுற்றார்
திரியனைக்கட்டிக்கொண்டு தெய்வலோகம்போறானாம்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
என்றறுமெய்ன் றுறுகிறன்மன்னிப்புலம்புகிறான்
ஆரோதெரியாது ஆகாசங்கொண்டுபோறான்
எவனோதெரியாது யமலோகங்கொண்டுபோறான்
ஐவர்பஞ்சபாண்டவரை அனர்த்தம்பண்ணவந்தேனே
என்னையொருவர் இழுத்துப்போறாரென்செய்வேன்
கூடவந்தராசாக்கள் கோடானகோடியுண்டு
மட்டில்லாராசாக்கள் வந்தார்கள்வீரியர்கள்
அத்தண்டராசாக்கள் அல்லாருங்கையைவிட்டார்
கட்டியிழுத்துக் கைலாசங்கொண்டுபோறார்
ஆர்வந்துகாப்பார்கள் ஆபத்துவேளையிலே
எவர்வந்துகாப்பார்கள் என்சிவன்பிழைக்கஇப்போ
தருமரைத்தானினைந்தால்தயவுவைத்துக்காத்திடுவார்
இந்தவனத்தனிலே யிருக்கிறாரென்றார்கள்
கூவிப்புலம்பினான் கூரல்கேட்டுத்தருமருக்கு
தம்பியரைத்தானனுப்பி தயவுவைத்துக்காத்திடுவார்



ஐவருமிப்போது அன்புவைத்துக்காத்தாலே
ஐவரைக்கொல்லுகைக்கு ஆலோசனைதேடினோம்
தப்புப்பிழைத்தோமானால் தருமரை கொன்றிடுவோம்
என்றவன்யோசனையாய் என்னசெ ப்புலம்புகிறான்
கூவிப்புலம்புகிறான் கொற்றவன் தி ராதிரன்
அன்றுவிசயன்றனை அழைத் ன தர்மலிங்கம்
ஐவர்பஞ்சபாண்டவரே அறை றுதேர்கேளும்
ஐவரைப்பார்க்கவே அதிகப்பிரியமாம்
பார்க்கும்படியாக வந்தேன்காண்பஞ்சவரே
காணும்படியாக வந்தேன்காண்காவலரே
எவனோதெரியாது இழுத்துப்போறான்அந்தரமாய்
ஆரோதெரியாது அழைத்துப்போறான்அந்தரமாய்
கூடப்பிறக்கிலையோ கூட்டுப்பாலுண்கிலையோ
தாயாரும்வேறானால் தகப்பனொன்றலவோ
மனதுமிரங்கிலையோ மகாராஜா தர்மலிங்கம்
தம்பிதமையன்மேல் தயவிலையோ உங்களுக்கு
அந்தரமாய்க்கொண்டுபோறான் ஆரோதெரியாது [ண்
(என்) ஆவியைக்காத்தாலே அநேககோடிபுண்ணியங்கா
சாயம்புமேனியனே தயவிலையோவென்மேலே
என்றுபுலம்பியே இடிபோலேகூச்சலிட்டான்
கூவுங்குரல்கேட்கும் கொப்பெனவேதருமருக்கு
உற்றுற்றுக்கேட்டாராம் உரகதன்வார்த்தையெல்லாம்

திரியோதிரன் முறையிடுவதை தருமர்கேட்டு
அருச்சுனனைப்போய் திரியோதிரனை
அழைத்துவரச்சொன்னது.

தருமர்மனங்கொள்ளாமல் தம்பியரைத்தானழைத்து
ஆறுதலுமன்று அருச்சுனா நீர்கேளும
பெரியதகப்பன்பெற்ற பேரான அண்ணன்தம்பி
திரியோதிரனம்மைத் தேடியேபார்க்கவந்தான்
ஆரோவொருவன் ஆகாசங்கொண்டுபோறான்

எவருந்தெரியாது இருந்துபோருன் அந்தரமாய்
பார்த்தாலிருந்தோனாலும் பாதகமெத்தவரும்
மெத்தவருத்துமிரு[illegible] வில்வேறுநகரிப்போது
நம்மைவருத்துமிரு[illegible] சரியிப்பயென்றுசொல்லி
ஆபத்துவேளையிலே [illegible]தரித்தால் மன்னவியந்தான்
கடுகவிடுவித்துக் கையால[illegible]ட்டிவாராய்
என்றவுரைகேட்டு அர்ச்சுனன்சொல்வான்விஜயன்
வைரோசனருக்குந்தம்பி உரகதன்தானமைத்து
கொல்லத்தினைந்தானே குருடன்மகன்சத்ராதி
எத்தனைவஞ்சனைகள் இடறுகள்செய்தான்காண்
நாடுபறித்தானே ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
ஐவரையும்கிலப்பிட்டு அறையிலடைத்தானே
அரமனைப்பெண்களையும் அம்பலமேற்றிவைத்தான்
அன்னைப்பெருந்தேவி பாடையுரியவைத்தான்
பாரவனவாசம் பரதேசமோட்டினான்
இந்தப்பரதேசம் இனித்திரியவென்றுமோ
சாகத்துரோகனுக்கு தயவுதினைப்பாரோ
பொல்லாதபாவிக்குப் புண்ணியந்தேடுவாரோ
தென்னைமுடிவேந்தன் துரியோதனராசன்
எத்தனைநாளிருந்தாலும் இடறல்லோதேடுருன்
கொல்லநினைக்கிறுன் கொடும்பாவிதுரியோதனன்
இன்றேயொழிந்து எமலோகஞ்சேரட்டும்.
செத்தாற்பழுதுமில்லை சொனானன்றவே
என்றவுரைகேட்டு அதுசொல்வார்தருமராயன்
அவரவர்செய்தவினை அவரேயனுபவிப்பார்
நன்மையைச்செய்தவர்கள் ராச்சியத்தையாண்டிடுவார்
பொல்லாங்குசெய்தவர்கள் போவார்பெருநரகில்
நன்மையைச்செய்தவர்க்கு நட்சேட்திரங்காணும்
தீமையைச்செய்தவர்க்குத் தெரியாதிருளாகும்
வஞ்சனைகள்வேண்டாமே மாயன்துணையாவார்
இக்கணமேநீயேயிவிட்டுவந்துசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாதே என்றுணைதம்பியரே



## அருச்சுனன் திரியனையழைக்கப்போவது.

என்றவுரைகேட்டு எழுந்தானருச்சுனனும்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் தூத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ நட்டுவரிந்துகட்டி
சந்ரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
ஈட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
சிங்காணிவில்லெடுத்து தேர்விஜயன்பயணமானுன்
வாரானேஅர்ச்சுனனும் வழிபட்டான்அங்கெனவே
நடந்தானேஅர்ச்சுனனும் நாழிகைக்குக்காதவழி.

## அருச்சுனனும் சித்திரசேனனும் சண்டைபண்ணுதல்.

அப்போதருச்சுனனும் அதிவேகமாகவல்லோ
அக்கினிபாணத்தை அதிவிரைவாய்த்தானெடுத்து
வரிவில்லினைத்தொடுத்து மார்புரளவாய்கிறுன்
அக்கினிபாணமது அதிரவேபோய்த்தடுக்கும்
கண்டானேசித்ரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
சீறியெழும்பியே சீக்கிரமாய்வந்தெதிர்த்தான்
சண்டைசண்டையென்று சமரப்போமுழங்குது
ஒருவற்கொருவர்உயுத்தியங்களாகுது
ஒருவர்விடுஞ்சரங்கள் ஒருவர்விலக்குவாரும்
இருவர்சமானமாகயிசைந்துமேசண்டைபண்ணுர்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டார்
சூரியனைத்தான்மறைக்கும் சூரர்விடும்பாணமெல்லாம்
நான்குகடிகைமட்டும் நல்லசண்டைபண்ணுர்கள்
அருச்சுனன்சண்டைகளை அண்டர்பிரான்மகனறிந்து

## அருச்சுனனும் சித்திரசேனனும் சமாதானமாகி திரியோதினை தருமரண்டை அழைத்துப்போகிறது.

―――✢―――

என்னிலும்வல்லபிரான் என்றுமனதிலெண்ணி
(இவன்)யாரோதெரியாது ஆண்மையுள்ளசேவகந்தான்
வம்மிசத்தைநாமறிந்துமதுக்கல்லோசண்டைசெய்வோ
என்றல்லோசித்திரசேனன் எதுசொல்வானருச்சுனனை ம்
ஆரடாதம்பிநீ ஆண்மையுள்ளசேவகனே
எவனடாதம்பிநீ எதிர்த்துசண்டைசெய்யவந்தாய்
ஊரேதுபேரேது உன்தகப்பன்யாரேது
எவருடையபுத்திரன்நீ எனக்கறியச்சொல்லுமென்றார்
இவ்வார்த்தைகேட்கவே எதுசொல்வான்அருச்சுனனும்
யுத்தகளந்தனிலே உறவின்முறைகேட்பாரோ
படுகளத்திலெப்பாரி கேட்பாரோபாருலகில்
(நீ)ஆண்பிள்ளையாமாகில் அமர்துசெய்யுமென்றார்
உன்தகப்பன்றன்பெயரும் ஊர்ப்பெயருஞ்சொன்னாலே
நானுரைப்பேன்பிற்பாடு நவிலென்றான்போர்விஜயன்
தேவேந்திரன்மகனும் சித்ரசேனன்தான்கேட்டு
உத்திரவுதான்கேட்டு உச்சாகங்கொண்டவனும்
தேவர்க்கதிபதிதான் தேவேந்திரனென்தகப்பன்
என்றவுரைகேட்டு எதுசொல்வான்அர்ச்சுனனும்
அண்ணனென்றறியாமல் அமர்துசெய்தேனே
தமயனென்றறியாமல் சண்டைகள்செய்தேனே
வில்லைத்தரையில்வைத்து விஜயனுமோடிவந்தான்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து மூவொருகால்தெண்டனிட்டான்
அண்ணா சரணமென்று அடிபணிந்தானருச்சுனனும்
தேவேந்திரன்மகனும் சித்ரசேனனேதுசொல்வான்
ஆர்வீட்டுப்பிள்ளைநீ அறியவுரையுமென்றார்
என்னையறியாயோ என்னுடையஅண்ணாவே



என்தாயார்குந்தியம்மாள் என்தகப்பன்தேவேந்திரன்
என்தகப்பன்தேவேந்திரன் என்பேரும்அர்ச்சுனன்காண்
என்றவுரைகேட்டு எதுசொல்வான்சித்ரசேனன்
(என்)தந்தைக்குநீபிறந்த தன்மையினால்தம்பியரே
நான்விட்டபாணத்தால் தம்பியேநீர்பிழைத்தீர்
அல்லாதேயாமானால் அமரில்மடிந்திடுவீர்
தப்பிப்பிழைத்தீரே சாமியுடபுண்ணியத்தால்
என்றிவர்களோர்மனதா யிருவருறவாடி
ஒருவற்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்
எழில்விஜயனப்போது எதுசொல்வான்அண்ணனுக்கு
தென்னமுடிவேந்தன் திரியோதிராசன்
என்னசெய்தானென்று நீர் இட்டுப்போறீரண்ணாவே
அவன்செய்தகுற்றமெல்லாம்அண்ணா நீர்சொல்லுமென
இவ்வார்த்தைதான்கேட்டு என்னசொல்வான்சித்ரசேன
காட்டிலேமேய்ந்ததொரு காமதேனுஅத்தனையும் [ன்
பாற்பசுக்கள்தன்னையிந்தப் பாவிமடக்கிக்கொண்டான்
ஆயிரமிடையரையும் அநீதமாய்க்கொன்றுவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுப்பினார்என்தகப்பன்
கைப்பிடியாய்க்கொண்டுவர கட்டளையுமிட்டார்காண்
அவர்சொன்னபடியினாலே அமர்துசெய்தேன்காண்
இவனுடையசேனைகளை எல்லாம்நான்கொன்றழித்து[ன்
விரைவாகக்கைப்பிடியாய் விண்ணுலகங்கொண்டுபோறே
என்றவுரைகேட்டு என்னசொல்வான்அருச்சுனனும்
ஆனால்கேள்அண்ணாவே அடியேனொருவார்த்தை
சாயாம்புமேனியரும் தருமாவரெங்களண்ணர்
என்னைவிடுவித்து இட்டுவாவென்றுசொன்னான்
என்னையனுப்பினார் இயலானதர்மலிங்கம்
அழைத்துவரச்சொன்னாரே அண்ணருமிப்பொழுதே
உன்முகத்தில்நான்விழிக்கேன் என்றுமேதருமலிங்கம்
கூட்டியனுப்பினார் குறிப்பாகஉந்தனையும்
என்மேல்தயவுவைத்து இவனையனுப்புமென்றான்
தேவேந்திரன்மகனார் சித்ரசேனனேதுசொல்வான்

மாடும்பட்டியே வில்லும்பிரைக்கொன்றவனை
கைப்பிடியாய்க்கொண்டுவரக் கடுகியனுப்பினார்
ஆனையாய்க் கொண்டுபோறேன் அருச்சுனன் செய்வேன்
ஆனாற்கேளண்ணாவே அப்போதொரு வார்த்தை
அருச்சுனன்வந்து அழைத்தாற்போறேனென்று சொல்லு
ஜுவரென்று சொன்னாலே அதிகமாய்மகிழ்வார்
அல்லாதேயாமாகில் அழைக்கும்போனாலே
என்வார்த்தைதன்னிநீர் இட்டுக்கொண்டுபோனாலே
அண்ணாவேடானைக்கு அமரபுரம்வருவேன்
தேவேந்திரபுரத்தைச் சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகளைமாடுகளை அடிக்காரங்களை
கடையுங்கடைத்தெருவும் மருமாரவீதிகளும் [வேன்
அங்காடிவீதிகளும் அரமனைத்தெருவுகளும்
அத்தனையுங்கொள்ளையிட்டு அக்கப்பக்ஷணிப்போட்டிடு
என்வார்த்தைதான்கேட்டு இவனைவிடுவிடென்றான்
சித்ரசேனன்கேட்டு சிந்தைமகிழ்ந்தவரும்
சந்தோஷப்பட்டவரும் சர்ப்பக்கொடியோனை
கட்டவிழ்த்துவிட்டுவிடுகிறேனென்றான்சித்ரசேனன்

சித்ரசேனன் தேவேந்திரனைக்காண்கிறது.

போய்வாரேனென்றல்லோ புறப்பட்டான்தேரேறி
அமராபதிதேடி அடவுடனேதானடைந்தான்
தேவேந்திரனுக்கு சித்ரசேனன்தெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னுடைய அதிசயச்சேதிகளும்
அரவக்கொடிவேந்தன் அகப்பட்டசேதிகளும்
இவ்விருவர்சேதிகளும் இயலாகத்தன்சேதி
தகப்பனுடனுரைக்கச் சந்தோஷமாகினார்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனை
துரியோதனனைத் தேர்விஜயன்கூட்டிவாரான்
அண்ணாருதாக அழைத்துவந்துவிட்டாராம்
அண்ணார்தர்மருக்கு அடிபணிந்தான்துரியோதனன்



சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கத்தெண்டனிட்டான்
எமன்மகன் தருமராயன்எடுத்தணைத்தான்துரியனையும்
எங்கிருந்துவந்தீரப்பா என்க்கறியச்சொல்லுமென்றார்
அத்துவானக்கானகத்தில் ஆரணியம்வந்ததென்ன
அந்தரமாகவே ஆர்காணும்கொண்டுசென்றார்

துரியோதனன் தருமருக்குத்தன்வரலாறுகூறல்.

துரியோதனராசன் சொல்லத்தொடங்கினான்
ஆசையாப்பாசமதா லண்ணாவேபார்க்கவந்தேன்
எத்தனைநாள்காடுறைந்தீர் இட்டுப்போகவேணுமென்று
அஸ்தினாபுரத்துக்கழைத்துக்கொண்டுபோவோமென்று
எண்ணாதுமெண்ணினேன் இக்காடுதேடிவந்தேன்
(என்னை) ஆரோதெரியாது அந்தரமாய்க்கட்டிப்போனார்
அப்பயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்தானுமங்கேஅமர்செய்து இட்டுவந்தான்
எத்தனைநாள்காடுறைவீர் இயலானராசாவே
பாரவனவாசம் பரதேசந்திரிவானேன்
வேடரைப்போலாக வில்லியரைப்போலாக
பரதேசந்திரிவானேன் பட்டணத்தில்வாங்களென்றான்
அஸ்தினாபுரத்தை ஆண்டிடுவீர்வாங்களென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
ஆறுவருஷமாச்சு ஆரணியம்வந்துநாங்கள்
இன்னஞ்சிலகாலம் இப்படியேதான்திரிந்து
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
வந்தபிறகாக மனதுவைத்துஎன்மேலே
சொன்னபடிசீமை துரைத்தனந்தாருமென்றார்

வீமன்கனிபறித்துவர துரியோதனன்போசித்து
தருமரிடத்திற் செலவுபெற்று அஸ்தி
னாபுரம் செல்லுகிறது.

வெற்றிமதயானை வீமாமதகரியே
அண்ணார்களையாகி அதிகப்பசியானார்

காடெல்லாந்தான்திரிந்து கனிபறித்துவாருமென்றார்
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
அறுநெல்லிசிறுநெல்லி அழகானநாரத்தையும்
காட்டுவிளாம்பழமும் கருநெல்லிப்பழங்களுடன்
வேரிற்பழுத்திருக்கும் வெடித்தபலாப்பழமும்
மலைந்தே மகளைத்தேனும் மாங்கனியுந்தேங்கனியும்
மட்டில்லாப்பழம்பறித்து மதவீமன்கொண்டுவந்தான்
தேக்கிலைதான்பறித்து திறல்வீமன்கொண்டுவந்தான்
பறித்தகனிகளெல்லாம்பசியாறவுண்ணுமென்று
கைக்குச்சலங்கொடுத்துக் கட்டமுதுண்ணுமென்றார்
ஆசனந்தான்போட்டு அமுதுபொசியுமென்றார் [ன்
விரதநாகங்கொண்டவனும் வேந்தனுந்தான்பொசித்தா
ளென்றுதுமென்னுமிருள் எரிநாகங்கொண்டவனும்
இப்படிக்கொத்த இயல்பானபஞ்சவர்கள்
எப்படிச்சாகுவார்கள் இக்கனியைத்தின்றவர்கள்
அஸ்தினபுரத்திற்போய் ஆலோசனைபண்ணவேண்டும்
எப்படியும்பஞ்சவரை இக்காட்டிற்கொல்லவேணும்
என்றுமனதிலெண்ணி இருந்துகனிபொசித்தான்
பசியாறவுண்டானே பாதகன்திரியோதிரன்
கைபூசிக்கொண்டானே காதகன்திரியோதிரன்
சாயாம்புமன்னவனும் தருமர்பெருமானும்
பின்னுஞ்சிலகனியை பெருமூட்டையாகக்கட்டி
அப்பா திரியோதனா அழகான இக்கனியை
அரமனைக்குக்கொண்டுபோய் அனைவருந்தான்பொசிக்க
எடுத்துப்போமென்றுசொல்லி ஐந்தாரோ அக்கனியை
வாங்கியேஅக்கனியை மன்னவனுந்தோளிலிட்டான்
ஐயாபோய்வாறேனென் றடிபணிந்தான்திரியனுமே
சாயாம்புமன்னவனும் தர்மலிங்கமேதுசொல்வார்
காண்டீபா அர்ச்சுனரே கடுகியெழுந்திருந்து
அண்ணன்துரியன்முன் னக்கனியின்மூட்டைகொண்டு
காடுகடக்கவும் கைமூட்டைநீவாங்கி
அண்ணனைவழிகூட்டி அனுப்பிவாதம்பியென்றார்



தருமரைக்கேட்டு தார்விஜயன்தானெழுந்து
கனிமூட்டைதோளில்வைத்து கடுகியேபின்னடந்தான்
திரியோதிரன்பின்னே நடந்தானேதேர்விஜயன்
காடுசெடியுங் கடுகியவனுந்தரமும்
ஆறுஞ்சுனையும் அவ்வனமுந்தான்கடந்து
காடுகடந்தபின்பு கைமூட்டைவாங்கிக்கொண்டு
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
ஊரதில்லும்அர்ச்சுனரே தொல்லுலகில்வாராதே
கடக்கநில்லும்அர்ச்சுனரே காசினியில்வாராதே
காடுமெரித்தகாலால்(என்)நாடுமிகியாதே [யை
அரைக்ஷணப்போதையிலே அறுத்தெறிவேனுன்தலை
தருமர்பெருமையினல் தணித்துவிட்டேன்கோபமதை
என்றுதிரியன்சொல்லி இறைந்துவழிநடந்தான்
அண்ணனருகாக அருச்சுனன்வந்தழுதான்
அப்போதிரியோதிரன் அதிகவிரைவாக
காடுசெடியுங் கரியமலைகடந்து
அஸ்தினபுரத்துக்கு ஆணழகன்போயடுத்தான்
சிங்காதனமீதிற் சென்றானேதிரியோதிரன்
ஆசாரிஜவரையும் அனந்தமகாராஜரையும்
மாமன்சகுனியையும் மைத்துனன்சயிந்தனையும்
அத்தண்டபேரையும் அழைத்தான்திரியோதிரன் [தான்
கொண்டுவந்தாய்காய்கதியைக் கொப்பெனமுன்னேவைத்
இக்கனியையுண்ணுமவ ரெப்படிக்காண்மாண்டிடுவார்
தேவேந்திரன்மகனார் சித்ரசேனனெனைப்பிடித்தார்
தேரிலெனைக்கட்டி தெய்வலோகங்கொண்டுசென்றார்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்வந்து அமரதுசெய்தான்காண்
என்னைவிடுவித்து இட்டுவந்தானண்ணரண்டை
ஐவரையுங்கண்டேனே அனேகமானவார்த்தைகளை
டிச்சிமாகவேதா றெற்றுமையாய்வார்த்தைசொன்னேன்

இந்தக்கவிதான்பொறிக்கும் எழிலானபஞ்சவர்கள்
எப்படிக்கும்வடிவெழிவார் இயலானபஞ்சவர்கள்
என்றிவர்கள்தான்பேசி யிருந்தார்சிலவார்த்தை
இப்படியாக இருக்கின்றவேளையிலே
ஆறும்வருஷமும் முடிந்ததுஐவருக்கு

ஆறாவது காமதேனுபர்வதம்
முற்றிற்று.

---

## ௭-வது, கெந்தர்வ பர்வதம்.

---

ஏழாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மங்கிவைத்தசிமாடு வனவாசம்போனார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடந்துவழிநட
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கெந்தர்வபர்வதத்தில் வந்தாரேபஞ்சவர்கள்
ஐந்தடுக்குப்பர்ணசாலை அழகாகஉண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகஉண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இருவரிருக்கும்வேளையிலே
அங்கேபெருமாளும் அலைகங்கைஸ்நானம்பண்ணி
ஈசமூர்த்தி இளைசேர்ந்தபட்டுடுத்தி
சாம்பமூர்த்திபூசைகளும் சகலமுந்தான்முடித்து
ஆசனமிட்டுமல்லோ அரிபாதபூசைபண்ணார்
அரிபூசைகுருபூசை அனைத்துங்கடன்முடித்து
கைதனிலேதீர்த்தமள்ளிக் கதிரோனைப்பூசித்து
எரிக்குங்கதிரோனை எம்பெருமான்தோத்தரித்து
கண்ணிரண்டும்மூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிவஞானமாகவே ஸ்ரீகிருஷ்ணன்தானிருந்தார்



எம்பெருமான் செபம்பண்ணும்வேளையில் கெந்
தருவன் தம்பலம்உமிழ பெருமாள்
கோபிக்கிறது.

---


ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மாயனென்னும்கெந்தருவன் வாரானேதேரேறி
தேரேறிவருகையிலே தின்றுஉமிழ்ந்தானே
வால்மிளகுஏலரிசி வாசமுள்ளஜாதிபத்ரி
வெத்திலையும்பாக்குகளும் மென்றுஉமிழ்ந்தானே
மாயவனார்கைதனிலே வந்துவிழுந்ததது
துப்பியதம்பலமுந் தூளாய்மெள்ளவிகையில்விழ
கண்திறந்துபார்த்தாரே கைதனிலேதம்பலத்தை
சுற்றியங்கேபார்த்தாரே தோணவில்லைவேறொருவர்
ஆகாயவீதியிலே அவனாரோதெரியாது
கைதனிலேதம்பலத்தை காரியுமிழ்ந்தானே
செபதபஞ்செய்கையிலே செய்ததிவன்கெருவமென
கண்கள்சிறந்தாராம் காந்தாளமானாராம்
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுமாம்
நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புத்தணலாகுது
கோவைப்பழம்போலக் கூர்விழிக்கண்சிவக்கும்
பாவற்பழம்போலப் பத்திவரியேகண்சிவக்கும்
சக்கரத்தைத்தானெடுத்து சாமிபெருமானும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலரெம்பெருமான்
மந்திரதாபமிட்டு வலதுகையில்தானெடுத்தார்
தம்பலம்உமிழ்ந்தவன்றன் தலையைநீவாங்கிவா
அரைக்ஷணப்போதையிலே அறுத்துவா அவன்தலையை
அரனார்வந்தெதிர்த்தாலும் அமரர்வந்தெதிர்த்தாலும்
பிரமதேவன்வந்தாலும் பிரியங்கள்சொன்னாலும்
தேவபிரான்வந்தாலும் தெண்டனிட்டுக்கொண்டாலும்
கத்தரேவந்து கையமர்த்திக்கொண்டாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்தடுத்தாலும்
ஆரார்தடுத்தாலும் ஆரவாரம்பண்ணாலும்

அரைநாழிக்குள்ளாக அறுத்துவா அவன்தலையை
இக்கணமேயென்று நீ இருதுண்டம்போட்டுவா
மாயன் கெந்தருவன்மேல்கோபித்து சக்கரத்தை
அனுப்புகிறது.

சக்கரத்தைத் தாமவிட்டு சாமியார்விட்டுவிட்டார்
வெருகுதாசக்கரந்தான் வானுலகந்தான்தேடி
இயல்பாய்வழிதனிலே எதிர்ப்பட்டார்நாரதரும்
நாரதமாமுனிதான் நமஸ்கரித்தார்சக்கரத்தை
இத்தனைகோபத்துடன் எங்குநீர்போறீர்காண்
ஸ்ரீராமர்சக்கரந்தான் அம்முனிக்குவதுசொல்லும்

நாரதர் சக்கரத்தை நீர்போகிறகாரியமென்ன
வென்றுவினவ சக்கரஞ்சொல்லுதல்.

ஸ்ரீராமரெம்பெருமாள் செபதஞ்செய்கையிலே
வாசங்கள்தான்நின்று வெலதுளையில்துப்பினான்
ஆகையினால்சாமியார் அப்போதுகோபமானார்
என்னையனுப்பினார் இவன்தலையறுக்கவென்று
கெந்திருவன்தன்னருகே முந்த அறுக்கவந்தேன்
அவ்வார்த்தையைக்கேட்டு அந்தமுனிபோய்நடந்தார்
கெந்தருவன்தன்னருகே வந்தாரே நாரதரும்
ஆரடாகெந்தருவா ஆயாவெபேரில்
தம்பலமுமிழ்ந்ததினால் சாமியார்கோபமுடன்
சக்கரம் அனுப்பியுந்தான் தலையைத்தரிக்கவென்று
வெருகுதாசக்கரந்தான் மானவிதியாச்சே
ஆதிசிவனருகே அபயமிட்டுப்போனக்கால்
பரமசிவன்தான்பார்த்துப் பட்சம்வைத்தாராமானால்
ஆதிசிவன்தன்னாலே ஆகும்உனைக்காக்க
அல்லாதேபோமானால் அறுத்துவிடும் உன்தலையை
தப்பிப்பிழையுமென்று தவமுனிசொல்லுகையில்
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தவனும்





கெந்தருவன் சக்கரத்துக்கஞ்சி மும்மூர்த்திகளண்டை
போய் முறையிட்டுத்திராமையால அருச்சுன
னண்டைபோகிறது.

---

வாய்வேகமாகவே வழிபிடித்தான்கெந்தருவன்
சக்கரம்வந்திடவே தான்புலம்பிஓடுகிருன்
ஆதிசிவனருகில் அபயமிட்டுஓடுகிருன்
அரவாபரணனே ஐயாஉனக்கபயம்
சங்கரா நான்சரணம் சதாசிவாஉனக்கபயம்
சாந்தலிங்கா நான்சரணம் தாணுவேஉனக்கபயம்
வெள்ளிரிஷபமேறும் வித்தகா நான்சரணம்
மாபூஷணந்தரித்த மகாதேவாஉனக்கபயம்
முக்கண்படைத்தவரே முதல்வரேஉனக்கபயம்
திரிபுரமெரித்தவெங்கள் தேவாஉனக்கபயம்
காமனைக்கண்ணுலெரித்த கடவுளே நான்சரணம்
எமனையுதைத்தவரே ஈசாஉனக்கபயம்
கங்கையணிந்தோனே கடுக்கைதரித்தோனே
திங்களைத்தன்சிரசில் தரித்தசிவனரே
அபயமபயமையா அந்திவண்ணாஉனக்கபயம்
அபயக்குரல்கேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
ஆரடாகெந்தருவா அபயமிட்டவாறேது
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தவயணங்கள் வார்த்தைஉரையுமென்றுர்
ஆண்டவனேயென்சாமி அடியேனொருவிண்ணப்பம்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
காயாரக்காய்த்ததொரு கமுகினதுபாக்கை
வாயாரத்தின்று மண்மேலேதுப்பினேன்
தாமரைப்பொய்கையிலே சாமிபெருமாளும்
தினகரனைத்தான்பார்த்து செபதபஞ்செய்தாராம்
நானுமிழ்ந்தம்பலம் ராமர்கையிற்றன்விழவே
கோபாலசுவாமியார் கோபம்பெரிதாகி

சக்கரத்தையனுப்பினர் தலையைத்தரிக்கவென்று
என்னைக்கொல்லவருகுது இயலானசக்கரந்தான்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
என்னை நீகாத்தருளும் ஈசாவெனப்பணிந்தான்
காக்கக்கடனுனக்கு கார்வண்ணன்மைத்துனனே
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்பரருமேதுசொல்வார்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கெந்தருவா
ஆயருக்குப்பகையாகி அருகேவரலாமோ
உன்னை நான்காத்தாக்கால் உலகளந்தாரென்னசொல்வார்
கார்வண்ணரெந்தனுக்கு கடிகிப்பகையாவார்
காக்கமுடியாது கடக்கவேபோய்விடுங்காண்
பிரமதேவன்தன்னருகே போனீரேயாமானால்
அவராலேயாகுங்காண் ஆதரிக்கவல்லபிரான்
என்றுஉரைத்தாராம் எண்டோளரப்போது
அழுதுபுலம்பியே அப்புறம்போய்புகுந்தான்
பிரமலோகந்தான்புகுந்து பிரமா அருகில்வந்தான்
அபயமபயமையா யாதரிக்குங்கத்தாவே
என்னையேயாதரியும் என்றல்லோதெண்டனிட்டான்
ஆயுளைப்பார்த்தெழுதும் அரிபிரமரேதுசொல்வார்
ஆருக்குஅபயமாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
ஆண்டவனேஐயாவே அயனாரே நீர்கேளும்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
அடைகாயும்வெற்றிலையும் அய்யா நான்மென்றுதின்று
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
மாயவனார்கைத்தலத்தில் வந்துவிழுந்துதாம்
மாயன்வெகுகோபமாகி வரவிட்டார்சக்கரத்தை
என்னையேகொல்லுமென்று இயலாயனுப்பினார்
ஆகையால் ஆண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
எந்தனையாதரியும் என்றல்லோ அடிபணிந்தான்
இவ்வார்த்தைதான்கேட்டுஎதுசொல்வான் நான்முகனும்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கெந்தருவர்



மாயருக்குப்பகையாகி வந்தாயேபாதகனே
உன்னையேஆதரித்தால் உலகளந்தாரெந்த[illegible]க்கும்
பொல்லாப்புநேர்ந்துவிடும் பெரும்பாவியெந்தனுக்கு
உன்னையேஆதரிக்க உதவாதுஎந்தனுக்கு
எமபுரமேகிநீ எமனுடனுரைத்தால்
எந்தவிதமானாலும் எமனுன்னைக்காத்திடுவான்
கடுகிநடவுமென்று கைவிட்டார்பிரமதேவர்
அழுதுபுலம்பியே அதிவிரைவாய்த்தான்வாரான்
எமனருகில்வந்து இளைத்துபுலம்புகிறான்
காலனுங்கண்டு கடுகவேயேதுசொல்வான்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போதுகெந்தருவன் அவருக்கெடுத்துரைப்பான்
அந்தரமார்க்கத்திலே அழகுரதமேறிவந்தேன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயருட்கைத்தலத்தில்
ஆகையால்கோபித்து அனுப்பினார்சக்கரத்தை
என்னைக்கழுத்தறுக்க எதிரிவருகுதென்றான்
என்னையுமாதரியு மென்றானேகெந்தருவன்
காலனுங்கேட்டுமவன் கடுகியெடுத்துரைப்பான்
மாயருக்குப்பகையானால் மன்னவனேபார்க்கலாமோ
மாயருடஊழியத்தை மன்னவனேசெய்திடுவேன்
உன்னையேகாத்தாலே உலகளந்தார்கோபமுற்றால்
எதிர்த்துப்புறப்பட்டால் எதிர்நிற்கப்போறேனோ
காக்கமுடியாது கட்டமுகா கெந்தருவா
அமராபதியாளும் அழகானதெய்வபிரான்
தேவேந்திரரருகில் சென்று நீர்போவீரானால்
காக்கவும்வல்லபிரான் கடிகிநீபோகுமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவன் அழுதுபுலம்பிவாரான்
தெய்வலோகந்தனிலே தேவேந்திரரருகே
அபயமிட்டுஅடிபணிந்தான் ஆனதொருகெந்தருவன்
ஆருடாதம்பி நீ அறியவுரையுமென்றான்

ஆண்டவனேஐயாவே அடியேனொருவார்த்தை
ஆகாயவீதியிலே அழகுராதமேறிவந்தேன்
வெற்றிலைப்பாக்கும்வால்மிளகுஜாதிபத்திரியும்
ஜாதிக்காய்லவங்கம் சன்னலவங்கமுடன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயவனார்கைத்தலத்தில்
ஆனையினாலெம்பெருமான் அடியேன்மேல்கோபமாகி
சக்கரத்தையனுப்பியெந்தன் தலையையரியுமென
வருகுதுசக்கரந்தான் வல்லுயிரைவாங்கவென்று
கொல்லவருகுது கோப்பெனவேசக்கரந்தான்
ஆதரித்தென்னைரட்சி அனேககோடிமோட்சமுண்டு
என்றவுரைகேட்டு யேதுசொல்வாரிருவரும்
மாயருக்குப்பகையாகி வந்தவனை ஆதரித்தால்
எதிர்த்தாரேயானால் எதிர்நிற்கப்போமோனே
மாயனுக்குச்சரியானார் வையகத்தில்யாருமில்லை
உன்னையேயாதரிக்க உலகத்தில்யாருமில்லை
தர்மருடதம்பியவன் தார்விஜயனருச்சுனன்தான்
அருச்சுனனுமுன்னை ஆதரிக்கவேமுடியும்
அபயக்குரல்கேட்டு ஆதரிப்பான்வாழ்விஜயன்
ஆதிசிவனுடனே அரனுருவந்தாலும்
எழுதும்பிரமனும் எம்பெருமான்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்வந்தாலும்
ஆர்வந்தெதிர்த்தாலும் ஆரவாரம்பண்ணினாலும்
அருச்சுனராசனவன் அனைவோரைவென்றிடுவான்
வாழ்விஜயனருச்சுனனும் வல்லமையுள்ளவன்காண்
அருச்சுனனை நீகோரி அபயமிட்டுப்போனீரானால்
ஆதரிப்பான்வாழ்விஜய னதிவிரைவிற்போய்ச்சேரும்
என்றவுரைகேட்டு எழுந்தானேகெந்தருவன்
அழுதுபுலம்பியே அருச்சுனனைத்தேடிவாரான்
தெய்வலோகந்தாண்டி தேர்விஜயனைத்தேடி
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய அலறியேயோடிவாரான்
அபயமபயமென்று அருச்சுனன்முன்னேவந்தான்



## அருச்சுனன் கெந்தருவனுக்கு அபயங் கொடுத்தது.

அபயக்குரல்கேட்டு அருச்சுனனேதுரைப்பான்
ஆரடாகெந்தருவா அழுதுபுலம்புவானேன்
ஆரெதிர்த்துவந்தாலும் அமராதுசெய்திடுவேன்
அந்தரதேவதைகள் ஐயன்பிடாரிகளும்
ஆகாயவாணிகளென் னுத்துமாதானறிய
காக்கிறேனஞ்சாதே என்றல்லோகைகொடுத்தான்
அருச்சுனன்கைகொடுத்து அஞ்சாதேயென்றுசொல்ல
சற்றேபயந்தொளிந்தான் தார்வேந்தன்கெந்தருவன்
அருச்சுனராசனவன் அப்போதுயேதுசொல்வான்
யார்க்குப்பகையாகி யழுதுபுலம்பிவந்தாய்
எவரெதிர்த்தாருன்னோடே இங்கழுது நீவந்தாய்
வந்தகருமமென்ன வாய்திறந்துசொல்லுமென்றான்
அஞ்சிப்பயந்தவனும் அருச்சுனனோடுரைப்பான்
ஆகாயவீதியிலே அழகுராதமேறிவந்தேன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
நானுமிழ்ந்ததம்பலந்தான் ராமர்கையில்விழுந்துதாம்
ஆகையால்மாயவரும் அப்போவெகுகோபமுடன்
என்னையேகொல்லவென்று எடுத்துவிட்டார்சக்கரத்தை
சக்கரம்வருகுதுகாண் தலையைத்தறிக்கவென்று
ஆதிசிவனருகில் அபயமிட்டுப்போனேனையா
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
அயனபிர்மதேவனிடம் அபயமிட்டுப்போனேனையா [ன்
ஆதரிப்பாயென்றுநான் அபயமிட்டுப்போய்ச் சேர்ந்தே
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
எமதர்மராசரண்டை எதிர்கொண்டபயமிட்டேன்
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
தேவேந்திரனருகில் சென்றுநான் அபயமிட்டேன்
காத்திடுவாரென்றுநான் கடுகியே அபயமிட்டேன்
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்

அழகில்மிகுந்தவரோ அருச்சுனரேயும்மைநாடி
தேடியேஅபயமிட்டு தெய்வலோகம்விட்டுவந்தேன்
ஆதரித்தநீராமானால் அனைவர்க்குங்கீர்த்தியுண்டு
இவ்வார்த்தைதான்கேட்டு எழில்விஜயனருச்சுனனும்
என்னாதுமெய்ஞ்ஞானமிரு மென்னவிமனங்குன்றுமிரு [ன்
மாயருக்குப்பகையாகி வந்தவனைக்காத்தாலே
ஆயருக்குமெந்தனுக்கு அடுத்தாற்பகையாமே
என்னசெய்யப்போறேனென்று ஏங்கிவிசாரமிட்டு
ஐவர்சகாயரல்லோ ஆயர்பெருமானும்
தம்பினேனென்றவரை ரட்சிக்கவேணுமல்லால்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடலாகாது
ஆயர்பெருமானுக்கு அன்பானவார்த்தைசொல்லி
எந்தவிதத்திலேயும் இவன்றனைக்காக்கவேணும்
அல்லவென்றுகோபமிட்டால் அபராதுசெய்திடுவோம்
என்றுநினைத்தவனும் என்னசொல்வன்வாய்விஜயன்
திங்களுஞ்சூரியனும் தெற்குவடக்கானாலும்
அழகானதாமரையும் அடியிலேபூத்தாலும்
நறிக்கிப்புழிந்துஎன்னை நரகத்திற்போட்டாலும்
நாவாலேசொன்னதெல்லாம் நான்தவறப்போறதில்லை
எந்தவிதத்திலேயும் இடறகற்றிக்காத்திடுவேன்
என்றல்லோயாதரித்தான் இயலானவாய்விஜயன்

அருச்சுனன்கெந்தருவனுக்குபயந்தீர்க்கபெரு
மானுக்கு கோபம்வந்து சக்கரத்தை
யனுப்புகிறது.

---

வருகிறசக்கரந்தான் மண்ஞாலம்விண்ஞாலங்கொள்ளாமல்
கணைகள்பொறிபறக்கக் கடிதிவருகுதே
அருச்சுனராசனண்டை அருகேவந்துதெண்டனிட
என்னருகேகாரியமென் பயகுவந்தீசக்கரமே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
சாமியனுப்பிவைத்த சக்கரமேதுசொல்லும்
மாயனுக்குப்பகையான மாபாவிகெந்தருவன்



அருச்சுனரேஉன்னிடத்தில் வந்தானரும்பாவி
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினார்மாயவனார்
ஆகையாலனுப்புங்காண் அருச்சுனரே அவன்தலையை
அறுத்தெரிந்துயான்போகிறேன் அவனையனுப்புமென்
தனஞ்சயனுமப்போது சக்கரத்துக்கேதுசொல்வான்
அபயமபயமென்று அழுதுபுலம்பிவந்தான்
அபயக்குரல்கேட்டு ஆதரித்தேனானவனை
பாரளந்தராவவற்குப் பகையானானென்றறியேன்
அபயமபயமென்று ஆதரித்தேனானவனை
காக்கிறேனென்றுசொல்லி கைவிடலாகாது
ஆகையால்சக்கரமே ஆயருக்குச்சேதிசொல்லும்
கோடிசரணம்நான் கும்பிட்டேனென்றுசொல்லும் [ம்
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லு
சக்கரத்தாள்வாரும் தாரவிஜயற்கேதுசொல்லும்
ஆனாற்போய்வாரேனென்று அப்போதிரும்பிவந்து
மாயவரைக்கண்டு வணங்கிநமஸ்கரித்து
ஆதிசிவனருகில் அபயமிட்டொழுகையில்
ஆதரிக்கமாட்டோமென்று அவருமிலக்கிவிட்டார்
அருச்சுனனார்தன்னருகில் போனானபயமிட்டு
வணங்கிநமஸ்கரித்து மாயவன்வார்த்தைசொன்னேன்
உனக்குப்பகையான உண்மையெல்லாம்நானுரைத்தேன்
எத்தனைசொன்னாலும் இரங்காமல்அர்ச்சுனரும் [று
ஆண்டவனேயென்னருகே அனுப்பினான்சொல்லுமென்
இவ்வார்த்தைகேட்கவுமே எம்பெருமான்கோபமாகி
ஆங்காரக்கோபமுடன் அரிராமரென்னசொல்வார்
ஐவரைக்காப்பதற்கு ஆண்டவனுடநாமிருந்து
இத்தனைநாள்நான்காத்தேன் இயலானபஞ்சவரை
எனக்குப்பகையாளி தனக்குப்பகையலவோ
ஆதரிக்கஞாயமுண்டோ அறியானோவெஞ்சமர்த்தை
மறுக்காமலொருதரம்நீ வாள்விஜயனருகிற்சென்று
நானுரைத்தவார்த்தையெல்லாம் நல்விஜயனுக்குரைத்து
மாயவற்குவேண்டாத மாபாவியானவனை

விட்டுவிட்டாலல்லாது வீண்பகையாகுமென்று
குருகுலவம்மிசத்தார் கூட்டோடொழியுமென்று
கொல்லநினைப்பார்காண் குடிகேடுவருமென்று
சொல்லியேவருமென்று சொன்னாரேமாயவனார்
அப்போதுசக்கரத் தாழ்வாருந்தானடந்தார்
காடுசெடியுங்கரியமலை தான்கடந்து
அருச்சுனனாரண்டை அருகேவந்துதெண்டனிட்டு [ல்
மாயவனார்சொன்னதொரு வார்த்தையொன்றுந்தப்பாம
காண்டீபனருச்சுனற்குங் கரியாமல்சேதியெல்லாம்
உண்டானவார்த்தையெல்லாம் ஒளியாமலேயுரைத்தான்
காண்டீபனருச்சுனனும் கடுகியேயேதுசொல்வான்
யதுகுலவான்சக்கரமே ஐயையாவுன்னடியேன்
வாள்விஜயனருச்சுனன்மேல் வன்பகையுந்தனக்கேன்
ஏதுகுற்றமானாலும் எனக்காய்மனம்பொறுத்து
ஆயிரந்தெண்டன் அடிபணிந்தேனென்றுசொல்லும்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடநியாயமல்ல
தவிக்கப்பிழிந்துமென்னை நகரத்திற்போட்டாலும்
கைவிடான்விஜயனென்று கண்ணனுக்குநீயுரையும்
வாழியுள்ளகாலமட்டும் உனைமறவானருச்சுனனும் [று
வணங்கினேனென்றுரையும் மாயருக்குநீர்தாமும்
அநேகங்கோடிநமஸ்காரம் அருச்சுனன்செய்தானென்
தாமோதரன்றனக்குச் சக்கரமேபோய்ச்சொல்லும்
சக்கரமேபோய்ச்சொல்லுஞ் சரணஞ்சரணமென்று
சொல்லித்தொழுதானே சுவாமிபெருமாளை
சக்கரத்தாழ்வாருக்குத் தனஞ்சயன்விடைகொடுக்க
சக்கரத்தாழ்வாருந் தானுமங்கேபோய்நடந்தார்
காடுசெடியுங் கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
மாயருகில்வந்து வணங்கியேதெண்டனிட்டு
வாள்விஜயன்சொன்னதொரு வார்த்தைகள் தானுரைக்க
ஆயரவர்கேட்டு ஆங்காரக்கோபமதாய்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்பிறந்ததென



சக்கரம் அருச்சுனன் மனமறிந்து பெருமாளுக்குச்
சொல்ல பெருமாள் கோபித்து சாத்தகியை
அனுப்புகிறது.

கொல்லநினைப்பாரே குடிகேடுவந்திடுமே
வேண்டாங்காண்வாள்விசயா வீண்பகைதேடாதேயென
அருச்சுனற்குச்சொல்லி நீ அதிவிரைவிலோடியந்த
கெந்திருவன்தன்தலையை இந்தக்ஷணமறுத்து
ஒருக்ஷணப்போதையிலே உத்தரவுகொண்டுவாரும்
என்றவுரைகேட்டு எழுந்துநடந்தாராம்
காடுசெடியுங் கரியமலைதான்தாண்டி
அருச்சுனன்தானிருக்கும் ஆரணியம்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனனைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டான்
மாயனுரைத்ததொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
ஒன்றுமொளியாமல் உரைத்தாரேசாத்தகிதான்
அரிராமர்சேதியெல்லாம் அருச்சுனன்தான்கேட்டு
எத்தனைவார்த்தைகளிரக்கமாய்ச்சொன்னாலும்
இரங்காமல்மாயவரும் எதிர்க்கவுமுஞாயமுண்டோ
ஆயன்பெருமானும் அறியாரோஎன்சமர்த்தை
பெண்டுகள்பேச்சுகளோ பேசுகிறாரெம்பெருமாள்
கைவலுமையுண்டானால் கடுகிவரச்சொல்லும்
மூலையிலேதாமிருந்து மொருகிறதுஞாயமுண்டோ
மைதானவெளியிலே வரச்சொல்லும்சண்டைபண்ண
காக்கிறேனென்றவனை கைவிடப்போரேனோ
மாயவருடனேகைமயேஸ்வரனார்வந்தாலும்
பெருமானுடனேசப் பிரமதேவர்வந்தாலும்
எவரெதிர்த்துவந்தாலும் இளைப்பேனென்றுபாராதே
போவென்றுசொன்னான் போர்விஜயன்கோபமதாய்
சாத்தகியாழ்வாரும் தானடந்தான்பொட்டெனவே
ஆயருகில்வந்து அடிபணிந்துதெண்டனிட்டான்
அருச்சுனன்சமர்த்துகளும் ஆண்மைகள்பேசினதும்

சண்டைக்குமுஸ்திப்பாய் தான்வரச்சொன்னதுவும்
அவ்வார்த்தைசொல்லுகையில் ஆயருங்கோபமுற்று
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாகுதுபார்
அருச்சுனன்மேல் பெருமாள் கோபமாகி சண்டைக்குப்
போக திரியோதிரனை வரவழைக்கிறது.

---

கோபம்பெரிதாச்சு கோபாலமாயருக்கு
சாத்திகியைத்தானழைத்து சாமியாரேதுசொல்வார்
திரியோதிரனுக்குச் சேதியுரையுமென்றார்
மாயவற்குப்பகையானார் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
ஐவரைக்கொல்லவென்று ஆயர்பயணமிட்டார்
உன்னுடையசேனைகளும் யுத்தமானராசர்களும்
சேரத்துணையாகச்செப்பிவரச்சொன்னார்காண்
வாருங்களென்று வரவழையுந்திரியனைத்தான்
இப்போசமயம் இதோபயணம்வாருங்களென்று
நாகக்கொடிவேந்தன் ராசாவையழையுமென்றார்
சாத்தகியாழ்வாரும் சரணமிட்டுப்போய்நடந்தார்
அஸ்தினபுரத்துக்கு அடைவுடனேபோய்ச்சேர்ந்து
திரியோதிரனுக்குச் சேதிகள்சொல்லலுற்றார்
ஐவரைக்கொல்லுகைக்கு ஆயர்மனதாகி
அழைத்துவரச்சொன்னார்காண் அரவக்கொடியோனே
வருவீரோஎன்றுசொல்லி வாய்மொழிகேட்கலுற்றார்
சாத்தகிசொல்லுமே சர்ப்பக்கொடியோனும்
திரியோதிரன்கேட்டு சிந்தைமனங்குளிர்ந்து
ஐவரைக்கொல்லுகைக்கு அதிகமனதாகி
நல்லசமயம் நமக்குக்கிடைத்ததென்று

திரியோதிரன் பெருமாளிடம் வருகிறது.

---

அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றான்பேரிகை
இன்றுவெளிக்கூடாரம்இப்போதுபோடுமென்றான்[ வை
கானுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்



வெயிலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
யானையின்மேல்டங்காவும் குதிரையின்மேல்டேராவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைசெவிடுபட
யானையுஞ்சேனையுடன் அரசுமன்னர்பயணமிட்டார்
துரியோதரன்தம்பிமார்கள்தொண்ணூற்றொன்பதுபேர்
கருணன்சகுனியும் காந்தாரிபிள்ளைகளும்
துரோணரசுவத்தாமன்சொற்பெரியகாங்கையனும்
கிருபன்கிருபாசாரி கீர்த்தியுள்ளமன்னர்களும்
பிள்ளையவன்லக்குணனும் பேர்மிகுத்தமந்திரியும்
மற்றுஞ்சிலராசர்களும் மந்திரிகள்பயணமானார்
அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
எண்ணூல்கு ஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
நாலுபக்கத்திலுள்ள ராசாக்கள்சேனையுடன்
கார்மேகம்போலே கறுத்தானைக்கூட்டம்வரும்
மேகத்துமின்னலைப்போல் வெள்ளானைக்கூட்டம்வரும்
வானத்துமின்னலைப்போல் மணித்தேரசைந்துவர
செவ்வானம்போலேசிவந்தபுரவிகளும்
அச்சுகிருகிரென்ன யானைநெடுந்தேரசைய
வண்டிக்கிருகிரென்ன மதயானைகோஷ்டமிட
குதிரைகனைக்குமங்கே கொக்கரிக்கும்பாளையங்கள்
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கறுந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிக்க
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதாமுழங்க
தேர்களசைந்துவரச் சிகரக்கொடிபறக்க
மாயவனூர்பட்டணமே வாரார்களெல்லோரும்
அங்கேநட்டான்சண்டாவை அங்கிறங்கப்பாளையங்கள்
திரியோதிராசன் ஸ்ரீகிருஷ்ணனருகில்வந்து
மாயவரைக்கண்டுவணங்கியேதண்டனிட்டான்
ஏழுலகமுண்டசாமி எம்பெருமாளேதுசொல்வார்

மாநாகங்கொண்ட மகாராசாதிகேளும்
காலையில்நாளெழுந்து கலிவாய்முகங்கழுவி
இளகாலைத்தோத்தரித்து செய்தென்ஜெபதபங்கள்
ஆகாயவீதியிலே அரும்பாவிகெந்தருவன்
வாசங்கள்தின்றுசெந்நல்லைதுகையில்நானுமிழ்ந்தான்
அவனைக்கழுக்கறுக்க அனுப்பினேன்சக்கரத்தை
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனராசனவன் ஆதரித்துக்கொண்டானும்
ஆகையாலருச்சுனனை அதாலக்கவேணுமென்று
உத்தனுக்குச்சேதிசொல்லி உடகதவேவாருமென்றேன்
என்வார்த்தைதன்னாமல் எப்மேகதயவாயிவந்தீர்

ஐவரையுங்கொல்ல திரியோதிரனும் அவன்சேனைகளும் எம்பெருமானும் அவர்சேனைகளும் சண்டைக்குவருகிறது.

---

ஐவரைக்கொல்லுகைக்கு அனைவரும்போவோமென்றார்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றார்
அமரதரும்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துமலங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
அத்தண்டராஜனுவமும் அல்லவரும்பயணமென்றார்
துரோணாசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாசாரி கீர்த்திபெற்றகர்ணனுமே
எண்ணொன்று ஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
தோணியுமாவணியும் சேனைத்திரளுடனே
வாரஜனங்களெல்லாம் பட்டுமிதங்களில்லை
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்கடந்து
வனமாய்வனங்கடந்து வருகுதுபாளையங்கள்
இளகான்வனந்தனிலே சேர்ந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்



முருக்கமகாரிஷிவனத்தில் முடிமன்னர்வந்தார்கள்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடுகிவந்தாரன்னேரம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காமதேனுபர்வதத்தில் கடிகிவந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
கெந்தமாபர்வதமே கிட்டியேவாரார்கள்
ஒற்றனொருவனை ஓடியேசொல்லுமென்றான்
திரியோதிரன்படையும் ஸ்ரீகிருஷ்ணன்சேனைகளும்
வருகிறதென்றுசொல்லி வாள்விஜயனுக்குரையும்
அன்றுசொல்லியருச்சுனற்கு அனுப்பினார்தூதுவனை

அருச்சுனற்கு எம்பெருமாள் சண்டைக்கு வருகிறேனென்று தூதனிடம் சொல்லியனுப்புதல்.

—— (*) ——

ஓடினான்தூதுவனும் ஒருநொடியிற்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனராசருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மாயனும்உரகதனும் வருகிறார்சண்டைபண்ண
எச்சரிக்கையாகவே இருமென்றார்எம்பெருமாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தானருச்சுனனும்
தருமருகில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
அண்ணன்தருமருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மச்சரதமேறி வருகிறவேளையிலே
வாசங்கள்தின்று மண்மேலேதுப்பினனும்
அவனுமிழ்ந்ததம்பலங்கள் அரிராமர்கையில்விழ
மாயன்பெருமாளும் மகாகோபந்தானாகி
சக்கரத்தைவிட்டார்காண் தலையைத்தரிக்கவென்று
அபயமபயமென்று அலறிப்புலம்பிவந்தான்
அபயக்குரல்கேட்டு ஆதரித்தேனவனை
ஆதரித்தேனென்றுசொல்லி அமர்செய்யவந்தாராம்
ஐவரைக்கொல்லவென்று அரிராமர்வாராராம்

மாயருடன்சண்டைபண்ண வாரீரோ அண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல்வார்தருமருமே
போருக்குமாயருடன் போகாதேதம்பியென
வெற்றிமதகரியான் வீமனவனேதுரைசொல்வான்
அஞ்சாதேதம்பியரே அடிமாக்கிப்போட்டிடுவேன்
திரியோதனன்படையும் ஸ்ரீமாயர்சேனைகளும்
எல்லோரையுங்கொன்று எமலோகஞ்சேர்த்திடுவேன்

வீமனும் அருச்சுனனும் சண்டைக்குப்புறப்படுகிறது.

என்றுமதவீமன் எழுந்தானேகோபமுடன்
தருமரையுந்துரோபதையும் தம்பிமாரிருவரையும்
அபயமிட்டகெந்தருவன் அவனையுந்தானழைத்து
உச்சிமலைநடுவே உள்ளேகுகையிருக்கும்
அந்தகுகையிலே அனைவோரும்போயிருங்கள்
வந்தவிரனையெல்லாம் மண்ணுக்கிரையிடுவோம்
எம்பெருமான்சேனைகளை எமலோகஞ்சேர்த்திடுவோம்
எச்சரிக்கையாகவே இருமென்றனப்பொழுது
அப்படியேதருமரவர் அதிவிரைவாய்த்தானெழுந்து
உச்சிமலைநடுவே ஒருகுகையிற்போயிருந்தார்
வீமருச்சுனரும் விரைவாகத்தானெழுந்து
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
குத்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தாக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லே கட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆயுதப்பட்டார்கள்
வடக்குமுனையிலே மதவீமன்வந்துநின்றான்
தெற்குமுனையிலே தேர்விஜயன்வந்துநின்றான்
வருகுதுபாளையங்கள் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
ஆனைகுதிரைரதம் அளவில்லாச்சேனைகளும்



வருகிறஜனங்கள்தனை மாயவனார்தானழைத்து
திரியோதனனை சேரவரவழைத்து
உன்னுடையசேனைகளை உகமையுள்ளராசர்களை
சமரதுசெய்யவந்த சமர்த்துள்ளமன்னர்களை
ஆனைகுதிரைகளும் அரசமன்னருள்ளவரும்
மாவணியுந்தோணியும் மற்றுமுள்ளராணுவமும்
உன்னுடையபாளயத்தை ஒன்றாகவேகூட்டி
வடக்குமுகத்திலே மதவீமன்தன்மேலே [கு
சண்டைபோய்செய்யுமென்று தான்சொன்னார்திரியனுக்
தெற்குமுகத்திலே தேர்விஜயன்றன்னருகே
என்னுடையசேனைகளெல்லோரும்போயெதிர்த்து
அருச்சுனன்றன்னுடனே அமரதுசெய்திடுவோம்
என்றுஅனுப்பிவைத்தார் இயலானமாயவரும்
தவளச்சங்கூதினார் சண்டைக்குவாரோமென்று
ஊதினார்சின்னம் உலகளந்தார்பாளயத்தில்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகராடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வந்தெதிர்த்தார்கள் வான்விஜயன்றன்னுடனே
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
தன்னுடையசேனையுடன் தான்வடக்குத்திசையதனில்
வந்தெதிர்த்தானே மதவீமன்றன்னுடனே
எண்ணொணாச்சேனையுடன் எச்சரித்துத்தான்வளைத்தார்
சிங்கநாதந்தானூதி சேனைகளுங்கொக்கரித்தார்
கண்டான்மதவீமன் கண்கொள்ளாச்சேனைகளை
எல்லவரைக்கொல்லவென்று எழுந்தான்மதகரியான்
கோபம்வருகுது கொற்றவனார்வீமனுக்கு
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுது
கண்ணையுருட்டிக் கதும்பினான்சேனைகளை
எட்டினான்கல்மலையை எகிறவிட்டான்பாளயத்தில்
மலைகளைத்தான்பிடுங்கி மதவீமன்வீசுகிறான்

குன்றுகள்சேர்த்தெடுத்தும் கொப்பெனவோடுகிறான்
ஆனைகுதிரைகளும் அலறிக்கலங்கிடுமாம்
அச்சுகளுந்தான்முறிந்து அநேகரதம்விழுமாம்
வண்டில்முறிந்துமிலை மச்சுத்தேர்தானொடியும்
ஜெனங்கள்மடியுது செம்புரவிஓடுது
கண்டங்கண்டமாகுது கடுந்தேரினையத்தனையும்
அம்மாடியென்றுசொல்லி அலையுதுபாளையங்கள்
செத்தஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
ரத்தமாறோடுது ரணங்கள்மிகக்கொப்பளிக்க
ஐயோசிவனேயென்று அலையுதுபாளையங்கள்
பார்த்துமுடியாது பாவியுடஜெனங்கள்
சொல்லிமுடியாது துரியோதனன்பாளையங்கள்
இந்தவிதமாக எழில்வீமன்கொல்லுகிறான்
இப்படியாகவே இவன்சண்டைபண்ணுகையில்
ஆணழகுமன்னன் அருச்சுனன்தன்னுடனே
வந்தெதிர்த்தாரே மாயர்பெருமாளும்
வில்வளைத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
மார்பிளத்தாவெடுத்து கோள்பிளவாங்கிவிட்டான்
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
சொர்னமழைபோலே சொரிகிறார்பாணமது
சங்கரன்மாரிபோலே சரமேல்சரம்விடுத்தார் [ன்
அருச்சுனன்பின்விடையான் அகோரச்சரம்பொழிந்தா
ஆகாயந்தன்னளவாய் அம்பாலேபந்தலிட்டு
சூரியனைத்தான்வளைத்தான் சூராதிசூரனவன்
வில்பிடித்தகைத்தலத்தில் மெத்தச்சிவப்பேறும்
வளைத்தவில்நிமிராமல் மாரிச்சரம்பொழிந்தார்
வாயுவினஸ்திரமும் வருணாஸ்திரமும்விட்டார்
பின்னையும்அஸ்திரங்கள் பிரளயமாய்த்தான்விடுத்தார்
நாலுகடிகைமட்டும் நல்லாசண்டைபண்ணார்கள்
ஒருவற்கொருவர் உகந்துபின்வாங்காமல்
சண்டையமர்களத்தில் தாக்கிப்பொருதலுற்றார்
விலக்குவாரில்லை மிகுத்தசமாதனை



மாயன்பெருமாட்கு வருகுதுமெத்தக்கோபம்
என்றுமில்லாக்கோபம் எழும்புதுமாயருக்கு
விட்டதொருபாணமெல்லாம் மட்டறுத்தான்வாள்விஜய
அருச்சுனனைக்கொல்ல அரியர்மிகோபமதாய் [ன்
சக்கரத்தைத்தானெடுத்தார் சாமிபெருமாளும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலர் அருச்சுனனை
மந்திரதாபமிட்டு மாயனுரேதுசொல்வார்
அருச்சுனன்தன்சிரசைஅரைநொடியில்வாங்குமென்றார்
சுழற்றியெடுத்தாரே சுவாமியுஞ்சக்கரத்தை
கண்டானேவாள்விஜயன் காந்தாளமாயெழும்பி
தானுமெடுத்தானே தன்னுடையசக்கரத்தை
சக்கரத்தைமந்திரித்து சாமியைக்கொல்லவென்று
எடுத்தானேசக்கரத்தை இமையோர்கள்தானறிய
சக்கரத்தைமந்திரித்து தான்விடவகையறியான்
வாவென்றழைக்கவகையறியானருச்சுனனும்

சாமிபெருமாள் சக்கரமெடுக்கத் தனஞ்சயன்
பதில்சக்கரமெடுக்க இருவரும்
சாமாதானமாகிறது.

---

கண்டார்பெருமாளுங் கனமோசம்வந்ததென்று
நாமல்லோகற்பித்தோம் நல்விஜயனர்ச்சுனற்கு
சக்கரத்தைவிட்டாக்கால்தானழைக்கவகையறியான்.
சக்கரம்வந்துதானால் தலையைத்தறித்திடுமே
மோசம்வருகுமென்று முகில்வண்ணரேதுசெய்தார்
தன்னுடையசக்கரத்தை சாமியார்தேரில்வைத்தார்
தேரைவிட்டிறங்கினார் ஸ்ரீராமர்பொட்டெனவே
கண்டானே அருச்சுனனும் கடுகியிறங்கினான்
தேரைவிடுத்தானிறங்கி ஸ்ரீராமர்கெதிரானான்
ஒருவற்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்

எம்பெருமானும் அர்ச்சுனனும் சமாதானமானதை
துரியோதனன் கண்டு பொறாமைப்பட்டுச்
சொல்லாமல் ஓடுகிறது.

கண்டான் துரியோதனன் கரியமால்மோசமதை
தனஞ்சயனுமாயனுமே தழுவிவிளையாடுவதை
எண்ணுதுமென்னினுன்னாரிதாகங்கொண்டனனும்
மாயன்கெடுத்தானே வஞ்சனைகள்செய்தானே
பொல்லாநினைவுகொண்டு பெருமானைத்துறந்தார்
நம்மையேகொல்லவென்று தானவரைத்துறந்தார்
அறியாமல்வந்துவிட்டோம் அமராடுசெய்வோமென்று
மாயவனைநம்பி வருவதுநீதியல்ல
ஐவர்சகாயரென அவனியதிற்கேட்டிருந்தும்
அறிந்துமிருந்துநாம் அதிகமாய்மானவைத்தோம்
யுத்தம்பண்ணவந்திங் குறவாடிப்போனாரோ
கொல்லுகிறேனென்றுவந்து கூடியுறவாடினரே
இனியிருக்கநாயமல்ல என்றுவழிபிடித்தான்
ஆனையுஞ்சேனையும் அண்டமொன்றாப்பாளையமும்
தப்பியிருந்த தளம்பெரியசேனைகளை
கூட்டிநடத்தானே கொத்துப்போர்வீரியனும்
காடுஞ்செடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுஞ்சுனைகடந்து அனேகமலைதான்கடந்து
அத்திநகர்ப்பட்டணத்தை அடுத்தானதுரியனும்
அந்தச்சமயத்தில் ஆயனும்அருச்சுனனும்
ஒருவரொருவர் உறவாடிப்போய்நடந்தார்
மலையேறிஉச்சி வாராதிருவருமாய
தருமருந்துரோபதையும் தம்பிமாரிருவருமாய்
கடுகியெழுந்திருந்து கார்வண்ணனைத்தொழுதார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்மாயவனை
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
பெருமான்மனமகிழ்ந்து பிரியமுடன்தான்வாழ்த்தி



அல்லவரைக்கையமர்த்தி அரிராமர்வீற்றிருந்தார்
தருமருடனுக சாமியாரேதுசொல்வார்
காலைக்கடன்முடித்துக் கையேந்திசெபதபங்கள்
செய்துகொண்டிருக்கையிலே தேரேறிஅந்தரமாய்
ஆரோவொருகெந்தருவன் அதிகக்கெருவமதாய்
போரிடவென்கையிற் புளிச்சென்றுதம்பலத்தை
துப்பினான்சக்கரத்தைத் துணித்துவாவென்றனுப்ப
ஓடியிடம் அபயமெனக் கெந்தருவனோடிவர
எனக்குப்பகையான இயலானபாதகனை
ஆதரிக்கநாயமுண்டோ அயர்செய்யக்காரியமேன
என்னோடெமர்பொருந்த இராசாவேநாயமுண்டோ
தக்கபுகழ்பெரிய தருமாவரேதுசொல்வார்
அறியாதார்செய்தபிழை ஆண்டவனேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தபிழை ஆண்டவனேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தபிழை தேவர்மனம்பொறுத்து
இரவும்பகலுமே எப்போதுமுந்தனைத்தான்
உம்மைத்தொழுதல்லோ உலகாளவென்றிருந்தோம்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையேதெய்வமென்று உயிர்கொண்டுலாவுகிறோம்
என்றுவணங்கினார் இயலானதருமரவர்
உள்ளங்குளிர்த்துமே உலகளந்தாரேதுசொல்வார்
அருச்சுனனைத்தான்பார்த்து அரிராமரேதுசொல்வார்
சென்றதுஉன்சபதம் தேவேந்திரன்மகனே
அபயமிட்டோர்களைத்தா னாதரிக்கவல்லபிரான்
செப்பியதுதான்தவறுன்தேவேந்திரன்மகனார்
மார்க்கண்டனுக்காக மயேஸ்பரன்சொல்லிவிட்டார்
நிலையறியார்பரமசிவன் நிலையறிந்தான்நாமறியோம்
உன்னிலும்வல்லபிரான் உலகத்திலாருமில்லை
சந்தோஷமாச்சுது தர்மர்பஞ்சபாண்டவரே
இந்தவனம்விட்டு இனிவனம்போயிருங்கள்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைந்திடுங்கள்
போய்வாரேனென்று பெருமாளெழுந்திருந்தார்

## எம்பெருமான் விடைபெற்று தன்னிருப்பிடம் செல்லுகிறது.

ஐவரைவாழ்த்தியே அரிமாயன்போய்நடந்தார்
காடுசெடியும் கரியமலைதான்தாண்டி.
மாயனுர்போனபின்பு வாள்விஜயனோடுசொல்வான்
வாரமாய்நீகெந்தருவா வார்த்தையொன்றுநீகேளும்
(உன்)ஆபத்துதீர்ந்தது ஆய்மையுள்ளகெந்தருவா
உந்தனரண்மனைக்கே உவமையுடன்போய்சேரும்
என்றுவிடைகொடுத்தார் எழில்விஜயனருச்சுனரும்
அப்போதுகெந்தருவன் அருச்சுனருக்குதெண்டனிட்டு
நான்செய்தபாவத்தை இராசாவேதீர்த்துவிட்டீர்.

கெந்தருவன் அருச்சுனரண்டையில் விடைபெற்றுக்
கொண்டு தன்னிருப்பிடம்போய்ச் சேருகிறது.

ஆபத்தைத்தான்தீர்த்து ஆதரித்தீர்வாள்விஜயா
உனக்கேதுநான்தருவேன் உயிர்க்காத்தராசாவே
பாராசாரிவெண்புரவி பஞ்சவர்ணநற்புரவி
சாகப்புரவிநான் தாரேன்காண்வாள்விஜயா
உந்தன்ரதத்திற்கு உற்றபுரவியென்றான்
ஆனாலுமன்னவன் அருச்சுனனோடுசொல்வான்
வனவாசந்தீர்ந்துநாங்கள் வந்தபிறகாக
அப்போதுவேணுமென்று அப்புரவிதானனுப்பும்
எந்தன்மேல்தயவுநீ என்றும்மறவாதே
போய்வாருமென்றுசொல்லி புண்ணியருங்கூறினார்
மாயனென்னும்கெந்தருவன் வணங்கியேதெண்டனிட்டு
போதச்சரணமென்று போய்நடந்தான்கெந்தருவன்
ஏழாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு
இந்தக்கதைதன்னில் இடறுகளுண்டானால்
ஜகத்தினிலுள்ளவர்கள் சரியாக்கிக்கதையை

இகழ்ச்சியாயுள்ளதெல்லாம் புகழ்ச்சியாய்தான் திருத்தி
அகத்தினிற்றுன்பொருந்தி அன்பாகத்தான்படித்தால்
சுகத்துடன் தான்வாழ்ந்து சுவர்க்கபதிசேர்வார்கள்
இந்தப்படியாக வெப்போதும்வாழ்ந்திடுவார்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாயவருப்போது
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்பரனுர்

ஏழாவது கெந்தர்வ பர்வதம்

முற்றிற்று.


## அ-வது. குருபரிஷி வனம்.

எட்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போருர்கள்
குருபாரிஷிவனத்தில் குடித்தனமாய்ப்போருர்கள்
அந்தவனத்திலே ஐவர்குடித்தனமாய்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகவுண்டுபண்ணுர்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணுர்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாட்சென்றபின்பு

துரோபதை வனசாரிவந்து பாரிசாதபுஷ்பம்
கேட்கிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
ஒற்றையொருநாளில் ஒண்டியாய்த்துரோபதையாள்
அந்தவனத்தி. ன திசயத்தைப்பார்த்துவா

191-வது பக்கம்.



வீமன்பாரிஜாதமலர்கொணரச்செல்லல்.

வரத்திற்பெரியவராம் மகாரிஷியானவராம்
யோகத்திற்பெரியவராம் உக்ககுருபாரிஷியும்
சாமியிலும்பெரியவராம் தவத்திலிருந்தவராம்
(அவர்)பூசைபண்ணுந்தீர்த்தம் பொய்கைபோலாகுது
ஓடுஞ்சலத்திலே ஒதுங்கிவரும்பூமலரும்
பாரிசாதபூமலரும் பரிமளமாய்வீசுகுது
ஆற்றிலடித்துக்கொண்டு அலைந்துவருகுது
கண்டாளே துரோபதையாள் கடுகினதுகொண்டாள்
மெத்தாசைப்பட்டாளே வேல்பொருதுங்கண்ணாளும்
என்றுதுமென்னுயிரு னெண்ணித்துரோபதையும்
ஆரோடேசொன்னாலே ஆகுமிந்தக்காரியங்கள்
எவரோடேசொன்னாலே எடுத்தளிப்பாரிம்மலரை
வெற்றிமதயானை வீமருடன்சொன்னோமானால்
பறித்துத்தருவார்காண் பரிமளத்தைநாமறிய
என்றுநடந்தாளே இளங்கொடிதுரோபதையும்
பர்ணசாலைமேலாகப் பாஞ்சாலிஓடிவந்து

### துரோபதை வீமனைப்புஷ்பங்கேட்கிறது.

---

வெற்றிமதயானை வீமனைத்தான்பார்த்து
எலம்பசுங்கிளியாள் யிளங்கொடியாளேதுசொல்வாள்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
காணாதுகண்டேன்காண் கண்டாசைப்பட்டுவந்தேன்
பாராதுபார்த்துவந்தேன் பார்த்தாசைபட்டுவந்தேன்
என்மனதுக்கேற்றபடி எனக்குவிடைதாரும்
வெற்றிமதயானை வீமரவரேதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பச்சைப்பசுங்கிளியே
ஏதுநினைத்துவந்தாய் எனக்கரியச்சொல்லுமென்றார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அகிலாண்டகாவேரி ஆறொன்றுதான்வருது
ஆற்றங்கரையருகில் அங்கொன்றுதான்வருது
பரிமளந்தோடிருக்குது பார்த்துவந்தேன்பாரிசாதம்



### வீமன் பாரிசாதபுஷ்பம் கொண்டுவரப்போகிறது.

---

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
இங்கேயிருப்பெண்ணே என்றேயெழுந்திருந்து
நீண்டநெடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்குத் தூத்திப்பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
தெண்டாயுதமெடுத்து சிலைவீமன்வாரானே
ஆற்றங்கரையோரம் அங்குவீமன்வாரானே
பூமரத்தைத்தேடியே போறானாம் வீமனவன்
யோசனைக்குயோசனை உயரமுள்ளபூமரமாம்
இதுவென்னசிறுமரம் இட்சணமேகொண்டுவாரேன்
எழுசுற்றுவேலிகளாம் இருபக்கமாமலையாம்
மாமலைதன்னிலே வல்லனுமார்காவலதாம்
பூவனத்திற்போகவென்று போகையில்வீமனவன்
வாசற்படியிலே வல்லனுமார்படுத்திருந்தார்
கண்டாரனுமாரும் கரிவீமனைப்பார்த்து

### வீமனுக்கும் அனுமாருக்கும் சண்டையாகிப் பின்பு சமாதானப்படுதல்.

---

ஆரடாராட்சதனே அஞ்சாமற்போகவந்தாய்
இந்தவனத்திலே எதுக்குப்போறாயென்றார்
போகவிடேனென்றானே போரனுமானப்போது
வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
கோபம்வருகுது கோலாகலவீமனுக்கு
சானுண்டுஇக்குரங்கு தடைப்படுத்துதென்றுசொல்லி
கைரெண்டுநீட்டியே கட்டழகவீமனவன்
கோடையிடிபோலே குத்தினான்நடுமுதுகில்
அந்தஅடிச்சத்தம் அந்தவனம்கிடுகிடென்ன

அந்தவனத்திருந்த அநேகமிருகமெல்லாம்
மறுகாலொருவனத்தே மருண்டோடுதேமிருகம்
அனுமாருடரோமங்கள் அயர்ந்துகொடுத்ததுகாண்
கோபம்வருகுது கோபாலதூதுவற்கு
என்னையடித்தவனை இட்டணமேகொன்றிடுவேன்
என்றுசொல்லித்தானெழுந்து நின்றுனே நல்லனுமான்
அடித்தானேவீமனை அடிவானத்திடிபோலே
கோடையிடிபோலே குந்திமைந்தன்மார்கலங்க
அந்தஅடிபட்டவுடன் அங்கேகளைத்தானும்
மண்மேல்விழுந்தானும் மல்லாந்துபாவனையாய்
விழிகள்பிதுங்கியே விழுந்தானேமூர்ச்சையதாய்
மாண்டவன்போலே மண்மேல்விழுந்தானே
அனேகநெடுநேரம் ஆனபிறகாக
மூர்ச்சைதெளிந்து முடிமன்னன்தானெழுந்தான்
கண்டானே நல்லனுமான்கடுகியவனே துரைப்பான்
என்னுடையசண்டையிலே எவரும்பிழைத்ததில்லை
(இவன்) ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
அடித்தஅடியோடே அவனியில்விழுந்தவன்காண்
தவறியெழுந்தவன்காண் தப்பிப்பிழைத்தானே
என்றுமனதிலெண்ணி இயலனுமானே துரைப்பான்
ஆரடாராட்சதனே ஆங்காரமுள்ளவனே
ஆரென்றிருந்தீர்நான் அரிராமர்தூதனல்லோ
லங்கையழித்தவன்நான் ராவணனைவென்றவன்காண்
அஞ்சனாதேவிபெற்ற அனுமந்தன்நானலவோ
என்னோடெதிர்ந்து இனிப்பிழைக்கப்போறீரோ
என்றவுரைகேட்டு இயலானவீமனவன்
உற்றதுகேட்டு மெத்தப்பயந்தவனும்
அண்ணனென்றறியாமல் அபராதஞ்செய்தோமே
(என்று)பச்சைத்தழையுருவ பாதத்திற்றன்போட்டு
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
ஐங்கால்வலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்



கண்டந்தநல்லனுமார் கடுகியே துரைப்பார்
ஆரடாதம்பி நீ அறியவுரையுமென்றான்
(உன்)ஊரேதுபேரேது உன்னுடையபெயரென்ன
ஆருடையபுத்திரன்காண் அறியவுரையுமென்றான்
வெற்றிமதயானை வீமனவனே துசொல்வான்
என்தகப்பன்வாயுராசர் என்தாயார்குந்தியம்மாள்
மந்தாரக்குந்தியம்மாள் பெற்றெடுத்தமகராசன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலமணிகளைவருண்டு
தருமராசர்தம்பி நாக்குடையவீமனென்பேர்
இவ்வார்த்தைதான்கேட்டு அதுசொல்வான்நல்லனுமான்
உத்தமனேநாமிருவர் ஒக்கப்பிறந்ததினால்
என்னுடையசண்டைக்கு எவரும்பிழைத்ததில்லை
தம்பியென்றதாலையினால் தப்பிப்பிழைத்தீரே
மாளாமல்நீபிழைத்தாய் மதவீமனையினால்
(என்று)ஒருவற்கொருவர் உறவாடித்தான்பேசி
ஏதுவகையாக யிங்குவந்தாய்தம்பியரே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனவரே துசொல்வார்
இந்தவனமதனில் வந்தோம்வனவாசம்
பாஞ்சாலன்பெற்றமகள் பஞ்சவர்க்கு நற்கினியாள்
பாரிசாதப்பூமலரை பார்த்தாசைப்பட்டாளாம்
காணுதப்பூமலரைக்கண்டாசைப்பட்டாளாம்
பாரிசாதப்பூமலரைப் பறிக்கவென்று இங்குவந்தேன்
வேண்டிவந்தப்பூமலரைப் வேண்டுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுமந்தனேதுசொல்வான்
குருபாரிஜாதத்தில் கோடியுண்டுகாரியங்கள்
ஏழுலட்சம்கிங்கிலியர் இவ்வனத்திற்காவலுண்டு
இதனைகாவலிலே எப்படிக்குப்போய்வருவாய்
அந்தரிதியறிந்தால் ஆக்கினைசெய்திடுவார்
கொல்லநினைப்பாரே குடிகெடுவந்திடுமே
ஆருமறியார்கள் அவருடையபட்டணம்
என்னசெய்வேன்தம்பியரே எப்படிப்போய் நீவருவாய்

(உனை)வால்முனையில்கட்டினான்வனத்திலேவிட்டிடுவே
ஆருமறியாமல் அம்மலைநீபறித்து [ன்
வாலையகற்றிவிட்டால் எடுத்துநான்வந்திடுவேன்

வீமன் அனுமான்வாலின் வழியாகச் சென்று

ராட்சதரையெல்லாங் கொல்லுகிறது.

---

(என்று)வாலிலேகட்டினான் மதகரியான்வீமனைத்தான்
வாலைக்கிளப்பி வனத்திலேபோகவிட்டான்
இந்தவனப்புதுமை எல்லாமறியவென்று
வாலையவிழ்த்தானோ மதகரியானப்பொழுது
அசக்கிவிட்டானென்றுசொல்லி அனுமாரும்வாங்கினு
வீமனைக்காணாமல் மெத்தமனந்தளர்ந்தார்
ஆயாசப்பட்டு அனுமந்தன்தானிருந்தார்
வெற்றிமதயானை வீமனவனேதுசய்வான்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கவென்று
சுற்றிவருகிறான் சுந்தரமாமவ்வனத்தை
மல்லிகைமுல்லை மலரோடுசெண்பகமும்
பாரிசாதபுஷ்பமங்கே பரிமளம்வீசுகுது
வீசுகின்றபுஷ்பமரம் வேருடனேதான்பிடுங்கி
படுத்துப்பிரண்டானே பரிமளத்தைத்தானறிந்து
அந்தவனமெல்லாம் அதம்பண்ணாளப்போது

பூமரங்களைவீமன் அதம்பண்ண காவலர்கண்டு

சண்டைபண்ணி இறந்தவர்போக மற்றவர்

ரிஷியாருக்குச்சொல்லல்.

---

அந்தவனத்திலே அனேகம்பேர் ராட்சதரும்
எல்லவருந்தான்வந்து எட்டினார்வீமன்டை
வந்துவளைத்தார்கள் மதகரியான்வீமனுடன்
எட்டினார்சண்டை எழும்புதுசமருமப்போ
ஒருவற்கொருவர் யுத்தங்களாகுது
வெற்றிமதயானை வீமனெழுந்து



அடிப்பான்கெதையாலே அனேகம்பேர்கீழேவிழ
அனந்தம்பேர்ராட்சதரை அதமாக்கிக்கொன்றானே
இந்தவிதமாக எண்கோடிராட்சதரை
கொன்றுவதைத்தானே கோடானகோடிகளை
கொன்றவர்தான்போக நின்றதொருராட்சதர்கள்
குருபாரிஷியருகே கொப்பெனவேவோடிவந்தார்
அபயமபயமென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
ஏதுக்கபயம் என்னகருமமென்றார்
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
சிங்காரப்பூவனத்தைச் சிதறித்தான்பாவியவன்
மரங்களைத்தான்பிடுங்கி வனமெல்லாம்அதமாக்கி [ன்
எழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டா
இவ்வார்த்தைகேட்டு எரிக்குங்கதிரவன்போல்
காயுங்கதிரவன்போல் கண்சிவந்தார்குருரிஷியும்
கோபம்வருகுது கொடுங்காலருத்திரன்போல்
என்னுடையபூவனத்தில் எவரொருவர்வாறதில்லை
தேவர்முனிவர் தீண்டொணாப்பூவனத்தை
ஆரடாதூதுவரே ஆயிரம்பேர்போங்களென்றார் [ன்
கைப்பிடியாய்த்தான்பிடித்துக் கடுகெனவேகொண்டுவாங்க
என்றசத்தங்கேட்டு எழுந்தார்களாயிரம்பேர்
வாய்வேகமாகவே வனத்திலேபோயிறங்கி
ஆரடாராட்சதரே ஆங்காரக்கோபமுடன்
வனத்தைஅதமாக்கி வந்தவரைக்கொன்றவனே
எங்களுடஐயரும்மை இட்டுவரச்சொன்னாரே
குலத்திற்பெரியவர்காண குருபாமகாரிஷியும்
(உன்னை)அழைத்துவரசொன்னார்காண்ஐயருமிப்போது
கடுகெனவேவாருமென்று கையைப்பிடித்திழுத்தார்
கையோடேகைப்பிடித்தான் கடியவேகையைவிட்டார்
ஆயிரந்தூதுவரை அரைக்ஷணத்தில்தட்டிவிட்டான்
அத்தண்டபேரையும்அவனொருவன்கொன்றுவிட்டான்
நானொருவன்தப்பிவந்தேன் நல்வார்த்தைசேதிசொல்ல
என்றவன்கூறலுமே எழில்குருபாமுனிகேட்டு

கோவைப்பழம்போலே கூர்விழிகள்தான்விளங்க
சவரிப்பழம்போலே தன்விரல்கொண்டிலங்க
நெருப்புப்போல்கண்விளங்க நெறநெறென்றுபல்கடித்து
சுவாசமனலெழும்பர் சுரகணையுங்கொண்டுதான்குமைல்
தாளு..ந்து சபிக்கமனந்தானெறி
எறினார்கனகதண்டி யெழில்குருபாமுனிவரும்
பாரவனத்திருக்கும் பங்களாதன்னருகே

புஷ்பவனத்தையழித்தவினை சபிப்பதற்காக குருபார
முனிவருகிறதை யெம்பெருமானறிந்து அனை
வரையும் சமாதானப்படுத்துதல்.

—•|•—

வருகிறவேளையிலே மாயனிதுவறிந்தார்
காவலர்கள்பஞ்சவர்க்குக் கைமோசம்வந்துதே
மோசங்கள்வந்து முடிந்ததேபஞ்சவர்க்கு
பொல்லாதகாலம்பிறந்ததுபாஞ்சவர்க்கு
ஆகாதகாலம் ஐவருக்குவந்ததையோ
உள்ளங்கைநெல்லிக்கனி உருக்குலைந்துபோகுதையோ
தோளில்செபமாலை தொண்டமிழந்துபோகுதையோ
பெட்டியிலேயாபரணம் பொருமைகுலையுதையோ
எழில்குருபாரிஷியுடனே எதிர்ப்பாரொருவரில்லை
மாமாக்கிக்கல்லாக்கி வனத்திலேகொன்றிடுவார்
ஐவரைக்கொன்றிடுவார் அனர்த்தம்வரநாளாச்சே
காத்ததுகாத்தாமே கடைப்போக்காப்போமென்று
வட்டமாங்கருடனேறி வாராரேமாயவனுர்
ஐவரிருக்கும் ஆரணியம்வந்துவிட்டார்
சாயாம்புமன்னன் தருமருங்கண்டாராம்
கடிகியெழுந்திருந்து கார்வண்ணரைத்தொழுது
சரணமடைந்தார்கள் தர்மமுடிராசாக்கள்
சிங்காதனங்களிட்டார் ஸ்ரீராமர்வீற்றிருக்க
இட்டசிங்காதனத்தில் வறியிருந்தாராம்
சாயாம்புமன்னர் தருமரவரே தரைப்பார்



இன்னரவேளையிலே எம்பெருமாளெங்குவந்திர்
அடியானைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
அடியனந்தமாயவனுர் ஆதிமூலமேதுசொல்வார்
நால்வரிருக்கையிலே நல்லதம்பியெங்கேயென்றார்
வெற்றிமதயானை வீமராசனெங்கேயென்றார்
தருமாறிலேனென்றார் தம்பியரைக்காணேனென்றார்
தோருவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
பாரிசாதபூமலரைப் பார்த்தாசைப்பட்டேனையா
பிரியமாய்வேண்டுமென்று பிணங்கினேன்வீமரண்டை
பூப்பறித்துவாரேனென்று போய்விட்டார்வீமராசன்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
கைமோசம்வந்ததுகாண் கபடமில்லாத்தருமராயா
ஐவர்பஞ்சபாண்டவரே அனர்த்தம்வரலாச்சே
குருபாரிஷிவனத்திற் கொப்பெனவேபோய்ப்புகுந்தான்
மரத்தைப்பிடுங்கியவன் வனநாசமாக்கிவிட்டான் [ன்
வழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டா
அந்தவனத்தை அதமாக்கினபடியால்
கொல்லவருகிறார் கொப்பனவேமாமுனியும்
தவத்திற்பெரியவர்காண் சகலகலைவல்லவர்காண்
வரத்திற்பெரியவர்காண் வல்லகுருபாமுனியும்
அதிகசாபம்தானிடுவார் ஐவரைக்கொன்றிடுவார்
என்னசெய்யப்போறேனென எம்பெருமாள்கூறுகையில்
அஞ்சிப்பயந்துமல்லோ ஆண்டவற்கேதுசொல்வார்
இத்தனைநாள்காத்தீரே இன்றுகைவிட்டீரே
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்தீரே
அம்பல்வாசலிலே அபிமானங்காத்தீரே
ஆபத்தைத்தீர்க்க... ஆண்டவரும்நீரலவோ
உம்மைவிடவேறுதுணை உற்றதுணைதானுமுண்டோ
காக்கக்கடனுனக்கு என்றுபலர்கைதொழுதார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
குருபாரிஷியுடன்பேசிக்கொண்டுநான்தானிருப்பேன்

அப்போது நாலுபேரும் அந்தவழி புகுந்திடுங்கள்
தருமரேயும்மைநான் தாழ்ந்துவணங்குகிறேன்
உன்னைவணங்கினால் உபகாரவார்த்தைசொல்லும்
ஆரென்றுகேட்பாரோ அந்தகுருபாமுனியும்
உம்மிலும்வல்லபிரான் உண்மையுள்ளமாமுனியும்
என்றுஉரைத்தாலே எழுந்துவணங்கிடுவார்
வணங்கிநமஸ்கரிப்பார் வாழ்த்திமொழிந்தனைப்பீர்
வெற்றிமதயானை வீமனெதிர்வந்தானும்
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்பேன்
அந்தரிஷியாரும் ஆரென்றுதான்கேட்பார்
உன்னிலும்வல்லபிரான் உண்மையுள்ளமாமுனியும் [ல்
என்றுசொல்லிநானிருப்பே னிவ்விதமாய்ச்செய்யாட்டா
ஆகையால்நான்போவேன் ஐவரேபின்புவாரும்
என்றுயெழுந்தாராம் இயல்மாயவரும்
மாயார்பெருமாளும் வனத்துநேதான்நடந்து
குருபாமுனியெதிரே கொப்பெனவேவருகையிலே
மாயவரைக்கானகையில் வணங்கினார்குருபாமுனி
ஒருவற்கொருவர் உறவாடிப்பேசினார்கள்
மாயன்பெருமானே வனத்திலேயெங்குவந்தீர்
இந்தவனமதனிலே தனியாகவந்தீர்
வந்தவகையதனை வாய்திறந்துசொல்லுமென
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வனசாரியாகவே வந்தேன்குருபாமுனியே
வந்தயிடத்திலிந்த வனத்திலுமைக்கண்டேன்காண்
இன்னரவேளையிலே எங்குவந்தீர்சொல்லுமென
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
வனத்திலேபோய்ப்புகுந்து மரங்களைத்தான்பிடுங்கி
ஏழுலட்சந்தாதுவரை எல்லவரைக்கொன்றிடுவான்
பொல்லாதபாவியைக் கொல்லவென்றுபோறேன்காண்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராயரேதுசொல்வார்
உம்முடையவனத்திலே ஒருவர்வரப்போறதில்லை



தேவலோகத்தாரும் தீண்டாதபுவனத்தை
அமரர்சித்தர்முனிவராலும் ஆநாதுன்வனமழிக்க
ஐயரேஉன்றன்வனத்தை அதமாக்கும்பாலகனை
இட்சணமேகொல்லுகிறேன் இட்டுவாசசொல்லுமென்
இருவருமாகவே ஏகமாய்க்கொல்லவென்று [றர்
ஆரடாதாதுவனை அழைத்துவாராட்சதனை
என்றுஅவர்பேசுகையில் இயலானதருமரவர்
நகுலனைத்தானனுப்பி நல்வீமர்க்கேதுரைப்பார்
அண்ணரும்தம்பிகளும் ஆதிநாராயணரும்
குருபாரிஷியருகே கூடிப்பேசியேயிருப்பார்
கொல்லவென்றுதாதுவனைக் கூட்டிவரச்சொல்வார்கள்
அப்போதுதாதுவர்களழைத்தும்மைத்தான்வருவார்
வந்தவுடனும்மை வணங்கிநமஸ்கரிப்பார்
அப்போதுநீரன்று ஆசீர்வதிப்பீரென
சொல்லிவரச்சொன்னார்காண் துரிதமுடனேயென்று
தருமரிவையுரைக்கத் தார்வேந்தன்நகுலனுமே
வாயுவேகமாகவே வந்துவிட்டான்வீமனண்டை
அண்ணுமதவீமா அண்ணருங்கிஷ்ணரும்
இப்படிக்குச்சொல்லச் சொன்னார்களென்னையென்று
வீமனுக்குச்சொல்லிவந்து விட்டான்நகுலனுமே
வனத்தில்தருமரிடம் வந்துவிட்டான்நகுலனுமே
தம்பிமார்புடைசூழ தருமர்வருகையிலே
அருகேவரப்பார்த்து அரிராமர்தானெழுந்து
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்க
பார்த்தார்குருபாரிஷி பயந்தவருமேதுசொல்வார்
எந்தவூர்எந்தநாடு இவர்பேச்சைச்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
ஜெபத்திலும்தபத்திலும் செய்திடுமோர்நிஷ்டையிலும்
அதிகமுடையவர்காண் அழகானதருமரிஷி
ஆதிகயிலாசம் அரனாரிடந்தனிலே
உன்னுடையபேர்விளங்க ஒருமணிஅடிபடுது
முனிவரிவர்போலே மூன்றுமணியடிபடுது

அன்னதானங்களிலே அதிகமுடையவர்தான்
யோகத்திற்பெரியவர்தான் உலகிலும்வல்லபிரான்
ஏறெடுத்துப்பார்த்தாலே எரிந்துவிடும்லோகமெல்லாம்
பொய்யானதுஞ்சொல்லாதார் புகழான தருமரிஷி
தருமரிஷியாரைத் தழுவியணைத்துக்கொண்டு
சிங்காதனத்தில் ஏறவீற்றிருந்தார்
தக்கபுகழுடைய தருமரிஷியேதுசொல்வார்
சாமிபெருமானே சன்யாசியானவரே
இருவருமாகவே இங்குவந்ததேது
என்றுதான்சொல்லுகையில் ஏதுசொல்வார்குருபாரிஷி
தருமரிஷியாரே சாமியேநீர்கேளும்
என்னுடைய கோட்டத்தில் எவரொருவர்வந்ததில்லை
அந்தரலோகத்து அமரர்கள்வந்ததில்லை
ஆரோவொருராட்சதன் ஆங்காரமுள்ளவன்தான்
வந்துபுகுந்து வனத்தைப்பாழாக்கினான் [ன்
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டா
ஆகையாலிங்குவந்தேன் அவனைஅதமாக்கவென்று
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வார்தருமரிஷி
உம்முடையதோட்டத்தை அழிப்பவரொருவரில்லை
இங்கேயழைப்பேன் இஷ்டமாய்போசித்திடுவேன்
என்றவர்சொல்லுகையில் இட்டுவந்தார்வீமனை
இக்கணமேதானெழுந்து ஸ்ரீராமர்மாயவரும்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்வீமருக்கு
முக்காலவலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
கண்டார்குருபாரிஷி கட்டியேயணைப்பார்
(அவன்)பரென்றுதெண்டனிட்டீர் ஐயன்பெருமானே
ஆனதுஞ்சொல்லுமையா அரியரிஷியாரே
அதிகாலம் ஆரணியங்களிலே
உம்முடையபேராலே ஒருமணியடிபடுது
தருமருடபேராலே மூன்றுமணியடிபடுது
அர்ச்சுனரிஷிபேராலே ஐந்துமணியடிபடுது
யோகத்திற்பெரியவர்தான் உத்தமரிஷியாரும்



ஆதிசிவனிலும் அதிகமுடையவர்தான்
தினமூன்றுவேளையிலே சிவனைமறவாராம்
அவரிருக்குமிடங்களிலே அன்னக்களஞ்சியங்கள்
ஆரோஎவரோ அறியாமல்கொல்லவந்தேன்
இன்று அவர் நினைந்தால் எல்லவரைக்கொன்றிடுவார்
என்றுசொன்னபோதே எழுந்தார்தருமரிஷி
தருமரிஷியெழுந்திருந்து சாஷ்டாங்கதெண்டனிட்டார்
குருபாமுனியும் கொப்பெனவேதெண்டனிட்டார்
அடியார்கள்செய்ததெல்லாம் ஐயாமனம்பொறுத்து
தெரியாமற்செய்ததெல்லாம் தேவர்மனம்பொறுத்து
வனத்தையழித்ததொரு மகிமையைச்சொல்லுமென்றார்
ஆசனம்போட்டார்கள் அமர்ந்துகொலுவிருந்தார்
அப்போதுராமரிஷி அங்கவர்க்கேதுசொல்வார்
குருபாரிஷிபெருமை குவலயத்திற்சொன்னார்கள்
அந்தப்பேர்சொல்லுகையில் அதிசயப்பட்டிருந்தேன்
பார்க்கப்பிரியமாக பார்தலத்தில்நான்திரிந்தேன்
அந்தவனத்திலே அனந்தங்கோடிராட்சதர்கள்
எந்தனைக்கொல்ல எழுந்தார்கள்தூதுவர்கள்
ஆரென்றுகேளாமல் அல்லவருங்கொல்லவந்தார்
ஆக்ருஷம்வந்ததினால் அல்லவரைக்கொன்றுவிட்டேன்
இதுவேகருமமென்றான் இயலானவீமரிஷி
குருபாமுனிவரும் கொப்பெனவேதெண்டனிட்டு
அடியார்கள்செய்ததெல்லாம் ஐயாமனம்பொறுத்து
பாக்கியஞ்செய்ததினால் பாதங்கிடைத்ததுகாண்
கருதிதவஞ்செய்தாலுங் காணஅரிதாகும்
பார்த்தபடியாலே பாவந்துலைந்துவிட்டேன்
வருகாதேதேவர்கள் வந்தபடியாலே
என்னுடைய ஆச்சிரமம் எல்லாரும்வாங்களையா
பாலடிசலுண்டு பழவர்க்கந்தான்பொசித்து
போசனஞ்செய்து நீங்கள் போவீர்கள்வாங்களென்று
குருபாரிஷியாரும் கொப்பெனவேதெண்டனிட்டு
பட்டுரத்தினப்பாய்போட்டு பாய்மேலேவீற்றிருந்தார்
மாயவருந்தருமரிஷி மதம்பெரியராமரிஷி

தம்பியார்நால்வருடன் தாமுங்கொலுவிருந்தார்
குருபாரிஷியுமங்கே கோப்பெனவேதானெழுந்து
ஆறுவரைத்தானழைத்தார் சொல்லுவாரோர்வார்த்தை
ஆயிரக்கலஅரிசி அடிசல்சமையுமென்றார்
காயுங்கனியுங் கடுகசமையுமென்றார்
நல்லபொரிக்கறியும் ராஜாக்கள்போசனமும் [டார்
அடிசல்சமைத்தோமென அடிபணிந்தெண்டனிட்
குருபாமுனிகேட்டு கோப்பெனவேதானெழுந்து
கடுகசரணமென்று கைக்குரலங்கொடுத்தார்
பலாயிலைதைத்துப் படைத்தார்களன்னமதை
சமைத்திட்டசாதங்கறி தானேபொசித்தார்கள்
உபசாரம்பண்ணியவர் உண்ணுங்கள்சாமியென்றார்
அத்தனைபேரும்அமுதுபொசித்தார்கள்
சந்தனம்புட்பமும் தாம்பூலம்வாங்கிக்கொண்டார்
அத்தனைபேரும் ஆலிங்கனஞ்செய்துகொண்டார்

பஞ்சவர்களைந்துபேரும் பெருமாளுமவரிடஞ்
செல்லுகிறது.

போய்வாரோமென்றுமே போகநடந்தார்கள்
பர்னசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்
ஏழுலகையாண்டவராம் எம்பெருமானேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமன்செய்தகாரியத்தை
நாமிருந்தபடியாலே நாடியுமைக்காக்கவந்தோம்
அல்லாதேயாமாகில் அனைவருமாண்டிடுவீர்
எங்கேயிருந்தாலும் இடறல்லோசெய்திடுவான்
ஆகாதகாரியங்கள் அழும்புகள்செய்யலாமோ
இந்தவனத்தைவிட்டு ஏகுங்களடுத்தவனம்
அந்தவனத்தில் ஐவரும்போயிருங்கள்
ஆண்டுகழிந்தது அவ்வனத்தில் வீற்றிருங்கள்
போய்வாரோமென்று போகலுற்றாரெம்பெருமாள்
எட்டாம்வருஷம் முடிந்தது பஞ்சவர்க்கு

எட்டாவதுகுருபாமுனிவனம் முற்றிற்று.



## ௯-வது, ரோமரிஷி வனம்.

அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகாகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனமேகுடியிருப்பு
சுபரோமரிஷிவனத்தில் துரிதமுடன்வந்தார்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிக்கும்வேளையிலே
நெஞ்சில்ரோமமாமுனியை நினைந்தார்தருமராசர்

ஐவரிடத்துக்கு ரோமரிஷிவர தருமர் தனதுதுன்
பத்தை அவரிடத்தில்சொல்லஅவர்
அதற்கு வழிமானஞ்சொல்லுகிறது,

ஆசனம்போட்டு அடிபணிந்தார்தருமராசர்
எந்தவூர்எந்தநாடு எங்கிருந்துஇங்குவந்தீர்
ஊரேதுபேரேது உத்தமனேசொல்லுமென்றார்
வந்தவயணமதை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதருமலிங்கம் ஆண்டவருக்கேதுரைப்பார்
குருகுலவம்மிசத்தில் குந்திமைந்தரைந்துபேர்கள்
தருமன்நான்வீமனவன் தம்பிதனஞ்சயனும்
நகுலசகாதேவ ராசாக்களைவரையர்
தருமாபுரமென்னுந் தாரணியையாண்டிருந்தோம்
பங்கும்பகையாளி பாதிநாள்தாயாதி
சென்மப்பகையாளி சேனைநாள்தாயாதி
பெரியதந்தைப்பிள்ளை போரானதுரியோதரன்
ஜீவரைக்கொல்லவென்று ஆலோசனைதேடி
விருந்துண்ணவாருமென்று விருந்தோலைதானனுப்ப
மெய்யானதில்லையென்று விரைவாகப்போனோமையா

வாரவழிதனிலே வைத்தானே தண்ணீர்ப்பந்தல்
வசநாபித்தண்ணீர்ப்பந்தல் வைத்தானே பாவியவன்
கொல்லநினைத்தானே கொப்பெனவேயங்களைத்தான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனையும் செய்தான்பெரும்பாவி
வருகிறவழியிலே வரிகளை நாட்டினான்
உருக்கூரிசெப்பூரி ஒருகோடிநாட்டினான்
எழுகூரியனேகமொடு இரும்பூரிகள்புதைத்து
கோடிமுள்ளுகத்திகளும் குறுக்கேபுதைத்துவைத்தான்
மாண்டுமடிவாரென்று வரிகளை நாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி [ம்
பொய்க்குழியைவெட்டியே போட்டுவைத்தார்சிம்மாதன
ஆழக்குழியிலே பட்டகளையுள்நிறுத்தி
ஆயுதந்தன்னுடனே ஆள்நிறுத்திவைத்தானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி [யவன்
என்னையிட்டுக்கொள்ளுமென்று எங்களுக்குச்சொல்லி
எழுலட்சம்மல்லர்களை எங்களிடந்தானனுப்பி
என்னையிடச்சே என்னுயிரைவாங்குமென்றான்
அதற்கும்பிழைத்தோமே பாண்டவர்புண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி [ன்
அரப்புகிண்ணங்கைகொடுத்து அபிஷேகமாகுமென்று
நீரில்வசிநாட்டி வைத்தானே நிர்மூடன்
பாரவசிகளை பர்வதம்போல்நாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
உண்ணுகிறசாதத்திலே ஒருக்கால்மருந்தையிட்டேன்
குடிக்கிறதண்ணீரில் கொலைகாரன்நஞ்சையிட்டான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி



சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
நாடுபறித்து ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
சீமைத்துரைத்தனமுந்தேசத்தைக்கொள்ளைகொண்டா
ஐவரையுங்கெலித்து ஆஸ்தானமுங்கெலித்து [ன்
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கில்வைத்தான்
ஐவருடதேவியரை அம்பலத்திற்கொண்டுவந்து
தமையனுடபெண்சாதி தாயென்றுஉன்னாமல்
மூலையிலிருந்தபெண்ணை முந்தத்திலிழுத்துவந்தான்
அம்பலமேற்றியவன் அவமானத்தாழ்படப்பண்ணான்
வாடியென்றும்போடியென்றும் வம்புசிலபேசினான்
அரசர்சபைநடுவே அம்பலத்துத்துரைகள்முன்னே
சொல்லாதுசொல்லியே துகிலுரிந்தானே
பாரவனவாசம் பரதேசம்போனபின்பு
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்தபின்பு
அக்யாதவாசமல்லோ ஆரணியமொருவருஷம் [ஞன்
வேஷம்விட்டுவேஷம்மாறி வீற்றிருங்களென்றுசொன்
பதிமூன்றுவருஷஞ்சென்று பட்டணந்தில்வந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
ஆசையாலாண்டவரே ஆரணியம்வந்துவிட்டோம்
வருஷமொன்பதும்பிறக்க வந்தோமிவ்வனந்தனிலே
உங்கள்வனத்திலே ஒருவருஷம்வனவாசம்
உம்மைவருந்தினேன் உண்மையுள்ளரிஷியாரே
இந்தவனத்திலே இருக்கச்செலவருளும்
என்றல்லோதருமரவர் இறங்கியேதெண்டனிட்டார்
தவத்திற்பெரியவர்காண் சன்யாசியானவரும்
உற்றுற்றுக்கேட்டாரே உரோமரிஷியாரும்
ஆயாசப்பட்டுமவர் அறவேமனஞ்சலித்து
இத்தனைவஞ்சனைகள் இட்டுசெய்தபாவியவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவிதுரியோதனன்
நாடுகொடுப்பதில்லை ராச்சியந்தருவதில்லை
சீமைகொடுப்பதில்லை சிங்காதனம்தருவதில்லை
ஐவர்தனிலேயொருவன் அரன்பதியேபோவீராகில்

ஆதிசிவன்கையில் அஸ்திரம்பெறுபெற்றால்
மாற்றானைக்கொன்றிடலாம் வையகந்தைஆண்டிடலா
அல்லாதேயாமானால் அரசுனக்குக்கிட்டாது
என்றதுசொல்லுகையில் ஏதுசொல்வார்தருமராயர்
ஐவரிலேயொருவர் அவ்விதியையடையவென்றால்
ஆயர்சொல்லலாது ஆகாதொருக்காலும்
மாயன்சொல்லாது மற்றொன்றுமாகாது
அவ்வார்த்தைகேட்டு அரியரிஷியேதுசொல்வார்
மாயன்பெருமானை வரவழையுமிங்கேயென்றார்

### தருமர் எம்பெருமானைநினைத்து தோத்திரம் பண்ணுகிறது.

சாயம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
அடியனந்தமாயவரே ஆண்டவரேதுசொல்வார்
ஏழுலகையாண்டவரே எம்பெருமாள்வாருமென்றார்
மச்சவடிவுகொண்டு மறுகடலிற்பள்ளிகொண்டாய்
ஆலிலையிற்பள்ளிகொண்ட ஆண்டவரேவாருமென்றார்
தருமர்வருந்துகையில் சாமியவரறிந்து

### தருமர் தோத்திரம்பண்ணினதை பெருமாளறிந்து தருமரிடம் வருதல்.

ஏழுலகையாண்டவனார் எம்பெருமாள்வாராராம்
வட்டமாங்கருடனேறி மாயவனார்வந்துவிட்டார்
ஆயரைக்காணுகையில் ஐவருந்தாமெழுந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
தேடித்தும்பைமலரெடுத்து சிங்காதனம்போட்டார்க
சிங்காதனத்தின்மேலே ஸ்ரீராயர்வீற்றிருந்தார்
என்னையழைத்தது ஏதுகருமமென்றார்
மனதிலிருக்கின்ற மர்மமுறையுமென்றார்
சாயம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்



மற்றொன்றுமில்லையையா மாயவரே நீர்கேளும்
இந்தவனத்திலே யிருக்கிறரோமரிஷி
மாமுனியைத்தெரிசித்து வணங்கியடிபணிந்தோம்
ஆரென்றெனைகேட்டார் அரிதானமாமுனியும்
வந்தகருமங்களை வார்த்தையெல்லாம்நானுரைத்தேன்
திரியோதிரன்செய்த சேதியெல்லாம்நானுரைத்தேன்
அத்தனையுங்கேட்டு ஆயாசப்பட்டவர்காண்
திரியோதிரன்தன்னைச் செயிக்கவேணுமென்று
ஐவரிலேயொருவனையும் அரன்பதியேபோகவென்றார்
பஞ்சவரிலொருவனையும் பரமபதிபோங்களென்றார்
ஆதிசிவன்கையிலே அஸ்திரம்பெற்றுவந்தால்
மாற்றானைவென்றிடலாம் வையகத்தைஆண்டிடலாம்
போங்களெனவுரைத்தார் புனிதமகாமுனியும்
ஆசையாலும்மை அழையுமென்றார் அந்தரிஷி
மயங்குகின்றவேளையிலே வந்தீரேமாயவரே
இனிநடக்குங்காரியங்கள் எம்பெருமாள்சொல்லுமென
ஆயன்பெருமானும் அவருமங்கேதுசொல்வார்
வாரும்பெரியவரே வனம்வாழ்தபோதனரே
ஐவருடவார்த்தை அதிகாரமெந்தனுக்கேன்
பஞ்சவர்கள்தங்களுக்குப் பாட்டனிருக்கின்றார்காண்
அவரையுமிங்கே அழைத்தாற்றெரியுமென்றார்
வேதவியாசரை வேண்டியழையுமென்றார்

### ஐவரும் வியாசபகவானை நினைத்துவணங்க வியாசர் வருதல்.

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அங்கெனவேதான்வணங்கி
வேண்டிநமஸ்கரித்து வியாசரைக்கைதொழுது
வாருமென்றுதானினைக்க வந்தார்வியாசரிஷி
சடையுஞ்சடையழகும் தம்பிரான்போலேவாரார்
ஐவரிருக்குமந்த அடவியில்வந்தாரே
ஏழுலகையாண்டவனார் எதிர்கொண்டார்வியாசருக்கு

ஐவரெழுந்திருந்து அடிபணிந்தார் இருவருக்கும்
ஆயரும்வியாருமே ஆலிங்கனம்பண்ணிக்கொண்டார்
ஆசனத்துமேலாக அனைவோரும்வீற்றிருந்தார்
வேதவியாசருமே வேந்தரைப்பார்த்துரைப்பார்
என்னகருமமாக என்னையழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற மருமத்தைச்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பரமன்பதம்நோக்கி பாரதவஞ்செய்யவென்று
பாசுபதம்பேறுபெற்று பாரதத்தைவெல்லவென்று
ஆகாரநாம்போகச்சொல்வோம் அவன்பாதம்காணுதற்கு
தருமனைப்போகவிட்டால் சாமிபாதங்காணரியார்
வெற்றிமதயானை வீமனாலாகாது
நகுலசகாதேவ ராசராலாகாது [ன்
அருச்சுனனைப்போகவிட்டால் அரனைக்காணவல்லா
பரமசிவனருளில் பாசுபதம்பேறுபெற்று
வேணவரம்வாங்கி விஜயன்வரவல்லவன்காண்
என்றுமவர்யோசனையாய் எழில்விஜயனைப்பார்த்து
பார்த்திபா அர்ச்சுனரே பரமன்பதிநோக்கி
ஆதிசிவன்பதிக்கு அருச்சுனாபோதீரோ
கைலாசபதியிலே கர்த்தாவை நீகண்டு
அதிகவரம்பேறுபெற்று அருச்சுனரேவாருமென
காண்டீபருச்சுனரும் கடுங்காளையேதுசொல்வார்
அடியேனை அனுப்பிவைத்தால் அவசியம்போய்வாரேன்
அப்போபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
கைலாசம்போனாலே கட்டமுகாசொல்வேன்கேள்
வரும்வழிதனிலே இருப்பார்கள்வேணபெண்கள்
மின்னல்ரம்பையூர்வசியும் மேனகைதிலோர்த்தமையும்
அழகில்மிகுந்தபெண்கள் அனேகம்பேர்தானிருப்பார்
கண்டால்விடுவதில்லை கடுகியேமோகங்கொள்வார்
பார்த்தாசைப்பட்டாலே பார்த்திபா விடுவதில்லை
கண்மூன்றுடையரைக் காணஅரிதாகும்
அல்லாதேயாமானால் அருச்சுனவேந்தனுக்கு

No. 10.



கிருஷ்ணன் மோகினியுருவேற்று அருச்சுனனைத்தடுத்தல்.

போரவழியிலே பெண்கள்தொடர்ந்தாலும்
தங்கைதமக்கையென்று தள்ளிவிட்டுப்போங்காணும்
பார்த்தாசைப்பட்டாக்கால் பரமசிவன்பாதம்
எத்தனைகாலம் இருந்துதவம்பண்ணாலும்
பாரத்தவஞ்செய்தாலும் பரமசிவன்காட்சிதாரார்
பயபத்தியாயிருந்தால் பரமசிவன்வந்தருள்வார்
அந்திபகலும் அதிராத்திரிவேளையிலும்
நினைவுமறவாதே சிவனை நிலைநிறுத்தும்
மோனத்துட னறிவை மூட்டிதவஞ்செய்தாலே
சிவனார்மனமகிழ்ந்து சேனைவரந்தருவார்
முப்பத்துமுக்கோடி முனிவரெல்லாங்கூத்தாட
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்நடம்புரிய
பார்வதிசமேதராய் பரமசிவன்வந்திடுவார்
கோரும்வரங்களெல்லாம் கொடுப்பார்பரமசிவன்
அப்படிக்குபோகவுன்னா லர்குமோவாள்விஜயா
மாயருரைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
ஆதிசிவனைநான் அரைநாழிமறந்திருக்கேன்
நேசமாய்ப்பெண்களென்மே லாசைமிகக்கொண்டாலும்
வாரவழிமறைத்து வார்த்தைகள்பேசினாலும்
தாயென்பேன் தந்தையென்பேன்சாமியே நீயுமென்பேன்
கத்தாவைக்கண்டுநான் கடுவரம்வாங்கிவாரேன்
போகச்செலவருளும் போய்வாரேன்சாமியென்றார்
அதுவுமேயல்லாம லாண்டவனேயெந்தனுக்கு
போறவழிதனிலே புதுமைநடந்தாலும்
சிவனார்பதியிலே செய்யுந்தவமழிக்க
மழுவேந்துஞ்சிவனாரும் வஞ்சனைகள்செய்தாலும்
ஏதுவினைவந்தாலும் எந்தனுக்குத்துணைவாரும்
மகாதேவரைக்கண்டு வாங்கிவாரேன்வரங்களென்றான்
அப்போதுமாயவரும் அவ்வார்த்தைக்கேதுசொல்வார்
போறவழியிலே பொற்கொடியாளேலகன்னி
ஆதிசிவனைநோக்கி அருந்தபசுசெய்பவள்காண்
அம்பலமான்போலே அழகில்மிகுந்தவள்காண்

அர்ச்சுனரே யுனையாரிய அதிகாரம்பெற்றவன்காண்
உன்னைக்கலியாணம்பண்ண உகந்துயிருக்கிறான்காண்
(அவன்) வந்தவுடனறிப்பான் வான்விஜயமன்னவரே
மாதவனைக்கண்டுநீ மைத்துனரென்றுசொல்லாதே
தாயென்றுந்தங்கையென்றும் தாய்வேந்தாசொல்லாதே
வரும்போதுநீயென்னையுனை மாலையிட்டுக்கொள்வேனே
தாயாம்புமேனியனே கண்டங்கருப்பழகா
தக்கதுசொல்லிப்போம் சாமியுடபதிக்கு
அதிகாரம்பெறுமெற்று அருச்சுனரேவரும்போது
எலகன்னிமாதானை இளங்கொடியைமாலையிட
வரும்போதுமாலையிட்டு வந்துவிடும் அர்ச்சுனரே
மற்றொருவிளைவந்தால் வந்தநாள்காத்திடுவேன்
போய்வாருமென்றுசொல்லிப் பெருமான்செலவுதந்தார்

அருச்சுனன் சிவனைக் காணப்போவதற்கு சோடித்தல்.

---

சூலபாணிரூபம்போற் சோடித்தானர்ச்சுனனும்
எந்தெந்தமுலஸ்திபு இளவிஜயன்தான்தரிப்பான்
ஐந்துசடைகொந்த அழகுசடைமார்புரள
குந்துசடையங்கே குலுங்கஅருச்சுனற்கு
உள்ளமெல்லாம்லிங்கம் உடம்பெல்லாம்வெண்ணீறு
ஆவியெல்லாம்லிங்கம் அங்கமெல்லாம்வெண்ணீறு
காவிகாஷாயமுங்கட்டினான் அரைதனிலே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
கன்றுபுலித்தோலும் கயிலாசமான்தோலும்
காதிலேகுண்டலமுங் கையிற்கமண்டலமும்
ஏகவேஷ்டிதானணிந்தான் இயலானஅர்ச்சுனனும்
பிரமமுடித்தாழ்வடங்கள் பெரியருத்திராட்சமணி
பத்திரமணித்தாழ்வடமாம் பவழிதமாலைகளாம்
நாகமணிக்கங்கணமாம் லாடமிகர்சங்கிலியாம்
வேலாயுதம்சூலாயுதம் வெண்புலித்தோலாசனமாம்
அரைசுத்திகிண்கிணியாம அழகுமயில்தாழ்வடமாம்



குருயோகபத்தகமாம் கரையோகமண்டலமாம்
கஞ்சாக்குடுக்கைகளாம் கெளதமிசோளிகளாம்
சங்குஜெபகண்டிகை தானணிந்தாருச்சுனனும்
கணுக்காலசிலம்புகளாம் காலில்மிதியடியாம்
அஷ்டாபரணமெல்லாம் அருச்சுனன்தான்தரித்தான்
வியாசருமாயவரும் மிக்கவாமென்றுதந்தார்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்றும்
ஐவருக்குநந்தனுக்கு அனுக்கிரகந்தந்தோமென்றுர்
போய்வாரும்அருச்சுனரே பொன்னுலகந்தான்தேற

அருச்சுனன் ஈஸ்வரரைக் காணப் போகிறது

---

அந்தச்சமயத்தில் அருச்சுனனுந்தானெழுந்து
எல்லாரையும்பணிந்து எழுந்தானருச்சுனனும்
போய்வாரேனென்றுசொல்லி போனானருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அங்குவியாசருமே
எல்லாரையும்வாழ்த்தி விடைபெற்றுப்போய்நடந்தார்
மாயனபெருமாளும் வாழ்கருடன்மேலேறி
ஐவரைவாழ்த்தியே அரிராமர்போய்நடந்தார்
வில்லேந்தருச்சுனனும் விரைவாய்வனந்தாண்டி
காடுசெடிதாண்டி கடுகியேவாராரே
அரனையவன்காணவென்று அதிதுரிதமாகவாரான்
சிவசிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வாரானே

எம்பெருமான் பெண்வேஷமாய் வருகிறது.

---

அருச்சுனன் நினைவறிய அரிராமரேதுசெய்வார்
மோககன்னிப்பெண்போல்முடிமன்னர்வடிவுகொண்டார்
சின்னஞ்சிறியபெண்ணாய் ஸ்ரீராமர்வடிவுகொண்டார்
மின்னலொளிபோல மேகவண்ணர்வடிவெடுத்தார்
அல்லார்தலைமயிரும் ஐந்துமுழம்ஆறுமுழம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துநான்குமுழம்
காசாம்பழத்திலும் கறுத்தகருப்பழகும்

ஈச்சம்பழத்திலும் இருண்டகறுப்பழகும்
வாரிக்குழல்முடித்து மான்ரவிரிப்பட்டெரிகி [டு
கொண்டைக்குக்குப்பியிட்டுகொலுசுமுத் துத்தொங்கவிட்
கம்மல்ஜிமிக்கிகளும் காதிலேயிட்டாளாம்
கழுத்திலணிந்தாளாம் கனகமணித்தாழ்வடமும்
நல்லதொருபொன்காரை நடுக்கழுத்திலேதரித்தாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுரமாம்பொன்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இராஜாங்கப்பொன்தாலி
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
அரைக்கிரைத்தஒட்டியாணம் ஆடைமேற்றரித்தாளாம்
காலுக்குத்தண்டைகளாம் கனத்தகொலுசுகளாம்
காலாழிபீலிகளும் கல்லணையும்புல்லணையும்
அழகுபணிகளெல்லாம் அலங்காரம்பண்ணினுர்
கதம்பமுஞ்சந்தனமுங் கஸ்தூரிமணங்கள்வர
அன்னம்போலேநடந்து ஆண்டவனுர்வாராரே
அருச்சுனன்போனதொரு அடவியிலேவந்து விட்டார்
அருச்சுனரைதான்பார்த்து ஆண்டவரேதுசொல்வார்
ஐயாபெரியவரே அறிவுள்ளசங்கமரே
தீரப்படித்தவரே தெளிவுள்ளசங்கமரே
புதுசாய்தவசுபண்ண புத்திமெற்றக்கற்றவரே
எங்கிருந்துபோறீர்காண் இயலானசங்கமரே
கோடிசரணமையா கும்பிட்டேன்சுவாமியென்றுர்
உன்னழகும்பாவனையும் உலகத்திற்கண்டறியேன்
உம்மைக்கண்டபோதே உருகுதுதேகமெல்லாம்
காமவிகாரத்திற் கனேதாங்கிப்போறேனையா
மோகவிகாரத்தால் மூர்ச்சைபட்டுப்போறேனையா
காமக்களையைத்தான் கலிதீர்க்கலாகாதோ
மோகவிகாரமதை மூர்ச்சையைதீருமையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதையா [தோ
அரைநாழிஎன்னுடனே அணைந்திருந்து போகொணு
ஒருநாழியென்னுடனே உளமகிழ்ந்துபோகொணுதோ



மார்பைப்பார்தோளைப்பார் வெண்ணஸ்தனந்தைப்பார்
என்னழகும்பாவனையும் ஏறெடுத்துப்பாருமையா
என்னைப்போல்பெண்கள் எங்கேகிடைப்பார்கள்
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கலியுகத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மகாவிடாய்தீருமையா [யா
தோளோடேதோளணைந்து சுகத்தையெள்ளத்தாருமை
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சிவிளையாடுமையா
குங்குமமெத்தையிலே கூடிவிளையாடுமையா
வாருமையாசங்கமரே என்றுவழிமறித்தாள்

அருச்சுனன் மோகினியைப்பார்த்துச்சொல்லுகிறது.

ஏறெடுத்துப்பார்த்தானே எழிலாயருச்சுனனும்
எண்ணுதுமெண்ணுகிறுன் இளவிஜயனப்போது [சு
மாயவனுர்சொன்னதொரு வார்த்தையெல்லாம்மெய்யாச்
என்றல்லோவாள்விஜயன் எதுரைப்பான்கன்னியற்கு
ஆதிகைலாசம் அரன்பதியேபோரேனம்மா
சுத்தாவைக்காணவென்று கைலாசம்போரேனம்மா
வம்புகளைச்சொல்லாதே வழிதனைமறிக்காதே
பெற்றுவளர்த்ததொரு பேர்பெரியதாயல்லவோ
கூடப்பிறந்தவள்நீ கூட்டுப்பாலுண்டவன்காண்
தங்கைதமக்கையுநீ தாயாருநீயல்லவோ
தூரத்திலும்ஆச்சியரே தோதகங்கள்பண்ணுதே
இடையதிலும்ஆச்சியரே என்னருகேவாராதே
என்றுநடந்தானே ஏறெடுத்துப்பாராமல்
மற்றுமந்தக்கன்னியரும் வார்த்தைகளேதுசொல்வாள்
சேரவென்றுவந்தேனே செல்லுமென்றுசொல்லலாமோ
பெண்சாதியென்றுவந்தால் பெற்றதாயென்னலாமோ
ஆத்தாளென்றெண்ணலாமோ அடுத்தமுறைவந்தாலே
தாயென்றுசொற்றுன்போமோ தனிமுறைவந்தாக்கால்
ஆண்டிக்குமுறையுமில்லை அரிவாளுக்குரையுமில்லை

எருதுக்குபேர்காரில்லை இடையனுக்குமுறையுமில்லை
அரைநாழிபோகும் அமர்ந்திருந்தால்போதுமையா
மார்போடேமார்பணைந்து மருவிமுத்தந்தாருமென்றாள்
இன்னம்பயமிருக்க வேணுதாம்போவேனென்
கானலிலும்வெயில்களிலும் காட்டுவழிபோவானென்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
சோழிதாயங்கள் சொக்கட்டானுடலாய்வா
இன்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கசொக்கமுண்டு
வாருமையாரங்கமே மனைக்குநாம்போயிருப்போம்
தாருமைந்தபெண்ணை தள்ளிவிட்டுப்போகலாமோ
போனாற்பலனுமில்லை பித்தனைக்காணரிது
விளையாடப்போனாலே வித்தகனைக்கண்டிடலாம்
தனமிரண்டைக்காட்டியே தான்மறித்தாள்போதகன்னி
இவளுடையவார்த்தைகளை இளவிஜயன்தான்கேட்டு
கோபம்பெருகுது கொல்லமனந்துணிந்தான்
வில்லெடுத்துக்கைப்பிடித்து வில்நாணிபூட்டிவிட்டு
அம்புருத்தூணியிலே அலகம்பைத்தானெடுத்து
கொல்லநினைத்தானே கோதைமறைந்தாளே

அருச்சுனன்பாணமெடுக்க பெண்மறைந்து
பெருமாள்வருதல்.

கோபாலகிஷ்ணரவர் கொப்பெனமாயமானார்
கண்டானேவாள்விஜயன் கத்தனுடமாயையென்று
இளவிஜயன் அருச்சுனனு மினியவனம்போகையிலே
மாயன்பெருமாளும் வாராரேயந்தவழி
வட்டமாங்கருடனேறி வாராரேயந்தவழி [ன்
கண்டானே அருச்சுனனுங் கடுகியவன் தெண்டனிட்டா
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
இன்னேரமெங்கிருந்தீர் இயலானவாள்விஜயா
காளையந்த அருச்சுனனும் கடுகியேயதுசொல்வார்
மாயவரேசொன்னதுநீர் வனத்திலேமெய்யாச்சு



ஆரோஒருதெய்வகன்னி அனேகநேரமெனைமறித்தாள்
வந்துவழிமறித்து வார்த்தைகளாடினாளே
சொல்லாதுஞ்சொல்லியே தோதகங்கள்பண்ணினாளே
என்றுசொல்லிஅருச்சுனனும் ஏறெடுத்துப்பார்த்தானே
கன்னிஇளமையுமே கழுத்திலேகரிமணியும்
கண்டானேவாள்விஜயன் கடுநகைத்தானே
ஆணைத்தாங்கொலைத்திரோ ஆயன்பெருமானே
மையைக்கொலைக்க மறந்தீரோமாயவரே
மணியையழிக்க மறந்தீரோமாயவரே
பொட்டைக்கொலைக்க மறந்தீரோபுண்ணியரே
ஆபரணந்தான்கழற்ற மறந்தீரோஅச்சுதரே
என்னகோலம்வந்தாலும் ஏற்குமையாஉந்தனுக்கு
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஆயன்பெருமாளும் அங்கேவேதுசொல்வார்
மைத்துனாஉந்தனுட மனவலுமையென்னசொல்வேன்
அருச்சுனாஉந்தனுட ஆண்மையுமென்னசொல்வேன்
வாள்விஜயாஉந்தனுட மனதறியவந்தேன்காண்
கத்தனைக்காணவல்லாய் கடிவாளம்வாங்கவல்லாய்
பரமனைக்காணவல்லாய் பாசுபதம்வாங்கவல்லாய்
ஈஸ்பரனைக்காணவல்லாய் இனியவரம்வாங்கவல்லாய்
போய்வாருமென்றுசொல்லி பெருமாளனுப்பினார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசதுரை
விடைபெற்றுக்கொண்டானே வேந்தனருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அரிராமரேதுசெய்தார்
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டாரெயபெருமாள்
காடுசெடி தாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தான்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போய்ச்சேர்ந்தார்

ஒன்பதாவது போமரிஷிவனம்.

முற்றிற்று.

## ௰-வது, போண்டவனம்.

——(*)——

பத்தாம்வருஷம் பிறந்ததும்பஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடித்தனங்கையகத்தில்
கோலிவைத்தேயோடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தேயோடு வனவாசம்போனார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகளைதாண்டி அதிகவனத்தான்தாண்டி
போண்டவனத்திலேதான் பிரியமாய்பஞ்சவர்கள்
வந்தார்குடித்தனமாய் வனத்திலேவாசம்பண்ண
ஐந்தடிக்குப்பர்ணசாலை அழகாகஉண்டுபண்ணார்
ஏழடிக்குப்பர்ணசாலை எழிலாகஉண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்குந்வேளையிலே
பூதநாதனைத்தேடி போயானேவன்விஜயன்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
ஓம்சிவாவென்றுசொல்லி ஒலித்தானேசங்குதனை
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
இருண்டவனத்திலே இருக்கிறபோண்டன்
அனேகநாளாய்போயிருந்தான் ஆகாரந்தேடிவர

போண்டச்சி அருச்சுனன்மேல் மோகித்தல்.

---

போண்டராட்சதன்றன் பெண்சாதியானவளும்
தன்னந்தனியவளாய் தானிருந்தாள்மண்டபத்தில்
அரகராவென்றசத்தம் ஆரணங்குதான்கேட்டு
கொத்தளம்போல்மூக்கழகுயமத்தளம்போல்புட்டம்
ஊனைமூஞ்சிகுரங்குதலை ஒன்றுமுதுகழகாம்
செம்பட்டமயிரழகாம் சிங்காரப்பல்லழகாம்



பனைமரம்போற்பல்லழகாம் பருவதம்போற்கண்ணழகாம்
கழுத்தைச்சுத்திகண்டமாலை இடுப்பைசுத்தி அரைக்கடுவெ
ன், தொடையைச்சுத்திகுட்டப்புண்தோளைசுத்திபெருஞ்சிர
நின்றாளேயாமாகில் நிலத்தில்விழும்இரண்டுதனம் [ங்கு
இன்னமுஞ்சொல்லுகிறேன் இரண்டுதனத்தழகை
கப்பலின்மேல்வாரதொரு கொப்பரைத்தேங்காய்போல்
தோணிமேல்வாரதொரு சொரக்காய்போல்தானிருக்கும்
பல்லிலேபடிந்திருக்கும் பாசிபடர்தாமரைபோல்
சீழுஞ்சொலநீரும் தேகமெல்லாம்நாற்றம்வரும்
காயமதிற்படிந்தழுக்கு கற்றுழைநாற்றம்வரும்
அருகேவந்துநின்றாலே அசங்கிதநாற்றம்வரும்
மரவுரியைந்தான்உடுத்தி வாராளேபோண்டச்சி
ஆண்டிபெரியவர்தன் அருகில்வந்தாள்ராட்சசியும்
பண்டாரம்பெரியவனைப் பார்த்தாசைப்பட்டாளாம்
வாயைத்திறந்துமவள் வார்த்தைகளேதுசொல்வாள்
நில்லுமையாசங்கமரே நெடுந்தூரம்போகாதே
உன்னைசைப்பட்டதல்லால் உலகில்வேறாசையில்லை
மார்பைப்பார்தோளைப்பார் மருவிவிளையாடவேபார்
அரைநாழின்னுடனே அமர்ந்திருந்துபோங்காணும்
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
மன்மதபாணமது மார்புருவிப்போகுதையா
மோகவிகாரமதை மூர்ச்சையைத்தீருமையா
என்னைப்போல்பெண்ணுமக்கு எங்கேகிடைப்பார்கள்
தேடிப்புறப்பட்டாலுந் தேசத்திலகிட்டாது
மார்போடேமார்பணைந்து மருவிவிடாய்தீருமையா
தோளோடேதோளணைந்து சுகங்கள்தெளியுமிப்போ
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சியிருப்போமென்றாள்
ஏறெடுத்துப்பாரானே என்னொன்றுங்கேளானே
அரகராஅரனேயென்று ஆண்டியுந்தானடந்தான்
காமவிகாரத்துடன் கடுகியந்தராட்சசியும
போண்டராட்சசியும் பின்னேதுவார்த்தைசொல்வாள்
கண்டாசைப்பட்டுவந்தேன் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

என்னென்றுகேட்கவில்லை ஏறெடுப்பார்க்கவில்லை
(என்னை)பாராமல்போயிரோ பாதகனுமையாலே

பொண்டச்சி அழுகையுடன் பதங்கூறுதல்.

—।—

என்புருஷன்வந்தவிப்பு இட்டென்னைவதைத்து
என்னொண்ணாப்பிரகாரம் இருந்துமருளிகிறேன்
என்றுபாதகமிட்டு இயலாளைபட்சியும்
காமவிகாரக் களையுடன்தானடந்தான்
மோகவிகார மூர்ச்சையுடன்தான்போனுள்
வலைகுலைந்து உடைந்து மெய்பொல்லாந்தான்கிழித்து
முகத்திலறைந்துகொண்டு மோதிப்புலம்புகிறுள்

பொண்டச்சி யழுகுரல்கேட்டு பொண்டன்வருதல்

—।—

அழுகுரல்சத்தம் அறிந்தானேபொண்டனும்
ஏதுக்கழுகிறுள் என்னுடையதேவியரும்
மயிறுபரியபி வாய்விட்டழுதானே
(வெகு)நும்பதுயானே அவன்கையில்தானெடுத்து
சினந்து அறிந்தானே தேவ்யருகில்விழ
பின்னும்புலம்புகிறுள் பொண்டாட்டியும்
ஏதுக்கழுகிறுள் இளங்கொடியாளெனதேவி
இத்தனைநாளில்லாம லின்றுபுலம்புவதேன்
அறிந்தாருமோவென்று ஆங்காரமுள்ளவனும்
ஏதுக்கழுகிறுய்நீ என்னுடையதேவியரே

பொண்டச்சி தன் புருஷனுடன் தன்வரலாறு கூறி

சண்டைக்குபோகச்சொல்ல பொண்டன்

சண்டைக்குப்போகிறது.

—।—

பொண்டாட்சியாள் பிரியமுடனே தான்சொல்வாள்
மாணவிட்டயாட்சியாள் மனதுருகுவந்திலே
(நான்)பெண்பிறந்தபாவமதுவோ தமையாயெந்தனு
(என்)பாவிதலையிலே பத்தெழுத்தையெழுதிவிட்டான்




செல்வத்தலையிலே செப்பேடெழுதினுது
அல்லல்படவோ அமைத்துவிட்டார்பிரமதேவர்
ஐயையோபெண்பிறப்பு ஆகாதெனன்னசெய்வேன்
(நான்)புத்தியில்லாவசியல்லோ பொண்டாட்டியனே
வாரவழிதனிலே வைத்தீர்சமுசாரம்
என்னைத்தனியேவிட்டு இனிப்போகஞாயமுண்டோ
உன்தேவியாயிருந்தும் ஊருக்குப்பெண்டாவேனோ
சுந்தரப்பெண்நானல்லோ சொரூபமுடையவள்காண்
அழகில்மிகுந்தவளை ஆரோவொருவனவன்
பத்தினியாளென்றனுமே பாராமலிங்கொருவன்
உத்தமியாளென்றுசொல்லி உணராமலிங்கொருவன்
ஆண்டிபெரியவன்காண் அரண்மனையில்வந்தார்காண்
வந்தபெரியவரை வணங்கியேதெண்டனிட்டேன் [ருர்
தன்கஞ்சாக்குடுக்கைக்குத் தண்ணீர்கொண்டு வாருமென்
தண்ணீரும்நான்கொடுத்தேன் சாணைக்கள்செய்தேனையா
நெருப்பெடுத்துவாவென்ருர் நெருப்பைக்கொடுத்தேனே
அன்னியேநீஅதந்தரானரித்துகொண்டேன்நெற்றியிலே
வாடிநீபோடியென்றுன் வலதுதொடையேறுமென்றுன்
கையைப்பிடித்திழுத்துக் கட்டிமருவவென்றுன்
பொல்லாத்தனங்கள்செய்து போய்நடந்தான்சங்கமனும்
(அவனை)கைப்பிடியாகவே கட்டியேகொண்டுவாரும்
அல்லாதேயாமாகுல் ஆத்தீகமாய்மாண்டிடுவேன்
பொண்டச்சிஅழுகையிலே பொண்டன்தா[illegible]எழுந்து
எழுந்தவனொரட்சகனும் என்றுமில்லாக்[illegible]முடன்
ஆலமரப்பிடிக்கி தேவிதலைக்கவைத்து
கோபித்துக்கண்சிவந்து கொட்டியவனேயோடிவந்தான்
நில்லுநில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
ஆரடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமரே
என்னுடையபெண்சாதியை எந்தனிருகண்மணியை
அழகில்மிகுந்தபெண்ணை ஆகடியஞ்செய்ததென்ன
வழியிலேவீடுகட்டி வனத்திற்குடியிருந்தால்
பிச்சையெடுக்கிறவன் பெண்டோபிடிக்கிறவன்

## பேரண்டனுக்கும் அருச்சுனனுக்கும் சண்டை.

அரைநாழிக்கொள்ளையிலே அரிவையைக்கொன்றிடுவேன்
இட்டளைப்போதையிலே யமபுரஞ்சேர்த்திடுவேன்
என்றேயுறுமினான் இயலாவராட்சதனும்
ஆறுவிரதமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
மடாநிராட்சதனே வார்த்தையொன்று நீகேளாய்
ஆதிரிஷிபாதம் அரன்பாதங்காணவென்று
பாரத்தபசுபண்ண பர்மப்பதிபோகையிலே
வாறுவழிதனிலே கண்டாரைப்பட்டேனென்று
கண்டாரைப்பட்டேனென்றுநாடு மையல்திருமென்றாள்
பொல்லாதாள்சேர்ந்தணைந்து போவென்றுறான்தேவி
(நான்)வாயைத்திறக்கவில்லை வண்ணமுகம்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
வீணாவார்த்தையிது பேல்போட்டொயாதே
அநியாயச்சண்டையிது அமைதுசெய்யாதே [ன்
என்றேயெடுத்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவே
பெண்பாதிவார்த்தையினால் பிராணனொழிக்காதே
மாறுவதுதருமமல்ல மன்றுநடவுமென்றான்
எத்தனைசொன்னாலும் இரங்காமல்ராட்சதனும்
எதிர்த்தானமர்ப்பொருத இருண்டவனம்நடுங்க
கண்டானருச்சுனனுங் கண்கள்சிவப்பேற
கோபம்பெரிதாகி கொல்லமனந்துணிந்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
கர்துமட்டாய்தானிழுத்துக் கைக்கணையைவாங்கினான்
பேரண்டராட்சதன்றன் பிராணனைப்போக்கவென்று
அலகம்பைத்தொடுத்து அஸ்திரத்தைப்பூட்டினான்
மந்த்ரவுபதேசஞ்செய்து மார்புரளவாங்கினான்
மேலிட்டொராட்சதன்மேல் விழுந்ததுஅஸ்திரந்தான்
பேரண்டன்தன்தலையைப் பிடரிவிட்டுந்தானறுத்தே

No. 16.



அருச்சுனன்மீதுகாதல்கொண்ட அரக்கியின்கணவனைக்கொன்று, தெய்வப்பெண்கள்வேண்டுகோளால மீண்டும் அவனையெழுப்பல.

## அருச்சுனன்பாணத்தால் போண்டன்தலைவிழ போண்டச்சி புலம்பல்.

அறுத்ததலைகீழேவிழா தாகாசமாயெழும்ப
மற்றொருகணைதொடுத்தான் வாள்விஜயனர்ச்சுனனும்
அறுத்ததலையுமல்லோ அவன்தேவிவாசலிலே
கொண்டுபோய்போடுமென்றுன் கொட்டெனவேவாள்விச
தள்ளிப்போய்விட்டதுவே சண்டாளன்தலையை (யன்
அவன்மாண்டபிற்பாடு அருச்சுனனுந்தானடந்தான்
அந்தச்சமையத்தில்அடவானபோண்டச்சி
தலையைப்பார்த்துபோண்டச்சிதன்புருஷன்தலையெனவே
கண்ணீரைச்சோரவிட்டுக் கதறிப்புலம்புகிறாள்
விழுந்தாளெழுந்தாள்மண்மேலேபுரண்டழுதாள்
மாரடித்துதோளடித்து மண் தூத்தியேயழுதாள்
கோவென்றசத்தமுடன் குமுறிப்புலம்புகிறாள்
மலையேபருவதமே மண்மேலேசாய்ந்தீரோ
மேகமலையே நீவிண் ணுலகம்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியங்கள் நின்னையத்தைநானறியேன்
வச்சிரத்தூணே நீர் மண்ணோடுளுத்தீரோ
கல்லானதூணைக் கறையானரித்ததுவோ
இரும்பானதூணே நீ இற்றுவிழுந்தாயோ
எங்கேயோவானம் இடித்ததுயென்றிருந்தேன்
தப்பாமல்வானந்தலையிலிடித்ததையோ
தெருவிலேகையையிட்டுத் தினகரனைச்சாட்சியென்றாள்
சந்தியிலேகையையிட்டுச் சந்திரனைச்சாட்சியென்றாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகமாகுதையோ
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலையே பருவதமே செத்துமடிந்தீரோ
செத்துமடிந்தீரோ சிவலோகஞ்சேர்ந்தீரோ

மாண்டுமடிந்திரோ வைகுந்தஞ்சேர்ந்திரோ
நீமடியுங்காரியத்தின் நின்னையங்கள்நானறியேன்
சந்தனமிருபுறத்தை சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமமிருபுறத்தைக் குளிரவெட்டிப்போட்டாரோ
கொண்டைபரிகொடுத்த கோழியைப்போலானேனே
செட்டைபரிகொடுத்த செம்பருந்துபோலானேன்
உன்னைப்பறிகொடுத்து ஊதாரிபோலானேன்
அடிவானத்திடிபோலே அழுதுபுலம்புகிறாள்
பேரண்டராட்சசியாள் பிரண்டுபிரண்டழுதாள்
பேரண்டச்சியழுகிறதுகேட்டு தெய்வகன்னிகள் வருதல்
அந்தச்சமயத்திலே அழகானதெய்வகன்னி
ஏழுபேர்சத்தகன்னி இளங்கொடிமாதர்களும்
தீர்த்தங்களாடவென்று தெய்வகன்னிவாரார்கள்
அழுதகுரல்கேட்டு ஆயாசப்பட்டார்கள்
ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாய்ப்பேசுகிறார்
ஆரோதெரியாது அழுதுபுலம்புகிறாள்
இத்தனைநாள்வரையில் இவ்வோசைகேட்டதில்லை
அழுதகுரல்கேட்டு அப்புறம்போகொணாது
அழுதவிடத்திலே யாவரும்போவோமென்று
புலம்புமிடத்திலே பொட்டெனவேவந்தார்கள்
ஆரடிமங்கையரே அழுதுபுலம்புவதேன்
பேரண்டராட்சசியும்பிரண்டழுதுசொல்லலுற்றாள்
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குரைக்கழுத்தியானேனே
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன்பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சே
வதென்றுநானுரைப்பேன் என்னுடைய அக்கமாரே
ஆரோவொருபண்டாரம் ஆரன்பதிக்குப்போறான்காண்
வாடியென்றும்கோடியென்றும் வம்பாகப்பேசினானே
சொல்லாதும்சொல்லியே சோர்ந்துஅணையவந்தான்



புருஷனுடனுரைத்தேன் போய்க்கேட்டார்சங்கமனை
(என்)கணவனைக்கொன்றுவிட்டு காடுகியேபோனார்காண்
மங்கிலியம்பட்டைசவரங்கொடுத்துப்போங்களம்மா
என்றவுரைகேட்டு இயலானகன்னியர்கள்
ஆயாசப்பட்டுமல்லோ அதிகமனஞ்சலித்து

### தெய்வகன்னியர் அருச்சுனனைக்கண்டு இரக்கஞ் சொல்லல்.

சங்கமரைத்தேடியே நடந்தார்கள்தையலர்கள்
ஐயர்பெரியவரே அறிவைப்படைத்தவரே
திரப்படித்தவரே தெளிவரிந்தசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திபெற்றக்கற்றவரே
நில்லும்நில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
போறவழிதனிலே பொல்லாங்குசெய்யலாமோ
சீவவதைகள்பண்ணி சிவன்பதியேபோகலாமோ
ஆதிசிவன்வாழும் அரன்பதிக்குப்போனாலும்
கோரும்வதைக்கொடுப்பாரோபரமசிவன்
ஏனையாசங்கமரே இப்படிக்குச்செய்யலாமோ
ஆகாதகாரியங்கள் அழிவுதேடிப்போகலாமோ
என்றுமறித்தார்கள் இளங்கொடிமார்கன்னியர்கள்
ஆனாலழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
சிவனார்பதிக்குநான் தெரிசிக்கப்போறேனென்னை
(அவள்) வந்துவழிமறித்து வார்த்தைகள்பேசினாளே
சொல்லாதுஞ்சொல்லியே சோர்ந்துஅணையுமென்றாள்
அவள்புருஷன்வந்தென்னை அநீதமாய்க்கொல்லவந்தா
எத்தனைசொன்னாலும் இரங்காமற்கொல்லவந்தான் [ன்
ஆயுதத்தினாலே அறுத்தேனவன்றலையை
என்மேலேகுற்றமுண்டோ ஏனேதடுக்கிறீர்
இருவர்விசேஷமெல்லாமெதிராகக்கேட்டிடுவோம்
வாருமையாவென்றுசொல்லிவரவழைத்தார்சங்கமரை
பேரண்டராட்சசியாள் பிரண்டுமழுமிடத்தே

அருச்சுனராஜனை அழைத்துவந்துவிட்டார்கள் [வார்
தெய்வலோககன்னியர்கள் தேன்மொழிமாதர் துசொல்
இருவருடவார்த்தைதனை யெல்லாமிவர்கேட்டு
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
புதிதாய்த்தபசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
பெண்ணின்பிழையைப் பொறுத்தருளும புண்ணியனே
அடியார்கள்செய்தபிழை ஆண்டவா நீர்பொறுத்து
மங்கிலியப்பிட்சைதந்து மகதேவர்பதிபோனால்
ஆதிசிவனுர் அதிகவரமருள்வார்
எங்களைப்பற்றியே இவ்வேளையெழுப்பிவிடும்
என்றுவணங்கியே இறங்கியேதெண்டனிட்டார்
அருச்சுனராஜாவும் அதிகமனமகிழ்ந்து

## தெய்வகன்னியர் அருச்சுனனைக்கேட்க அருச்சுனன் மகிழ்ந்து தேவேந்திரனுக்கு ஓலையெழுதி அனுப்புதல்.

சேமக்குருந்தோலை சிக்கெனவேதான்வாரி
வாரியவோலையிலே வக்கணைகள்வைத்தெழுதி
என்னவென்றுஓலை எழுதுகிறானர்ச்சுனனும்
அமராபதியாளும் அங்கபிரானென்தகப்பா
தெய்வலோகமாளும் தேவேந்திரனென்தகப்பா
மந்தாபக்குந்திபெற்றவான் விஜயனர்ச்சுனனும்
ஆதிசிவன்பாதம் அடியேனுங்காணவென்று
வாறவழிதனிலே வைதத்தெறிந்தேன்பேரண்டனை
அமராதுசெய்தான்காண் அறுத்தேனவன்றலையை
பேரண்டன்தன்னுயிரை பிரமலோகத்திருந்தாலும்
இங்கேயிருந்து எமலோகம்போனாலும்
அவனுடையதன்னுயிரை அனுப்பிவையும்என்தகப்பா
எந்தனைப்பற்றியே இட்சணம்அனுப்பிவையும்
அல்லாதேயாமானால் அமராபுரம்வருவேன்
தேவேந்திரன்பதியை சிதறவேகொள்ளைகொள்வேன்



ஆடுகொள்ளைமாடுகொள்ளை அழகானவீடுகொள்ளை
ஐயாவுன்பட்டணத்தை அனைத்துமேகொள்ளைகொள்வே(ன்
என்றுஎழுதினான் இயலான்வோலையிலே
ஓலைசுருள்மடித்து உகந்துசெந்திரிக்கையிட்டு
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அந்தச்சுருளோலைதனை அம்புவாயில்தான்கொடுத்து
ஐந்துமணியசைக்கி அம்பேநீபாயுமென்று
மந்திரதூபமிட்டுவாங்கிவிட்டானஸ்திரத்தை
மார்புரளத்தானெடுத்து தோள்புரளவாங்கிவிட்டான்
வருகுதுஅஸ்திரந்தான்வானுலகந்தான்தேடி
தேவேந்திரனுடைய தேசுமணிக்கம்பத்திலே
வாள்விஜயனஸ்திரத்தால் மணியசைந்தாடிற்று
மணிக்கூண்டருகேவந்து வாங்கினான்அஸ்திரத்தை.

## அருச்சுனன் ஓலையைத் தேவேந்திரன்பார்த்து எமனிடத்தில்சென்று கெண்டபேரண்டன் உயிரைவாங்கி அனுப்புதல்.

செந்திரிக்கைஓலைச்சுருள் தேவேந்திரன்விரித்து
எழுதியவாசகத்தை இந்திரனுந்தான்படித்தான்
அதிலிருக்குமலட்சணத்தை யாவுமறிந்துகொண்டான்
திக்கெனவேதானெழுந்து தேவேந்திரன்வருவான்
எமபுரந்தேடி எமனருகிற்போய்ச்சேர்ந்தான்
கண்டானேஎமனும் கடிகிஎழுந்திருந்து
எதிர்கொண்டழைத்துமே இட்டுவந்தான்மாளிகையில்
ஏதுகருமமாய் இங்குவந்தீர்ராசாவே
அத்திமரம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தோணுதுகாண்
என்றபொழுதேயவரேதுசொல்வாரிந்திரரும்
எல்லாருயிர்வாங்கும் எமதர்மா நீர்கேளும்
பொல்லாதபாவியவன் புகலும்பேரண்டனுயிர்
இங்குவந்ததுண்டானால் எந்தனுக்காய்தயவுபண்ணும்
என்றுஉபசாரணை இரக்கமாய்த்தானுரைத்தார்

செக்கிலேபோட்டு திருப்புமுரான்னேரம்
என்ணெயும்புன்னுக்கா யேற்படுத்தும்பேழையிலே
பேரண்டன்தன்னுயிரைபொட்டெனவேதான்கொடுத்தா
மாபாதகனுயிரை மைச்சிமினிலேயடக்கி
அம்புவாய்தனிலடக்கி அனுப்பினானிந்திரனும்
வாய்வேகமாகவே வந்தது அருச்சுனர்முன்

அருச்சுனன் பேரண்டனுக்கு உயிரளித்தல்.

---

மைச்சிமினைத்தான்திறந்து வல்லுயிரைமாற்றினான்
வெண்ணீறுதான்போட்டுவேறுபட்டதலையெடுத்து
அறுத்ததலைமுண்டமும் அணைத்துத் தண்ணீர்தெளித்தா
தட்டியெழுப்பினான். தன்னுடையபொற்பிரப்பால் [ன்
தூங்கிவிழித்தவன்போல் திடுக்கிட்டெழுந்திருந்தான்.
ஆராப்பண்டாரம் அறிவிகெட்டசங்கமனே
என்றுஎழுந்தானே இயலானபேரண்டனும்
எழுபேர்கன்னியர்கள் இளங்கொடிமாரேதுசொல்வார்
ஆங்காரராட்சதனே ஐயரைச்சரணைப்பண்ணும்
அபசாரமுன்மேலே அனந்தங்குற்றம்வந்திருக்க
உந்தனுயிர்தான்கொடுத்த உம்பர்பிரானுக்குமடா
சாஷ்டாங்கம்சரணைப்பண்ணுஐயருக்கு
என்றுசொன்னபோதையிலேஇரங்கியேகண்டதிட்டா
சரணஞ்சரணமென்றுசரணம்பிட்டான்பேரண்டனும் [ன்
இறந்துவிட்டசிவனை எழுப்பிவிட்டஆண்டவனே
(உமக்) கேதுதரப்போறேன் இயலானசங்கமரே
ஆபத்துவேளையிலே அழைத்தால்வருகிறேன்
உந்தனுக்குதவியாக உத்தாரைபண்ணுகிறேன்
என்றுஉபசரித்தான் இயலானராட்சதனும் [ன்
அனைவரையுங்கையமர்த்தி அருச்சுனனும்போய்நடந்தா
அரகரா அரனேயென்று அவன்மேலேஆயானபானான்
சிவசிவாசிவனேயென்ன சிவன்மேலேஆயானபானான்
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்



ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அடித்தானேசெயகண்டிகை தொனித்தானேசங்குதனை
ஏலகன்னிதன்வனத்தில் எழில்விஜயன்போகலுற்றான்.

ஏலகன்னி அருச்சுனனைப் பார்த்து
அழைத்தல்.

---

அரகராவென்றசத்தம் அறிந்தாளேஏலகன்னி
ஆராடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
வாரவராரகாணும் மயிலனையேபாருமென்றாள்
திக்கெனவேதானெழுந்து தெருவீதிவந்தார்கள்
வருகிறசங்கமனை மாதர்கள்தானறிந்து
ஓட்டம்நடையுமா யோடிவந்தார்தாதியர்கள்
என்தாயேஏலகன்னி எவரோதெரியாது
ஆதிசிவன்போலே அழகுபடைத்தவர்காண்
ஒருக்காலும்வந்ததில்லை உச்சிதமாய்வாரார்காண்
என்றசத்தந்தான்கேட்டு எழுந்தாளேஏலகன்னி
தண்டையரையவே தார்குழலாள்தானடந்தாள்
அருச்சுனரைக்கண்டு அதிகமயலானாள்
கண்டாசைப்பட்டாளே கட்டழகியேலகன்னி
வடிவழகும்ஒப்பனையும் வாள்விஜயன்சீரழகும்
உற்றுற்றுப்பார்த்துமவள் உள்ளமுருகுகிறாள்
காமவிகாரத்தாலே கட்டழகியேதுசொல்வாள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
வருவீர்வருவீரென்று வழிபார்த்துநானிருந்தேன்
எப்போவருவீரென்று இந்தவனங்காத்திருந்தேன்
உன்னாசைப்பட்டிருந்தேன் உலகில்வேறாசையில்லை
காமவிகாரத்தாலே களைபட்டுப்போறேனையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா

சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதையா
அதிகவிகாரங்கொண்டேன் ஐயாபெரியவரே
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகந்திர்பாரும்
என்னிலும்அழகுடையாள் எங்குங்கிடையாது
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கருதினாற்கிட்டாது
மார்போடுமார்பணைந்து மகாவிடாய்தீருமையா [ய
தோளோடுதோளணைந்து சுகத்தைமெள்ளதெளியுமை
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
பொன்னும்பொருளுமுண்டுபொக்கிஷங்கள்மெத்தவுண்
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கவொக்கமுண்டு [டு
ஆடவென்றால்ஊசலுண்டு அமர்ந்திருக்கமேனையுண்டு
பத்தியுலாவுதற்குப் பர்ணசாலைமெத்தவுண்டு
மருவிவிளையாடி மன்மதனேவீற்றிருப்போம்
வாருமையாவென்றுசொல்லிவருந்தியேதெண்டனிட்டா
ஏறெடுத்துப்பாரானும் இவ்விஜயவருச்சுனனும் [ள்
ஏலகன்னிமாதுஅவள் இளங்கொடியாளேதுசொல்வாள்
என்கானும்அருச்சுனரே எந்தன்முகம்பார்க்கொணாதோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லொணாதோ
வாயைத்திறந்தாலே வச்சிரமுதிர்ந்திடுமோ
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கேனோ
தாளைத்திறந்தாலே தங்கமுதிர்ந்திடுமோ
தங்கமுதிர்ந்தாலே தட்டியெடுக்கேனோ
என்னுடன்பேசினால் ஏதுகுறையுமுண்டோ
கல்லுங்கரையுமே கட்டைதுளிர்த்திடுமே
இரும்புகரையுமே இரங்கலையோயுன்மனது
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகத்தைப்பார்
முகத்தோடேமுகமணைந்தால்மூர்ச்சைதெளிந்திருப்பேன்
மார்போடேமார்பணைந்தால்மகாவிடாய்தீர்ந்திருப்பேன்
தோளோடேதோளணைந்து சுகங்களைத்தீருமையா
வாருமென்றுசொல்லி மறித்தாளேஏலகன்னி
வாயைத்திறவானும் வண்ணமுகப்பாரானும்



என்னென்றுகேளானும் ஏறமுகம்பாரானும்
சிவனைமறவாமல் சிவன்மேலேதியானமானான்
அரனைமறவாமல் அரன்மேலேதியானமானான்

### ஏலகன்னி அருச்சுனனைக்கோடுகிழித்து ஆணையிட்டு நிறுத்தல்.

ஏலகன்னிமாது இளங்கொடியாள்கோபமானாள்
ஏழுகோடுகீழ்கிழித்து இங்கேநீர்நில்லுமென்றாள் [தே
(உன்)குருவின்மேலாணைகாணுங் கோடுவிட்டுப்போகா
ஐவர்மேலாணைகண்டாய் அடிவிட்டுப்போகாதே
தம்பிதமையன்மார் தாய்மேலேஆணையிட்டாள் [ள்
ஆணையிட்டுஏலகன்னி அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தா
மாளிகைவாசலுக்குள் மண்டபத்தில்வீற்றிருந்தாள்
(அவள்)வருவதற்குள்ளாக வாள்விஜயனேதுசெய்தான்
எண்ணுதுமெண்ணியே ஏதேதுதானினைப்பான்
ஆரைநினைந்தானே அளவற்றசிந்தையிலே
எவரைநினைந்தானே எண்ணமுற்றசிந்தையிலே
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத் தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாகுதையா
எவரைநினைத்தாலே இந்தவேளைகாத்திடுவார்
ஆபத்தைக்காப்பதற்கு ஆராலேஆகுமென்று

### கோட்டில்நிற்கும் அருச்சுனன் காளியைத் தோத்திரம்பண்ணல்.

அந்தவனக்கன்னியரை அருச்சுனன்தானினைந்தான்
சூலிகபாலியம்மா சுந்தரிதுர்க்கையரே
சண்டிப்பிடாரியம்மா சங்கரியேசகவல்லி
மண்ணுப்பிடாரியம்மா வழக்காடுந்துர்க்கையரே
ஆபத்துவேளையிலே ஆதரிக்கவேணுமம்மா

## அருச்சுனன் காளியை நினைக்க காளிவந்து வரலாறுவினவல்.

—•—

என்று நினைத்தானே இயலானகாளியரை
வாள்விஜயன்தான்வருந்த மாகாளிதான்வருவாள்
டேகையொருகையில் டமாரமொருகையில்
வாளுமொருகையில் வளைதடியொருகையுல்
அம்புவில்லுங்கைப்பிடித்து ஆயுதமாகவந்தாள்
ஆர்டாதம்பி நீ அடவியிலேயென்னை நினைத்தாய்
ஊரேதுபேரேது உன்னுடையவல்லமையென்ன
என்றவள்கேட்கையிலே யிறங்கிசரணமிட்டான்
ஆரென்றுகேட்டாயே ஆச்சியரேசொல்கிறேன்கேள்
பாண்டுமகாராசன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவரில் அருச்சினராஜனென்பேர்
மாயவனார்மைத்துனன் வாள்விஜயனென்பேரும்
ஆதிகைலாசம் அரன்பதியேபோறேனம்மா
பரமனைநோக்கியே பாரதவஞ்செய்யநான்
போறவழிதனிலே பொற்கொடியாளேலகன்னி
கலியாணம்பண்ணென்று கடிகியென்னைமறித்தாள்
கோடுகிழித்துஎன்னைக் குறுக்கேதடுத்தாளே [டாள்
ஆணையிட்டுயென்னைமறித்து அரண்மனைக்குப்போய்விட்
மறுபடியும்வருவேனென்று மாளிகைக்குப்போய்விட்
ஆகையாலெந்தாயே அபயமிட் டுன்னையழைத்தேன் [டாள்
என்றதுதான்கேட்டு எதுசொல்வாள்ஈஸ்பரியும்

## காளியம்மன் அருச்சுனனை ஆணைவிடுவித் தனுப்புதல்.

—•—

அஞ்சாதேயென்மகனே ஆணையிட்டேன்தோஷமில்லை
முக்காலுந்தோஷமில்லை முத்திரையை நீகழற்றி
நீதரித்தமுத்திரையை நிலந்தனிலேவைத்துவிடு



இந்தவனங்கடந்து என்னை நினைத்தாக்கால்
உந்தனுடமுத்திரையை உனக்கேதயவுசெய்வேன் [ஐயன்
என்றுசொல்லக்காளியம்மாள் ஈய்ந்துவிட்டான்வாள்வி
தரித்திருந்தமுத்திரையைத் தாயாரின்கைக்கொடுத்தான்

## காளி அருச்சுனன்போல் நிற்பதை ஏலகன்னி கண்டு தான் அலங்காரம் பண்ணிக் கொள்ளல்.

—•—

வாள்விஜயன்போனபின்பு மாகாளியென்னசெய்தாள்
அருச்சுனனைப்போலாக அங்கேவடிவுகொண்டாள்
காவிகாசாம்பரமும் கட்டிஅரைதனிலே
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
வாள்விஜயன்போலே மறைப்பிலே நின்றுளாம்
இப்படிக்குகாளி யிருக்கின்றவேளையிலே
ஏலகன்னிமாது இளங்கொடியாளேதுசெய்தாள்
மஞ்சள்குளித்தாள் மையெழுதிப்பொட்டுமிட்டாள்
வாரிமுடித்தாளாம் மான்சவுரியுட்சொருகி
கொண்டைக்கழகாக கொண்டைமயிர்தான்முடித்தாள்
சந்திரபிறைசூரியபிறை தலையிலணிந்தாளாம்
ஆண்மயிலும்பெண்மயிலும் அழகாகத்தான்முடித்தாள்
முத்தாலேசுட்டியும் முன்னாலேதொங்கலிட்டாள்
காதுக்குப்பொன்றோலை கைக்குவளையலிட்டாள்
செண்பகப்பூநாசியிலே சேர்த்தணிந்தாள்மூக்குத்தி
தோள்வந்திகைவந்தி தொடுத்தாள்ரவிக்கைதனை
கண்டசரமாம் கல்பதக்கமோதிரமாம்
கொத்துச்சரப்பளியாம் கொத்துமுத்துத்தாழ்வடமாம்
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
சன்னல்பின்னல்தாழ்வடமாம் காயித்துபேரொளியாம்
கடகஞ்சரிபளங் கைநிறையப்பொன்வளையல்
தண்டைகொலுசுடனே சலங்கையும்பாடகமும்
காலாழிபீலி கல்லணையாம்புல்லணையாம்

அரைக்கிசைந்தஒட்டியாணம் அலங்காரமபண்ணுளாம்
பொன்னிழைத்தபட்டாடை பூவாடைதான்தரித்தாள்
சாந்துசவ்வாதுடனே சந்தனமும்பூசினுள்
மருவுமறுக்கொழுந்தும் மல்லிகைப்பூமுடித்தாள்
வாசனைபரிமளக்க வாராளேஏலகன்னி
ஆடிகாதி அலங்காரத்தோழிகளே
எடுத்துவாகளைகதண்டி இட்டணமேபோகவேணும்
தாதிமாரோடிவந்து தண்டிகைகொண்டுவந்தார்
ஏறிஞள்தண்டிகையை எடுத்தார்நெடுங்குடையை
சங்கமர்தானிருக்கும் தாவுதேடிவாராளாம்
பல்லக்கைவிட்டிறங்கிப் பாதஞ்சரணமென்றுள் [றுள்
ஆணையிட்டேன்தோஷமில்லை ஆண்டவனேவாருமென்
ஏறிஞர்பல்லக்கில் இயல்பானசங்கமரும்
ஏலகன்னிதாமும் ஏறிஞள்பல்லக்கில்
மாளிகைவாசலிலே வந்துஇறங்கிஞராம்
பட்டுரத்தினப்பாய்போட்டு பண்டாரம்வீற்றிரென்றுர்
ஆசனத்தின்மேலே அமர்ந்தாளேஏலகன்னி

ஏலகன்னி அருச்சுனனுக்கு விருந்திடச்

சமையல் பண்ணல்.

இளங்கொடிமார்களைஏலகன்னிதானழைத்து
அடிசல்சமையுமென்றுள் அரண்மனையிலெல்லவர்க்கும்
சக்கரைப்பால்போசனங்கள் சமையுங்கள்மாதர்களே
பஞ்சணைமெத்தையும் பள்ளியறைசோடியுங்கள்
இவ்வார்த்தைசொல்ல எழுந்தார்கள்தோழியர்கள்
நித்தமுறைசெய்யுஞ் சித்தினித்தாதியர்கள்
இந்தமுறைஎங்களுது என்றுஎழுந்தார்கள்
அடுப்புமெழுகுவார் அட்சதைக்காப்பிடுவார்
வெங்கலப்பானையிலே வெண்ணீருலைசாய்ப்பார்
பால்சம்பாவரிசி பதிங்கலந்தான்களைந்து [தார்
கொதிப்பாற்றியேஇறக்கக்கொப்பெனவேதான்சமைத்



வாழைக்காய்கொய்வார் வழுதலங்காய்கார்ப்பரிவார்
ஈழப்பலாக்காயை இளமுள்ளுபோக்கிடுவார்
கொத்தவரைக்காயதனைக் கூட்டியரிந்திடுவார்
செம்பொன்வரைக்காய் சேர அரிந்திடுவார்
பாவற்காய்தானரிவார் பரங்கிக்காய்தானரிவார்
இளசுசுரைக்காய் இளந்தமர்த்தைதானரிவார்
தேங்காய்திருகிடுவார் மாங்காயரிந்திடுவார்
பாம்புப்புடலங்காய் பாதரிப்பீர்க்கங்காய்
பிஞ்சுமுருங்கக்காய் பேரானகொத்தவரை
சுண்டக்காய்வண்டக்காய் சுத்தமுள்ளமுள்ளங்கி
வள்ளிக்கிழங்குகளும் வாழைத்தண்டுகீரையுடன்
சிறுகிழங்குசிறுவள்ளி சிறப்பானசேவந்தண்டு
கருணைகாராக்கருணை காராத ஆள்வள்ளியும்
அரைக்கீரைசிறுகீரை அகத்திமுருங்கைக்கீரை
முன்னைமுசுட்டை முக்குரண்டைகீரையுடன்
காரைபிரண்டையும் கடற்கீரையுள்ளதுவும்
பிடுங்கிஞரிளங்கீரை பேரானகொத்தமல்லி
கடலைஉளுந்துபச்சை காராமணிபருப்பும்
அவரைதொவரையொடு அநேகஞ்சிறுபருப்பும்
கொள்ளுடனேஎள்ளுகளுங் கோதுமையுங்கலந்து
பத்துவகைத்தப்பளமும் பாங்கானகூட்டமுது
பத்துவகைப்பச்சடியும் பாங்கானகீரையுடன்
புளிக்கீரைதுவர்க்கீரை பிரட்டினகீரையுடன்
ஆயிரத்தெட்டுவகை அரிக்கறிபொறிக்கறியும்
ஐந்நூறுவகைக்குழம்பும்அடைவுடனேதான்சமைத்து
காரமும்உப்பும் கலந்தஅறுசுவையும்
புத்துருக்குநெய்த்துளியைப் பேரதவேதான்வார்த்து
வடகப்பொடிபோட்டு மணிச்சீரகம்போட்டு
சீரகமும்வெந்தயமும் சீராகத்தான்போட்டு
கருவேப்பிலையும் கறிக்குத்திட்டமாய்ப்போட்டு
சையுஞ்சையுமென்று தனித்தனியேதான்மணக்க
மணங்கள்கமகமென்ன மாதர்க்குப்புரையேற

தாளித்திறக்கினார் தாமனர்கையாலே
செய்பொன்பிரியணைமேல் சோறடுக்கினார்
ஊறியகாய்சேர்த்த சுகமைக்களைச்சொல்கிறேன்கேள்
இஞ்சியெலுமிச்சை இயலானதமர்த்தையும்
நாரத்தைகிச்சிலியும் நல்லகடுக்காயுடனே
மூங்கில்குருத்துகளும் முற்றுவள்ளிக்கிழங்கு
அத்திக்காய்மாவுலிங்கம் அழகானநாதுவேளை
வில்வக்காய்சுக்கங்காய் விளாம்பிஞ்சுபச்சடியாம்
சுண்டக்காய்களாக்காயும் சுருக்கான்முள்கருணை
மாங்காய்முதலான மற்றுமுள்ளஊறுகாயும்
வத்தல்வகைசேர்த்த வகைமானங்கேளுங்கள்
ஆதண்டங்காயும் அரிதானசுக்கங்காயும்
பாவற்காய்கோவற்காய் பச்சமிளகாயும்
சுக்கங்காய்தூதுவேளை சுருக்கானபாவற்காயும்
அறுசுவைவர்க்கமுடன் அறுபதுஊறுகாயும்
பழவகைகள்தான்சேர்த்த பலவகையைத்தான்கேளும்
மாம்பழம்வாழைப்பழம் மலையின்பலாப்பழமும்
செவ்வாழைகரிவாழை இரண்டகொட்டைவாழையும்
மாதளைகிச்சிலியும் மாவொட்டுமாம்பழமும்
அஞ்சியருநெல்லி அழகுகொய்யாப்பழமும்
தமர்த்தம்பழங்களும் தலைவிரித்தமாதளையும்
மற்றுமுண்டானபழ வகையெல்லாஞ்சேர்த்தார்கள்

## ஏலகன்னிக்குத் தாதிகள் பள்ளியறை சோடித்தல்.

அதிலேயொருதாதி ஆரணங்குதானெழுந்து
பள்ளியறைதான்திறந்து பைங்கிளியாள்சுத்திபண்ணி
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரச்சுவர்பூசி
கண்முன்றாடையகனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி



காய்பரிந்தமல்லிகையைக் கட்டிலின்மேலேசொரிந்து
கண்ணாடிசல்லிகட்டி புரிமான்சுங்குவிட்டு
மாவிலைத்தோரணமும் மல்லிகைமாலைகட்டி
எங்குமலங்கரித்து எந்திழையாரோடிவந்து
ஏலகன்னிமுன்னாலே இளங்கொடிமார்தெண்டனிட்டார்
அடிசல்சமைத்தென்று ஆரணங்குதெண்டனிட்டார்
கெண்டியில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைத்தார்
ஏலகன்னிசங்கமரும் எழுந்தாரிருவருமாய்
கைபூசிக்கொண்டு கடிகியேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
இட்டாரேபோஜனங்கள் இருவருக்குமழகாக
பச்சென்றபழவகையும் பச்சடியும்படைத்தார்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
காராவின்நெய்வார்த்து கடிகிப்பொசியுமென்றார்
சிமிட்டிமுழிப்பளவில் செகமாதாகாளியம்மை
வைத்ததொருசாதமெல்லாம் மாயையாயுண்டுவிட்டாள்
மற்றுமொருக்காலே வட்டித்தார்போசனங்கள்
மறுபடியும்போசனத்தை மாயையாயுண்டுவிட்டாள்
ஆயிரம்பேருக்கு சமைத்தஅடிசலெல்லாம்
ஐயரொருவருக்கு அன்புடனேவட்டியென்றாள்
கடுகளவுநாழிகையில் காளியம்மைஉண்டுவிட்டாள்
இன்னஞ்சோறில்லையோ என்பசியாறுகைக்கு
வயிறுபசியாற்றாமல் மாலையிட்டுக்கொள்வேனோ
மேதினியிலெப்படிக்கு விவாகமதுசெய்வேன்காண்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏலகன்னிவதுசொல்வாள்
எரியோஉன்வயிறு இயலானசங்கமரே
மடுவோகுளமோவுன் வயிறுகுஞ்சங்கமரே
பெண்பிள்ளையில்லாமல்பிழைத்திரோஊர்திரிந்து
இன்றையதினத்திலே போசனமிட்டாச்சு
நாளையத்தினத்திலே நன்றாய்ப்பொசித்திடுவீர்
வாருமென்றுசொல்லியே வருந்தியேநீர்கொடுத்தாள்
வாய்பூசிக்கைபூசி மாளிகைக்குப்போய்நடந்தார்

பள்ளியறைவீட்டிலே பஞ்சணையில்வைந்தார்கள்
சங்கமர்மனமகிழத் தம்புருதான்தொனித்தான்
கின்னரவாத்தியங்கள் கோஷ்டமுடன்தான்படித்தான்
காதாரக்கேட்டுமே காளியம்மைதான்மகிழ்ந்தாள்

ஏலகன்னி காமவிகாரத்தால் அருச்சுனனென்று
அணையப்போககாளி நான் அருச்சுன
னல்லவென்று சொல்லல்.

---

காமம்பொறுக்காமல் கடிகியேஏலகன்னி
மார்பில்விழுந்து மருவியணையவந்தாள்
காளியொன்றுதானறிந்து கைவிட்டாளேலகன்னி
என்னைக்கெடுத்தீரோ என்பாவங்கொண்டீரோ
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கஞாயமுண்டோ
அருச்சுனராசாவை அங்கெனவேபோய்மறைந்தாள்
நில்லுநில்லுஞ்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கஞாயமுண்டோ
(என்னைக்)கலியாணஞ்செய்து கடிகநடவுமென்றாள்
ஆணலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
ஆயிகைலாசம் அரன்பதிக்குப்போறேனே
சிவனார்தன்கையாலே சேனைவரம்பெற்று
வரும்போதுஏலகன்னி மாலையிட்டுக்கொள்ளுகிறேன்
என்னைமறக்காதே ஏலகன்னிநாயகமே
போகச்செலவுதாராய் போய்வாரேன்பெண்மயிலே
ஆணையிட்டாலல்லாது அடியேன் செலவுகொண்டேன்
என்றதுங்கேட்டதும்மே ஏதுசொல்வான்வாள்விஜயன்
ஆணையிட்டுத்தந்தானே ஆரணங்கைவிவாகஞ்செய்ய
மாதர்செலவுதர வாள்விஜயன்போய்நடந்தான்
அந்தவனங்கடந்து அப்புறம்போகலுற்றான்
பத்தாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு
போனடவனம் முற்றிற்று.



239.வது பக்கம்



## யக-வது-சபாமிருகவனம்.

அந்தவனத்தைவிட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனமேகுடிபுகுந்து
காடுகடந்து கரியமலைதான்தாண்டி
சபாமிருகந்தானிருக்கும் தனிவனத்திற்போனார்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகஉண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகஉண்டுபண்ணார்
அங்கேகுடித்தனமாய் ஐவர்கள்தானிருந்தார்
இப்படியாகச் சிலநாளிருக்கையிலே
சபாமிருகவனந்தனிலே தனஞ்சயனுமப்போது
வெள்ளானைவனந்தனிலே வில்விசயன்வாரானும்
உலகமதிர்ந்திடவே உத்தமனும்வாரானும்
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேஎன்ன உலகம்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அடித்தானேஜெயகண்டிகை
சிவசிவாவென்றுசொல்லி தொனித்தானேசங்குதனை
சங்குதொனிகேட்டு சபாமிருகந்தானெழுந்து
வால்கிளப்பிகுமாளமிட்டு வருகுதுவெள்ளானை
தன்னிழலையேபார்த்து தானேடுமந்தானை
கொம்பினால்மலையையது குத்திக்கிளப்பிவிடும்
அருச்சுனரைக்கொல்லவென்று ஆனைவருகையிலே.

### அருச்சுனன் யானையைக் கொல்லுகிறது.

கண்டானேவாள்விசயன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அர்த்தசந்ரபாணமெடுத் தஸ்திரத்தைஉச்சரித்தான்
மதயானையைக்கொல்லவென்றுமார்புரளவாங்கினான்

அருச்சுனன்விட்டதொரு அர்த்தசந்திரபாணமது
மதயானைதன்னையே வருத்தியிருபிளவாய்
கீறிட்டுவிழுந்ததே வில்விசயன்தன்கையால்

அருச்சுனன் கையினால் விழுந்தயானை
ஒருபிராமணனாக வந்தது.

---

ஆனைபடுந்திடவே அதிலொருபிராமணன்தான்
பஞ்சாங்கப்பிராமணனைப்பார்ப்பான்வெளியானான்
கண்டானே அருச்சுனனும் கடிதிபிராமணனை
வாரும்பிராமணரே மதயானைமுழுப்பின்றே
ஆனாற்கேள்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
தெய்வலோகந்தன்னிலே சிவனுடையபூங்காவனம்
ஐயர்பூங்காவனத்தில் அதிகாரமென்னுநான்
அம்மைபூங்காவனத்தில் அலங்காரபெண்களுண்டு
அம்மைவனத்தார்கள் ஐயர்வனம்போகொண்ணாது
ஐயர்வனத்தார்கள் அம்மைவனம்போகொண்ணாது
ஒற்றையொருநாளில் உச்சிதத்தைப்பார்ப்போமென்று
அம்மைவனங்களிலே அதிகாலைபோகையிலே
ஆயிரம்பெண்களிலே அதிலேயொருமாதி
கண்ணுக்கினியபெண்ணை கண்டாசைப்பட்டேனே
பார்த்தாசைப்பட்டேனேபைங்கிளியைக்கைப்பிடித்தே
என்னைத்திமிறிவிட்டுஈஸ்வரியாள்பக்கஞ்சென்றாள்
ஈஸ்வரியாள்தன்னுடனே இச்சேதியுரைத்தாள்காண்
அம்மையதுகேட்டு ஆதிசிவன்பக்கஞ்சென்றாள்
உமையவளதுகேட்க உம்பர்பிரான்பக்கல்வந்து
ஐயரேஉன்வனத்தில் அதிகாரஞ்செய்கிறவன்
எந்தன்வனக்கன்னியரை இவன்பிடிக்கநியாயமுண்டோ
என்றுமிகச்சொல்லுகையில்ஈஸ்வரனார்தான்கேட்டு
என்னைவரவழைத்து ஈய்ந்தார்பெருஞ்சாபம்
என்னுடையசாபமது எப்போதுவிலையுமென்றேன்
அருச்சுனனாலாசம் ஆதிநைன்வருகிறான்



அருச்சுனனைக்கொல்லவே ஆங்காரமாய்போகையிலே
அருச்சுனன்கோபமுற்று அம்பாலேகொன்றிடுவான்
என்றதுபோல்நீரும் என்சாபம்போக்கிவிட்டீர்
வாருமென்றிருவருமாய் வனத்திலேபோனார்கள்
போகப்பிராமணனும்புதுமையொன்றுசொல்லலுற்றான்

அருச்சுனனுக்குப் பிராமணன் குயவன்வரலாறுகூறல்.

---

ஆனாற்கேள்மங்கையரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
செப்புமொழிதனுன் திருநீலகண்டரவர்
கோடுகடவாமார் குயவன்குயத்தியரும்
இப்படியாக இவரிருக்கும்நாளையிலே
மகராசன்வாசலிலே மங்களகாரியத்தால்
கோவுங்குயமுட்டி கொண்டுவாவென்றுரைத்தார்
அக்ஷணம்நீலகண்டன் அனேகமுட்டிசொப்பவிட்டு
பொன்போலிந்திரத்துமே போட்டான்பெருஞ்சூளை
சூளைகலைந்து கட்டசிறுமுட்டெட்டி
மகாராஜன்வாசலிலே வைத்தானேகொண்டுவந்து
மகாராஜன்தான்பார்த்து மகிழ்ச்சியாய்குயவருக்கு
சொர்ணமணிமுத்தும் துகிலாடையுமெடுத்து
நீரில்லாப்பூஷணத்தை நீலகண்டனுக்கருளி
போய்வாருமென்றுமே போகச்சில்லருள
வெகுமானம்பெற்றுமவன் வீதிவருகையிலே
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
காற்றுமழையுங் கடிதிவருகுது
தேவதாசிவீதி தெருத்திண்ணையோரத்தில்
வந்துயிறங்கினான் வான்மழைபோகளவும்
அந்தச்சமையந்தி லவ்வீட்டுத்தாசியவள்
போசனமுண்டுமே பொற்கலத்தைத்தான்கழுவி
சன்னல்கதவையவள் தான்திறந்துஊற்றினாள்
மண்ணுடையான் தன்மேலேவிழுந்தது
சம்போசிவசங்கரனே சலந்தெளித்தாரென்றார்

அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குநாசியவள்
அந்நிப்பயந்தாமே ஆரென்றுகேட்கலுற்றாள்
மண்ணுடையான்நான்காறும் வந்தேனிதுவழியாய்
வான்மழைக்குமாதரசே வந்தொதுங்கினேன்
ஆரோதெரியாது அன்னிறுலந்தெளித்தார்
என்றதுகேட்டுமே ஏலம்பசுங்கிளியாள்
மெத்தப்பயந்துமவள் வீட்டோரங்கொண்டுசென்று
அபிஷேகமாட்டிவைத்தாள் அவந்தமாரனுக்கு
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அலங்காரம்பண்ணினாள்
போஜனமிட்டுமவள் புட்பமும்தான்கொடுத்தாள்
சந்தனமுந்தாம்பூலம் தான்கொடுத்தாள்தையலரும்
அன்றையயாத்திரி அங்கிருந்த குயவன்
மற்றுநாட்காலையில் வந்தானேவாழ்மனைக்கு

குயவன் மனையாளுக்கும் குயவனுக்கும் தர்க்கம்.

---

குயவனுடதேவி கொம்பனையாள்கண்டாளாம்
கண்டுபுருஷனைக் கண்ணீரைத்தானுகுத்தாள்
கோவென்றசத்தமுடன் குமிறியமுதாளாம்
ஆரோடேபோகவே அமர்ந்திருந்தீர்மன்னவரே
என்னைவிட்டுபிரிவதற்கு என்னமனம்வருமோ
வேசியர்கள்வீட்டிலே விளையாடிவந்தீரோ
உன்னுடனேபேசேனே உன்முகத்தைப்பாரேனே
பெற்றதகப்பனைப்போல் பிரியமுடன்பார்த்திருப்பேன்
குருக்களுடைமையை கொள்ளைகொண்டுபோனவர்கள்
தாயில்லாப்பிள்ளைகளை தலையிலடித்தவர்கள்
சிசுவதைபண்ணுவர்கள் ஸ்ரீவதைபண்ணவர்கள்
பெரும்பாவிசேருகிற பெருநரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டாள் இளங்கொடியாளக்குதிரை
இவ்வார்த்தைகேட்டுமவன் எரிபாந்த நீலகண்டன்
கண்கள்சிவந்துமேகாந்தாளப்பட்டானும்



மெய்யானவார்த்தைதனை விளம்பினேன்மெல்லியற்கு
பொல்லாதவார்த்தையினாற் புலம்புகிறாளேதுசெய்வேன்
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வான் நீலகண்டன்
என்றுமுதலாக இனிநெடுநாள்வரைக்கும்
உன்னுடனேபேசினால் உனக்குத்தகப்பனென்றான் [ன்
அவ்வார்த்தைதள்ளினால் அனேகபாவஞ்சொல்லுகிறே
அபயமென்றுவந்தவனை அநியாயம்பண்ணபாவி
பெரும்பாவிசேருகிற பெருநகரம்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இயலான நீலகண்டன்
அப்படியாக அனேககாலந்தானிருந்தார்

ஆதிசிவனும் பார்வதியும்பண்டாரவேஷமாக
வந்து இருவரையும் ஒருமைப்படுத்தி
மோட்சமீதல்.

---

ஆதிசிவனுக்கும ஆதிபரமேஸ்பரிக்கும்
பொறுத்துமுடியவில்லை பொல்லாச்சபதமிது
இருவரையும்பேசிவைக்க ஈஸ்பரனுர்வந்தாராம்
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுச்சங்கமராய்
ஆண்டிபெரியவராய் ஆண்டவன்வடிவெடுத்தார்
அம்மையுமையவளும் ஆண்டிச்சிவடிவெடுத்தார்
விநாயகன்வீரபத்ரன் வேல்பொருந்துங்கந்தனுமே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
கன்றுபுலித்தோலும் கைலாசமான்தோலும்
சடையுஞ்சடைமுடியும் தம்பிரானைப்போலாக
நீலகண்டனுக்காக நினைத்தார்திருவோடு
கதிரோனைப்பாத்திரமாய் கடுகெனவேகைபிடித்து
வாரார்பரமசிவன் வனமாய்வனங்கடந்து
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
நீலகண்டன்வாசலுக்கு நிமலரும்வந்துவிட்டார்
ஆடாபத்தா நீ அறிவுள்ளபுண்ணியனே
என்பிள்ளைபெண்சாதி யிங்கிவர்களெல்லோரும்

பசியோடேநாங்கள்வந்தோம்பசியாற்றிநீரனுப்பும்
பிள்ளைபசியாற்றில் புண்ணியங்கள்வேணதுண்டு
குழந்தைபசியாற்றில் குமாரனைப்பெற்றிடுவாய்
உந்தனுறன்முறையார் உன்னுடையபெண்சாதி
வாழ்ந்துசுகமாவீர் மகாதேவர்புண்ணியத்தால்
என்றல்லோசங்கமரும் ஈய்ந்துவிட்டார்வெண்ணீறு
வாங்கியணிந்துகொண்டு வணங்கியேதெண்டனிட்டான்
நல்லதுசங்கமரே நான்செய்தபாக்கியத்தால்
வந்தீர்களிப்போநான் வாழ்ந்துசுகமானேன்
பத்துநாழிகைப்பொழுதில் பசியாற நீங்கள்வந்தால்
போசனமுண்பீர்காண் போய்வாருஞ்சங்கமரே
என்றதுகேட்டுமவரேதுசொல்வார்சங்கமரும்

ஈஸ்பரர் நீலகண்டன்மனஞ்சோதித்தல்.

(*)

(நான்)போசனம்பண்ணுகிற பொன்னானதிருவோடு
இங்கேவைத்துநான்போறேன்எடுத்துமறவாமல்வையும்
ஊர்திரிந்துநான்வாரேன் உன்வசத்திருக்கட்டென்றார்
(என்)பாட்டனார்நாளையிலே பண்ணினதிருவோடு
பாத்திரம்போய்விட்டால் பழிவந்துநேருமென்றார்
என்றதுகேட்டு ஏதுசொல்வான் நீலகண்டன்
ஆனாற்கேள்சங்கமரே ஐயாபெரியவரே
என்னுடையதேவியுடன் இவ்வார்த்தைநீருரைத்து
சாதங்கறிவகைகள் சமைக்கவேசொல்லுமையா
பாவற்பயிர்பந்தலின்மேல் பாத்திரத்தைவைத்துவையும்
அரமனைக்குள்நுழைந்து ஆச்சியரைத்தானழைத்து
மண்ணுடையான்வார்த்தைதனை மாதருடனுரைத்தார்
பந்தலின்மேலாகப் பாத்திரங்கள்வைத்தபின்பு
பாத்திரத்தைப்பார்த்திரென்று பண்டாரந்தானடந்தார்
செப்பிநடந்தாரே திருநீலகண்டன்வழும்
அத்தெருவுதான்கடந்து ஆதித்தகொருவீதிவந்தார்
ஆத்திநிழலருகில் ஆதிசிவன்வந்தமர்ந்தார்



அந்தச்சமயத்தில் ஆதித்தன்போய்மறைந்தான்
சுக்கலாதேவிமகன் சூரியன்தான்மறைந்தான்
குயவனுடதேவியரும் குடிவாழ்க்கைசெய்திருந்தாள்
அனேகநெடும்போது ஆனபிறகாக
மண்ணுடையான்தானெழுந்து வாசலிலேவந்துநின்று
பாவற்பந்தலைப்பார்த்தான்பாத்திரத்தைக்காணோமென்று
தேவியெதிரில்வந்து திகைத்தாற்போல்நின்றுவிட்டான்
கைகட்டிநீலகண்டன்கண்காட்டிக்கேட்குகிறான் [ள்
ஆரணங்குமாதுக்கன்னி அறியேனென்றுசாடைபண்ணு
மனதுசஞ்சலமாக மண்ணெடுத்துப்பண்ணுகிறார்
பன்னிருந்ததையெடுத்து பாத்திரம்பண்ணினான்
கடுகியேசூளைபோட்டு கவிழ்த்துவைத்தான்பந்தலிலே
ஐயரும்அம்மையுமாய் ஆதிசிவன்வாராராம்
திருநீலன்மாளிகையில் சிவசிவாவென்றுவந்தார்
கடுகியேநீலகண்டன் கைக்குச்சலங்கொடுத்தான்
கைப்பூசிகொண்டு கடுகியேஉள்நுழைந்தார்
பாத்திரங்கொண்டுவந்தார் பண்டாரம்பார்த்துவிட்டார்
என்னுடையபாத்திரம் எங்கேயென்றார்சங்கமரும்
வைத்துநீர்போனபின்பு மாயமாய்ப்போச்சுதையா [ன்
ஆகையால்ஆண்டவனே அட்சணமேசெய்துவைத்தே
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும்
(என்)பாட்டனார்நாளையிலேபண்ணிவைத்தபாத்திரத்தை
ஏமாத்திமோசம்பண்ணி இல்லையென்றுசொல்லலாமோ
மகாராஜனிடத்தில்வாரும்வழக்கைப்போய்ச்சொல்வோமே
மடிபிடித்துசங்கமரும் வாராரேதானிழுத்து
முடிமன்னன்றன்சபைக்கு முன்பாகவந்துசொன்னார்
பசித்ததென்றுசோறுகேட்டேன் பகலைக்குவாமென்றார்
வச்சிரத்தாலிழைத்த மாணிக்கப்பாத்திரத்தை [ன்
இவர்கையில்நான்கொடுத்து இஷ்டரிடம்போயிருந்தே
வந்துபின்கேட்டாலே மாபாவிகாணோமென்றான்
ஆகையினாலேதான் அழைத்துவந்தேனும்மிடத்தில்
அதிதிபரதேசி யாருமில்லையெந்தனுக்கு

ஆண்டியுடைமையென்று அவரிடத்திலே கேட்டு
வாங்கியேதாருமென்றார் மகாராஜராசாவே
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராசன்
ஆரடாநீலகண்டா அறிவுகெட்டபாதகனே
பரதேசியுடைமையை நீ பறிக்கிறதாகுமோடா
குயவன்குயத்தியைக் கொப்பெனவேகட்டுமென்றார்
வெள்ளிப்பிரம்பாலே வீசியடியுமென்றார்
மாறியடியுமென்றார் வந்தகுயவனைத்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தார்தலையாரி
எருக்கமலராலே எட்டியடித்தாரே
உள்ளம்நடுங்கமேனி உதிரம்வடியுதங்கே
அப்போமகாராஜரிடம் ஆண்டியவரேதுசொல்வார்
இன்னஞ்சிலராஜரண்டைஇட்டுபோய்ப்போறேனையா
கட்டவிழ்த்துவிட்டிடென்றார் கடிதில் நீலகண்டனைத்தான்
அரண்மனையைத்தாண்டி அப்புறம்போகையிலே
ஆதிசிவனாரும் அங்கேமனமகிழ்ந்து
ஈசன்ரிஷபத்திலே ஈஸ்பரிசிங்கத்திலே
பேழைவயிற்றோனும் பெருச்சாளிவாகனத்தில்
கந்தர்மயில்மேலே கடுகியேவந்துநின்றார்
தங்களுடவாகனத்தில் சாமிகளேறிவந்தார்
வந்தாரெதிராக மண்ணுடையான்கண்டுவிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
குயவன்குயத்தியுட குறைகளைத்தீர்த்தாராம்
காட்சிகொடுத்துக் கைலாசம்போனாராம்
நீலகண்டன்பேறுபெற்ற நிலமாகுமிவ்வனந்தான்
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
புண்ணியவனத்திலே போய்ஸ்நானம்பண்ணிவந்தால்
என்பாவந்தீரவே ஈஸ்பரனார்வரமளிப்பார்
(என்று)பொய்கைதனிலேபோட்டெனஸ்நானம்செய்து
சிவனை நினைந்து திருநீறுக்காப்பணிந்து
அரனை நினைந்து அள்ளியிட்டான்வெண்ணீறு
பஞ்சாட்சரமணிந்து பகவானைப்பூசைசெய்து



அரகரா அரனேயென்ன அடித்தானேஜெயகண்டிகை
ஓம்நமசிவாயா ஒலித்தானேசங்குதனை
ஒருவன்சிவனேயென்றால் உலகஞ்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அந்தவனந்தாண்டினான்
மற்றுமொருவனத்தில் வாராரிருவருமாய்
இந்தவனம்ஆருடைய தென்றானிளவிசயன்

## சபாமிருகவனங்கடந்து-ஊர்க்குருவிவனம் வருதல்.

ஊர்க்குருவிபேறுபெற்ற வனமென்றானுத்தமனும்
வாயில்லாச்சீவன் மரமேறுபட்சிகள்தான்
எந்தவிதமாய்த்தான் ஈஸ்பரனைக்கண்டதுகாண்
அந்த அதிசயத்தை ஆண்டவனேசொல்லுமென்றார்

## பிராமணன் அருச்சுனனுக்கு ஊர்க்குருவி வரலாறு கூறுதல்.

அப்போபிராமணனும் அருச்சுனற்கேதுசொல்வான்
ஊர்க்குருவிபட்சியிதி லுண்டானும்பெண்ணுமாக
இந்தவனமதனி லிருந்துவாழுமந்நாளில்
பிள்ளைகள்பெற்றிருக்கப் பெருத்தவனங்களிலே
போவார்வருவார்குஞ்சைப்போயெடுத்துக்கொள்வார்கள்
இரைதேடிவருவதற்குள் எடுத்துகொண்டுபோவார்கள்
கூண்டினிடமாகக் குருவிவந்துபார்த்தவுடன்
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டிருக்கும்
மறுகாலொருதரமும் மைந்தனுண்டாயிருக்கும்
பெண்குருவியானது புருஷனுக்கேதுசொல்லும்
என்புருஷாஎன்கணவா என்வார்த்தை நீர்கேளும்
நான்பெற்றபிள்ளையெல்லாம் நமனுக்கிரைகொடுத்தேன்
போவார்வருவாரெந்தன் பிள்ளையைக்கொண்டுபோனார்
இப்போதுபிள்ளைபெற்றால் எவராகிலுமெடுப்பார்
ஆசைகள்தோணுது ஆணழகாவென்னசெய்வேன்
எங்கேநான்பெற்றெடுப்பேன்எனக்கறியச்சொல்லுமென

ஆனாற்கேள்பெண்மயிலே ஆரணங்கேயொருவார்த்தை
இந்தவனந்திலே இங்கேகுளிருளிருந்தால்
(நமக்கு)அன்னங்கிடையாது அன்னமேநீர்கேளும்
சமுத்திரக்கரையோரம் நாமெல்லாம்பிள்ளைபெற
இவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல்லும்பெண்குருவி
அலைபெருகிதண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோய்விடுமே
இப்போதும்பிள்ளைபெற்று யமர்ந்துபோவேனே
என்றதுகேட்டு எதுசொல்லும்ஆண்குருவி
இவ்விடத்திற்பிள்ளைபெற்றால் யதுகுற்றம்வந்தாலும்
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுவேன்
யுத்தங்கள்செய்திடுவேன் உன்பிள்ளைவாங்கிடுவேன்
(என்று)தலையிலடித்துமேசத்தியஞ்செய்திடுமாம்
சபதங்கள்பண்ணினதை சமுத்திராஜன்கேட்டு
(இது)எவ்வளவுஊர்க்குருவிஎன்னுடன்சண்டைபண்ண
சொல்லாதவார்த்தையைச் சொல்லுதுசிட்டினங்கள்
ஆண்மையைபார்ப்போமென்றவ்வருணன்முனிருந்தான்
அப்போதுசிட்டினத்தில் அழகானபெண்குருவி
செத்தையைத்தான்பொறுக்கி சிறுவீடுகட்டிடுமாம்
இருமுட்டையிட்டு இருந்து அடைகாக்க
பின்னுமடைகாத்துப் பெற்றதிருகுஞ்சுகளை
கொப்பெனவேதான்பறந்து குழந்தைக்கிரைதேடும்
இப்படியாகவே யிருக்கின்றவேளையிலே
தாயுந்தகப்பனுந் தானில்லாவேளையிலே
சமுத்திராசனவன் தண்ணீர்பெருகிவந்து
குழந்தையிரண்டையும் கொப்பெனவேகொண்டேகி
பாதாளந்தன்னிலே பத்திரம்பண்ணினராம்
பட்சிசமஸ்தங்களைப் பார்ப்போமென்றுதானிருந்தார்
அந்தச்சமையத்தில் அழகானபெண்குருவி
குழந்தைக்கிரைதேடிக் கொண்டுவந்துபார்க்கையிலே
மக்களைக்காணாமல் மருகிப்புலம்புகுது
மார்பிலேயுந்தோளிலேயும் வண்ணமுகத்திலேயும்
அறைந்துபுலம்புகுது ஐயோமகனேயென்று



மக்களைப்பறிகொடுத்து மண்மேலேதங்குவேனோ
மைந்தனைப்பறிகொடுத்து வயிற்றிலறைந்துசொல்லும்
பாவிகெடுத்தாயெந்தன் பாலகரைக்கொல்லவென்று
என்றும்பகையாள னேற்பட்டானெந்தனுக்கு
புதல்வனைப்பறிகொடுத்து புலம்புதுபெண்குருவி
ஐயையோதெய்வமென்று அலையுதுபெண்குருவி
அந்தச்சமையமதி லாண்குருவிஏதுசொல்லும்
மனதுசலியாதே மக்களைவாங்கித்தாரேன்
சமுத்திராசருடன் சண்டைமிகச்செய்து
புதல்வரைவாங்கித்தாரேன் புலம்பாதேபெண்மயிலே
என்றுஎழுந்தது இயலானஆண்குருவி
மூக்கினாற்பனைகிழித்து முனையாலெழுதுகுது
என்னவென்றுஓலை யெழுதுதுசிட்டினந்தான்
காக்காய்குருவிகழுகுகள்பருந்துகளாம்
மாடப்புறவாம் மயிலுங்குயிலினமாம்
காடைக்குருவிகளாம் கவுதாரிடேகைகளாம்
அன்னமயிலாழ்வாரும் ஆனமயிலினமும்
கூளிகழுகுமுதற் கோட்டானும்ஆந்தைகளும்
ஓலைகண்டநாழிகைக்கு ஓடியேவாங்களென்று
சமுத்திராசருடன் சண்டைபண்ணப்போகவேணும்
என்னுடஇனத்தார்களெல்லோரும்வாங்களென்று
வருந்தியெழுதியே வாயசத்தைத்தானழைத்து
ஓலையைக்கொடுத்து உண்மைசிலதுசொல்லி
தெய்வலோகத்தாருக்கும் சேதிசொல்லிவாருமென
வாயுவேகமாகவே வருகுதுவாயசந்தான்
அவனியிலுள்ளவர்க்கும் அந்தரமுள்ளவர்க்கும்
செப்பித்திரும்புகையில் திருமாலருகிருக்கும்
ஆயருடவாகனம் ஆழ்வாரெழுந்திருந்து
மாயனைத்தெண்டனிட்டு வணங்கியேயேதுசொல்லும்
தன்குலராசனுக்கும் சமுத்திராசனுக்கும்
யுத்தங்களாகிறதாம் உலகளந்தபெருமாளே
என்னைவரவழைத்தார் யானும்போய்ச்சேரவேணும்

சாஷ்டாங்கதெண்டனிட்டு ராமிக்குறைத்துதப்போ
குலுங்கநகைத்துங் கொப்பெனவிடைகொடுத்தார்
பிரமருடவாகனம் பேடன்னத்தோரின்மும்
கந்தருடவாகனம் கானமயிலினமும்
மன்மதவாகனம் வர்வக்கிளியினமும்
சனியனுடவாகனம் சமர்த்தானவாயசமும்
அவரவர்தேவரண்டை அடிபணிந்துதெண்டனிட்டு
சமுத்திராஜருடன் சண்டைசெய்யப்போருமென்றார்
அமராதுநடக்குதென்று ஆளோலையனுப்பினது
ஆகையாலாண்டவனே அடியேனும்போகவேணும்
எங்களுக்குச்செலவருளும் என்றுபணிந்தது
அத்தண்டதேவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்
சமுத்திரராசருடன் சண்டைகளெப்படியோ
இப்புதுமைபார்ப்போமென்று இயலானதேவரெல்லாம்
நாமும்வருகிறோம் நடவுங்கள்முன்னேயென்றார்
தெய்வலோகப்பட்சி இளம்பாதுபூமியிலே
தனித்தனிபட்சியெல்லாம் சமுத்திரக்கரையோரம்
தன்குலத்துராசருக்குச் சரணமிடும்பட்சியெல்லாம்
அப்போதுசிட்டினந்தான் அனைவருக்குமேதுசொல்லும்
சமுத்திரக்கரையோரம் தாவுதேடிபிள்ளைபெற்றால் [து
அலைபெருகித்தண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோன
என்னுடையபிள்ளைதனை எடுத்துக்கொண்டுபோனது
ஆகையாலுங்களையும் அவசியம்நானழைத்தேன்
வாருமென்றபோதையிலே வந்தீர்கள்தயவுசெய்து
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுங்கள்
என்னுடையபிள்ளையை எவ்விதமும்வாங்கிடுங்கள்
உகந்துஅனைவோர்க்கும் உபசாரஞ்செய்கையிலே
அத்தண்டபட்சிகட்கும் அதிககோபமுண்டாகி
காக்காயொருவரிசை கழுகுவொருவரிசை
அன்னமொருவரிசை ஆழ்வாரொருவரிசை
பருந்துவொருவரிசைபச்சைக்கிளியொருவரிசை
மயிலுமொருவரிசை வல்லூரொருவரிசை



குயிலுமொருவரிசை குருவியொருவரிசை
காடையொருவரிசை கவுதாரியொருவரிசை
புல்புல்லொருவரிசை புறக்களொருவரிசை
உள்ளானொருவரிசை ஊர்க்குருவியொருவரிசை
நாரையொருவரிசை நாகணவாயொருவரிசை
கொக்குவொருவரிசை கோட்டானொருவரிசை
அந்தச்சமயமதில் அனேகவிதபட்சியெல்லாம்
அந்தந்தப்புறங்களிலே அவ்வகுப்பார்சேர்ந்திருந்தார்
அப்போதுமூவர்களும் அயிராவதத்தோனும்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
ஆகாயமார்க்கமதில் அந்தரமாய்நின்றுகொண்டு
பட்சிகள்நின்றிருக்கும் பாவனையைப்பார்த்தார்கள்
எழும்பியேஅந்தரமாய் எட்டிப்பறக்கிறதும்
தானாகவேபறந்து தண்ணீரில்தான்குதித்து
இருபக்கச்செக்கையிலே எடுத்துசலங்கொண்டுவந்து
பாரெல்லாம்நீர்தளும்ப பறந்துதெளிக்கிறது
அரைநாழிக்கொள்ளையிலே அடியோடேவற்றிவிட
சமுத்திரமானதெல்லாம் தண்ணீர்வரண்டுவிட
சமுத்திராசன் சகிக்கமுடியாமல்
தேவர்கள்தன்னுடனே செப்பமுறையமிட்டான்
அத்தண்டபேரும் அனைவரும்வந்திறங்கி
சிட்டினத்தைத்தானழைத்து செப்புவார்தேவரெல்லாம்
உன்தநயனைவாங்கித்தாரோம்சமுத்திர நீருண்டுபண்ணு
எப்போதும்போலே நீர் ஏற்படுத்தும்சமுத்திரத்தை [ம்
என்றுசொல்லப்பட்சியின மெல்லாமொருமித்து
மயிலையருகழைத்து வார்த்தைகளேதுசொல்லும்
கந்தருக்குச்சொன்னீரானால் கைவேலாலுண்டுசெய்வார்
என்றுசொல்லமயிலினங்க ளெல்லாமொருமித்து
வேலவனார்தன்பாதத்தில் விழுந்துமுறையமிட்டு
ஆண்டவனேயென்சாமி அடியேனால்முடியாது
நீர்நினைத்தாலிக்ஷணமே நீரும்பெருகிவிடும்
அடியேனைப்பற்றியே அலைகடலைஉண்டுபண்ணும்

என்றுபணிந்து இறங்கியேதொழுதாற்க
கந்தர்மனமகிழ்ந்து கடிடுபோவில்லினைத்து
வில்லெடுத்துநாரிபூட்டிவெலெடுத்துமந்திரித்து
அலைகடலில்நீரையெல்லாம் அம்பிலொருமுத்தாக
பூமியதிரவே போய்ப்பாயும்வேலிருதான்
மண்ணிலுள்ளநீரையெல்லாம் வழித்தொருமுத்தாக
மூத்தால்வைர்ந்து முனிந்துகடல்பெருக
சந்தோஷப்பட்டானே சமுத்திராசனவன்
குருவியுடபிள்ளையை கொண்டுவந்துதந்தாராம்
ஆதிசிவனாரும் அதிகவரந்தந்தாராம்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவரெல்லாம்
சுகமாகச்செல்வத் துடனேயிருப்பீரென்று
வாழ்த்திவிடைகொடுத்து மகாதேவர்போய்நடந்தார்
ஊர்க்குருவிபேறுபெற்று ஓங்கும்வனமிதுகாண்
என்றதுகேட்டு எழில்விஜயராசாவும்
உற்றுற்றுக்கேட்டு உள்ளமிகமகிழ்ந்தார்
அந்தச்சமயம் அருச்சுனராஜரிடம்
போகவிடைதாருமெனப் புகன்றான்பிராமணனும்
போய்வாருமென்றுசொல்லிபோகலுற்றான்போர்விஜய

பதினோராவது ஊர்க்குருவி வனம்

முற்றிற்று

## ௰௨-வது, காளபயிரவவனம்.

பனிரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கடைத்தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கடைத்தலைமேலேவைத்தார்
அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
காளபயிரவ வனத்திலேகாவலர்கள்
அங்கேகுடித்தனமாய் ஐவர்குடியிருந்தார்



காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
காளபயிரவ கானகத்தில்வந்தமர்ந்தார்
அங்கேதவமுனிகள் அனேகம்பேரப்பொழுது
சாமியென்றுவந்தோமே தவசுகுலைந்துதையா
சிவனேயென்றுவந்தோங்காண் செய்ததவம்வீணாச்சு
என்றுமனங்கலங்கி எப்போதும்போலிருந்தார்
அந்தரிஷிகளண்டை அருச்சுனன்தவஞ்செய்தான்
அங்கிருக்கும்ரிஷிகள் அனேகம்பெரியவர்கள்
இத்தனைகாலமட்டும் இருந்துதவம்பண்ணினோம்
இருந்துதவம்பண்ணி ஈஸ்பரனும்வந்ததில்லை
ஆதிசிவனாரை ஆண்டவரைக்காணவில்லை
பரமசிவனாரைப் பார்க்கஅரிதாகும்
கைலாசவாசலிலே கடுகதவம்பண்ணினாலே
பரமசிவனாரும் பாக்கியந்தந்திடுவார்
சுகமாகவாழ்ந்திடுவீர் துரிதமாயேகுமென
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவாள்விசயன்
எல்லோர்க்குஞ்சரணமிட்டெழில்விசயன்போய்நடந்தான்
கடிதிநடந்தானே கைலாசபருவதத்தில்
பொய்கையில்ஸ்நானம்பண்ணி பூசைதவமுடித்து
காளபயிரவனைக் கருதித்தியானம்பண்ண
எழுபதடிக்கம்பம் எழில்விசயன்நாட்டினான்
எழுபதடிக்கம்பத்தின்மே லேழுயிளநீரைவைத்தான்
ஏழுயிளநீரின்மேல் ஏழுவிளாம்பழத்தைவைத்தான்
ஏழுவிளாம்பழத்தின்மேல்எலுமிச்சங்கனியைவைத்தான்
எலுமிச்சங்கனியின்மேல் ஏழுகொட்டைபாக்குவைத்தா
ஏழுகொட்டைப்பாக்குமேலேழுகுண்டுமணியைவைத்தான
ஏழுகுண்டுமணியின்மேல் ஏழுகடுகுவைத்தான்
ஏழுகடுகதன்மேல் ஏழுசெப்பூசிவைத்தான்
ஏழுசெப்பூசியின்மேல் ஏழுசெவ்வலரிவைத்தான்
ஏழுசெவ்வலரியின்மேல் ஏறினான்நேர்விசயன்
ஒருகாலைத்தானூன்றிஒருகால்முழங்காலில்வைத்தான்
கண்ணிரண்டுமூடியே கத்தன்மேல்தியானமானான்

அரகரா அரனேயென்று அடித்தானே ஜெயகண்டிகை
ஓம்நமசிவாயவென்று ஒலித்தானே சங்குதனை
ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அருந்தவம்பண்ணுகிறான் அருச்சுனராசதுரை
அகோரதவசுபண்ணுறான் ஆண்டவனைக்காணவென்று
ஆதிசிவனார்க்கு அருச்சுனன்செய்ததவம்
பொறுத்துமுடியவில்லை போர்விசயன்செய்ததவம்
ஆதிசிவனார்க்கு அக்கினியாய்வீசுகுது
காலனைக்காலாலுதைத்த கைலாசநாதரவர்
கோபம்பெரிதாகி கொப்பெனவேயேதுசொல்வார்
ஆரடா தூதுவனே அழையுங்கள்மாயவரை
எமன்பிரமாவை இங்கேயழையுமென்றார்
விண்ணாட்டுத்தேவனை விரைந்தோடியழையுமென்றார்
விக்கினவிநாயகனை வேலவனையழையுமென்றார்
ஓடியழைத்து ஒருநொடியில்வாங்களென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிவிரைவாய்ஓடிவந்தான்
வைகுந்தம்ஓடிவந்து மாயவரைத்தெண்டனிட்டு
ஆதிசிவனார் அழைத்துவரச்சொன்னாரென்றார்
அமராபதியாளும் ஆயிரங்கண்ணனுக்கும்
எமபுரமாளும் எமதர்மராசனுக்கும்
பிரமலோகந்தன்னிற் பிரமதேவனவர்க்கும்
வசிஷ்டரும்வால்மீகர் மகாதவமுடையவர்க்கும்
அத்தண்டதேவர்முதல் அனைவருக்குஞ்சொல்லினான்
சிவனார்வரவழைத்தார் சீக்கிரம்வாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அவரவர்கள்பயணமானார்
வாழ்கருடனேறியங்கு வந்துவிட்டார்மாயவனார்
மத்தகஜமேறியங்குவந்துவிட்டாரிந்திரனார்
எமன்கிடாவேறி ஈசருகில்வந்தான்
அன்றுபிரமாவும் அன்னத்தின்மீதில்வந்தார்
கானமயிலேறிக்கந்தரும் வந்துவிட்டார்
மூஷிகவாகனத்தில் முன்னோனும்வந்துவிட்டார்
முப்பத்துமுக்கோடி முனிவரும்வந்துவிட்டார்



ஆதிசிவன்பக்கலிலே அனைவரும்வந்துவிட்டார்
வந்துபணிந்தார்கள் மகாதேவன்பக்கலிலே
அத்தியுரித்தவனார் ஆதிசிவனேதுசொல்வார்
மாயன்பெருமாளே வார்த்தையொன்றுகேட்டீரோ
ஆரோதெரியாது ஆதிகைலாசம்வந்தான்
எவனோதெரியாது இங்கேதவம்பண்ணுகிறான்
கைலாயந்தன்னிலேதான் கடிவரனாயமுண்டோ
கைலைக்கு அப்பாலே கானகந்தன்னிலேதான்
கருதிதவம்பண்ணக்கால் காட்சிவரந்தந்திடுவோம்
இங்கேதவம்புரிய ஏற்குமோசொல்லுமென்றார்
(இவன்) ஆரோதெரியாது ஆண்மையாய்வந்துவிட்டான்
(என்) தலைமாட்டில்நின்று சத்தங்கள்போடுகிறான்
ஆரோதெரியாது அறிந்துவந்துசொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பாண்டுமகாராசன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
நாவிலேநட்சத்திரம் நயனவிழிப்பார்வையுள்ளோன்
மீசைமுறுக்கழகன் விழியிற்கறுப்பழகன்
தோளில்துளசிமாலை தொப்புளில்அமிர்தகலசம்
பல்லில்பாசவீணை பாதத்தில்செந்தாமரை
பஞ்சவரிலிவனொருவன் பார்த்திபனென்றார்காண்
இடதுகால்பொம்மைவிருது வலதுகால்வீரதண்டை
சலவிருதுகுலவிருது சமர்த்துகள்படைத்தவன்காண்
சிவபூசைகுருபூசை சிவன்பாதமறவான்காண்
என்னதவம்வேண்டி யிங்குவந்தானென்றறியேன்
என்றதுதான்கேட்டுயேதுசொல்வாரீஸ்வரரும்
தருமர்தம்பியானாலும சமர்த்துடையோனானாலும்
கைலாயந்தன்னிலே தடிவரனாயமுண்டோ
(இவன்) இந்தவிதமாயிருந்து எதுதவம்பண்ணினாலும்
வருந்தியிருந்தாலும் வரமருளப்போறேனோ
தவசைக்கெடுத்திடுவேன் தருமர்தம்பி அர்ச்சுனரை
என்றுமகாதேவர் எரிபறந்துகண்சிவந்து

வாயுராசன்தன்னையே வரவழைத்தாராம்
அருச்சுனன்செய்யுந்த அருந்தவசுக்கம்பமதை
தவசு நிலைக்கம்பத்தை சமுத்திரத்திற்போடுமென்றார்
அரைநாழிக்கொள்ளையிலே அதமாக்கிவாருமென்றார்
என்றதுதான்கேட்டு எழுந்தானேவாயுராசன்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கைமோசம்வந்ததென்றே கரியமாலப்போது
அருச்சுனராசருக்கு அவர்தம்மைதானாச்சு
காக்கவேணுமென்று கரியமாலோடிவந்தார்.
மாயையாய்வந்தாரே வாள்விஜயன்முன்னாலே
கண்டபா அருச்சுனரே கைமோசம்வந்ததடா
ஆதிபரமசிவன் அதிககோபங்கொண்டாரே
வாயுராசன்தன்னையிப்போ அனுப்பினார்மகாதேவர்
தவசு நிலைக்கம்பத்தை சமுத்திரத்திற்போடவாரான்
வாயுவுராஜனுக்கு வலுவாயிருப்பாயா
என்றதுகேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உம்மையேநம்பியே உம்பர்புரம்வந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகாதே
தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாதே
பெட்டியில்பூஷணம் பெருமைகுலையாதே
காக்கக்கடனுமக்கு கரியமாலெம்பெருமாள்
அண்ணருந்தம்பியரும் அனுப்பினார்உன்னைநம்பி
ஆரைநம்பிஇங்குவந்தேன் ஆதிகயிலாசம்
என்னமாயிருந்தாலும் ஈஸ்பரனாரெந்தனுக்கு
வந்தவினைமாற்றி வரமருளச்செய்யுமையா
என்றுவணங்கினான் இயலானவாள்விஜயன்
சிந்தைமனங்குளிர்ந்து ஸ்ரீராமனென்னசெய்தார்
தருமர்தம்பிஅருச்சுனன்றன் தவசு நிலைக்கம்பமிது
வாயுராசன்வந்து வலுமையாயசக்கினாலும்
ஆதிசிவன்வந்து அசைக்கவலித்தாலும்



தேவாதிதேவரொன்றாய்ச் சேர்ந்தசைக்கினாலும்
அருச்சுனன்தவசு நிலை அசையாமலிருக்கவென்றார்
மாயவனார்வரங்கொடுத்து வந்துவிட்டார்கைலையிலே
ஆருமறியாமல் ஆதிசிவனருகில்வந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவாயுராசன்
மண்ணும்விண்ணும்தானதிர வாரானேவாயுராசன்
தெற்கேயிருந்து திசைவடக்குமுகம்நோக்கி
இறைந்துவந்துமோதினான் இளவிஜயன்தவசடியை
அப்புறத்துக்கிப்புறந்தான் அசையாமல்தானிருக்கும்
மறுகாலொருதரமும் வந்துஅறிந்தானும்
சாயாமல்நின்றது தவசு நிலைக்கம்பமிது
தன்னாலேயாகாமல் சங்கரிக்கமுடியாமல்
திரும்பினான்வாயுராசன் சிவனுக்குச்சேதிசொல்ல
அருச்சுனரைப்பார்த்து அதிகப்பிரியமுமாய்
என்னிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
அருச்சுனனுந்தனுக்கு அஸ்திரந்தாரேனென்றான்
வாயுஅஸ்திரத்தை வாள்விஜயன்கைகொடுத்தான்
வாங்கிநமஸ்கரித்து வாள்விஜயனேதுசொல்வான்
எவரனுப்பவந்தீர்காண் என்தவசை நீரழிக்க
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வாயுராசன்
ஆதிசிவனழைத்து அனுப்பினார்உன்னிடத்தில்
தவசு நிலைக்கம்பத்தை சமுத்திரத்திற்போடுமென்றார்
ஆகையாலிங்குவந்தேன் அசக்கினேன்கம்பமதை
என்னால்முடியவில்லை இளவிசயாவுனைசெயிக்க
ஆதிசிவன்வந்திடுவார் அதிகவரந்தந்திடுவார்
என்றுநடக்கையிலே ஏதுசொல்வான்வாள்விஜயன்
உம்பர்பிரானுக்கு ஒருவார்த்தைசொல்லுமையா
என்னவென்றுசொன்னானெழில்விசயனர்ச்சுனனும்
கிருபைவைத்துப்பாசுபதம் கிரீடிக்குத்தாருமையா
வேண்டும்வரங்கள்தனை விமலரேதாருமையா
கேட்டவரங்கள்தனை கிருபைவைத்துத்தாருமையா
வரங்கள்தந்தாலொழிய மலையைவிட்டுப்போவதில்லை

தவசு நிலையைவிட்டுத் தனஞ்சயனும்போவதில்லை
ஆண்டவனே அய்யாவே அரட்டையாய்நீயிருந்தால்
மண்டையிளப்பேனென்று வாமதேவருக்குரையும்
தலையையுடைப்பேனென்று சங்கார்ருத்திருக்குரையும்
என்றுவிரய வெடுத்துரைப்பாவப்போது .
வாழ்த்திவிடைபெற்று வருமிருள்வாயுராசன்
ஆதிசிவனுற்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மான்மழுதரித்ததேவை மலர்ப்பாதம்சரணமையா
அருச்சுனன்தவசழிக்க ஆண்டவனேமுடியாது
உய்பர்பிரானே உம்மாலுமாகாது
காட்சிதராவிடிலோ காண்டீபத்தாலடிப்பான்
வரங்கள்கொடாவிடிலோ மண்டையிளப்பேனென்றான்
என்றதுகேட்டு ஈஸ்பரனுங்கோபமானார்
கேட்டீரோமாயவரே கெர்வத்துடன்சொன்னது
மண்டையுடைக்கவும்வரம்வாங்கும்வல்லவனே
காண்டீபத்தாலடித்து கடிவரம்வாங்குவானே
தலையைஉடைப்பேனென்று தனஞ்சயனை இப்போதே
மண்டைதனையுடைத்து வல்லுயிரைவாங்கிடுவேன்
என்றுபரமசிவன் எறிபறந்துகண்சிவந்து
ஆரடாயிடிபகவான் அதிவிரைவாய்வாருமென்றார்
எழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அருச்சுனன்றன்றலையை அறுபதுசுக்கலாக்கி
கொன்றுஅதமாக்கிக் கொப்பெனவேவாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரஇடிபகவான்
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துநடுக்கமுற
எழுந்தானிடிபகவான் எழுலகந்தானதிர
அந்தச்சமயத்தில் அரிராமர்ஓடிவந்தார்
அருச்சுனைபார்த்திபா ஆதிசிவன்கோபமானார்
இடிபகவான்தன்னை ஈஸ்பரனனுப்பினார்
தலையைஉடைக்கவென்று தான்வாரானிடிபகவான்
தப்பித்துக்கொள்ளுமென்று சாமியவர்போய்விட்டார்
அந்தச்சமயத்தில் ஆங்காரஇடிபகவான்



தெய்வலோகந்தானதிர தேவர்கிடுகிடென்ன
பாதாளஆதிசேஷன் பயந்துகிடுகிடென்ன
கெற்பங்கிடுகிடென்ன கிளிகள்கமரிக்கொள்ள
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துகிடுகிடென்ன
எட்டுதிசைநடுங்க எழுலகந்தத்தளிக்க
எழிடியுங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்து
அருச்சுனற்குநேராக ஆகாயமீதிருந்து
உறுதியாய்ப்பலங்கூட்டி உச்சியிலேதானிடித்தான்
வரட்டும்இடிபகவான் என்றல்லோவாள்விஜயன்
இடிபகவான்வருகையிலேஎழில்விஜயனென்னசெய்தான்
ஓஞ்சரித்துத்தானிருந்து ஒருபக்கம்இடிக்கிடவே
கண்முழிபிதுங்குது கண்ணீருந்தான்வடிய
இளப்புந்தவிப்புமா யிருக்குதிடிதேவருக்கு
மெச்சினேன்மருமகனே விட்டுவிடுமென்னையென்றார்
என்மகளைமின்னொளியை ஈந்திடுவேனுந்தனுக்கு
இப்பொழுதுந்தனுக்கு இடியாஸ்தர்ந்தாரேனென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
இனிமேல்கலியுகத்தில் எங்கேயிடித்தாலும்
அருச்சுனனென்றுசொன்னால் அப்பால்நீர்போரீரோ
என்பேருசொன்னக்கா லேழுகாதப்போரீரோ
அவசியம்போரேனென்று ஆணையிட்டானிடிபகவான்
எவரனுப்பவந்தீர்காண் என்னையிடித்துக்கொல்ல
என்றதுகேட்டு ஏதுசொல்வானிடிபகவான்
ஆதிசிவனார் அனுப்பிருகுன்னிடத்தில்
ஆங்காரத்துடனேவந்து அகப்பட்டேனுன்றன்கையில்
சத்தியவானென்தலையை தப்பவிட்டாய்மகராஜா
(உன்)புண்ணியத்தினாலே பிழைத்துமேநான்போரேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
ஆதிசிவனுற்கு அடிபணிந்தேனென்றுசொல்லும்
எதுவிருந்தங்கள் என்னஇடர்செய்தாலும்
அருச்சுனன்வரத்துக்கு அழிவுவரப்போறதில்லை
ஈஸ்பரேஉன்கையில் எந்தவிதமானாலும்

வரம்வாங்கவல்லோன் வாள்விசயனென்றுசொல்லும்
இடிபகவானுக்குரைத்து பதில்விஜயன்தானனுப்பி
அரனைமறவானும் அரன்மேலேதியானமானான
சிவனைமறவானும் சிவன்மேலேதியானமானான்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனிடத்தில்
வந்தானிடிபகவான் வணங்கியே நமஸ்கரித்தான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
உன்வார்த்தைகேட்டுப்போய் உயிரிழக்கநாளாச்சே
எதிடியுங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்தேன்
இறங்கித்தலைசாய்த்து என்னையேபிடித்துக்கொண்டான்
சத்தியவான்அருச்சுனனும் தப்பவிட்டானென்தலையை
ஏதுநீர்செய்தாலும்இளைத்துவிடானர்ச்சுனனும்
வரம்வாங்கிப்போகவல்லான் வாள்விசயனர்ச்சுனனும்
(அவனை)சித்தமதில் நினைக்கத் தேகம்நடுங்குதையா
பின்னும்நினைவுகொண்டால் பிராணன்பதைக்குதையா
என்றுசொல்லஇடிபகவான் ஈசனதற்குரைப்பார்
அத்தனைக்கும்வல்லவனோ ஆண்பிள்ளைஅருச்சுனனோ
அவை நாழிக்கொள்ளையிலே அதமாக்கிப்போடுகிறேன்
அனேகமானசெல்லுகளை ஆண்டவனார் உண்டுபண்ணார்
செல்லுகளே நீங்களும்போய் சீக்கிரம்விசயனுட
சரீரமாதியந்தமெங்குஞ் சல்லடைக்கண்களாகத்
துளைத்துவிட்டுவாருமென்று சொன்னார்பரசுபாணி
வருகுதுசெல்லதுதான் வாள்விசயன்தன்னருகே
அந்தச்சமயத்தில் அரிராமர்ஓடிவந்தார்
அருச்சுனாவாள்விசயா அனேகமோசம்வருகுதடா [தார்
ஆண்டவர்கோபமதாய் அனேகஞ்செல்லனுப்பிவைத்
எச்சரிக்கையாகவே இருங்காணருச்சுனரே
என்றதுசொல்லியே எம்பெருமானேகிவிட்டார்
அந்தச்சமயத்தில் அனேகமானசெல்லுவரச்
சுரேந்திரன்மைந்தனையுஞ் சூழ்ந்ததுசெல்லுகள்தான்
கண்டானே அருச்சுனனும் காண்டீபந்தான்வளைத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்



அக்கினிஅஸ்திரத்தை அருச்சுனன்உச்சரித்து
மார்பிரளவாங்கினான் வளரவிட்டான்அக்கினியை
அருச்சுனன்தபசுநிலை கட்டத்தருகாக
அக்கினிவருகுது அண்டமுடியாது
செல்லுகளண்டாமல் செந்தணலாய்ப்பத்துகுது
பார்த்துப்பயந்து பறந்ததுசெல்லுகள்தான்.
சங்கரன்தன்னருகே சரணமிட்டதுசொல்லும்
ஐயாவேஈஸ்வரரே ஆண்டவரே நீர்கேளும்
அருச்சுனன்தன்னருகே அக்கினிவளருகுது
ஆற்றமுடியாமல் ஐயாவேவந்துவிட்டோம்
ஆதிசிவன்கேட்டு அதிககோபமுண்டாகி
அத்தனைக்குமல்லவனோ அருச்சுனராசனுந்தான்,
என்றுபரமசிவன் எரிபறந்துகோபமுடன்
வருணபகவானை வாருமென்றுதானழைத்து
யானையுடகால்பெருமன் யானைமழைபெய்யுமெனச்
கட்டளையிட்டுக் கடுகியேபோமென்றார்
ஆதிசிவன்வார்த்தை அவ்வருணன்தவறாமல்
சமுத்திரத்தின நீரையுண்டு தான்வருது மேகங்களும்
கார்மேகமேழுங் கருத்துஎழும்பியது
ஆனைக்கால்போலவே அவ்வருணன்மழைபொழிய
அந்தச்சமயத்தில் ஆயருமோடிவந்தார்
அருச்சுனாவாள்விஜயா ஆண்டவனார்கோபமதாய்
வருணபகவானை மழைபொழிய அனுப்பினார்
எச்சரிக்கையாக யிருமென்றுதானடந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவருணராசன்
மேகமெழுப்பி மின்னல்வருகையிலே
கண்டானேவாள்விசயன் கனமோசம்வருகுதென்று
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
சங்காரமாரிபோலே சரமேற்சரம்பொழிந்தான்
அம்பினால்மூடுபந்தல் அருச்சுனன்போட்டுவிட்டான்
வான்மழைபொழியாமல் வாள்சரத்தால்பந்தலிட்டான்
வருணபகவானும் வந்துமழைபொழிந்தான்

வெள்ளமாய்த்தான்பெருக வேலையைபொழிந்தான்
அருச்சுனன்வளர்த்தினை அக்கினிக்குச்சேதமில்லை
வருணபகவானும் மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷப்பட்டாரும் தாம்விசயனருச்சுனன்மேல்
என்னிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
வருணாஸ்திரத்தை வாள்விசயன்கைக்கொடுத்தான்
வாங்கியேவாள்விசயன் வருணனுக்கேதுசொல்வான்
ஆரனுப்ப நீர்வந்தீர் அமரதுசெப்புமென்று
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வருணராசன்
ஆதிசிவனார் அனுப்பினார் வந்தேனென்றான்
எழில்விஜயா உனைசெயிக்கவென்னால்முடியாது
ஈசனார்தன்தமக்கு இவ்வார்த்தைசொல்லப்போறேன்
ஆனால்வருணரே நீர் அரனுக்கெடுத்துரையும்
கோடிசரணமும் கும்பிட்டேனென்றுசொல்லும் (மே
அகச்சாடல்செய்வதேனோ அருச்சுனன்மேல்கோபமே
கடிகியேவந்தெனக்கு காட்டிதரச்சொல்லுமையா
போய்வாருமென்று பொட்டெனவேசரணமிட்டான்
வாயுவேகமாகவே வருணராசன்வந்துவிட்டான்
ஆதிசிவனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டான்
அருச்சுனன்தனைசெயிக்க ஆராலுமுடியாது
உம்பர்பிரானாரே உம்மாலேமுடியாது
அத்தனைக்கும்வல்லபிரானனையிலிங்குவந்தான்
கோரினவரத்தை நீர் கொடுத்தனுப்பும்ஈஸ்வரரே
என்றதுகேட்டு ஈஸ்பரனார்கோபமானார்
வாள்விசயன்தன்னுடைய மனமுடுக்கழிக்கிறேன்பார்
கழுகுகளுங்கூளிகளும் கடிகியேவுண்டுபண்ணார் (ர்
அருச்சுனன்மாங்கிஷத்தை அடங்கலுமுன்னுமென்று
கவ்விப்பிடுங்கியே கடிகியேகொல்லுமென்றார்
இமையோர்பிரானாரும் இன்னமேதுண்டுபண்ணார்
கருவண்டுசெவ்வண்டு கணக்கில்லாதுண்டுபண்ணார்
கொட்டுகின்றகுளவியை கோடியாதுண்டுபண்ணார்
சுரேந்திரன்மகனுடலைத் துளையாய்த்துளையுமென்றார்



அரைக்ஷண நாழிகையில் அருச்சுனனைக்கொல்லுமென
மகதேவர்சிலவருள வருகுதுசேனைகள்தான்
குளவிகளும்கூளிகளும் கூட்டமாய்வருகுதங்கே
கனமோசம்வருகுதென்று கரியமால்தானறிந்து
அருச்சுனராசனண்டை அரிராயரோடிவந்தார்
காண்டீபா அருச்சுனரே கழுகுகள்வருகுதடா
குளவிகளும்கழுகுகளும் கூளிகளும்வண்டுகளும்
அனேகம்வருகுது அங்கந்துளைப்படுத்த
எச்சரிக்கையாகவே இருங்காணும்அருச்சுனரே
என்றதுகேட்டு இந்திரன்மகனேதுரைப்பான்
அடியேனாலேதாகும் ஐயன்பெருமானே
உன்வலிமையாலே உம்பர்புரம்வந்தேனே
எந்தவிதத்திலேயும் ஈடேறப்பாருமையா
வணங்கிச்சரணம்பண்ணான் மாயன்பெருமானை
தரணியளந்தவரும் சந்தோஷப்பட்டாராம்
கழுகுகளும்கூளிகளும் கல்விச்சதைகொண்டாலும்
அருச்சுனன்தேகத்துக்கு அழிவில்லாதேயிருக்க
என்றுவரமளித்து எம்பெருமான்போய்நடந்தார்
வந்துபிடுங்கிற்று வாள்விசயன்தேகமெல்லாம்
சல்லடைக்கண்போலே சமமாய்த்துளைப்படுத்தும்
எப்போதும்போலே எற்படுந்தேகமெல்லாம்
கைகள்நகம்பேர்த்து கடித்தபல்லுங்கூர்மழுங்கி
மூக்குகள்தானொடிந்து மூண்டங்களாயோடுகுது
ஆதிசிவனருகில் அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கழுகுகள்முறையமிடும்
எங்களாலானமட்டும் எழில்விஜயன்தேகமதை
சல்லடைக்கண்களைப்போற் சதையைத்துளைத்திடுவோம்
சதையைத்துளைத்திடுவோம் வதையப்பிடுங்கிடுவோம்
குப்பல்குப்பலாகவேதான் குவிப்போமேமாங்கிஷத்தை
குவித்தரைநாழிகைக்குள் கூடிவிடுந்தேகமதில்
துளைத்தரைநாழிகைக்குள் தோன்றுமுடல்முன்போல
பின்னுஞ்சதைகவ்விப் பிடுங்கியெறிந்திடுவோம்

அருச்சுனன்தேபமதை அழிக்கோம் அழியவில்லை
கடித்தபல்லுங்கூர்மழுங்கி கைகள்நகம்பேர்ந்ததையா
எங்களால்முடியாது இவனிரவனைச்செயிக்க
ஆராலுமுடியாது அருச்சுனனைச்செயிக்க
கோரினவரத்தை கொடுத்துவிடும்ஆண்டவரே
அவ்வார்த்தைகேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
எத்தனைநாள்தவசிருந்தும் வரமென்றுகேட்பேனோ
என்றுபரமசிவன் இருந்தார்சிங்காதனத்தில்
கற்பூரமண்டபத்தில் கத்தர்கொலுவிருந்தார்
மாயன்பெருமாளும் மாயமாய்மோடிவந்தார்
அருச்சுனபார்த்திபா ஆதிசிவன்மோசஞ்செய்தார்
கற்பூரக்கொடிமுடியில் கத்தர்கொலுவிருந்தார்
கற்பூரக்கொடிமுடியைக் கனலாக்கொளுத்திவிட்டால்
கலகத்தைச்செய்துவிட்டால் காட்சிதனைத்தந்திடுவார்
என்றதுசொல்லி எம்பெருமான்போய்நடந்தார்
அப்போதருச்சுனனும் ஆனமட்டேதுசெய்வான்
வில்லினைத்துநாரிபூட்டி வில்லைக்குணைத்தொனித்தான்
அக்கினிபாணமதை அருச்சுனனுச்சரித்து
மந்திரத்தைஉச்சரித்து மண்டபத்தைக்கொளுத்துமென்
மார்புரளவாங்கியே தோள்புரளவிட்டுவிட்டான் [ம
வந்ததுபாணம் மகதேவர்மண்டபத்தில்
கற்பூரமண்டபத்தைக் கடுகிக்கொளுத்திடவே
மண்டபந்தானெரிய மகாதேவர்பார்த்துவிட்டார்
பார்த்திரோமாயவரே பார்த்திபன்தன்வலுமை
என்-வீட்டைக்கொளுத்தியேவேணவரம்வாங்கவந்தான்
இப்படிச்செய்தவர்களெவர்களையும்நானறியேன்
சதுர்யுகமட்டும் தவசுகள்பண்ணினும்
அருச்சுனன்தன்தமக்கு அரியவரம்தருவதில்லை
கற்பூரமண்டபத்தைக் கடுகியேவிட்டெழுந்து
சாம்ராணிமண்டபத்தில் சாமிவந்துகொலுவிருந்தார்
சாம்ராணிமண்டபத்தைத்தணலாய்க்கொளுத்துமென்றார்
சொல்லிநடந்தாரே சுவாமிபெருமாளும்



மறுகாலருச்சுனனும் வரிவில்லினைத்தூக்கிகொண்டு
அக்கினி அஸ்திரத்தை அருச்சுனன்முடுக்கிவிட்டான்
சாம்ராணிமண்டபத்தைத் தணலாயுருக்கிடுது
கண்டார்மகதேவர் கடுகியங்கேதுசொல்வார்
கண்டீர்களோதேவர்களே காண்டீபன் ஆண்மைகளை
என்-வீட்டைக்கொளுத்தியேவேணவரம்வாங்கவந்தான்
இந்த ஆண்மையுள்ளவனை எங்குமேநானறியேன்
வெண்ணீறுமண்டபத்தில் விமலரும்போய்நடந்தார்
மாயன்பெருமாளும் மாயமாயோடிவந்து
அருச்சுனபார்த்திபா அதிகமோசம்வந்ததடா
விபூதிமண்டபத்தில் வேந்தரும்வந்தமர்ந்தார்
அப்பெரியமண்டபத்தை அதமாக்கிப்போடுமென்றார்
அவ்வார்த்தைசொல்லி அரிராமர்போய்நடந்தார்
வில்லினைத்துநாரிபூட்டி வில்லைக்குணைத்தொனித்தான்
வருணபகவான் வரமளித்த அஸ்திரத்தை
மந்திரதாபமிட்டு வாங்கினன்மார்புரள
வந்துவிழுந்தது மயேஸ்பரனர்மண்டபத்தில்
வான்மழைபோலாக வந்துபொழிந்திடுதாம்
வெண்ணீறுமண்டபமும் [illegible]கரைந்திடவே
கண்டார்மகதேவர் கண்கொள்ளாக்கோபமுடன்
ஆயன்பெருமாளே அருச்சுனன் ஆண்மைதனை
கண்டீரோமாயவரே காண்டீபன் ஆண்மைதனை
எத்தனைமண்டபத்தை இடித்துத்தகர்த்துவிட்டான்
இப்படிப்பட்டவற்கு எப்படிவரமருள்வேன்
இங்கிருந்தோமானால் இப்படிக்குப்பண்ணுகிறான்
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போகவென்று
எழுந்தார்மகாதேவர்எல்லோருங்கூடிவர
அந்தச்சமயத்தில் அரிராமரோடிவந்து
அருச்சுனபார்த்திபா அதிகமோசம்வந்ததடா
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போறார்காண்
போய்விட்டாராமானால் பிற்பாடுகாணாது
காணக்கிடையாது கத்தருடசேவை

போகாமலேதடுத்தால் பெருமானைக்கண்டிடலாம்
என்றதுசொல்லி எம்பெருமான்போய்நடந்தார்
மாயவனார்போனபின்பு வாள்விசயனேதுசெய்தான்
காண்டீபன்வில்வளைத்து கணையெடுத்துருச்சரித்தான்
கடிகிமறித்துவிடும் என்றுகணைதொடுத்தான்
வந்துதடுத்தது வாள்விசயன்விட்டபாணம்
மகாதேவர்முன்பாக வளர்ந்தது அக்கினிபோல்
முக்கண்ணனுடையவரை முன்னேதடுத்ததுகாண்
கண்டார்பரமசிவன் கண்கொள்ளாக்கோபமுடன்
கண்டீரோதேவர்களே காண்டீபன் ஆண்மைகளை
இப்படிப்பட்டவற்கு எப்படிவரங்கொடுப்பேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தேவரெல்லாம்
தருமர்தம்பி அருச்சுனற்கு சமர்த்துகள்மெத்தவுண்டு
இவருடன்எதிர்த்தவர்கள் எவரும்பிழைப்பதில்லை
காட்சிதந்தாலல்லாது கனமோசம்வந்துவிடும்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்ஈஸ்பரரும்
அருச்சுனன்சமர்த்துகளை ஆண்மைகளைக்காணுகிறேன்
தவசுநிலைக்கம்பத்தை தரையோடமிழ்த்துகிறேன்
என்றுபரமசிவன் எமனைத்தானழைத்து
எமதர்மராஜரே நீர் ஏனம்போல்வடிவெடுத்து
அருச்சுனன்தன்னருகில் அப்பவிட்டோடுமென்றார்
கடிகியனுப்பினார் கட்டளையும்வாங்கியங்கே
எமதர்மராசன் ஏனம்போல்வடிவெடுத்து
பன்றிவடிவெடுத்து பார்த்திபன் அருகில்வந்தான்
அபயம்அபயமென்று அழுதுபுலம்பிவாரான்
அபயமென்றசத்தம் அருச்சுனன்தான்கேட்டு
அபயக்குரல்கேட்டால் ஆதரிக்கவேணுமென்று
அலகம்புஅஸ்திரத்தை அருச்சுனன்விட்டுவிட்டான்
காட்டுப்பன்றிதன்னையும்நீ கம்பத்தில்கட்டுமென்றான்
மந்திரமாயமிட்டு வாங்கினானருச்சுனனும்
வந்ததுஅஸ்திரந்தான் வளைந்தமேகட்டுது
கம்பத்துடனேதான் கட்டியேபோட்டுது



கட்டுண்டான்காலன் காண்டீபன்தன்சரத்தால்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனெழுந்தார்
மெத்தப்பெரியவராய் வேடன்வடிவெடுத்தார்
பிரமதேவன்தானும் பெரியதொருவேடரானார்
விக்கினவிநாயகர் வேடர்வடிவெடுத்தார்
சூரர்குலம்வேரறுத்த சுப்ரமண்யர்வேடரானார்
அமராபதியாளும் அங்கபிரான்வேடரானார்
ஆதியநந்தமாயவரும் அங்கேஒருவேடரானார்
அருச்சுனரைவெல்லவென்று அனைவரும்வேடரானார்
ஈஸ்பரியைத்தானழைத்து இப்போசமயமென்றார்
ஈஸ்பரியாள்தன்னுடனே ஏழுபேர்வேடரானார்
வாரார்வடிவெடுத்து வாள்விசயன்தன்னருகே
காற்செருப்புந்தோல்குல்லாவும் கையில்துப்பாக்கிகளும்
மான்வளையுஞ்சில்லாக்கோல மருந்துகேப்குண்டுகளும்
ரெட்டைக்குண்டுதுப்பாக்கி நேரிசம்தோளில்வைத்து
சின்னவேடன்பெரியவேடன் சிவனார்கீழ்வேடரானார்
பொன்னாற்றமுக்கடித்து புறப்பட்டார்வேடரெல்லாம்
மற்றுமுள்ளதேவதைகள் வயிரவனார்வடிவெடுத்தார்
கருநாயுஞ்செந்நாயும் கணக்கில்லா நாய்கள்வர
காட்டைவளைத்தார்கள் கருநாயைப்பூசுத்திவிட்டார்
அம்புவில்லாயுதமும் ஆண்டவனார்கைப்பிடித்து
வாரார்கள்வேடரெல்லாம் வளைத்துத்துரத்தியல்லோ
அத்தண்டவேடுவரும் அருச்சுனரருகில்வந்து
ஆர்காணுஞ்சங்கமரே அறிவைப்படைத்தவரே
புதிதாய்த்தவசுபண்ணப் புத்திமெத்தக்கற்றவரே
இரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
ஏழைகண்டாய்வேடுவானன் எட்டுநாள் காத்திருந்தேன்
காத்திருந்திவ்வேனமதைக் கணையாலேஎய்துவிட்டேன்
காயம்பட்டேனம் கடுகியேவந்துதிங்கே
ஏனம்வந்தசாடையிது இப்போதடிபிடித்து
அடிபிடித்துவந்தோம்நாம் ஆனதொருசங்கமரே
கம்பத்துடனே நீர் கட்டிவைத்தகாரியமேன்
பசியோடிருக்கிறோம் பன்றிதனைவிட்டுவிடும்
பிள்ளையுங்குட்டிகளும் பெரும்பசியாய்ப்புலம்புகிறோம்
கட்டவிழ்த்துவிட்டுவிடும் கடுகப்பொசித்திடுவோம்
என்றுசொல்லிக்கேட்டு ஈஸ்பரனார்தான்வரவே

காண்டீபன்ருச்சுனனுங் கடிபியேயு துசொல்வான்
சிவத்தியானமாகவே சிலைவிரயனோ துசொல்வான்
ஆரடாவேடுவனே அப்புறத்தேபோய்விடுங்காண்
அபயக்குரல்கேட்டால் ஆதரிப்பேனல்லாமல்
இனிமேல்விடுவேனென்று என்றுதேஉன்மனதில்
பன்றியைத்தின்றலே பரியாறிப்போவாயோ [டை
குழந்தைக்குமுந்தனுக்குங் குலத்தார்க்கும்போது மோகா
தன்னைப்போல்சீவன்களை காள்கொல்லஎண்ணுவரோ
சிவனுரைநோக்கியே செய்கிறேன் தவசு நிலை
எதிரிட்டுக்கொள்ளாதே இடையுங்கள்வேடுவரே
அரகரா அரனேயென்று அடித்தானேசெயதண்டிகை
சம்போசிவனேயென்று தொனித்தானேசங்குதனை
ஆதிசிவனும் அருச்சுனற்குஏதுசொல்வார்
எத்தனைசொன்னாலும் இறங்கிலையோயுன்மனது
தருமம்நினைத்தாக்கால் சாமிவந்து துணையாவார்
வயிறுபசிதீர்த்தாக்கால் மகதேவர் துணையாவார்
(உன்)தாயார்தகப்பனுக்குந் தமையற்குந்தம்பியற்கும்
ஒருகோடிமோக்ஷமுண்டு உச்சாகஞ்செய்யுமென்ருர்
அவ்வார்த்தைதானைக்கேட்டு அருச்சுனரேதுசொல்வார்
ஒருகாலுரைத்தேனே மறுகாலுரைப்பேனோ
தவசு நிலைவேளையிலே சத்தங்கள்போடாதே
சந்திரர்சூரியர்கள் தவறிநிலைதப்பினாலும்
காலம்பிரண்டு கலியுகம்வந்தாலும்
நரிக்குப்பிழிந்துஎன்னை நகரத்திற்போட்டாலும்
வாயாறச்சொன்னசொல்லு மறந்துவிடப்போறதில்லை
ஆதரிப்பேனல்லாமல் அலையவிடப்போறதில்லை
மறுவார்த்தைபேசாதே வல்லுயிரைவாங்கிடுவேன்
எதிரேவரவேண்டாம் இடையநில்லும்வேடுவரே
அரகரஅரனேயென்ருன் அரன்மேலேதியானமானன்
அப்போதுபரமசிவன் அருச்சுனற்குஏதுசொல்வான்
(நான்)ஏழையென்ருேசங்கமரே என்னைமிரட்டுகிருய்
என்னைத்துரத்திவிட்டென் பன்றியைத்தின்னவென்ருே
என்னைமிரட்டுகிருய் இவ்வார்த்தைநானறிவேன்
நான்போவேனென்று எண்ணுதேஉன்மனதில்
ஆறுபேர்வேடுவர்கள் அருங்கிளியாள்வேடுவச்சி
உத்தமரே நீயொருவன் வுகந்துமேகூடியல்லோ



பன்றிதனைச்சுட்டு பங்கிட்டுக்கொள்ளுவோம்வா
பங்குபோட்டுத்தின்று பசியாறிக்கொள்ளுமென்ருர்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும
ஜாதிக்குத்தக்கபுத்தி தானிருக்கும்வேடருக்கு
என்றுசொல்லவேடவரு மேதுசொல்வாரப்போது
ஆண்டிப்பயலுக்கு அறிவுகிடையாது
பசிக்குதெனவேண்டி பன்றிமேலம்புதொட்டேன்
நப்பித்துவோடிவரத் தம்பமதிற்கட்டலாமோ
கீழேயிறங்கிவாடா கேடுகெட்டசங்கமனே
என்சமர்த்தும்உன்சமர்த்தும் இப்போதெரியுமடா
சண்டைக்குவாடா நீ சமர்த்துளசங்கமனே
என்றவுடன்கம்பம்விட்டு இறங்கினன்வாள்விஜயன்
வாள்விஜயன்றன்முதுகில் மட்சரேகைபார்க்கவென்று
பரமசிவனும்வந்து பார்த்தனுடன்சண்டைபண்ணுர்
ஆண்டவனென்றறியாமல் அடித்தான்காண்வில்லாலே
பரமருங்கீழ்விழுந்துபார்த்தனையெடுத்துக்கொண்டார்
பார்வதியாள்பார்த்தாளே பார்த்தனிடமட்சரேகை
பார்த்திபனென்று பார்வதியாள்பேர்கொடுத்தாள்
பாசுபதாஸ்திரம் பரமருந்தான்கொடுத்தார்
அநேகவரம்பெற்று அருச்சுனனுந்தான்வாரான்
அண்ணனிடம்வந்து ஆசையுடனுரைத்தான்
பன்னிரண்டுவருஷமும் பாரவனந்திரிந்து
ஐவர்பஞ்சபாண்டவரே ஆரணியம்விட்டு நீங்கள்
அக்கியாதவாசம் அருந்தபசுசெல்லுமென்று
இச்சையுடனுரைத்து எம்பெருமாள்பயணமானர்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்ருர்
துவாரகாபுரிநோக்கி சுவாமியவர்போகலுற்ருர்
அப்பால்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
பரமருடதன்தயவால் பன்னிரண்டுவருஷஞ்சென்று
வனவாசமேதிரிந்து வாரார்கள்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
நாடேவருகிருர் ராமருடதன்தயவால்
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியரும்மற்ருேரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னளில்முதோர் மொழிந்தவனவாசமதை
இன்னளிற்போற்ற வெழுதாவெழுத்ததனல்

அச்சுக்கூடத்ததிப ரனேகாி நுவரையில்
உச்சிதமாயச்சிலிதை யோங்கப்பதிப்பித்தார்கள்
அத்தைத்திருத்தி யச்சிலிடவேண்டுமென்று
மூத்தையபிள்ளை முயற்சிசெய்தெழுதியதைக்
கற்றோருமற்றோருங் களிப்பாய்ப்படிப்பதற்குச்
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தப்பிதங்களைத்திருத்தி தன்னுலியன்றமட்டும்
குப்புசாமிக்குரிசில் குவலயத்தோர்கொண்டாட
வயலும்பூஞ்சோலைகளும் வளர்ந்தோங்குஞ்சென்னையில்
பயிடிபோலென்னுமூயர் பலிஞ்சவார்குலதிலகன் [வாழ்
மூத்தியால்நாயுடுக்கு மூதோர்கள்செய்தவத்தால்
இத்தலத்தில்வந்தஇட்டா பார்த்தசாரதியென்னும்
புண்ணியவானுட்கசிந்து புத்தகரூபமதாய்
கண்ணியமாயெல்லோருங் கண்காட்சிகொள்வதற்குப்
பதிப்பித்தார்ஸ்ரீபத்ம நாபவிலாசம்பிரஸில்
மதிப்பதிகம் நீடூழி வாழிமிகவாழி
வாழிமிகவாழி மங்காத நூல்வாழி
அன்னைசுற்றம்வாழி அருந்தமிழோர் தான்வாழி
சின்னஞ்சிறுபிள்ளை செல்வமுடன்தான்வாழி
இந்தக்கதையிலே எழுத்துப்பிழையிருந்தால்
தப்புபிழைதிருத்தியபுண்ணியிரட்சிக்கவும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல் அன்னசுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியநால்வேத முயிர்பலவுந்தான்வாழி

விருத்தம்.

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர்பொருள்விரித் திசைத்தோர்
செப்பருமன்பாற் கேட்டுளோரிதன்பேர்
செப்பினோர்கிலமையிற் றீர்ந்தே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைந்ததீர்க்காயுளுமுளராய்
ஒப்பருங்கதியி னிலைபெறவிளங்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

பஞ்சபாண்டவர்வனவாசம்.

முற்றிற்று.

11923
O-2690
No